# சோதிட அட்ட வர்க்கம்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
**சரசுவதி மகால் நூலகம்**
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்.

T. 22853

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 566

# சோதிட அட்டவர்க்கம்

## (தொகுப்பு நூல்)

## மூலமும் உரையும்

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்
மற்றும் உரையாசிரியர்

**முனைவர் திருமதி. சத்தியபாமா காமேஸ்வரன்,**
எம்.ஏ.,எம்.ஃபில்.,எம்.எட்.,பிஎச்.டி.,
சோதிடவியல் பட்டயம், கைரேகையியல் பட்டயம்

**தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்**
**சரசுவதி மகால் நூலகம்**
**மற்றும் ஆய்வு மையம்**
**தஞ்சாவூர்.**

சோதிட அட்டவர்க்கம்

2015 ] [ விலை ரூ.250-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு



| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | சோதிட அட்டவர்க்கம் |
| பதிப்பாசிரியர் | : | முனைவர். திருமதி. சத்தியபாமா காமேஸ்வரன் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 566 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2015 |
| தாள் | : | TNPL 18.6கி. கி |
| நூல் அளவு | : | 24 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : | 260 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | லேமினேசன் அட்டை |
| பொருள் | : | சோதிடம் |
| ISBN | : | 978-93-85343-04-09 |
| விலை | : | ரூ. 250-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில் அமைந்து தரணி முழுமைக்கும் அறிவுச் செல்வமாகப் பயன்பட்டுக்கொண்டிருக்கும் அரும்பெரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். இந்நூலகத்தை அணி செய்கின்ற அரிய சுவடிகளை நூல்களாக சிறப்பான முறையில் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றது. இலக்கணம், இலக்கியம், சோதிடம், மருத்துவம் முதலிய துறை சார்ந்த நூல்களை இந்நூலகம் வெளியிட்டுள்ளது. சோதிட வகையுள் ஒன்றான **சோதிட அஷ்டவர்க்கம்** என்னும் இந்நூல் தற்போது வெளியிடப்படுகின்றது.

ஒரு சாதகனின் வாழ்வில் நடைபெற இருக்கும் நன்மை தீமைகளை எடுத்துரைக்க பல முறைகளைசோதிட நூல்கள் எடுத்துரைக்கின்றன. அத்தகைய முறைகளுள் ஒன்றாக விளங்குவது அஷ்டவர்க்கங்களைக் கொண்டு பலன்கூறும் முறை. இத்தகைய அஷ்டவர்க்கத்தைத் தனித்துக் கூறும் பழைய சோதிட நூல்கள் இல்லை. சோதிட நூல்களில் ஒரு பகுதியாகவே அஷ்டவர்க்கத்தின் மூலமாகப் பலன் கூறும் முறைகள் கூறப்பட்டுள்ளன.

இந்நூல் ஆறு சுவடிகளில் உள்ள செய்திகள் தொகுக்கப்பட்ட நூலாக விளங்குகிறது. ஆறு நூல்களுக்கான அடிப்படைச் செய்திகள் அஷ்டவர்க்கம் தொடர்பானவையாக இருப்பதால், இந்நூலுக்குச் 'சோதிட அஷ்ட வர்க்கம்' (தொகுப்பு நூல்) என்ற பெயர் தரப்பட்டுள்ளது.

இந்நூலில் அஷ்ட வர்க்க விளக்கம், ஏழு கோள்களுக்குமான அஷ்ட வர்க்க வாக்கியங்கள், திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை, இராசி குணகாரம், கிரக குணகாரம், சர்வாஷ்டக வர்க்கம்,

அஷ்ட வர்க்க சக்கரங்களைக் கொண்டு ஏழு கோள்களுக்குமான பலன்களைக் காணுகின்ற முறைகள் போன்றவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இந்நூலின் பதிப்புப் பணியைச் சிறப்பாகச் செய்துள்ள தஞ்சை சரசுவதி மகால் நூலக சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் முனைவர் கா. சத்தியபாமா அவர்களுக்கு என் பாராட்டுகள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர்(பொ.) திரு. இ. கணேசன், B.Com., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ்.சுதர்ஷன், M.A.,B.Lit.,M.L.I.S.,Ph.D., அவர்களுக்கும் மற்றும் நூலகப்பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சோதிடத்துறையில் ஈடுபாடுடைய அன்பர்களுக்கும், அத்துறை தொடர்பான ஆர்வலர் களுக்கும், ஆய்வு மாணவர்களுக்கும் பயனளிக்கும் படைப்பாகும்.

தஞ்சாவூர்
19-09-2015

**டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப.,**
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,*
*சரசுவதி மகால் நூலகம்.*

# பதிப்புரை

ஆய கலைகள் அறுபத்து நான்கனுள் மக்களால் பெரிதும் விரும்பப்படும் கலையாக விளங்குவது சோதிடக்கலையாகும். ஒருவனுடைய பிறந்த நேரம், கோள்களின் நிலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வாழ்வில் ஏற்படக்கூடிய இன்ப துன்பங்களைக் கணித்துக் கூறுவதால், என்றைக்கும் மக்களால் பெரிதும் வரவேற்கப்படுகின்றது. இக்கலைக்கு ஆதாரங்களாக விளங்குவன சோதிடநூல்கள். சென்ற நூற்றாண்டின் தொடக்கம் வரை தமிழ்நூல்கள் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டிருந்தன. அவற்றுள் பல இன்று அச்சேறி இருப்பினும் கிடைப்பதில்லை. சில அச்சேறாமல் சுவடி நிலையிலேயே உள்ளன. அவற்றை அச்சில் கொண்டு வருவதைக் கருத்தில் கொண்டு பல நிறுவனங்கள் சுவடிகளைப் பாதுகாப்பதோடு, தக்கவர்களைக் கொண்டு அந்நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டும் வருகின்றன.

நம்முன்னோர் விட்டுச் சென்ற அத்தகைய கலைக்கருவூலங்களை நூல்களாக வெளியிட்டு வரும் நிறுவனங்களுள் ஒன்றாக விளங்குவது தஞ்சை சரசுவதி மகால் நூலகம். இலக்கணம், இலக்கியம், சிற்பம், நாடகம், நாட்டியம், தத்துவம், மருத்துவம், சோதிடம் போன்ற பல்வேறு துறைகளிலும் நூலை வெளியிட்டு வருகிறது, அதிகமான சோதிடம் சுவடிகளைக் கொண்ட நூலகம் என்பதோடு, மிகுதியான சோதிட நூல்களை வெளியிட்டு வரும் நிறுவனம் என்ற சிறப்பை உடையது. தமிழ் மொழியில் உள்ள சோதிட நூல்களையும் அச்சிட்டு வெளியிடுவது இந்நூலகத்தின் தனிச்சிறப்பாகும்.

இந்நூலகத்தில் வராகர் ஓரா சரித்திரம், காலச்சக்கரம், ஜினேந்திரமாலை, சாதகாலங்காரம், சகாதேவ நிமித்த சூடாமணி, நட்சத்திரசிந்தாமணி, பஞ்சபட்சி சாஸ்திரம், குமார சுவாமியம், சூடாமணி உள்ளமுடையான், சாதக பாரிஜாதம், சர்வார்த்த சிந்தாமணி, சாதக சிந்தாமணி, மூன்று சோதிட நூல்கள் (சாதக கணிதாமிர்தம், சந்திரகாவியம், சர்வார்த்த

சிந்தாமணி-திசைவிளக்கம்) முதலான தமிழ் சோதிட நூல்கள் ஓலைச்சுவடிகளில் இருந்து பதிப்பிக்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ளன. மேலும், இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் சோதிடச் சுவடிகளில் சோதிட-அட்டவர்க்கம் தொடர்பான சுவடிகளும் உள்ளன.

**அஷ்டவர்க்கம் கூறும் சுவடிகள்**

தஞ்சை சரசுவதிமகால் நூலகத்தில் அஷ்டவர்க்கம் தொடர்பான 6 சுவடிகள் உள்ளன. இந்த ஆறு சுவடிகளும் பதிப்புப் பணிக்குத் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்பட்டன. அவை,

1. சோதிடம் - அஷ்டவர்க்கம் (சுவடிஎண் 794)
2. சோதிடம் - அஷ்டவர்க்கம் (சுவடிஎண் 802)
3. பன்னிரண்டாம் சருக்கம் - அஷ்டவர்க்கம் (சுவடி எண் 1976c)
4. லக்ன பாத பலன் (சுவடி எண் 802c) (இந்நூலின் இடையில் சோதிடம் - அஷ்டவர்க்கம் நூல் கிடைத்தது)
5. சோதிட நூல் - அஷ்டவர்க்கம் (சுவடி எண் 523)
6. சோதிட - அஷ்டவர்க்கம் (சுவடி எண் 785)

என்பவனவாகும். இந்த ஆறு நூல்களும் சோதிட அஷ்டவர்க்கத்தைக் கூறும் முறையிலும் பலன்களை எடுத்துரைக்கும் முறையிலும் பலன்களை எடுத்துரைக்கும் முறையிலும் மாறுபட்டவை. இந்த ஆறுநூல்களும் ஒரே பொருண்மை குறித்தவை என்ற அடிப்படையில் தொகுக்கப்பட்டுத் தொகுப்பு நூலாக அமையுமாறு பதிப்புபணி மேற்கொள்ளப்பட்டது.

சோதிடம் - அஷ்டவர்க்கம் (சுவடி எண் 794) என்ற நூல் நூற்றெட்டு விருத்தப்பாக்களால் ஆனது. மூலம் மட்டுமே

அமைந்துள்ள இந்நூல், கிடைத்துள்ள அஷ்டவர்க்க நூல்களில் அளவில் பெரியதாகும். இந்த நூலின் காப்பீடு வால்யூம் நம்பர் 728. இந்நூலுக்குப் பதிப்பாசிரியரால் உரை எழுதப்பட்டுள்ளது.

இரண்டாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சோதிடம் அஷ்டவர்க்கம் (சுவடி எண்802) என்ற நூல், மூலமும் உரையுமாக அமைந்ததாகும். இந்நூலில் 14 எண்சீர் விருத்தப்பாடல்களும் அப்பாடல்களுக்கான உரைகளும் அமைந்துள்ளன. இந்த நூலின் காப்பீடு வால்யூம் நம்பர் 510. இப்பாடல்களையும் உரையையும் அடுத்து, அஷ்டவர்க்கம் குறித்த செய்திகள் உரைநடையாக அமைந்துள்ளன.

மூன்றாவதாக அமைந்துள்ள பன்னிரண்டாம் சருக்கம் - அஷ்டவர்க்கம்,(சுவடி எண் 1976c) மூலம் மட்டும் அமைந்த நூலாகும். சுந்தரானந்தர் காவியம் என்ற சோதிடநூலின் பதினாறு சருக்கங்களில் பன்னிரண்டாம் சருக்கமாக அமைந்தது. இந்நூலின் காப்பீடு வால்யூம் நம்பர் 1010. இந்நூல் அச்சில் வெளிவந்துள்ள சுந்தரானந்தர் காவிய சோதிட நூலின் பன்னிரண்டாம் சருக்கத்தில் கூறப்பட்டுள்ள அஷ்டவர்க்கம் தொடர்பான செய்திகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுகிறது. இந்நூல், ஒரு நிறைவு பெறாத நூலாகும். இதன் தொடக்கத்தில் உள்ள ஐம்பது எண்சீர் விருத்தப் பாடல்கள் மட்டுமே இன்று கிடைக்கின்றன. கிடைத்தவரையிலான செய்திகளை வெளிக் கொணர வேண்டும் என்ற வகையில் இந்த நூல் எடுத்துக் கொள்ளப்பட்டது. மூலம் மட்டுமே அமைந்திருந்த காரணத்தால் இந்நூலுக்குப் பதிப்பாசிரியரால் உரை எழுதப்பட்டுள்ளது.

இவையன்றி, லக்ன பாத பலன் (சுவடி எண் 802c) என்ற நூலின் இடையில் அஷ்டவர்க்கம் தொடர்பான சிறிய நூல் கிடைத்தது. இந்த நூல் இருபத்தைந்து எண்சீர் விருத்தப்படல்களால் ஆனது. இந்த நூலின் காப்பீடு வால்யூம் நம்பா; 509, மூலம் மட்டுமே அமைந்திருந்தக் காரணத்தால், பதிப்பாசிரியரால் இந்நூலுக்கு உரை எழுதப்பட்டுள்ளது. அடுத்ததாக அமைந்துள்ளது 'அஷ்டவர்க்கப் படலம்' (சுவடி எண் 523) என்ற நூலாகும். இது சோதிடநூல் என்ற

தலைப்பிடப்பட்ட ஒரு சுவடியின் முதல்பகுதியாக அமைந்திருந்தது. இந்த நூலின் காப்பீடு வால்யூம் நம்பர் 375. நூலின் முதலில் மூன்று பாடல்களின் உரைகள் அமைந்திருந்தன. இந்த மூன்று பாடல்களும் குமாரசுவாமியம் என்ற சோதிட நூலின் அஷ்டவர்க்கப்படலம் என்னும் பகுதியின் பாடல்களாகும். இந்த மூன்று பாடல்களின் உரையை அடுத்து, உரைநடையாக அமைந்த அஷ்டவர்க்கம் தொடர்பான செய்திகள் உள்ளன.

சோதிட அஷ்டவர்க்கம் தொடர்பான மற்றொரு நூல் "அஷ்டவர்க்கம்" (சுவடி எண் 785) என்பதாகும். இந்த நூலின் காப்பீடு வால்யூம் நம்பர் 665. இந்நூலில் தனியார் ஒருவருடைய சாதகத்தில் அஷ்டவர்க்கப் பலன்கள் கூறப்பட்டுள்ளன. அஷ்ட வர்க்கப் பலனைக் கணக்கிடும் முறைகளைப் புரிந்து கொள்ள உதவும் என்பதால், நூலின் நிறைவுப் பகுதியில் இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக, இந்நூல் ஆறு சுவடிகளில் உள்ள செய்திகள் தொகுக்கப்பட்ட நூலாக விளங்குகிறது. ஆறு நூல்களுக்கான அடிப்படைச் செய்திகள் அஷ்டவர்க்கம் தொடர்பானவையாக இருப்பதால், இந்நூலுக்குச் 'சோதிட அஷ்ட வர்க்கம்' (தொகுப்பு நூல்) என்ற பெயர் தரப்பட்டுள்ளது.

## நூலுள் கூறப்படும் செய்திகள்

அஷ்ட வர்க்கம் (சுவடி எண் 794a) என்ற நூலின் ஆசிரியர் தில்லைநாயகப் புலவர். இவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர். இவருடைய தந்தை அருந்தவன் முதலான செய்திகளும் அஷ்ட வர்க்கம் குறித்து வடமொழியிலிருந்து செய்திகளைச் செந்தமிழில் இயற்றியதையும் இந்நூலின் இறுதிப்பாடலால்,

"திருந்திய பார்மேல் அஷ்ட வர்க்கச்
சிறப்பினைக் கங்கைவளர் சடையோன்
முருந்துறல் முறுவல் உமையவட் குரைத்த
முதுமறை தனைமுனி வர்கள்

"பொருந்திய பொருளால் வடமொழி யதனால்
புகன்றனர் அதனைச்செந் தமிழால்
அருந்தவன் செல்வன் இல்லைநா யகவேள்
அரும்பொருள் விரித்துரைத் தனனே"
(பாடல் எண் : 108)

என்பதன் வழி அறியலாம்.

அஷ்ட வர்க்க விளக்கம், ஏழு கோள்களுக்குமான அஷ்ட வர்க்க வாக்கியங்கள், திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை, இராசி குணாகாரம், கிரக குணாகாரம், சர்வாஷ்டக வர்க்கம், அஷ்ட வர்க்க சக்கரங்களைக் கொண்டு ஏழு கோள்களுக்குமான பலன்களைக் காணுகின்ற முறைகள் போன்றவை விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

சோதிடம்-அஷ்டவர்க்கம் (சுவடி எண் 802b) நூலில், ஏழு கோள்களுக்குமான அஷ்டவர்க்க சக்கரங்களை வரையும் முறை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதனையடுத்துத் திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை, இராசி குணாகாரம், கிரக குணாகாரம், அஷ்டவர்க்கப் பலன் கூறும் முறைகள் போன்றவை அமைந்துள்ளன. நூலின் இறுதியில் இரண்டு உதாரண சாதகங்கள் எடுத்துக் கூறப்பட்டு, அவற்றுக்கு அஷ்டவர்க்கப் பலன்கள் காணும் முறைகள் சொல்லப்பட்டுள்ளன.

பன்னிரண்டாம் சருக்கம் - அஷ்டவர்க்கம் சுவடி எண் 1976c) என்ற தலைப்பிலமைந்த நூல், சுந்தரானந்தர் சோதிட காவியத்தின் ஒரு பகுதியாகும். அச்சு நூலினின்றும் மாறுபட்ட இந்நூலில், அஷ்ட வர்க்க சக்கரங்கள் அமைக்கும் முறைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அஷ்ட வர்க்க சக்கரங்கள் ஏழில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய ஐந்து கிரகங்களுக்கான பரல்கள் மட்டுமே சோதிட நூல்களில் கூறப்பட்டு உள்ளன. இராகு, கேது முதலான சாயாக்கிரகங்களுக்கும் பரல்கள் கூறியிருப்பது இந்நூலின் குறிப்பிடத்தக்க செய்தியாகும். முழுமையற்ற நூலாகக் கிடைத்துள்ளதால், சுக்கிரன், சனி போன்றவற்றுக்கான அஷ்ட வர்க்கச் சக்கரங்கள் போடும் முறை காணப்படவில்லை.

இவையன்றி, 'லக்ன பாத பலன்' (சுவடி எண் 802C) என்ற நூலுக்கு இறுதியில் சோதிட - அஷ்டவர்க்கம் தொடர்பான ஒரு சிறிய நூல் கிடைத்தது. இந்நூலில், "வேத லிங்கமன் உரைசெய்த மொழி வகுத்தோர் தாமே" (பா. எண் 191:4) என்று சுட்டப்பட்டிருப்பதால், இந்நூலின் ஆசிரியர் வேதலிங்கமன் என்பதை அறியலாம். இந்நூலில், ஏழு கோள்களுக்கான அஷ்ட வர்க்கப் பரல்கள், ஒவ்வொரு இராசியிலும் விழும் பரல்களின் அடிப்படையில் அவற்றின் பலன்கள் போன்றவை எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

'சோதிடம் - அஷ்ட வர்க்கம்' என்ற நூல் தொகுக்கப்பட்ட பல சோதிட நூல்களைக் கொண்ட ஒரு சோதிட நூலின் (சுவடி எண் 523) முதல் பகுதியாக விளங்குகிறது. இது 'அஷ்ட வர்க்கப் பலபடலம் என்ற பெயரிலமைந்த குமார சுவாமியம்' என்ற சோதிட நூலின் ஒரு படலமாகும். இதில் மூன்று பாடல்களில் அஷ்ட வர்க்கம் தொடர்பான செய்திகள் உள்ளன. இந்த அஷ்ட வர்க்க நூலில், அந்த மூன்று பாடல்களுக்கான உரைகள் மட்டும் கூறப்பட்டுள்ளன. இவ்வுரையை அடுத்து, திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை, இராசி குணாகாரம், கிரக குணாகாரம், கிரகநிலை, அஷ்ட வர்க்க சக்கரங்களைக் கொண்டு பலன் கூறும் முறை போன்றவை கூறப்பட்டுள்ளன. குமார சுவாமியத்தில் 'அஷ்ட வர்க்கப் படலம்' என்ற ஒரு படலமும் உள்ளது. அது இந்நூலில் கூறப்படவில்லை.

ஆறாவதாக 'சோதிடம் - அஷ்ட வர்க்கம்' (சுவடி எண் 785) என்ற தலைப்பில் அமைந்த நூல், ஒரு தனியார் சாதகத்தின் அஷ்ட வர்க்கச் சக்கரங்களும், அதன் மூலமாகக் கண்ட பலன்கள் கூறப்பட்டதுமாகும். அஷ்ட வர்க்க சக்கரத்தைக் கொண்டு பலன்களை எடுத்துரைக்கும் எடுத்துக் காட்டாக இருப்பதால், இந்நூலின் நிறைவுப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

## அஷ்டவர்க்கம் கூறும் நூல்கள்

ஒரு சாதகனின் வாழ்வில் நடைபெற இருக்கும் நன்மை தீமைகளை எடுத்துரைக்க பல முறைகளைசோதிட நூல்கள்

எடுத்துரைக்கின்றன. அத்தகைய முறைகளுள் ஒன்றாக விளங்குவது அஷ்டவர்க்கங்களைக் கொண்டு பலன்கூறும் முறை. இத்தகைய அஷ்டவர்க்கத்தைத் தனித்துக் கூறும் பழைய சோதிட நூல்கள் இல்லை. சோதிட நூல்களில் ஒரு பகுதியாகவே அஷ்டவர்க்கத்தின் மூலமாகப் பலன் கூறும் முறைகள் கூறப்பட்டுள்ளன. கிடைத்த வரையிலான பழைய சோதிட நூல்களில் வராகர் ஓரா சாத்திரம், ஜாதக பாரிஜாதம், பல்தீபிகை, பூர்வ பாராசாயம், சுந்தரானந்தர் சோதிட காவியம், சாதகாலங்காரம், வீமேஸ்வர உள்ளமுடையான், குமார சுவாமியம் முதலான நூல்களில் காணப்படுகின்றன.

இவையன்றிச் சூசககேரளீயம், நாரதீயம் போன்ற நூல்களைக் கொண்டு, 'அஷ்டவர்கு' என்ற நூல் 1920 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. ஜாதக அஷ்டக வர்க்கமும்அதன் பலாபலன்கள் நிர்ணயமும் என்ற நூல் 1983 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. அதன்பின் ஜாதகம் பார்ப்பது எப்படி? என்ற நூல் 1986 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. இந்நூல்களில் அஷ்டவர்க்கம் குறித்து விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

### பிருஹத் சாதகம்

அஷ்ட வர்க்கத்தைப் பற்றி பேசும் பழைமையான நூல் பிருஹத் சாதகம் என்னும் வராகர் ஓரா சாத்திரமாகும். இந்நூலின் ஆசிரியர் வராகமிஹிரர். இவர் கி.பி ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தார் என்பர். வடமொழியில் அமைந்த இந்நூலை இலிங்கன் என்பவர், 'வராகர் ஓரா சாத்திரம்' என்ற பெயரிலும் வைத்தியலிங்கன் என்பவர், மங்களேசுவரியம் என்ற பெயரிலும் மொழிபெயர்த்துள்ளனர். இந்நூல் இருபத்தைந்து அத்தியாயங்களைக் கொண்டது. இந்நூலின் ஒன்பதாவது அத்தியாயம் அஷ்டவர்க்க அத்தியாயமாகும். ஏழு கோள்களுக்குரிய அஷ்டவர்க்க சக்கரங்களை அமைத்தலை ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொன்றாக ஏழு பாடல்களில் கூறியுள்ளதோடு அதன் பலன்கள் கூறப்பட்டுள்ளன.

இந்நூலில் அஷ்டவர்க்கப் பரல்களின் எண்களை நேரிடையாகக் கூறாது குறிப்பாகச் சில சொற்களால் சுட்டப்படுதல் குறிப்பிடத்தக்கது. சான்றாகக்,

"கதிர்வர்க்க மாதிதனம் கன்மமுட னாயம்
காமம்பந் தாயுள்தவம் இரவிகன்சேய் நிலைக்காய்
கதிலினியன் அரிகாமம் வயம்புகர்க்கு நல்லன்
இகலாயஞ் சுதன்றவத்தி லங்கிரசர்க் கினியன்
அரியபவம் அரிச்சுசம் தவமிந்து தனக்காம்
அரிசுதன்மூன் றாயவியம் தவங்கன்மம் புதற்காம்
சதுரவியம் ஆயமொடுத் தசமமரி சகசம்
தனிஇதய மதற்கிரவி நல்லனெனச் சாற்றே"
(வராகர் ஓரா சாத்திரம் பா.எண்.155)

என்ற பாடல் சூரியனின் அஷ்டவர்க்க சக்கரத்தை அமைப்பதற்கான எண்களைச் சுட்டும் பாடலாகும். இதில் சூரியன் நின்ற இராசி முதலாக 1,2,10,11,7,4,8,9 ஆகிய எட்டு இராசிகளில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலைப் போட வேண்டும். இந்தப் பாடலில் இந்த எண்கள் ஆதி (1), தனம் (2), கன்மம் (10), ஆயம் (11), காமம் (7), பந்து (4), ஆயுள் (8), தவம் (9) என்ற சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளன.

**பலதீபிகை**

மந்திரேசுவரரால் இயற்றப்பட்டது பலதீபிகை. இந்நூல் இருபத்தாறு அத்தியாயங்களைக் கொண்டது. இந்நூலின் இருபத்து மூன்றாவது அத்தியாயமாக, அஷ்டவர்க்கத்தியாயம் அமைந்துள்ளது. இந்த அத்தியாயத்தில் இருபத்து நான்கு சுலோகங்கள் உள்ளன. இருபத்து நான்காவது அத்தியாயமாக அஷ்ட வர்க்க சமுதாய பலாத்தியாயம் அமைந்துள்ளது.

அஷ்டவர்க்காத்தியாயத்தில் அஷ்ட வர்க்க சக்கரங்களை அமைக்கும் முறை, அதனைக் கொண்டு கோசார பலன் அறிதல், பாவ பலன் அறிதல் போன்ற பலன்களை அறியும் முறைகள் கூறப்பட்டுள்ளன.

அஷ்டவர்க்க சமுதாய பலாத்தியாயத்தில் தந்தை, தாய், சகோதரர், பிள்ளைகள் போன்றோரைப் பற்றி அறிதல். திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை, இராசி குணகாரம், கிரக குணகாரம் போன்றவற்றைப் பற்றிக் கூறுவதோடு, பலன் கூறும் பகுதி விரிவாக அமைந்துள்ளது.

### ஜாதக பாரிஜாதம்

வைத்திய நாத பண்டிதரால் இயற்றப்பட்ட ஜாதக பாரிஜாதத்தில் அஷ்ட வர்க்கத்தைக்குறித்து விரிவான செய்திகள் காணப்படுகின்றன. ஏழு கிரகத்திற்கும் அஷ்ட வர்க்கப் பரல்களின் எண்ணிக்கை, அஷ்ட வர்க்கச் சக்கரங்களைப் போடும் முறை, அவற்றைக் கொண்டு பலன்களை அறியும் முறை, திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை, சர்வாஷ்டக வர்க்கப் பரல்களைக் கொண்டு விரிவாகப் பலன்களைக் கூறும் முறை போன்றவை விரிவாக கூறப்பட்டுள்ளன.[1]

### சுந்தரானந்தர் சோதிட காவியம்

சுந்தரானந்தரால் இயற்றப் பட்ட சுந்தரானந்தர் சோதிட காவியம் பதினாறு சருக்கங்களை உடையது. இவற்றுள் பன்னிரண்டாவது சருக்கமாக அட்டவர்க்கப் பலன் அமைந்துள்ளது. இதில் இலக்கினம் முதல் விரய ஸ்தானம் வரையிலான பன்னிரண்டு ஸ்தானங்களிலும் நின்ற பரல்களுக்கான பலன்கள் கூறப்பட்டுள்ளன. ஒன்று முதல் எட்டுப் பரல்கள் இருப்பின் என்னென்ன பலன்கள் கிடைக்கும் என்ற விபரங்கள் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு பரலுக்கும் ஒவ்வொரு எண்சீர் விருத்தமாக தொண்ணூற்று ஆறு பாடல்களில் இந்த செய்தி விளக்கப்பட்டுள்ளது. இறுதியாக அமைந்த,

"தேசமுடன் பன்னிரண்டாம் பாகந் தன்னை
நேர்மையுடன் நான்சொன்னேன் விபர மாக

1. ஜாதக பாரிஜாதத்தில் கூறப்பட்டுள்ள அஷ்டவர்க்கம் தொடர்பான செய்திகள் தொகுத்து எழுதப்பட்ட அஷ்டகவர்கு என்ற நூலின் செய்திகள் இங்குத் தரப்பட்டுள்ளன.

தோசமில்லா தேபரலைக் கணக்கிட் டேதான்
சுத்தரமாய்ப் பார்த்தறிந்தால் பலனோ கிட்டும்
பாசமெனும் பரலதனிற் கணக்கை விட்டால்
பலனதுவும் ஒருபோதும் கிட்டி டாது
வாசவன்தன் அருளிதுதான் சொல்லி விட்டேன்
மகத்துவமாம் சுத்தரமென் வாக்குத் தானே."
- (பாடல் எண் : 96)

என்ற பாடலில், பிழைகளின்றிப், பரல்களைக் கணக்கிட வேண்டும் என்று எடுத்துரைக்கிறது. ஆனால் எவ்வாறு கணக்கிடுவது என்ற செய்தி சுட்டப்படவில்லை அஷ்ட வர்க்கங்களில் ஏழு கிரகங்களுக்கும் ஏழு அஷ்டவர்க்க சக்கரங்களும் இவற்றின் கூட்டுத்தொகையான சர்வாஷ்டக வர்க்க சக்கரமுமாக எட்டு அஷ்டவர்க்கச் சக்கரங்கள் உள்ளன. அந்தந்தக் கிரகங்களால் அடையப்பட்ட இராசிகளை அந்தந்த கிரகங்களின் பெயர் கொண்ட இலக்கினமாகக் கற்பிக்கப் பட்டுள்ளன. சான்றாகச் சூரியன் நின்ற இராசி சூரிய இலக்கினம் என்றும் சந்திரன் நின்ற இராசி, சந்திர இலக்கினம் என்றும் கணக்கிடவேண்டும். இவ்வாறாகக் கற்பிக்கப்பட்ட இலக்கினத்தை முதலாவதாகக் கொண்டு இலக்கினாதி பாவங்களின் பலன்கள் எட்டு வகைகளாகின்றன. அப்பலன்களை அந்தந்த கிரகங்கள் மூலமும் பாவங்களின் மூலமும் கணக்கிடவேண்டும். இந்நூல் அச்சில் வெளிவந்த நூலாகும்.

இந்நூலையன்றி, பதிப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நூல்களில் பன்னிரண்டாம் சருக்கம் - அஷ்ட வர்க்கம் என்ற ஒரு நூல் காணப்படுகிறது. இந்நூல், முழுமையற்றதாக ஓலைச் சுவடியில் கிடைத்துள்ளது. கிடைத்தவரையிலான ஐம்பது எண்சீர் விருத்தங்களில் அஷ்டவர்க்க சக்கரம் வரைவது எவ்வாறு என்பது கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு அஷ்டவர்க்கச் சக்கரத்திற்கும் பத்துப் பத்துப் பாடல்களில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

"ஆய்ந்துபார் சுந்தரமே அட்ட வர்க்கம்
அவரவர்தம் மனதுடனே அறிந்து போடே"
(பா. எண் : 17)

என நூலினிடையில் குறிப்பு உள்ளதால், இந்நூல், சுந்தரானந்தர் சோதிட காவியத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம் என்று கருதலாம். அந்நூலின் ஒரு பகுதியாக இருப்பின், அச்சுநூலில் இப்பாடல்கள் இடம்பெற்றிருக்க வேண்டும். ஆனால் இடம்பெறவில்லை. முழுமையான ஓலைச்சுவடி கிடைத்திருப்பின், இதற்கான விடை கிடைத்திருக்கக் கூடும்.

ஓலைச்சுவடியில் காணப்படும் நூலில் இராகு, கேது ஆகிய கிரகங்களுக்கான பரல்கள் காணப்படுகின்றன. பொதுவாக அஷ்டவர்க்க சக்கரங்களை வரையும் பொழுது, இராகு, கேதுக்களைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. காரணம், அவை இரண்டும் நிழற்கிரகங்களாகும். ஆனால் அரிதாக ஒரு சில சோதிடர்கள் இதனைக் கணக்கில் எடுத்துக் கொண்டார்கள். இது இடைப்பட்ட காலத்தில் தோன்றிய முறையாகும். எனவே, மற்ற நூல்களினின்றும் அஷ்டவர்க்க சக்கரங்கள் போடுவதிலிருந்து மாறுபட்ட முறையில் இந்நூலில் கூறப்பட்டுள்ளது எனலாம். இந்நூலிற்கு முழுமையற்ற ஓலைச்சுவடியே பதிப்பிக்கக் கிடைத்துள்ளதால், சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், நான்கு அஷ்டவர்க்கச் சக்கரங்களை மட்டுமே அமைக்க முடியும். குரு, சுக்கிரன், சனி ஆகியவற்றின் அஷ்டவர்க்கச் சக்கரங்களோடு சர்வாஷ்டக வர்க்கச் சக்கரத்தையும் அமைக்க இயலாது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

**சோதிட கிரக சிந்தாமணி மாலை**

சோதிட கிரக சிந்தாமணி மாலை தமிழில் அமைந்த சோதிட நூல்களுள் குறிப்பிடத்தக்க நூலாகும். இதற்கு விமேகர உள்ளமுடையான் என்ற வேறு பெயர் உண்டு. இந்நூலின் முதல்பகுதியில் பொதுப்படலம் முதலாக யாத்திரைப் படலம் ஈறாகப் பதினெட்டுப் படலங்கள் உள்ளன. இவற்றுள் பத்தாவது

படலமாக விளங்குவது அஷ்ட வர்க்கப் படமாகும். இப்படலத்தில் நாற்பத்து மூன்று விருத்தப்பாடல்களில் அஷ்டவர்க்கம் தொடர்பான செய்திகள் கூறப்பட்டுள்ளன. அஷ்டவர்க்கச் சக்கரங்களைப் போடுதல், திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை, இராசி குணகாரம், கிரக குணகாரம், அஷ்டவர்க்கப் பலாபலன்கள் போன்றவை இந்தப் படலத்தில் கூறப்பட்டுள்ளன. இந்நூலில் அஷ்டவர்க்கம் பற்றி விரிவான முறையில் மூலமும் உரையுமாகச் செய்திகள் கூறப்பட்டிருப்பது சுட்டத்தக்கது.

**குமாரசுவாமியம்**

குமாரசுவாமி என்பவரால் இயற்றப்பட்டது குமார சுவாமியம் என்ற சோதிட நூலாகும். இந்நூல் ஐம்பத்து நான்கு படலங்களைக் கொண்டது. இந்நூலின் ஒன்பதாவது படலமாக அஷ்டவர்க்கப் படலமும் முப்பத்து ஐந்தாவது படலமாக அஷ்டவர்க்க பலப்படலமும் அமைந்துள்ளன. அஷ்ட வர்க்கப் படலத்தில் ஏழு விருத்தப்பாடல்களில் அஷ்டவர்க்கம் தொடர்பான செய்திகள் கூறப்பட்டுள்ளன. ஏழுகிரகங்களுக்கான அஷ்ட வர்க்கச் சக்கரங்கள் போடும்முறை, திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை, இராசி குணகாரம், கிரக குணாகாரம், குண சமூகம், சுத்த பிண்டம், ஏக சமூகம் தின கண்டம், வயது கண்டம் முதலான செய்திகள் எடுத்துரைககப்பட்டுள்ளன. அஷ்டவர்க்கப் பல படலத்தில் மூன்று விருத்தப் பாடல்களில் அஷ்ட வர்க்கம் தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன. பின்னாஷ்டக வர்க்கம், பிரத்தியாரஷ்டக வர்க்கம், சர்வாஷ்டக வர்க்கம் கொண்டு பலன் கூறும் முறைகள் இப்படலத்தில் கூறப்பட்டுள்ளன.

**சாதகாலங்காரம்**

கீரனூர் நடராஜன் என்பவரால் இயற்றப்பட்ட சாதகாலங்காரம் சிறந்த சோதிடநூலாகும். இந்நூலில் அஷ்டவர்க்கம் தொடர்பான செய்திகள் இடம்பெற்றுள்ளன.

இந்நூலில் உள்ள அஷ்டவர்க்கம் பகுதி, இருபத்தாறு விருத்தப்பாக்களால் ஆனது. ஏழு கிரகங்களுக்கான அஷ்டவர்க்கப் பரல்களின் எண்ணிக்கை, அஷ்டவர்க்க சக்கரங்கள் போடும் முறை, திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை, சர்வாஷ்டக வர்க்கம், கிரக குணகாரம், இராசி குணகாரம், இவற்றைக் கொண்டு பலன்களை கூறும் முறைகள் போன்றவை அமைந்துள்ளன.

## அஷ்ட வர்க்கம்

ஒரு சாதகரின் சாதகத்தில் அந்த சாதகன் பிறந்த நேரத்திற்கு உரிய ஜன்ம இலக்கினம் குறிக்கப்பட்டுக் கிரக நிலைகள் பார்க்கப்படுகின்றன. சாதகப் பலன்களைக் கூறுவதற்குப் பாவ பலமும் கிரகங்களின் பலமும் பார்க்க வேண்டியது அவசியமாகும். இவற்றைச் சுத்தமாகக் கணித்துச் சாதகபலன்களை திர்ணயம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் பலன்கள் சரியாக இருக்கும். ஒரு சாதகத்திற்குக் கிரகஸ்புடம், பாவஸ்புடம் போன்றவற்றைச் செய்து, சப்த வர்க்கச் சக்கரங்கள் வரைந்து, அவற்றிலிருந்து ஷட்பல நிர்ணயமும் பாவபல நிர்ணயமும் செய்வதற்கு மிகுந்த அனுபவம் உள்ளவர்களுக்கும் கூட நீண்ட நேரமும் மிகுந்த முயற்சியும் தேவை.

கிரகஸ்புடமோ பாவஸ்புடமோ செய்யாமல் கிரகங்களின் பலத்தையும் பாவங்களின் பலத்தையும் குறைந்த நேரத்தில் கணித்து அறியக்கூடிய வழிகளைச் சோதிட வல்லுநர்கள் கண்டறிந்துள்ளார்கள். சோதிட நூல்கள் சிலவற்றில் இத்தகைய சுருக்கமான முறைகள் உள்ளன. அவற்றுள் எளிமையானதாகவும் துல்லியமானதாகவும் விளங்குவது அஷ்டவர்க்கம் என்று சொல்லக்கூடிய சோதிட முறையாகும்.

அஷ்ட வர்க்க சோதிட முறையில், சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு சுக்கிரன், சனி ஆகிய ஏழு கிரகங்களும் ஜென்ம இலக்கினமும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இவற்றைக் கொண்டு, பன்னிரண்டு இராசிகளிலும்

இக்கோள்கள் நின்ற இடத்தின் அடிப்படையில் பரல்களை இட்டு, அஷ்ட வர்க்க சக்கரங்களை அமைத்துப் பலன்களைக் கூறுவர். இந்தப் பரல்கள் சிலநூல்களில் பிந்துக்கள் அல்லது விந்துக்கள் எனச் சுட்டப்படுகின்றன.

இந்த அஷ்ட வர்க்க சக்கரங்கள் அமைக்கும் பொழுது இராகு, கேதுக்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. சூரியன் முதல் சனி வரையிலுள்ள ஏழு கிரகங்களைப் போல இவற்றிற்கு உருவம், அளவு முதலானவை கிடையாது. நிழல் தோற்றங்களாக விளங்குவதால், இந்தச் சாயாக்கிரகங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்வது இல்லை. ஆனால் பின்னாளில் சிலர் இராகு, கேதுக்களைக் கணக்கில் கொண்டு அஷ்டவர்க்க சக்கரங்களை உருவாக்கியுள்ளனர். இந்நூல் பதிப்பில், 'பன்னிரண்டாம் சருக்கம்-அஷ்டவர்க்கம்' (சுவடி எண் 1976c) என்ற நூலில் இராகு, கேதுக்கள் கணக்கில் எடுத்துக் கொண்டிருப்பது சுட்டத்தக்கதாகும். சோதிட அறிஞர் அடிகளாசிரியர் "அஷ்ட வர்க்கம் என்பது சமுதாயம், திரிகோண சோதனை, ஏகாதிபத்தியம், குணசமூகம், இராசி குணகாரம், கிரக குணகாரம், சுத்த பிண்டம், ஏக சமூகம் என்னும் எட்டாகும்" என்று வராகர் ஓரா சாத்திரத்தில் (ப. 164) விளக்கம் தருகிறார்.

ஒரு சாதகத்தில் ஒவ்வொரு கிரகமும் தாமிருக்கும் நிலையிலிருந்து சில குறிப்பிட்ட இடங்களில் நன்மை தருபவை. அவற்றை ஒவ்வொரு இடத்திற்கும் ஒரு பரல் எனக் கணக்கிட்டு, ஏழு கிரக நிலைக்கும் அஷ்ட வர்க்கம் கணித்து, அவற்றை மொத்தமாக ஒவ்வொரு பாவத்திற்கும் கூட்டி சர்வாஷ்டக வர்க்கத்தைக் கணக்கிட வேண்டும்.

## அஷ்டவர்க்கத்தின் பலன்கள்

சாதகப் பலன்களைக் கூறுவதற்கு இந்த அஷ்டவர்க்கங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

1. துல்லியமான பலன்களை இம்முறையின் மூலம் அறியலாம். குறிப்பாகச், சாதகருடன் உடன்பிறந்தவர்கள்

எத்தனை பேர்? அவர்களில் ஆண்கள் எத்தனை ? பெண்கள் எத்தனை ? அவர்களில் யார்யாருக்குத் தீர்க்காயுள் உண்டு, யார் யாருக்கு அவ்வாறு இல்லை. யார் யார் சுகத்துடன் இருப்பார்கள் ? யார் யார் துன்பப்படுவார்கள் என்பதை அறிந்து கொள்ள முடியும். மேலும் ஜாதகருடைய தாய், தந்தை, அவர்களுடன் உடன்பிறந்தோர் பற்றிய விபரங்கள், சந்ததிகள் குறித்த விபரங்கள் போன்றவற்றை அறிய முடியும். இதனை, C.G.ராஜன் அவர்கள் 'ஜாதக அஷ்டக வர்க்கமும் அதன் பலாபலன்கள் நிர்ணயமும்' (முன்னுரை) நூலில் எடுத்துரைத்துள்ளார்.

2. சாதகரின் உடுதசை பலன்களை அறிவதற்கு அஷ்டவர்க்கம் உதவுகிறது. உடுதசைகளில், ஒரு தசை நல்ல பலனைக் கொடுக்குமா அல்லது தீய பலனைக் கொடுக்குமா என்பதை இந்த அஷ்ட வர்க்கத்தின் மூலம் அறியலாம். பூர்வபாராசர்யம் நூலில், தன்னுடைய அஷ்ட வர்க்கத்தில் தான் தங்கியுள்ள இராசியில் பரல்கள் ஐந்து அல்லது அதற்கு அதிகமாக இருப்பின், அந்தக் கிரகத்தின் திசை அல்லது அந்தக் கிரகம் எந்தப் பாவத்தின் அதிபதியாக இருக்கிறானோ அந்த பாவத்தின் திசை சுப திசையாகும். இதற்கு நேர்மாறாக இருந்தால், அசுப திசையாகும் (ப.73) என்று கூறப்பட்டுள்ளது. அதைப் போலவே, சர்வாஷ்டக வர்க்கத்தில் எந்த இராசியில் பிந்துக்கள் 28-க்கும் அதிகமாக உள்ளனவோ அந்த பாவத்தின் திசை அல்லது அந்தப் பாவத்தில் தங்கியுள்ள கிரகத்தின் திசை சுபதிசையாகும். இதற்கு நேர்மாறாக இருப்பின், அசுபதிசை. பாவத்தின் சுபதிசையில் பாவப் பொருட்களின் வளர்ச்சி உண்டாகும். அப்படியே கிரகத்தின் சுபதிசையில் கிரகம் தங்கியுள்ள பாவத்திற்கு உட்பட்ட பொருட்களின் வளர்ச்சியும் உண்டாகும். அதற்கு நேர்மாறாக இருந்தால், பாவத்திற்குரிய பொருட்களின் நாசம் உண்டாகும் (ப.72) என்றும் கூறப்பட்டுள்ளது.

3. சாதகர் பிறக்கும் பொழுது எழுதப்படும் இராசிச் சக்கரத்தில் ஒவ்வொரு கிரகமும் எந்தெந்த இராசிகளில்

உள்ளனவோ அந்தந்த இராசிகளில் கோசார ரீதியாக அந்தந்தக் கிரகங்கள் வரும்பொழுது நல்ல பலனைக் கொடுக்குமா அல்லது தீய பலனைக் கொடுக்குமா என்பதை அறிந்துகொள்வதற்கு அஷ்டவர்க்கம் உதவுகிறது.

ஒரு சாதகத்தின் பலன்கூறும் முறைகளில் துல்லியமாகவும் எளிமையாகவும் விரைவாகவும் எடுத்துக் கூற உதவும் இந்த சோதிடம் - அஷ்டவர்க்கம், சோதிட ஆர்வலர்களுக்கும் சோதிட ஆராய்ச்சியாளர்களுக்கும் பயனுள்ளதாகும்.

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர் பணியை எனக்கு வழங்கி, சோதிடம் - அஷ்ட வர்க்கம் என்ற நூலைப் பதிப்பிக்க அனுமதித்து ஆணை வழங்கிய முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குனர் உயர்திரு கா. பாஸ்கரன், இ.ஆ.ப. அவர்களுக்கும், இந்நூல் நல்ல முறையில் வெளிவரத் துணை நின்ற மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குனர் டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப. அவர்களுக்கும், நூற்பணியினைச் செவ்வனே நிறைவேற்றிடத் துணைபுரிந்த நிருவாக அலுவலர் திரு. கி. கணேசன்,B.Com., அவர்களுக்கும், இந்நூலக நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன், M.A.,B.Lit.,M.L.I.S.Ph.D., அவர்களுக்கும், தமிழ்ப் பண்டிதர் திரு. மணி. மாறன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த நூலக கணினிப் பிரிவினருக்கும், நூற்கட்டுப் பிரிவினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் — **கா. சத்தியபாமா**
11.08.2015 — சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்

# நூல் – 1

## சோதிடம் – அஷ்ட வர்க்கம்[1]

அஷ்ட வர்க்கம் என்பது தானே
　　　　ஆதித்தன் சந்திரன் செவ்வாய்
இட்டமாம் புத்தி பொன்புகர் சனியன்
　　　　இலக்கனத் துடனெட்டு வகையில்
வட்டவான் புவிமேல் அட்டக வர்க்கம்
　　　　வகுத்தனர் வகுத்ததைக் கூறி
இட்டமாம் இராசி பனிரெண்டில் கோள்கள்
　　　　சேரிட முறைமையில் வைத்தே　　　　1

(இ-ள்) அஷ்ட வர்க்கம் என்பதற்கு எட்டுவகை என்பது பொருள். சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய ஏழு கிரகங்கள், பிறந்த இலக்கினம் ஆகிய எட்டு வகைகளைக் கொண்டு பன்னிரண்டு இராசிகளில் கோள்கள் நின்ற இடத்தை முதலாகக் கொண்டு அஷ்டவர்க்க சக்கரங்களை அமைத்து அதன் மூலம் சோதிடப் பலன்களை நுணுக்கமாகக் கூறுவதற்குச் சோதிட வல்லவர்கள் வகுத்துள்ளார்கள்.

வகுத்திடும் கோள்கள் ஏழுக்கு மான
　　　　வாக்கிய முறைப்படித் தானே
தொகுத்திடும் வகையும் மிகுதிரி கோண
　　　　சோதனை சோதித்த பின்னர்
பகுக்குமே காதி பத்தியம் செய்து
　　　　பண்புற்ற சுத்தபிண் டத்தை
மிகுக்குமோ ரைக்கும் கிரகங்கள் தனக்கும்
　　　　இயல்குணா காரமும் புகல்வார்　　　　2

(இ-ள்) சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய ஏழு கோள்களுக்குமான வாக்கியங்களைக் கொண்டு எண்களை அறிந்து, அவற்றை அஷ்டவர்க்கங்களாக முறைப்படி எழுதுதல், திரிகோண சோதனை செய்தல், அதன்பின்பு

---

1. சுவடி எண் 7948

ஏகாதிபத்திய சோதனை செய்தல், சுத்த பிண்டத்தைக் காணல், இராசி குணாகாரம், கிரக குணாகாரம் ஆகியவற்றைக் கூறுவார்கள்.

## இரவி அஷ்டவர்க்க வாக்கியம்

இரவிகுசன் சனியிவர்க்கு வாக்கியமந் தார்மீட்டெண்
ஏர்கைகொள்வோம் சந்திரனுக் கேவிற்பூண் பொன்னோன்
விரவுபுந்தி கேவிடுபூவைக் கொண்டோம் வெனவேன்
போலான பொன்னவனுக் கேகற்றூர் வைட்போம்
திரமிகும்சுக் கிரன்தனக்குப் பூவெண்வெள னென்பார்
செம்மவிலக் கனம்விண்ணீர் சூர்கொள்வோம் வெள
வரவளி யும்சூரிய அட்டவர்க்கம் இந்த
வரன்முறையே இலக்கமிகும் வகையென்பார் மயிலே !
3

(இ-ள்) மயில் போன்ற சாயலையுடைய பெண்ணே ! இராசிச்சக்கரத்தில் சூரியன், செவ்வாய், சனி இந்த மூன்று கிரகங்கள் தங்கிய இராசிகளில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம், 'மந்தார் மீட்டெண் ஏர்கை கொள்வோம்'; சந்திரன் இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம், 'வில் பூண் பொன்னோன்'; புதன் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம், 'விடு பூவைக் கொண்டோம் வென'; குரு நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம், 'பூவெண் வென'; இலக்கினத்தில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் 'விண்ணீர் சூர் கொள் வோம் வெள' என்பவை சூரிய அட்டகவர்க்க எண் எழுதும் வரைமுறை என்று கூறுவர்.

## சூரிய அஷ்ட வர்க்கத்திற்கு வாக்கிய விளக்கம்

சூரியனுக்கும் செவ்வாய்க்கும் சனிக்கும் நின்ற இராசிகளில் இருந்து பரல்களைக் குறிக்கும் வாக்கியம், "மந்தார் மீட்டெண் ஏர்கை கொள்வோம்" என்பதாம். ம-1, தா-2, மீ-4, டெ-7, ஏ-8, கை-9, கொ-10, வோ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். சந்திரனில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் 'வில் பூண் பொன்னோன்' என்பதாம். வி-3, பூ-6, பொ-10,

னோ-11, என்று இதனைக் கணக்கிட வேண்டும். புதனில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் 'விடு பூவைக் கொண்டோம் வெள' என்பதாம். வி-3, டு-5, பூ-6, வை-9, கொ-10, டோ-11, வெள-12, என்று இதனைக் கணக்கிட வேண்டும். குருவில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம், "கற்றூர் வைப்போம்" என்பதாம். க-5, றூ-6, வை-9, போ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். சுக்கிரனில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம், 'பூவெண் வெள' என்பதாம். பூ-6, வெ-7, வெள-12 என்று இதனைக் கணக்கிட வேண்டும். இலக்கினத்தில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் 'விண்ணீர் சூர்கொள்வோம் வெள' என்பதாம். வி-3, ணீ-4, சூ-6, கொ-10, வோ-11, வெள-12 என்று இதனைக் கணக்கிட வேண்டும்.

இவற்றில் அமைந்துள்ள உயிரெழுத்துக்களை எடுத்து தமிழில் அவற்றின் இடவரிசை எண்களைக் கொண்டு கணக்கிடவும். 1 அ, 2 ஆ, 3 இ, 4 ஈ, 5 உ, 6 ஊ, 7 எ, 8 ஏ, 9 ஐ, 10 ஒ, 11 ஓ, 12ஔ.

இந்த வாக்கியங்களில் கூறப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையில், சூரிய அஷ்ட வர்க்கத்தை எழுத வேண்டும்.

## சூரிய அஷ்ட வர்க்கம். பரல்கள் 48

| | | |
|---|---|---|
| 1. சூரியன் | - 1, 2, 4, 7, 8, 9, 10, 11 | ஆகப் பரல்கள் 8 |
| 2. சந்திரன் | - 3, 6, 10, 11 | ஆகப் பரல்கள் 4 |
| 3. செவ்வாய் | - 1, 2, 4, 7, 8, 9, 10, 11 | ஆகப் பரல்கள் 8 |
| 4. புதன் | - 3, 5, 6, 9, 10, 11, 12 | ஆகப் பரல்கள் 7 |
| 5. குரு | - 5, 6, 9, 11 | ஆகப் பரல்கள் 4 |
| 6. சுக்கிரன் | - 6, 7, 12 | ஆகப் பரல்கள் 3 |
| 7. சனி | - 1, 2, 4, 7, 8, 9, 10, 11 | ஆகப் பரல்கள் 8 |
| 8. இலக்கினம் | - 3, 4, 6, 10, 11, 12 | ஆகப் பரல்கள் 6 |
| | | மொத்தம் பரல்கள் 48 |

## எடுத்துக்காட்டு: சாதகம்

| | | | |
|---|---|---|---|
| | செவ் கேது | சுக் | சூரி சந் |
| | இராசிச் சக்கரம் | | புதன் |
| | | | |
| | சனி | குரு ராகு | இல |

## சூரியன் அஷ்ட வர்க்கம் 48-க்கு விபரம்

கதிர்வர்க்க மாதிதனங் கன்மமுட னாயம்
காமம்பந் தாயுள்தவம் இரவிகன்செய் நிலைக்காய்
கிதிவினியன் அரிகாமம் வியம்புகர்க்கு நல்லன்
இகலாயந் சுதன்றவத்தி லங்கிரசர்க் கினியன்
அரியபவம் அரிசகசம் தவமிந்து தனக்காம்
அரிசுதன்மூன் றாயவியம் தவங்கன்மம் புதத்காம்
சதுரவியம் ஆயமொடுத் தசமமரி சகசந்
தனிலுதய மதற்கிரவி நல்லவெனச் சாற்றே.

(எ.து) ஆதித்தன் அஷ்டவர்க்கம் ஆதி 1, தனம் 2, கன்மம் 10, ஆயம் 11, காமம் 7, பந்து 4, ஆயுள் 8, தவம் 9, ஆதித்தன், சனி, செவ்வாய் இவர்கள் நின்ற தானத்திற்கு இத்தானங்களில் ஆதித்தன் சுபன்; அரி 6, காமம் 7, வியம் 12 சுக்கிரன் நின்ற தானத்திற்கு இத்தானங்களில் ஆதித்தன் சுபம். இகல் 6, ஆயம் 11, சுதன் 5, தவம் 9 வியாழன் நின்ற தானத்திற்கு இத்தானங்களில் ஆதித்தன் சுபன்; பவம் 11, அரி 6, சகசம் 3, தசம் 10 சந்திரன் நின்ற தானத்திற்கு இத்தானங்களில் ஆதித்தன் சுபன்; அரி 6, சுதன் 5, மூன்று 3, ஆயம் 11, வியம் 12, தவம் 9, கன்மம் 10, புதன் நின்ற தானத்திற்கு இத்தானங்களில் ஆதித்தன் சுபன். சதுரம் 4, வியம் 12, ஆயம் 11, தசமம் 10, அரி 6, சகசம் 3 இலக்கினத்திற்கு இத்தானங்களில் ஆதித்தன் சுபன்.

(வராகர் ஓரா சாத்திரம்; பாடல் எண் 155)

## எடுத்துக்காட்டியுள்ள சாதகத்தின்படி
## சூரிய அஷ்டவர்க்கம்

| வ. எண் | கிரகம் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சூரியன் | சூ | | சூ | சூ | | சூ | | | சூ | சூ | சூ | சூ |
| 2. | சந்திரன் | சந் | | | | சந் | | | சந் | | | | சந் |
| 3. | செவ்வாய் | செ | செ | | செ | | | செ | செ | செ | செ | செ | |
| 4. | புதன் | பு | பு | பு | | | பு | | பு | பு | | | பு |
| 5. | குரு | | | குரு | | குரு | | | | | | குரு | குரு |
| 6. | சுக்கிரன் | சுக் | | | | | | சுக் | சுக் | | | | |
| 7. | சனி | | சனி | சனி | சனி | சனி | சனி | | சனி | சனி | | சனி | |
| 8. | இலக்கினம் | | | இல | இல | இல | | | இல | இல | | இல | |
| | | 5 | 3 | 5 | 4 | 4 | 3 | 2 | 6 | 5 | 2 | 5 | 4 |
| | | | | | | | | | | | | கூடுதல் | 48 |

### மதி அஷ்ட வர்க்க வாக்கியம்

கண்டசூரி யற்கேளிற் கூற்றென்றே கொண்டோம்
கலைமதிக்குக் கரிபூர்செங் கொப்போர்செவ் வாய்க்கே
அண்டியேவா ளிடுபூவைப் பொன்போல் மாறூஉம்
காம்கறி நீடுபெண்ணே ! கொள்வோமந் திரிக்கே
விண்டகண்ணாய்! நீரென்றே சொல்வோம் புகர்க்கு
மின்னிருமென் கைதொட்டோம் சனியறுக்குந் தாலே
கொண்டதோர் திருப்பூண்போம் இலக்கினத்துச் சேயின்
கூன்பொய்யோ சந்திரனட் டவர்க்க மிவையே (1)

(இ-ள்) இராசிச்சக்கரத்தில் சூரியன் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம், "ளிற்கூற்றென்றே கொண்டோம்" சந்திரன் இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "கரிபூர்செங் கொப்போர்." செவ்வாய் இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "வாளிடு பூவை பொன்போல்" புதன் இருந்த இராசியில் இருந்து

பரல்களைக் குறிக்க வாக்கியம் "கறிநீடு பெண்ணே கொள்வோ". குரு நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "கண்ணாய் நீரென்றே சொல்வோம்". சுக்கிரன் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "மீன்னிருமென் கைதொட்டோம்". சனி நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம், "திருப்பூண்போம்". இலக்கின இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "மீன்கூன்பொய்யோ" என்பவை சந்திர அட்டகவர்க்க எண் எழுதும் வரைமுறை என்று கூறுவர்.

## சந்திர அஷ்டவர்க்கத்திற்கு வாக்கியங்களும் விளக்கங்களும்

சூரியன் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "விற்கூற்றென்றே வொண்டோம்" என்பதாம். வி- 3, கூ-6, றெ-7, றே-8, வொ-10, வோ-11 என்று இதனைக் கணக்கிடவேண்டும். சந்திரனில் இருந்து பரல்களைக் குறிக்கும் வாக்கியம், "கரிபூர்செக் கொப்போரி" என்பதாம். க-1, ரி-3, பூ-6, செ-7, கொ-10, போ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். செவ்வாய் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "வாளிடு பூவை பொன்போல்" என்பதாம். வா-2, ளி-3, டு-5, பூ-6, வை-9, பொ-10, போ-11, என்று இதனைக் கணக்கிட வேண்டும். புதன் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "கறிநீடு பெண்ணே கொள்வோ" என்பதாம். க-1, றி-3, நீ-4, டு-5, பெ-7, ணே-8, கொ-10, வோ-11 என்று இதனை கணக்கிடவேண்டும். குரு நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "கண்ணாய் நீரென்றே கொள்வோம்" என்பதாம், க-1, ணா-2, நீ-4, ரெ-7, றே-8, கொ-10, வோ-11, என்று இதனைக் கணக்கிட வேண்டும்; சுக்கிரன் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "மீன்னிருமென் கைதொட்டோம்"; மீ-3, னி-4, ரு-5, மெ-7, கை-9, தொ-10, டோ-11 என்று இதனைக் கணக்கிடவேண்டும்; சனி நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "திருப்பூண்போம்" என்பதாம்; தி-3, ரு-5, பூ-6,

போ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும்; இலக்கின இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "மின்கூன் பொய்யோ" என்பதாம்; மி-3, கூ-6, பொ-10, போ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும்.

இந்த வாக்கியங்களில் கூறப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையில், சந்திர அஷ்ட வர்க்கத்தை எழுத வேண்டும்.

## சந்திரனின் அஷ்ட வர்க்கப் பரல்கள் -49

| | | |
|---|---|---|
| 1. சூரியன் | - 3,6,7,8,10,11 | ஆகப் பரல்கள் 6 |
| 2. சந்திரன் | - 1,3,6,7,10,11 | ஆகப் பரல்கள் 6 |
| 3. செவ்வாய் | - 2,3,5,6,9,10,11 | ஆகப் பரல்கள் 7 |
| 4. புதன் | - 1,3,4,5,7,8,10,11 | ஆகப் பரல்கள் 8 |
| 5. குரு | - 1,2,4,7,8,10,11 | ஆகப் பரல்கள் 7 |
| 6. சுக்கிரன் | - 3,4,5,7,9,10,11 | ஆகப் பரல்கள் 7 |
| 7. சனி | - 3,5,6,11 | ஆகப் பரல்கள் 4 |
| 8. இலக்கனம் | - 3,6,10,11 | ஆகப் பரல்கள் 4 |
| | | மொத்தப் பரல்கள் 49 |

குறிப்பு: வராகர் ஓரா சாத்திரம் கூறும் சந்திரன் அஷ்டவர்க்கப் பரல்கள் 49-க்கு விபரம்.

இந்திரிய யிலக்கினத்துக் கரிசகந் தசாயம்
இதிற்காம மாயுளுதின் இரவிதனக் கினியன்
முந்தியதிற் றியூனதனு வுற்றிபிடிற்சந் திரற்காம்
முன்னிலத்திற் றனநவமஞ் சுதன்கூட்டிற் குசற்காம்
சந்ததியா யஞ்சகசம் ஆயுள்காண்டம் புதற்காம்
தனமாயுள் பவங்கண்டந் தமனியனுக் கினியன்
பந்துதிா சுதமானம் பவந்தவமேழ் புகர்க்காம்
பவஞ்சகச மரிதனயன் பானுசனுக் கினிதே.

(எ.து) சந்திரன் அஷ்டவர்க்கம் இலக்கினத்திற்கு அரி 6, சகசம் 3, தசம் 10, ஆயம் 11 இந்தத் தானங்களில் சந்திரன் நல்லன். இதில் காமம் 7, ஆயுள் 8 உறில் இரவிதனுக்கினியன் என்றது 6,

3, 10, 11 ஆகிய இவற்றுடன் 7, 8 ஆகிய இடங்கள் சூரியன் நின்ற தானத்திற்கு இத்தானங்களில் சந்திரன் சுபன். மூந்திய இதில் திழுனம் 7, தனு1 உற்றிடில் சந்திரற்காம் என்றது. 6, 3, 10, 11 ஆகிய இவற்றுடன் 7, 1 ஆகிய இடங்கள் சந்திரன் நின்ற தானத்திற்கு இத்தானங்களில் சந்திரன் தானே சுபன். மூன்றிலத்தில் தனம் 2, நவம் 9, சுதன் 5 கூட்டிற் குசற்காம் என்றது. 6, 3, 10, 11 ஆகிய இவற்றுடன் 2, 9, 5 ஆகிய இடங்கள் செவ்வாய் நின்ற இராசிக்கு இத்தானங்களில சந்திரன் சுபன். சந்ததி5, ஆயம் 11, சகசம் 3, ஆயுள் 8, கண்டம் 1, 4, 7, 10 ஆகிய இடங்கள் புதன் நின்ற இராசிக்கு இத்தானங்களில் சந்திரன் சுபன். தனம் 2, ஆயுள் 8, பவம் 11, கண்டம் 1, 4, 7, 10 ஆகிய இடங்கள் வியாழன் நின்ற இராசிக்கு இத்தானங்களில் சந்திரன் சுபன். பந்து 4, திரி 3, சுதன் 5, மானம் 10, பவம் 11, நவம் 9, ஏழ் 7 ஆகிய இடங்கள் சுக்கிரன் நின்ற இராசிக்கு இத்தானங்களில் சந்திரன் சுபன். பவம் 11, சகசம் 3, அரி 6, தனயன் 5 ஆகிய இடங்கள் சனி நின்ற இராசிக்கு இத்தானங்களில் சந்திரன் சுபனாம்.

- (வராகர் ஓரா சாத்திரம் : பா. 156)

### எடுத்துக்காட்டியுள்ள சாதகத்தின்படி சந்திர அஷ்டவர்க்கம்

| வ. எண் | கிரகம் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சூரியன் | சூ | | | | சூ | | | சூ | சூ | சூ | | சூ |
| 2. | சந்திரன் | சந் | | | சந் | சந் | | | சந் | சந் | | | சந் |
| 3. | செவ்வாய் | | செ | செ | செ | செ | செ | | | செ | செ | செ | |
| 4. | புதன் | பு | பு | பு | பு | | பு | பு | பு | | பு | பு | |
| 5. | குரு | குரு | குரு | குரு | | குரு | | குரு | குரு | | குரு | | |
| 6. | சுக்கிரன் | | | | | சுக் | சுக் | | சுக் | | சுக் | சுக் | சுக் |
| 7. | சனி | சனி | | | | சனி | | | | | சனி | | சனி |
| 8. | இலக்கினம் | | | | இல | | | | இல | | | இல | |
| | | 5 | 3 | 3 | 4 | 5 | 4 | 2 | 6 | 3 | 6 | 4 | 1 |

கூடுதல் 49

## அங்காரகன் அஷ்டவர்க்க வாக்கியம்

வர்க்கமுறும் சூரியர்க்கு விட்டுப்பூச் சொன்னோம்
மதிக்குவின்டூர் போம்செய்க்குக் கண்காணீர் பெண்ணே!
பொற்போலா மாற்குவித்துப் பூண்போம்பொன் னவர்க்குப்
பூத்தொட்டோர் வெளவல்புகர்க் கூனேபோம் வெளவேல்
சுற்கவரும் சனிக்குவன்மடர் சென்றேகைக் கொண்டோம்
கருதுமிலக் கனம்தனக்குக் கன்னிப்பூங் கொத்தோன்
சொரக்கமுறும் செவ்வாயட் டகவர்க்கம் தன்னில்
தொழில்முறையால் இலக்கமிடும் சூத்திரமிம் முறையே.
(5)

(இ-ள்) இராசிச் சக்கரத்தில் சூரியன் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்கும் வாக்கியம் "விட்டுப்பூச் சொன்னோம்". சந்திரன் இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "வின்டூர் போம்". செவ்வாய் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "கண்காணீர் பெண்ணே பொற்போலாம்" புதன் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம், "வித்துப் பூண்போம்". குரு இருந்த இராசியில் இருந்த பரல்களைக் குறிக்க வாக்கியம், "பூத்தொட்டோர் வெளவல்". சுக்கிரன் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "கூனேபோம் வெளவேல்". சனி இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "வன்மடர் சென்றே கைக்கொண்டோம்" இலக்கினத்தில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "கன்னிப்பூங் கொத்தோன்" என்பவை செவ்வாய் அட்டகவர்க்க எண்எழுதும் வரைமுறையாகும்.

## செவ்வாய் அஷ்டவர்க்கத்திற்கு வாக்கியங்களும் விளக்கங்களும்.

அவரவர் நின்ற இராசிகளில் இருந்து பரல்களைக் குறிக்க, வாக்கியங்களில் சூரியனுக்கு "விட்டுப்பூச் சொன்னோம்" என்பதாம்; வி-3, டு-5, பூ-6, சொ-10, னோ-11 என்று இதனைக்

கணக்கிட வேண்டும். சந்திரனுக்கு "விண்டூர் போம்" என்பதாம்; வி-3, டூ-6, போ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். செவ்வாய்க்குக் "கன்காணீர் பென்னே பொற்போலாம்" என்பதாம்; க-1, கா-2, ணீ-4, பெ-7, னே-8, பொ-10, போ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். புதனுக்கு வித்துப் பூண்போம் என்பதாம். வி-3, து-5, பூ-6, போ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். குருவுக்குப் "பூத்தொட்டோர் வெளவல்" என்பதாம். பூ-6, தொ-10, டோ-11, வெள-12 என்று இதனைக் குறிக்க வேண்டும். சுக்கிரனுக்குக் "கூனேபோம் வெளவேல்" என்பதாம். கூ-6, னே-8, போ-11, வெள-12 என்று இதனைக் குறிக்க வேண்டும். சனிக்கு "வண்டீர் சென்றே கைக் கொண்டோம்" என்பதாம்; வ-1, டீ-4, செ-7, றே-8, கை-9, கொ-10, டோ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். இலக்கினத்துக்குக் "கன்விப்பூங்கொத்தோன்" என்பதாம்; க-1, வி-3, பூ - 6, கொ-10, தோ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும்.

இந்த வாக்கியங்களில் கூறப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையில் செவ்வாய் அஷ்ட வர்க்கத்தை எழுத வேண்டும்.

## செவ்வாய் அஷ்ட வர்க்கப் பரல்கள் – 39

| | | |
|---|---|---|
| சூரியன் | - 3,5,6,10,11 | ஆகப் பரல்கள் 5 |
| சந்திரன் | - 3,6,11 | ஆகப் பரல்கள் 3 |
| செவ்வாய் | - 1,2,4,7,8,10,11 | ஆகப் பரல்கள் 7 |
| புதன் | - 3,5,6,11 | ஆகப் பரல்கள் 4 |
| குரு | - 6,10,11,12 | ஆகப் பரல்கள் 4 |
| சுக்கிரன் | - 6,8,11,12 | ஆகப் பரல்கள் 4 |
| சனி | - 1,4,7,8,9,10,11 | ஆகப் பரல்கள் 7 |
| இலக்கினம் | - 1,3,6,10,11 | ஆகப் பரல்கள் 5 |
| | | மொத்த பரல்கள் 39 |

## குறிப்பு: வராகர் ஓரா சாத்திரம் கூறும் செவ்வாய் அஷ்டவர்க்கப் பரல்கள் 39-க்கு விபரம்

பூமனைவன் அரிசகசஞ் சுதன்மான மிலாபம்
 போதிரவிக் காஞ்சகச மரிபவமம் புலிக்காம்
வேமெரிக்குஞ் தனநிதனம் பவங்கண்ட மாகும்
 மேதைக்குச் சகசமரி சுதாய மென்பார்
ஆமரியத் தியங்கன்மம் ஆயம்பொன் னவர்க்காம்
 அரியிரிப்பம் பவம்நிதனம் பிருகுசனுக் காகும்
தாமசிதான் நிதனதவம் பவங்கண்ட மாகும்
 சகசமரி பவமாதி சதமுதயந் தனக்கே.

(இ-ள்) செவ்வாய் அட்டவர்க்கம் அரி-6, சகசம் 3, சுதன் 5, மானம் 10, இலாபம் 11, சூரியன் நின்ற இராசிக்கு இத்தானங்களில் செவ்வாய் சுபன். சகசம் 3, அரி 6, பவம் 11, சந்திரன் நின்ற இத்தானங்களில் செவ்வாய் சுபன். தனம் 2, நிதனம் 8, பவம் 11, கண்டம் 1, 4, 7, 10 செவ்வாயில் நின்று இத்தானங்களில் செவ்வாய் தானே சுபன். சகசம் 3, அரி 6, சுதன் 5, ஆயம் 11 புதனில் நின்று இத்தானங்களில் செவ்வாய் சுபன். அரி 6, இரிப்பம் 12, பவம் 11, நிதனம் 8 சுக்கிரனில் நின்று இத்தானங்களில் செவ்வாய் சுபன் நிதனம் 8, தவம் 9, பவம் 11, கண்டம் 1,4,7,10 சனி நின்ற இடத்தில் நின்று இத்தானங்களில் செவ்வாய் சுபன். சகசம் 3, அரி 6, பவம் 11, ஆதி 1, தசம் 10 இலக்கினத்தில் இருந்து இத்தானங்களில் செவ்வாய் சுபனாம்.

-(வராகர் ஓரா சாத்திரம் : பா.152)

## எடுத்துக்காட்டியுள்ள சாதகத்தின்படி
## செவ்வாய் அஷ்டவர்க்கம்

| வ. எண் | கிரகம் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சூரியன் | சூ | | | | சூ | | சூ | சூ | | | | சூ |
| 2. | சந்திரன் | சந் | | | | சந் | | | சந் | | | | |
| 3. | செவ்வாய் | | செ | | செ | | | செ | செ | | செ | செ | |
| 4. | புதன் | | பு | | | | பு | | பு | பு | | | |
| 5. | குரு | குரு | | | குரு | குரு | குரு | | | | | | குரு |
| 6. | சுக்கிரன் | சுக் | | | | | | சுக் | | சுக் | | | சுக் |
| 7. | சனி | | சனி | சனி | சனி | சனி | சனி | | சனி | | | சனி | |
| 8. | இலக்கினம் | | | இல | இல | | இல | | இல | | | இல | |
| | | 4 | 3 | 2 | 4 | 4 | 4 | 3 | 6 | 2 | 1 | 3 | 3 |

கூடுதல் 39

## புதன் அஷ்டவர்க்க வாக்கியம்

ஆமிரவி தனக்குத்தான் உண்டுண்கைப் போய்வெள
வம்புலிக்குத் தாரீஞர் மேற்கொண்டோம் சாற்றும்
பூமனுக்கப் பானீர்செவ் வேற்கைதொட்டோம் தானே
புதனுக்குப் பதிபுத்தூர் வைப்பொப்போம் வெளவேல்
வெமருவும் குருவுக்கே கூடேபோம் கெளவேல்
வெள்ளிக்கே கவாபிதீ முனைகைத்தோ வெண்ப
மேரருகன் மன்னாதீ சென்றேகைக் கொண்டோம்
இலக்கனம்வண் டாரீர்பூ வேல்கொண்டோம் புதற்கே.
(6)

(இ-ள்) இராசிச்சக்கரத்தில் சூரியன் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்கும் வாக்கியம் "உண்டுண்கை போய்வெள" ; சந்திரன் இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "தாரீஞர் மேற்கொண்டோம்"; செவ்வாய் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம்

"கப்பானீர் செவ்வேற் கைதொட்டோம்"; புதன் இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "பதிபுத்தூர் வைப்பொப்போம் வெளவேல்"; குரு இருந்த இராசியில இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "கூடேபோம் கௌவேல்"; சுக்கிரன் இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "கலாபிநீ முனே கைத்தோ"; சனி இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "மன்னா நீ சென்றே கைக்கொண்டோம்"; இலக்கினத்திலிருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "வண்டாரீர் பூ வேல்கொண்டோம்" என்பவை புதனில் அட்டவர்க்க எண் எழுதும் வரைமுறையாகும்.

## புதனின் அஷ்ட வர்க்கத்திற்கு வாக்கியங்களும் வாக்கிய விளக்கங்களும்

இராசிச்சக்கரத்தில் அவரவர் நின்ற இராசிகளில் இருந்து பரல்களைக் குறிக்க, வாக்கியங்களில் சூரியனுக்கு, "உண்டுள்ளகை போய் வௌ" என்பதாம் ; உ-5, ண்டு-6, கை-9, போ-11, வௌ-12, என்று இதனைக் கணக்கிட வேண்டும் ; சந்திரனுக்குத் "தாரீரூர் மேற்கொண்டோம்" என்பதாம் ; தா-2, ரீ-4, ரூ-6, மே-8, கொ-10, டோ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும் ; செவ்வாய்க்குக் "கப்பானீர் செவ்வேல் கைதொட்டோம்" என்பதாம் ; க-1, பா-2, னீ-4, செ-7, வே-8, கை-9, தொ-10, டோ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும் ; புதனுக்கு "பதிபுத்தூர் வைப்பொப்போம் வெளவேல்" என்பதாம். ப-1, தி-3, பு-5, து-6, வை-9, பொ-10, போ-11, வெள-12, என்று இதனைக் கணக்கிட வேண்டும். குரு "கூடேபோம் கௌவேல்" என்பதாம் ; கூ-6, டே-8, போ-11, கௌ-12 என்று இதனைக் கணக்கிட வேண்டும். சுக்கிரனுக்குக் "கலாபிநீ முனைகைத்தோ" என்பதாம் ; க-1, லா-2, பி-3, நீ-4, மு-5, னே-8, கை-9, தோ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். சனிக்கு, "மன்னா நீ சென்றே கைகொண்டோம்" என்பதாம். ம-1, னா-2, நீ-4, செ-7, றே-8, கை-9, கொ-10, டோ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். இலக்கினத்திற்கு "வண்டாரீர் பூ வேல் கொண்டோம்"

என்பதாம் ; வ-1, டா-2, ரி-4, பூ-6, வே-8, கொ-10, டோ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும்.

இந்த வாக்கியங்களில் கூறப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையில் புதன் அஷ்ட வர்க்கத்தை எழுதவேண்டும்.

## புதனின் அஷ்ட வர்க்கப் பரல்கள் - 54

| | | |
|---|---|---|
| 1. சூரியன் | - 5,6,9,11,12 | ஆகப் பரல்கள் 5 |
| 2. சந்திரன் | - 2,4,6,8,10,11 | ஆகப் பரல்கள் 6 |
| 3. செவ்வாய் | - 1,2,4,7,8,9,10,11 | ஆகப் பரல்கள் 8 |
| 4. புதன் | - 1,3,5,6,9,10,11,12 | ஆகப் பரல்கள் 8 |
| 5. குரு | - 6,8,11,12 | ஆகப் பரல்கள் 4 |
| 6. சுக்கிரன் | - 1,2,3,4,5,8,9,11 | ஆகப் பரல்கள் 8 |
| 7. சனி | - 1,2,4,7,8,9,10,11 | ஆகப் பரல்கள் 8 |
| 8. இலக்கினம் | - 1,2,4,6,8,10,11 | ஆகப் பரல்கள் 7 |
| | | ஆகப் பரல்கள் 54 |

## எடுத்துக்காட்டியுள்ள சாதகத்தின்படி புதன் அஷ்டவர்க்கம்

| வ. எண் | கிரகம் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சூரியன் | சூ | சூ | | | | | சூ | சூ | | | சூ | |
| 2. | சந்திரன் | சந் | | | சந் | | சந் | | சந் | | சந் | | சந் |
| 3. | செவ்வாய் | செ | செ | | செ | | | செ | செ | செ | செ | செ | |
| 4. | புதன் | பு | பு | பு | பு | | பு | | பு | பு | | | பு |
| 5. | குரு | | குரு | | | குரு | குரு | | | | | | குரு |
| 6. | சுக்கிரன் | | சுக் | சுக் | சுக் | சுக் | சுக் | | | சுக் | சுக் | | சுக் |
| 7. | சனி | | சனி | சனி | சனி | சனி | சனி | | சனி | சனி | | சனி | |
| 8. | இலக்கினம் | இல | | இல | இல | | இல | இல | | இல | | இல | |
| | | 5 | 6 | 4 | 6 | 3 | 6 | 3 | 5 | 5 | 3 | 6 | 4 |

கூடுதல் 54

குறிப்பு : வராகர் ஓரா சாத்திரம் கூறும் புதன் அஷ்டவர்க்கப் பரல்கள் 54-க்கு விபரம்

புந்திசுபன் கதிர்க்காயம் வியந்தவமைந் தரியில்
புகழ்மதிபந் தரிநிதனம் பவமானந் தனத்தில்
மந்தனெரி தனங்கண்டம் நிதனநவ மாயம்
மாலரிமூன் றைந்தாதி மானவியந் தவாயம்
அந்தணனுக் கட்டமமும் அரியாய மிரிப்பம்
அம்புகருக் காதிதனம் சகசதவ நிதனம்
பந்துசுதந் பவமிலியன் இலக்கினத்துக் காதி
பவந்தசமம் நிதனமரி பந்துதன மாமே.

(எ.து) புதன் அட்டவர்க்கம் ஆயம் 11, வியம் 12, தவம் 9, ஐந்து 5, அரி 6, ஆதித்தனில் நின்று இத்தானங்களில் புதன் சுபன். பந்து 4, அரி 6, நிதனம் 8, பவம் 11, மானம் 10, தனம் 2 சந்திரனில் நின்று இத்தானங்களில் புதன் சுபன். தனம் 2, கண்டம் 1,4,7,10 நிதனம் 8, நவம் 9, ஆயம் 11, சனி, செவ்வாய் இவர்கள் நின்ற தானத்தில்இருந்து இத்தானங்களில் புதன் சுபன். அரி 6, மூன்று 3, ஐந்து 5, மானம் 10, வியம் 12, தவம் 9, ஆயம் 11 புதனில் நின்று இத்தானங்களில் புதன் சுபன். அட்டமம் 8, அரி 6, ஆயம் 11, இரிப்பம் 12, வியாழன் நின்ற இராசிக்கு இத்தானங்களில் புதன் சுபன். ஆதி 1, தனம் 2, சகசம் 3, தவம் 9, நிதனம் 8, பந்து 4, சுதன் 5, பவன் 11, சுக்கிரன் நின்ற இத்தானங்களில் புதன் சுபன். ஆதி 1, பவம் 11, தசமம் 10, நிதனம் 8, அரி 6, பந்து 4, தனம் 2 இலக்கினத்திற்கு இத்தானங்களில் புதன் சுபர்.

-(வராகர் ஓரா சாத்திரம் பா.158)

## குரு அஷ்ட வர்க்க வாக்கியம்

வெய்யவர்க்கம் பாரிநீ ரெம்பேரைக் கொண்டோம்
வெண்மதிக்குக் காப்புவெண் கைப்போம்சேய் தனக்குத்
துய்யசந்தா டீரென்றே சொன்னோம்புந் திக்குச்
சொல்லியகட் டால்வீடு சூரைகொள்வோம் குருவுக்
கையமில்லாக் கட்டாரி நீயென்றே கொள்வோம்
அரும்புகர்க்குத் தான்தானும் பூசையொப்போம் சனிக்கே

கொப்பும்விரு தூர்வெள்ளி ராசிக்கப் பாதீ

குண்டுரென் கைக்கொண்டோம் குருவினட்ட வர்க்கே (7)

(இ-ன்) இராசிச் சக்கரத்தில் சூரியன் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்கும் வாக்கியம் "பாரிதீ ரெம்பேரைக் கொண்டோம்". சந்திரன் இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "காப்புவெண் கைப்போம்". செவ்வாய் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம், "சந்தா மடரென்றே சொன்னோம்". புதன் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம், "கட்டால் வீடு சூரை கொள்வோம்". குரு நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "கட்டாரி நீயென்றே கொள்வோம்". சுக்கிரன் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம், "தானும் பூசையொப்போம்". சனி இருந்த இராசியில் பரல்களைக் குறிக்க வாக்கியம், "விருதூர் வெள". இலக்கினத்திலிருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம், "கப்பாதீ குண்டுரென் கைகொண்டோம்" என்பவை குரு அட்டவர்க்க எண்களை எழுதும் வரை முறையாகும்.

## குரு அஷ்ட வர்க்கத்திற்கு வாக்கியங்களும் விளக்கங்களும்

அவரவர் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க, வாக்கியங்களில் சூரியனுக்குப் "பாரிதீ ரெம்பேரைக் கொண்டோம்" என்பதாம் ; பா-2, ரி -3, தீ-4, ரெ-7, பே-8, ரை-9, கொ-10, டோ-11, என்று இதனைக் கணக்கிட வேண்டும். சந்திரனுக்குக் "காப்பு வெண் கைபோம்" என்பதாம் ; கா-2, பு-5, வெ-7, கை-9, போ-11 என்று இதனைக் கணக்கிடவேண்டும். செவ்வாய்க்குச் "சந்தாமட ரென்றே சொன்னோம்" என்பதாம், ச-1, தா-2, ம-4, ரெ-7, றே-8, சொ-10, னோ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். புதனுக்குக் "கட்டால் வீடு சூரை

கொள்வோம்" என்பதாம். க-1, டா-2, வீ-4, கு-6, ரை-9, கொ-10, வோ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். குருவுக்குக் "கட்டாரி நீயென்றே கொள்வோம்" என்பதாம். க-1, டா-2, ரி-3, நீ-4, யெ-6, றே-7, கொ-10, வோ-11 என்று இதனைக் கணக்கிடவேண்டும் சுக்கிரனுக்கு "தானும் பூசையொப்போம்" என்பதாம் ; தா-3, னு-5, பூ-6, சை-9, யொ-10, போ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். சனிக்கு "விருதூர் வெள" என்பதாம் ; வி-3, ரு-5, தூ-6, வெள-12 என்று இதனைக் கணக்கிட வேண்டும். இலக்கினத்துக்குக் "கப்பாநீ குன்டுரென் கைக்கொண்டோம்" என்பதாம் ; க-1, பா-2, நீ-4, கு-5, டு-6, ரெ-7, கை-9, கொ-10, டோ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும்.

இந்த வாக்கியங்களில் கூறப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையில், குரு அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட வேண்டும்.

## குருவின் அஷ்டவர்க்கப் பரல்கள் – 56

| | | |
|---|---|---|
| சூரியன் | - 1,2,3,4,7,8,9,10,11 | ஆகப் பரல்கள் 9 |
| சந்திரன் | - 2,5,7,9,11 | ஆகப் பரல்கள் 5 |
| செவ்வாய் | - 1,2,4,7,8,10,11 | ஆகப் பரல்கள் 7 |
| புதன் | - 1,2,4,5,6,9,10,11 | ஆகப பரல்கள் 8 |
| குரு | - 1,2,3,4,7,8,10,11 | ஆகப் பரல்கள் 8 |
| சுக்கிரன் | - 2,5,6,9,10,11 | ஆகப் பரல்கள் 6 |
| சனி | - 3,5,6,12 | ஆகப் பரல்கள் 4 |
| இலக்கினம் | - 1,2,4,5,6,7,9,10,11 | ஆகப் பரல்கள் 9 |
| | | மொத்தப் பரல்கள் 56 |

## குரு அஷ்டவர்க்கம்

| வ. எண் | கிரகம் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சூரியன் | சூ | | சூ | சூ | சூ | சூ | | | சூ | சூ | சூ | சூ |
| 2. | சந்திரன் | சந் | | | சந் | | | சந் | | சந் | | சந் | |
| 3. | செவ்வாய் | செ | செ | | செ | | | செ | செ | | செ | செ | |
| 4. | புதன் | பு | பு | | பு | பு | | பு | பு | பு | | | பு |
| 5. | குரு | குரு | குரு | | குரு | குரு | | குரு | குரு | குரு | குரு | | |
| 6. | சுக்கிரன் | | | சுக் | | | சுக் | சுக் | | | சுக் | சுக் | சுக் |
| 7. | சனி | சனி | | | | | | சனி | | | சனி | | சனி |
| 8. | இலக்கினம் | | இல | இல | இல | | இல | இல | | இல | இல | இல | இல |
| | | 6 | 4 | 3 | 6 | 3 | 3 | 7 | 3 | 5 | 6 | 5 | 5 |

கூடுதல் 56

குறிப்பு: வராகர் ஓரா சாத்திரம் கூறும் குருவின் அஷ்டவர்க்கப் பரல்கள் 56-க்கு விபரம்.

பொன்னினியன் தனநிதனம் கண்டங்க ளாயம்
பூமனுக்காஞ் சகசமிதிற் புகுமெனிற்பொன் னவற்காம்
மன்னுசக சந்தவங்கள் கூட்டிடுங்கால் ரவிக்கால்
வாக்கிதயம் அரிதவசு மாளாயம் புகர்க்காம்
துன்னுதன மனைவிமனந் தவம்பவஞ்சோ மற்காம்
சுதன்சகசம் அரியிப்பம் சன்னவனுக் காகும்
பன்னுபுத னாதிதனஞ் சுகஞ்சுமா ளாயம்
பகைதவமான் உதயத்துக் கிதிற்பாரி புகுமே.

(எ.து) வியாழன் அஷ்டவர்க்கம் அறியும்படி, தனம் 2, நிதனம் 8, கண்டங்கள் 1,4,7,10, ஆயம் 11, செவ்வாய் நின்ற இராசிக்கு இத்தானங்களில் வியாழன் கூடன். மேற் கூறியவற்றிற் சகசத்தானம் 3 கூடில் வியாழத்தில் வியாழன் நல்லன்.

2,8,1,4,7,10,11,3 வியாழன் தான் நின்ற இராசிக்கு இத்தானங்களில் வியாழன் தானே சுபன். மேற்கூறியவற்றில் சகசம் 3, தவம் 9 கூட்டில் சூரியனுக்காம். 2,8,1,4,7,10,11,3,9 சூரியன் நின்ற இராசிக்கு இத்தானங்களில் வியாழன் தானே சுபன். வாக்கு 2, இதயம் 5, அரி 6, தவசு 9, மானம் 10, ஆயம் 11, சுக்கிரன் நின்ற இராசிக்கு இத்தானங்களில் வியாழன் சுபன். சுதன் 5, சகசம் 3, அரி6, இரிப்பம் 8, சனி நின்ற இராசிக்கு இத்தானங்களில் வியாழன் சுபன். ஆதி, தனம் 2, சுகம் 4, சுதன் 5, மானம் 10, ஆயம் 11, பகை 6, தவம் 9, புதன் நின்ற இராசிக்கு இத்தானங்களில் வியாழன் சுபன். உதயத்திற்கு இதிற் பாரி 7 புகுமே என்றது 1,2,4,5,10,11,6,9, என்னும் இவற்றில் 7 சேர்த்துக் கொள்க. உதய இலக்கினத்திற்கு இத்தானங்களில் வியாழன் சுபனாம்.

-(வராகர் ஓரா சாத்திரம். பா.159)

## சுக்கிரன் அஷ்டவர்க்க வாக்கியம்

வாழுமின்னே சூரியனுக் கேவேற்போல் வெளவன்
மதிக்கப்பா நின்னீடு வேலைப்போல் வெளவேல்
தாழும்செவ் வாய்க்கிமீர் பூவைப்போல் வெளவேல்
சாமனுக்கு விட்டுப்பூவைப் போம்பொன்ன வர்க்கு
நீளுமுத்தே கைக்கொண்டோம் புகர்க்குகேசுண் மாரி
நீடுவேலைச் சொல்வோம் சனியனுக்குத் தானே
யாழுமிக்கீர் முன்னே கைத்தொட்டோம் இராசி
சுங்காடிச் சிட்டுமேல்வைத் தோம்சுங்கன் வர்க்கே. (8)

(இ-ள்) இராசிச் சக்கரத்தில் சூரியன் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "வேற்போல் வெளவன்"; சந்திரன் இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "கப்பாநின்னீடு வேலைபோல் வெளவேல்" ; செவ்வாய் இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "கிமீர் பூவைப்போல் வெளவேல்"; புதன் இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "விட்டுப் பூவைப்போம்" ; குரு இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "முத்தே கைக் கொண்டோம்" ; சுக்கிரன்

நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "கன்மாரி நீடுவேலை சொல்வோம்" ; சனி இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம், "மிக்கீர் முன்னே கைத்தொட்டோம்" ; இலக்கினத்திற்கு "கங்காமுச் சீட்டுமேல் வைத்தோம்" என்பவை சுக்கிரனின் அஷ்டவர்க்க எண் எழுதும் வரை முறையாகும்.

## சுக்கிரன் அஷ்டவர்க்கத்திற்கு வாக்கியங்களும் விளக்கங்களும்

அவரவர் நின்ற இராசிகளில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியங்களில் சூரியனுக்கு, "வேற்போல் வெளவல்" என்பதாம் ; வே-8, போ-11, வெள-12 என்று இதனைக் கணக்கிட வேண்டும். சந்திரனுக்கு, "கப்பா நின்ளீரு வேலை போல் வெளவேல்" என்பதாம் ; க-1, பா-2, நி-3, னீ-4, ரு-5, வே-8, லை-9, போ-11, வெள-12 என்று இதனைக் கணக்கிட வேண்டும் ; செவ்வாய்க்குக் "கிடீர் பூவைப்போல் வெளவேல்" என்பதாம் ; இதனை கி-3, டீ-4, பூ-6, வை-9, போ-11, வெள-12 என்று இதனைக் கணக்கிட வேண்டும். புதனுக்கு "விட்டுப் பூவைப்போம்" என்பதாம்; வி-3, டு-5, பூ-6, வை-9, போ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். குருவுக்கு "முத்தே கைக் கொண்டோம்" என்பதாம். மு-5, தே-8, கை-9, கொ-10, டோ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். சுக்கிரனுக்குக் "கன்மா நீடுவேலை சொல்வோம்" என்பதாம். க-1, மா-2, ரீ-3, நீ-4, டு-5, வே-8, லை-9, சொ-10, வோ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். சனிக்கு "மிக்கீர் முன்னே கைத்தொட்டோம்" என்பதாம் மி-3, கீ-4, மு-5, னே-8, கை-9, தொ-10, டோ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். இலக்கினத்துக்குக் "கங்காடிச் சீட்டுமேல் வைத்தோம்" என்பதாம். க-1, கா-2, டி-3, சீ-4, டு-5, மே-8, வை-9, தோ-10, என்று இதனைக் கணக்கிட வேண்டும்.

இந்த வாக்கியங்களில் கூறப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையில் சுக்கிரனின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட வேண்டும்.

## சுக்கிரனின் அஷ்ட வர்க்கப் பரல்கள் – 52

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - 8,11,12 | ஆகப் பரல் | 3 |
| சந்திரன் | - 1,2,3,4,5,8,9,11,12 | ஆகப் பரல் | 9 |
| செவ்வாய் | - 3,4,6,9,11,12 | ஆகப் பரல் | 6 |
| புதன் | - 3,5,6,9,11 | ஆகப் பரல் | 5 |
| குரு | - 5,8,9,10,11 | ஆகப் பரல் | 5 |
| சுக்கிரன் | - 1,2,3,4,5,8,9,10,11 | ஆகப் பரல் | 9 |
| சனி | - 3,4,5,8,9,10,11 | ஆகப் பரல் | 7 |
| இலக்கினம் | - 1,2,3,4,5,8,9,11 | ஆகப் பரல் | 8 |
| | | மொத்தப் பரல்கள் | 52 |

குறிப்பு: வராகர் ஓரா சாத்திரம் கூறும் சுக்கிரனின் அஷ்டவர்க்கப் பரல்கள் 52-க்கு விபரம்.

புகரிலியன் உதயத்துக் காதிநலைந் சகசம்
புத்திசுகம் நிதனநவம் பவமாகு மிவற்றுள்
பகரும்விய மூறின்மதிக்காம் கன்மமூறிற் புகர்க்காம்
பருதிக்கு வியம்நிதனம் பவத்திலிய னென்பர்
மிருகுசனுக் காயநவம் வியஞ்சுமூன் றரியாம்
மேதைக்கு நவமாயம் புத்திபரி சகோர்த்தம்
தொகுகுருவில நிதனநவம மாளாயஞ் கதனாம்
சுன்றவயாக் கினையாயஞ் சுகஞ்சுதன்மூன் றெட்டே.

## எடுத்துக்காட்டியுள்ள சாதகத்தின்படி
## சுக்கிரன் அஷ்டவர்க்கம்

| எண் | கிரகம் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சூரியன் | சூ | சூ | | | | | | | | சூ | | |
| 2. | சந்திரன் | சந் | சந் | சந் | சந் | சந் | சந் | சந் | | | சந் | சந் | |
| 3. | செவ்வாய் | | | செ | செ | | செ | | | செ | | செ | செ |
| 4. | புதன் | | பு | | | | பு | | பு | பு | | | பு |
| 5. | குரு | | குரு | குரு | குரு | குரு | | | | | | குரு | |
| 6. | சுக்கிரன் | | சுக் | சுக் | சுக் | சுக் | சுக் | | | சுக் | சுக் | சுக் | சுக் |
| 7. | சனி | | | சனி | சனி | சனி | சனி | | | | சனி | சனி | சனி |
| 8. | இலக்கினம் | இல | இல | | இல | | இல | இல | இல | இல | இல | | |
| | | 3 | 6 | 5 | 6 | 4 | 6 | 2 | 2 | 4 | 5 | 5 | 4 |
| | | | | | | | | | | | | கூடுதல் | 52 |

*(எ.து)* **சுக்கிரன் அஷ்டவர்க்கம் அறியும்படி**

இலக்கினத்துக்கு ஆதி, தனம் 2, சகசம் 3, புத்தி 5, சுகம் 4, நிதனம் 8, நவம் 9, பவம் 11 இத்தானங்களில் சுக்கிரன் சுபன். இவற்றுள் பகரும் வியம்12 உறின் மதிக்கு ஆம் என்றது 1,2,3,5,4,8,9,11,12 சந்திரன் நின்ற இராசிக்கு இத்தானங்களில சுக்கிரன் சுபன். இவற்றுள் கன்மம் 10 உறின் புகர்க்கு ஆம் என்றது. 1,2,3,5,4,8,9,10,11 சுக்கிரன் நின்ற இராசிக்கு இத்தானங்களில் சுக்கிரன் தானே சுபன். பகுதிக்கு வியம் 12, நிதனம் 8, பவம் 11, ஆதித்தன் நின்ற இராசிக்கு 12,8,11 இத்தானங்களில் சுக்கிரன் சுபன், ஆயம் 11, நவம் 9, வியம் 12, சுகம் 4, மூன்று 3, அரி 6, செவ்வாய்க்கு 11,9,12,4,3,6 என்றும் இத்தானங்களில் சுக்கிரன் சுபன். மேதைக்கு நவம் 9, ஆயம் 11, புத்தி 5, அரி 6, சகோத்தம் 3, புதன் நின்ற இராசிக்கு 9,11,5,6,3 இத்தானங்களில் சுக்கிரன் சுபன். தொகு குருவின் நிதனம் 8, நவம் 9, மானம் 10, ஆயம் 11,

சுதன் 5. வியாழத்திற்கு 8,9,10,11,5 என்றும் இத்தானங்களில் சுக்கிரன் சுபன். சுன் தவம் 9, ஆக்கினை 10, ஆயம் 11, சுகம் 4, சுதன் 5, மூன்று 3, எட்டு 8 சனி நின்ற இராசிக்கு 9,10,11,4,5,3,8 என்றும் இத்தானங்களில் சுக்கிரன் சுபனாம்.

-(வராகர் ஓரா சாத்திரம் பா.160)

## சனி அஷ்ட வர்க்க வாக்கியம்

வரைவிக்குக் கண்ணாநீர் சென்றோர்கொண் டோனே
மதிக்குவிற் பூண்போரென்பர் செவ்வாய்க்குத் தானே
புனையுமின்னும் பூக்கொண்டோ கௌவிவர்பூந் திக்குப்
பொன்னேபூந் தேனைக்கொண் டோவெள வென்பார்
இனியகுரு வுக்குன்னூர் பேற்கௌவேல் புகருக்
கேபூண்டோர் வெளவல்சனிக் கிடுபூப்போல் என்பார்
கனவுதயம் கதிமீதூரர் சொன்னோங்கா ரிக்கே
கருதியஅட் டகவர்க்கம் காணுமிந்த வகைக்கே (9)

(இ-ள்) இராசிக் சக்கரத்தில் சூரியன் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "கண்ணாநீர் சென்றோர்கொண் டோனே"; சந்திரன் இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "விற் பூண்போர்"; செவ்வாய் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "மின்னும் பூக்கொண்டோ கௌவுவர்"; புதன் இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "பூந்தேனைக் கொண்டோ வெளவென்"; குரு இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "குன்னூர் போல் கௌவேல்"; சுக்கிரன் நின்ற இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "பூண்டோர் வெளவல்"; சனி இருந்த இராசியில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "கிடுபூப்போல்"; இலக்கினத்தில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியம் "கதி மீதூரர் சொன்னோம்" என்பவை சனி அட்டகவர்க்க எண் எழுதும் வரைமுறையாகும்.

## சனி அஷ்ட வர்க்கத்திற்கு வாக்கியங்களும் வாக்கிய விளக்கங்களும்

அவரவர் நின்ற இராசிகளில் இருந்து பரல்களைக் குறிக்க வாக்கியங்களில் சூரியனுக்குக் கன்னாநீர் சென்றேர் கொண்டோனே என்பதாம். க-1, னா-2, நீ-4, செ-7, றே-8, கொ-10, டோ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். சந்திரனுக்கு விற் பூண்போர் என்பதாம்; வி-3, பூ-6, போ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும். செவ்வாய்க்கு மின்னும் பூக்கொண்டோ கௌவுவர் என்பதாம்; மி-3, னு-5, பூ-6, கொ-10, டோ-11, கௌ-12 என்று இதனைக் கணக்கிட வேண்டும். புதனுக்குப் பூந்தேனைக் கொண்டோ வௌ என்பதாம்; பூ-6, தே-8, னை-9, கொ-10, டோ-11, வௌ-12 என்று இதனைக் கணக்கிட வேண்டும். குருவுக்குக் குன்றூபோல் கௌவேல் என்பதாம். கு-5, றூ-6, போ-11, கௌ-12 என்று இதனைக் கணக்கிட வேண்டும் சுக்கிரனுக்குப் பூண்டோர் வௌவல் என்பதாம்; பூ-6, டோ-11, வௌ-12 என்று இதனைக் கணக்கிட வேண்டும்; சனிக்கு கிடுபூப்போல் என்பதாம்; கி-3, டு-5, பூ-6, போ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும்; இலக்கனத்துக்குக் கதிபீதூரர் சொன்னோம் என்பதாம். க-1, தி-3, பீ-4, தூ-6, சொ-10, னோ-11 என்று இதனைக் கணக்கிட வேண்டும்.

இந்த வாக்கியங்களில் கூறப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையில், சனியின் அஷ்டவர்க்கத்தைக் கணக்கிட வேண்டும்.

### சனியின் அஷ்ட வர்க்கப் பரல்கள் – 39

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - 1,2,4,7,8,10,11 | ஆகப்பரல்கள் | 7 |
| சந்திரன் | - 3,6,11 | ஆகப்பரல்கள் | 3 |
| செவ்வாய் | - 3,5,6,10,11,12 | ஆகப்பரல்கள் | 6 |
| புதன் | - 6,8,9,10,11,12 | ஆகப்பரல்கள் | 6 |

| | | |
|---|---|---|
| குரு | - 5,6,11,12 | ஆகப்பரல்கள் 4 |
| சுக்கிரன் | - 6,11,12 | ஆகப்பரல்கள் 3 |
| சனி | - 3,5,7,11 | ஆகப்பரல்கள் 4 |
| இலக்கனம் | - 1,3,4,6,10,11 | ஆகப்பரல்கள் 6 |
| | | மொத்த பரல்கள் 39 |

குறிப்பு: வராகர் ஓரா சாத்திம் கூறும் சனியின் சனி அஷ்டவர்க்கப் பரல்கள் 39-க்கு விபரம்.

சனிவர்க்கஞ் சனிக்காயஞ் சகசமரி சுதனாம்
 தரணிசனுக் கந்தியமாக் கினைகூடிச் சாரும்
இனியகதிர் கேந்திரமட் டமமாயந் தனமாம்
 இந்துதிரி சடவாய மினியனென வுரைப்பார்
அனுவழிக்கு நிதனமரி தவங்கன்மம் வியாயம்
 ஆடகனுக் காயவிய மரிபுத்தி யாகும்
பினுமுதயந் தனக்காதி யரயாயங் கன்மம்
 பெந்துசுக சம்பிருகுக் காரியாயம் வியமே.

## சனி அஷ்டவர்க்கம் அறியும்படி

சனிக்கு ஆயம் 11, சகசம் 3, அரி 6, சுதன் 5 சனி நின்ற இராசிக்கு 11,3,6,5 என்றும் இத்தானங்களில் சனி தானே சுபன். தரணிசனுக்கு அந்தியம் 12, ஆக்கினை 10 கூடில் சாரும் என்றது. செவ்வாய் நின்ற இராசிக்கு 11,3,6,5,12,10 என்னும் இத்தானங்களிற் சனி சுபன். கேந்திரன் 1,4,7,10, அட்டமம் 8, ஆயம் 11, தனம் 2, சூரியன் நின்ற இராசிக்கு 1,4,7,10,8,11,2 என்னும் இத்தானங்களிற் சனி சுபன். திரி 3, சடம் 6, வாயம் 11, சந்திரன் நின்ற இராசிக்கு 3,6,11 என்னும் இத்தானத்திற் சனி சுபன். அனுவழிக்கு - புதனுக்கு நிதனம் 8, அரி 6, தவம் 9, கன்மம் 10, வயம் 12, ஆயம் 11. புதன் நின்ற இராசிக்கு 8,6,9,10,12,11 என்னும் இத்தானங்களில் சனி சுபன். ஆடகன்-வியாழன் ஆயம் 11, வியம் 12, அரி 6, புத்தி 5, வியாழன் நின்ற இராசிக்கு 11,12,6,5 என்னும் இத்தானங்களில் சனி சுபன். உதயம்-இலக்கினம் ஆதி-1, அரி 6, ஆயம் 11, கன்மம் 10, பந்து 4, சகசம் 3, இலக்கினத்திற்கு 1,6,11,10,4,3 என்னும்

இத்தானங்களிற் சனி சுபன். பிருகு-சுக்கிரன். அரி 6, ஆயம் 11, வியம் 12 சுக்கிரன் நின்ற இராசிக்கு 6,11,12 என்னும் இத்தானங்களில் சனி சுபன்.

-(வராகர் ஓரா சாத்திரம்: பா. 616)

## சனியின் அஷ்டவர்க்கம்

| வ. எண் | கிரகம் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சூரியன் | சூ | | சூ | சூ | | சூ | | | சூ | சூ | | சூ |
| 2. | சந்திரன் | சந் | | | | சந் | | | சந் | | | | |
| 3. | செவ்வாய் | | | செ | | செ | செ | | | | செ | செ | செ |
| 4. | புதன் | பு | பு | பு | | | | | | பு | | பு | பு |
| 5. | குரு | | | | | குரு | குரு | | | | | குரு | குரு |
| 6. | சுக்கிரன் | சுக் | | | | | | சுக் | | | | | சுக் |
| 7. | சனி | சனி | | | | | சனி | | | | சனி | | சனி |
| 8. | இலக்கினம் | | | இல | இல | | இல | | இல | இல | | இல | |
| | | 5 | 1 | 4 | 2 | 3 | 5 | 1 | 2 | 3 | 3 | 4 | 6 |

கூடுதல் 39

## அஷ்ட வர்க்க பலன்

ஆய்ந்திடும் இராசிக்கோர் ஒருவிந்து வாகவே
முறைமையில் வைத்து
வாய்ந்திட வின்ன கோளின்விந் தெனவே
வகைவகை யாகவே கண்டு
வேய்ந்திடு தொகையும் ஆக்கிஅத் தொகைக்கோர்
இனிகோள் எய்திய தானை
வேய்ந்திடக் களைந்து வந்ததோர் பேறு
வித்தொன்றுக் குள்ளதென் றுரையே. (10)

(இ-ன்) அந்தந்த அஷ்ட வர்க்கங்களுக்குக் கூறியுள்ள முறைமையினை அராய்ந்து, ஒவ்வொரு இராசிக்கும் போட வேண்டிய பரல்களை எந்தெந்தக் கோள்களின் பரல்கள் என்பதைக் கண்டு போட வேண்டும். இராசிச் சக்கரத்தில் உள்ள கோள்களை நீக்கி விட்டு பரல்களின் எண்ணிக்கையைப் போட வேண்டும்.

## இதுவுமது

என்றுமக் கூறுக் கூறதாய் விந்துக்
கிசைந்தகோள் யாவையும் உன்னு
மன்னியே உன்னும் கிரகங்கள் ஊனில்
வலிபெறும் கோள்களின் பொசிப்பில்
துன்னிய பலன்கள் யாவும்நற் பலமாய்த்
தோன்றிடும் வலியிலார் தன்னூன்
தன்னிலே கைமேல் வரும்பலம் கேடாம்
சஞ்சலம் மிகச்செயும் தானே. (11)

(இ-ன்) இவ்வாறாக ஏழுக் கோள்களுடைய அஷ்ட வர்க்கங்களையும் கண்டு, வலிமையுள்ள கிரகங்களின் திசை, புத்திகளில் நல்ல பலன்கள் சாதகர்க்குக் கிடைக்கும். வலிமையற்ற கிரகங்களின் திசை, புத்திகளில் சாதகருக்குத் துன்பமும் மனக்குழப்பமும் உண்டாகும்.

## இதுவுமது

தானிக இராசி பன்னிரண் டதனில்
தங்கிய விந்துக்க ளாலில்
வானுறம் விந்து நின்றஇரா சியிற்கோள்
வருக்கும்வாழ் நாட்பொசிப் பதனில்
ஆனதோர் பதங்கள் கொடுத்திடும் என்ப
அருள்விந்து நாலுக்குத் தானே
ஊனமே யாகில் வருபலம் எல்லாம்
ஊனம்என் றுரைத்தனர் உறவோர். (12)

(இ-ள்) இராசிச் சக்கரத்தில் இராசிகளில் காணலாகும் பரல்கள் நான்கிற்கும் அதிகமாக இருக்கும் இராசிக்குரிய கோளின் புத்திகளில் நன்மைகள் கிடைக்கும். இராசிகளில் காணலாகும் பரல்கள் நான்கைக் காட்டிலும் குறைவாக இருந்தால், தீமைகள் கிட்டும்.

## திரிகோண சோதனை

ஆடரி தனுசு விடைகன்னி மகரம்
ஆகிய மிதுனங்கோல் கும்பம்
மூடிய கடக விருட்சிக மீனமும்
மும்மூன்றும் ஓர்திரி கோணம்
கூடிய திரிகோ ணத்தனி லொன்று
குறைந்திடில் மற்றிரண்டை யுந்தான்
சாடியே குறைதற் கொப்பஞ்செய் மூன்றும்
சரியுறின் முழுவதும் களையே. (13)

மேடம், சிம்மம், தனுசு; இடபம், கன்னி, மகரம்; மிதுனம், துலாம், கும்பம்; கடகம், விருச்சிகம், மீனம் என்ற முறையில் மும்மூன்று இராசிகள் திரிகோண இராசிகளாகும். திரிகோண வீடுகள் எனப்படும் மூன்று வீடுகளிலும் பரல்கள் இருந்து அவை ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வு உடையனவாக இருக்குமாயின், இவற்றுள் மிகவும் குறைவான பரல்களையுடைய இராசிக்குச் சமமாக அமையுமாறு மற்ற இரண்டு இராசிகளிலும் உள்ள பரல்களைக் குறைத்துவிட வேண்டும். மூன்று இராசிகளிலும் பரல்களின் எண்ணிக்கை சரியாக அமையுமானால், அவை அனைத்தையும் மூன்று இராசிகளிலும் இருந்து நீக்கிவிட வேண்டும்.

**விளக்கம் :** ஒரு இராசி, ஐந்து, ஒன்பது ஆகிய இடங்களில் அமைந்துள்ள இராசிகளில் ஆகிய இம்மூன்று இராசிகளும் ஒன்றுக்கொன்று திரிகோண இராசிகள் எனப்படும். இராசிச் சக்கரத்தில் காணப்படும் பன்னிரண்டு இராசிகளுக்கும் திரிகோண இராசிகள் நான்கு பகுப்புகளாக அமையும்.

1) மேஷம், சிம்மம், தனுசு இவை ஒன்றுக்கொன்று திரிகோண இராசிகள்.

2) இடபம், கன்னி, மகரம் இவை ஒன்றுக்கொன்று திரிகோண இராசிகள்.

3) மிதுனம், துலாம், கும்பம் இவை ஒன்றுக்கொன்று திரிகோண இராசிகள்.

4) கடகம், விருச்சிகம், மீனம் இவை ஒன்றுக்கொன்று திரிகோண இராசிகள்.

இந்த மும்மூன்று இராசிகளும் திரிகோணங்களில் அமைந்தவையாகும். இவற்றுள் ஒவ்வொரு பகுப்பைச் சார்ந்த மூன்று இராசிகளிலும் வீழ்ந்திருக்கும் பரல்களைச் சோதிப்பதே திரிகோண சோதனையாகும். இதனைச் சரியாகக் கணக்கிடுவதற்கு இந்தப் பாடலில் இரண்டு விதிகளும் அடுத்தப் பாடலில் ஒரு விதியுமாக மூன்று விதிகள் கூறப்பட்டுள்ளன.

1. திரிகோண வீடுகள் எனப்படும் மூன்று வீடுகளிலும் பரல்கள் இருந்து அவை ஒன்றுக்கொன்று ஏற்றத் தாழ்வு உடையவைவாக இருக்குமாயின், இவற்றுள் மிகவும் குறைவான பரல்களையுடைய இராசிக்குச் சமமாக அமையுமாறு மற்ற இரண்டு இராசிகளிலும் உள்ள பரல்களைக் குறைத்து விட வேண்டும்.

2. மூன்று இராசிகளிலும் பரல்களின் எண்ணிக்கை சரியாக அமையுமானால், அவை அனைத்தையும் மூன்று இராசிகளிலும் இருந்து நீக்கிவிட வேண்டும்.

இன்று இவ்விரு விதிகளிலும் விரிவான நிலையில் ஆறு விதிகளாக விளக்கிக் கூறப்படுகின்றன.

1. திரிகோண இராசிகள் மூன்றிலும் பரல்கள் இருந்து இம் மூன்று பரல்களும் ஒன்றுக்கொன்று வெவ்வேறாக இருந்தால் மிகவும் சிறியதாயிருக்கின்ற எண்ணிற்குச் சமமாக வரும்படி மற்ற இரண்டு இராசிகளிலுமுள்ள பரல்களின் எண்களைக் குறிக்க வேண்டும். அதாவது மூன்று இராசிகளிலும் உள்ள பரல்களைச் சமமாக இருக்குமாறு செய்ய வேண்டும்.

2. திரிகோண இராசிகளில் மூன்றில் இரண்டு இராசிகளில் பரல்கள் சமமாக இருந்து, ஒரு இராசியில் பரல்களின் எண்ணிக்கை மாறுபட்டு இருந்தால், சிறிதாக இருக்கின்ற எண்ணிற்குச் சமமாக வரும்படி மூன்று இராசிகளிலும் உள்ள பரல்களைச் சமமாக இருக்கும்படி செய்ய வேண்டும்.

3. திரிகோண இராசிகள் மூன்றில் ஏதாவது ஒரு இராசியில் பரல்கள் இல்லாமல் பூஜ்யமாக இருந்தால், திரிகோண சோதனை செய்ய வேண்டியதில்லை. மூன்று இராசிகளிலும் உள்ள பரல்களை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டும்.

4. திரிகோண இராசிகள் மூன்றில் ஏதாவது இரண்டு இராசிகளில் பரல்கள் இல்லாமல் பூஜ்யமாக இருந்தால், மூன்றாவது இராசியில் உள்ள பரல்களையும் நீக்கிவிட வேண்டும். மூன்று இராசிகளிலும் பூஜ்யத்தைக் குறிக்க வேண்டும்.

5. திரிகோண இராசிகள் மூன்றிலும் பரல்கள் சமமாக இருந்தால், மூன்று இராசிகளிலும் உள்ள பரல்களை நீக்கிவிட வேண்டும். திரிகோண சோதனைக்குப் பின்பு மூன்று இராசிகளிலும் பூஜ்யத்தைக் குறிக்க வேண்டும்.

6. திரிகோண இராசிகள் மூன்றிலும் பரல்கள் பூஜ்யமாக இருந்தால், திரிகோண சோதனை செய்ய வேண்டியது இல்லை.


-(ஜாதக அஷ்டகவர்க்கமும் அதன் பலன்கள் நிர்ணயமும் பக்.28,31)

| வ.எண் | திரிகோண சோதனைக்கு முன்பு ஏதேனும் ஒரு பகுப்பிலடங்கும் மூன்று இராசிகளில் உள்ள பரல்கள் | | திரிகோண சோதனைக்குப் பின்பு மூன்று இராசிகளிலும் உள்ள பரல்கள் |
|---|---|---|---|
| 1. | 4,1,6 | | 1,1,1 |
| 2. | 5,5,1 | மாறுபட்ட | 1,1,1 |
| 3. | 4,0,7 | பரல்கள் | 4,0,7 |
| 4. | 0,3,0 | | 0,0,0 |
| 5. | 3,3,3 | சம | 0,0,0 |
| 6. | 0,0,0 | பரல்கள் | 0,0,0 |


குறிப்பு : இப்பாடலில் கூறப்பட்டுள்ள இரண்டு விதிகளுக்குச் சான்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

சான்று:- முதல் விதி

திரிகோண சோதனைக்கு முன்பு




திரிகோண சோதனைக்குப் பின்பு





இந்த அஷ்ட வர்க்க சக்கரத்தில் மேஷம், சிம்மம், தனுசு ஆகிய இராசிகளில் 1,2,3 என மாறுபட்ட எண்ணிக்கையில் பரல்கள் உள்ளன. இவ்வாறு அமையும் பொழுது, மிகவும் குறைவான பரல்களை உடைய இராசிக்குச் சமமாக அமையுமாறு, மற்ற இரண்டு இராசிகளிலும் உள்ள பரல்களைக்


குறைத்துவிட வேண்டும். இந்த அஷ்ட வர்க்க சக்கரத்தில் மேஷ, சிம்ம, தனுசு இராசிகளில் மிகவும் குறைவான பரல்களை உடையது மேஷ இராசி. இந்த மேஷ இராசியில் உள்ள பரல்களுக்குச் சமமாக அமையும்படி சிம்ம இராசியிலும் தனுசு இராசியிலும் உள்ள பரல்களைக் குறைத்துவிட வேண்டும். அதாவது சிம்ம இராசியில் உள்ள இரண்டு பரல்களுக்குப் பதிலாக ஒரு பரலைப் போட வேண்டும். அதைப்போல தனுசு இராசியில் உள்ள மூன்று பரல்களுக்குப் பதிலாக ஒரு பரலைப் போட வேண்டும். இப்பொழுது மேஷ, சிம்ம, தனுசு இராசிகளில் ஒவ்வொரு பரல் அமைந்திருக்கக் காணலாம்.

இரண்டாம் விதி

திரிகோண சோதனைக்கு முன்பு




திரிகோண சோதனைக்கு பின்பு




இந்த அஷ்ட வர்க்க சக்கரத்தில் இடபம், கன்னி, மகரம் ஆகிய இராசிகளில் முறையே, 3,3,3 என ஒத்த எண்ணிக்கையில் பரல்கள் காணப்படுகின்றன. மூன்று இராசிகளிலும் பரல்களின் எண்ணிக்கை சரிபாக அமையுமானால், அவை அனைத்தையும் மூன்று இராசிகளில் இருந்தும் நீக்கிவிட வேண்டும். இந்த அஷ்டவர்க்க சக்கரத்தில் இடபம், கன்னி, மகரம் ஆகிய மூன்று இராசிகளிலும் மூன்று பரல்கள் உள்ளதால், மூன்று இராசிகளிலும் உள்ள பரல்களை நீக்கிவிட்டு அவற்றில் பூஜ்யத்தைப் போட வேண்டும்.

குறிப்பு : சாதகாலங்காரத்தில் திரிகோண சோதனையைக் கூறும் பாடல்.

கோண மூன்றில் பரல்சரியாக்
குலவின் மூன்றும் எடுத்திருக்க
கோணந் தனிலொன் றிற்குறையிற்
குறைந்த படியே குறையிரண்டும்
கோணந் தனிலொன் றிற்பரலே
கூடா திருக்கிற் சோதனையைக்
கோணந் தனக்கு மில்லையெனக்
கூறு வனச மலர்மானே !

-(சாதகாலங்காரம் : பா.எண் 1099)

## ஏகாதிபத்தியம்

ஒருதிரி கோணம் தனிலோர் இராசிக்
கொருவிந்து சூனிய மாயின்
மருவுமத் திரண்டும் சோதிக்க வேண்டாம்
மன்னு ஏகாதிபத் தியம்தான்
வெருவுதே ளோடு கோல்விடை கன்னி
விணைமீன் சிலைகுடம் மகரம்
பெருகுகோ ளொன்றுக் கிரண்டுவீ டாகப்
பிரிக்கிலே காதிபத் தியமே. (14)

(இ-ள்) திரிகோண இராசிகள் மூன்றில் ஒரு இராசியில் பரல்கள் இல்லாவிடில் மற்ற இரண்டு இராசிகளிலும் எந்தவித சோதனையும் செய்யாமல் அந்தந்த இராசிகளில் எவ்வித மாற்றமும் இல்லாமல் பரல்களைப் போட வேண்டும்.


## ஏகாதிபத்தியம்

மேடம் - விருச்சிகம், இடபம் - துலாம், மிதுனம் - கன்னி, தனுசு - மீனம், மகரம் - கும்பம் ஆகிய ஒரே கிரகத்தின் ஆதிபத்தியத்திலுள்ள இரண்டு வீடுகளைத் தனித்தனியாகப் பகுத்துக் கொள்ளுதல் ஏகாதிபத்தியம் எனப்படும்.


**விளக்கம் :** திரிகோண இராசிகள் மூன்றில் ஒரு இராசியில் பரல்கள் இல்லாவிட்டால், மற்ற இரண்டு இராசிகளில் உள்ள பரல்களை எந்த மாற்றமும் செய்யாமல் அப்படியே போட வேண்டும். அதாவது திரிகோண சோதனை செய்ய வேண்டியது இல்லை. இது திரிகோண சோதனைக்கான மூன்றாவது விதியாகும்.

மூன்றாம் விதி

திரிகோண சோதனைக்கு முன்பு




திரிகோண சோதனைக்கு பின்பு




இந்த அஷ்ட வர்க்க சக்கரத்தில் மிதுனம், துலாம், கும்பம் ஆகிய இராசிகளில் முறையே, 4,3,0 என்ற எண்ணிக்கையில் பரல்கள் உள்ளன. திரிகோண இராசிகளில் மூன்றில் ஒன்றில் பரல்கள் இல்லாமல் சூன்யமாக இருந்தால், மற்ற இரண்டு இராசிகளிலும் எந்தவித மாற்றமும் செய்ய வேண்டியதில்லை. ஆதலால், மிதுனம், துலாம், கும்பம் ஆகிய இராசிகளில் இருந்த பரல்களில் எவ்வித மாற்றமும் செய்யவில்லை. அப்படியே எழுதப்பட்டுள்ளன.

திரிகோண சோதனைக்குக் கூறப்பட்ட மூன்று விதிகளின் அடிப்படையில், எடுத்துக்காட்டாக அமைந்த சாதக இராசிச் சக்கரத்திற்குப் போடப்பட்ட அஷ்டவர்க்க சக்கரங்கள்.

**திரிகோண சோதனைக்கு முன்பு**

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 3 | 5 |
| 5 | சூரியனின் பின்னாஷ்டக வர்க்கம் | | 4 |
| 2 | | | 4 |
| 5 | 6 | 2 | 3 |

**திரிகோண சோதனைக்கு பின்பு**

| | | | |
|---|---|---|---|
| 4 | 4 | 2 | 2 |
| 2 | சூரியன் திரிகோண சோதனை | | 4 |
| 2 | | | 4 |
| 4 | 4 | 2 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 3 | 3 |
| 4 | சந்திரனின் பின்னாஷ்டக வர்க்கம் | | 4 |
| 6 | | | 5 |
| 3 | 6 | 2 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 4 | 3 | 3 | 2 |
| 2 | சந்திரன் திரிகோண சோதனை | | 4 |
| 3 | | | 3 |
| 3 | 4 | 2 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | 3 | 2 |
| 3 | செவ்வாயின் பின்னாஷ்டக வர்க்கம் | | 4 |
| 1 | | | 4 |
| 2 | 6 | 3 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 3 | 2 | 1 | 2 |
| 2 | செவ்வாய் திரிகோண சோதனை | | 3 |
| 1 | | | 2 |
| 2 | 3 | 2 | 1 |

+ சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, வெள்ளி, சனி ஆகிய ஏழு கோள்களின் தனித்தனியான அஷ்ட வர்க்கங்கள் பின்னாஷ்டக வர்க்கம் என்று குறிப்பிடப்படும். ஒவ்வொரு கோளின் பின்னாஷ்டக வர்க்கத்தில் ஒவ்வொரு இராசியிலும் இருக்கும்பரலுக்குப் பின்னாஷ்டக வர்க்கப் பரல் என்று பெயர்.

### திரிகோண சோதனைக்கு முன்பு

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 6 | 4 |
| 4 | புதனின் பின்னாஷ்டக வர்க்கம் | | 6 |
| 3 | | | 3 |
| 5 | 5 | 3 | 6 |

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | 4 | 3 |
| 5 | குருவின் பின்னாஷ்டக வர்க்கம் | | 6 |
| 6 | | | 3 |
| 5 | 3 | 7 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 4 | 3 | 6 | 5 |
| 5 | சுக்கிரனின் பின்னாஷ்டக வர்க்கம் | | 6 |
| 5 | | | 4 |
| 4 | 2 | 2 | 6 |

| | | | |
|---|---|---|---|
| 6 | 5 | 1 | 4 |
| 4 | சனியின் பின்னாஷ்டக வர்க்கம் | | 2 |
| 3 | | | 3 |
| 3 | 2 | 1 | 5 |

### திரிகோண சோதனைக்கு பின்பு

| | | | |
|---|---|---|---|
| 4 | 3 | 3 | 3 |
| 3 | புதன் திரிகோண சோதனை | | 4 |
| 3 | | | 3 |
| 3 | 4 | 3 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 3 | 3 | 3 | 3 |
| 3 | குரு திரிகோண சோதனை | | 3 |
| 3 | | | 3 |
| 3 | 3 | 3 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 5 | 2 |
| 2 | சுக்கிரன் திரிகோண சோதனை | | 2 |
| 5 | | | 3 |
| 3 | 2 | 2 | 5 |

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 1 | 1 |
| 1 | சனி திரிகோண சோதனை | | 2 |
| 1 | | | 3 |
| 3 | 2 | 1 | 1 |

## ஏகாதிபத்திய சோதனை

இராசி மண்டலத்தில் உள்ள பன்னிரண்டு இராசிகளைச் சூரியன் முதல் சனி வரையுள்ள ஏழு கிரகங்கள் ஆட்சி செய்கின்றன. ஒரு கிரகம் ஆட்சி செய்யும் இராசியை, அந்தக் கிரகத்தின்ஆட்சி வீடு அல்லது சொந்த வீடு என்று சொல்லுவார்கள். ஆட்சி செய்யும் கிரகத்தை அந்த வீட்டின் அதிபதி என்று கூறுவார்கள். இக்கிரகங்களில் சூரியனையும் சந்திரனையும் தவிர மற்ற ஐந்து கிரகங்களும் இரண்டிரண்டு வீடுகளுக்கு அதிபதிகளாக விளங்குகின்றன. ஒரே கிரகத்தைத் தமக்கு அதிபதியாகக் கொண்டுள்ள இரண்டிரண்டு வீடுகள் ஏக ஆதிபத்தியத்தை உடையவையாகும். ஏக ஆதிபத்தியம் உள்ள இரண்டு வீடுகளைத் தனித்தனியாக எடுத்துக்கொண்டு அவற்றிலுள்ள பரல்களைச் சோதனை செய்வது ஏகாதிபத்திய சோதனையாகும்.

## ஏகாதிபத்திய சோதனை

ஏதில்வீ டிரண்டும் கோள்களே இருக்க
ஏறினும் குறையினும் தானே
சோதனை இல்லை இரண்டிடம் தனிலும்
சொல்லிய கோள்களே இன்றி
நீதியாய்ச் சரியாய் இருந்திடின் முழுதும்
நீக்கிட ஏறியும் குறைந்தும்
சேதியாய் இருக்கில் குறைந்ததற் கொப்பன
செய்வதாப் பிறைநுதல் திருவே ! (15)

## விதிகள்

(இ-ள்) 1) ஒரு கிரகத்தின் ஒரே ஆதிபத்தியத்திலுள்ள இரண்டு வீடுகளிலும் கோள்கள் இருக்குமானால், அந்த இரண்டு இராசிகளிலும் உள்ள பரல்களை எவ்வித மாற்றமும் செய்யாமல் அப்படியே வைத்துக் கொள்ள வேண்டும்.

2) இரண்டு இராசிகளிலும் கிரகங்கள இன்றிப் பரல்களின் எண்ணிக்கை சமமாக இருந்தால், இவ்விரு இராசிகளிலும் உள்ள பரல்களை நீக்கிவிட வேண்டும்.

3) இரண்டு இராசிகளிலும் கிரகங்கள் இன்றிப் பரல்களின் எண்ணிக்கை ஏறியும் இறங்கியும் ஒன்றுக்கொன்று மாறுபட்டு இருக்குமானால், குறைந்த பரல்களின் எண்ணிக்கைக்குச் சமமாக மற்ற இராசிகளில் உள்ள பரல்களைக் குறைக்க வேண்டும்.

**விளக்கம் :** ஒவ்வொரு கிரகத்திற்கும் பின்னாஷ்டக வர்க்க சக்கரங்களை எழுதியபிறகு, ஏகாதிபத்திய சோதனை செய்யப்படுகிறது. அதன்பிறகு, ஒரு கிரகத்திற்கு இரண்டு வீடுகள் ஆட்சி வீடுகளாக இருப்பின், அவற்றில் உள்ள பரல்களை எடுத்துக் கொண்டு ஏகாதிபத்திய சோதனை செய்ய வேண்டும். இதற்கு நவக்கிரகங்களில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய ஏழு கோள்களின் நிலையைப் பார்க்கவேண்டும். இராகு, கேது ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

குறிப்பு : இப்பாடலில் கூறப்பட்டுள்ள மூன்று விதிகளுக்குச் சான்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.


முதல்விதி, ஒரு கிரகத்தின் ஒரே ஆதிபத்தியத்திலுள்ள இரண்டு வீடுகளிலும் கிரகம் இருந்தால், எவ்வாறு ஏகாதிபத்திய சோதனை செய்ய வேண்டும் என்பதைக் கூறுகிறது.

## முதல்விதி

முதல் விதியின்படி, ஒரு கிரகத்தின் ஒரே ஆதிபத்தியத்திலுள்ள இரண்டு வீடுகளிலும் கிரகங்கள் இருக்குமானால், அந்த இரண்டு இராசிகளிலும் உள்ள பரல்களை எவ்வித மாற்றமும் செய்யாமல் அப்படியே வைத்துக் கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டு :

சாதக இராசிச் சக்கரம்




திரிகோண சோதனைக்குப் பின்பு




இந்த இராசிச் சக்கரத்தில் செவ்வாயின் ஆட்சி வீடுகளான மேஷத்திலும் விருச்சிகத்திலும் கிரகங்கள் இருப்பதால், எவ்வித மாற்றமும் இல்லாமல் பரல்களை வைத்துக் கொள்ள வேண்டும். மேஷத்திலும் விருச்சிகத்திலும் முறையே 4,4 பரல்கள் உள்ளன. எனவே, ஏகாதிபத்திய சோதனைக்குப் பின்னரும் மேஷ, விருச்சிக இராசிகளில் முறையே 4,4 பரல்கள் இருக்கும்.

இன்று இந்த முதல்விதி, நான்கு துணை விதிகளாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஒரு கிரகத்தின் ஆதிபத்தியத்திலுள்ள இரண்டு வீடுகளிலும் கிரகங்கள் இருக்கும்போது,

1. இரண்டு இராசிகளிலும் பரல்கள் ஏற்ற இறக்கமாக இருந்தால் சோதனை இல்லை.
2. இரண்டு இராசிகளிலும் பரல்கள் சமமாக இருந்தால் சோதனை இல்லை.
3. ஒரு இராசியில் பரல்கள் இருந்து மற்றொரு இராசியில் பரல்கள் இல்லையானால் சோதனை இல்லை.
4. இரண்டு இராசிகளிலும் பரல்கள் இல்லையானால் சோதனை இல்லை.

(ஜா.அ.வ.அ.ப.திர். பக். 33)

இரண்டாம் விதி, மூன்றாம் விதி ஆகிய இரண்டும், ஒரு கிரகத்தின் ஒரே ஆதிபத்தியத்திலுள்ள இரண்டு வீடுகளிலும் கிரகங்கள் இல்லாமல் இருந்தால், எவ்வாறு ஏகாதிபத்திய சோதனை செய்ய வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறது.

## இரண்டாம் விதி

இரண்டாம் விதியின்படி, ஒரு கிரகத்தின் ஒரே ஆதிபத்தியத்திலுள்ள இரண்டு வீடுகளிலும் கிரகங்கள் இல்லாமல் இருந்து, அந்த இராசிகளில் உள்ள பரல்களின் எண்ணிக்கை சமமாக இருந்தால், அவ்விரு இராசிகளிலும் உள்ள பரல்களை நீக்கிவிட வேண்டும்.

எடுத்துக்காட்டு :

சாதக இராசிச் சக்கரம்

| | | | |
|---|---|---|---|
| | செவ் கேது | சுக் | சூரி சந் |
| | இராசிச் சக்கரம் | | புதன் |
| | | | |
| | சனி | இராகு குரு | ல |

திரிகோண சோதனைக்குப் பின்பு

| | | | |
|---|---|---|---|
| 4 | 3 | 3 | 3 |
| 3 | புதன் திரிகோண சோதனை | | 4 |
| 3 | | | 3 |
| 3 | 4 | 3 | 3 |

இந்த இராசிச் சக்கரத்தில் சனியின் ஆட்சி வீடுகளான மகரத்திலும் கும்பத்திலும் கிரகங்கள் இல்லை. அந்த இரண்டு இராசிகளிலும் முறையே 3, 3 பரல்கள் உள்ளன. இரண்டாம் விதியின்படி, ஒரு கிரகத்தின் ஒரே ஆதிபத்தியத்திலுள்ள இரண்டு வீடுகளிலும் கிரகங்களின்றி, அந்த இராசிகளில் உள்ள பரல்களின் எண்ணிக்கை சமமாக இருந்தால் அவ்விரு இராசிகளில் உள்ள பரல்களை நீக்கிவிட வேண்டும். எனவே, ஏகாதிபத்திய சோதனைக்குப் பின்னர் மகர இராசியிலும் கும்ப இராசியிலும் பரல்கள் இன்றி, சூனியமாக இருக்கும்.

## மூன்றாம் விதி

மூன்றாம் விதியின்படி, ஒரு கிரகத்தின் ஒரே ஆதிபத்தியத்திலுள்ள இரண்டு வீடுகளிலும் கிரகங்கள் இல்லாமல் இருந்து, அந்த இராசிகளில் உள்ள பரல்களின் எண்ணிக்கை ஏறியும் இறங்கியும் ஒன்றுக்கொன்று மாறுபட்டு இருக்குமானால், குறைந்த பரல்களின் எண்ணிக்கைக்குச் சமமாக மற்ற இராசிகளில் உள்ள பரல்களைக் குறைக்க வேண்டும்.

இரண்டாம் விதிக்கு எடுத்துக்காட்டாக அமைந்த சாதக இராசிச்சககரத்தின புதனின் பின்னாஷ்டக வர்க்கமே மூன்றாம் விதிக்கும் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

இந்த இராசிச் சக்கரத்தில் குருவின் ஆட்சி வீடுகளான தனுசு இராசியிலும் மீன இராசியிலும் கிரகங்கள் இல்லை. இந்த இரண்டு இராசிகளிலும் முறையே, 3, 4 பரல்கள் உள்ளன. மூன்றாம் விதியின்படி, ஒரு கிரகத்தின் ஒரே ஆதிபத்தியத்திலுள்ள இரண்டு வீடுகளிலும் கிரகங்கள் இன்றி, அந்த இராசிகளில் உள்ள பரல்களின் எண்ணிக்கை ஏறியும் இறங்கியும் ஒன்றுக்கொன்று மாறுபட்டு இருக்குமானால், குறைந்த பரல்களின் எண்ணிக்கைக்குச சமமாக மற்ற இராசிகளில் உள்ள பரல்களைக் குறைக்க வேண்டும். எனவே, தனுசு இராசியில் உள்ள மூன்று பரல்களுக்குச் சமமாக மீன இராசியில் உள்ள நான்கு பரல்களில் ஒன்றைக் குறைக்க வேண்டும். எனவே, ஏகாதிபத்திய சோதனைக்குப் பின்னர் தனுசு இராசியில் மூன்று பரல்களும் மீன இராசியில் மூன்று பரல்கள் இருக்கும்.

இந்த இரண்டாம், மூன்றாம் விதிகள் நான்கு துணை விதிகளாக எடுத்துரைக்கப் பட்டுள்ளன. ஒருகிரகத்தின் ஆதிபத்தியத்திலுள்ள இரண்டு வீடுகளிலும் கிரகங்கள் இல்லாமல் இருக்கும்பொழுது,

1) இரண்டு இராசிகளிலும் பரல்கள் ஏற்ற இறக்கமாக இருந்தால், அதிகமாக இருக்கின்ற பரல்களைக் குறைவாக இருக்கின்ற பரல்களுக்குச் சமமாக அமைக்க வேண்டும்.

2) இரண்டு இராசிகளிலும் பரல்கள் சமமாக இருந்தால், அந்த இரண்டு இராசிகளிலும் உள்ள பரல்களை நீக்க வேண்டும்.

3) இரண்டு இராசிகளில் ஏதாவது ஒரு இராசியில் பரல்கள் இல்லாமல் இருந்தால், சோதனை இல்லை.

4) இரண்டு இராசிகளிலும் பரல்கள் இல்லாமல் இருந்தால், சோதனை இல்லை.

## இதுவுமது

குலவுகோள் இருந்த இராசியில் ஏறி
கோளில்லா இராசியில் குறைந்தால்
தலமதில் குறையாய் இருந்ததை நீக்கு
சரியுறில் அதையும்நீக் குவதாம்
மலதுகோள் இல்லா இராசியில் அதிக
மாயிடில் சரிபண்ணல் என்பார்
சொலுமிடம் இரண்டில் ஒன்றுகு னியமாய்த்
தோன்றிடில் சோதிப்ப திலையே. (16)

(இ-ள்) 4) ஒரு கிரகத்தின் ஆதிபத்தியத்திலுள்ள இரண்டு வீடுகளில் ஒன்றில் மட்டும் கிரகம் இருந்து மற்றொன்றில் கிரகம் இல்லாவிட்டால், கிரகம் உள்ள வீட்டின் பரல்களைக் காட்டிலும் கிரகம் இல்லாத வீட்டின் பரல்கள் எண்ணிக்கையில் குறைவானவையாக இருந்தால், கிரகம் இல்லாத வீட்டில் உள்ள பரல்கள் அனைத்தையும் நீக்கிவிட வேண்டும்.

5) கிரகம் உள்ள வீட்டின் பரல்களும் கிரகம் இல்லாத வீட்டின் பரல்களும் எண்ணிக்கையில் சமமாக இருந்தால், கிரகம் இல்லாத வீட்டின் பரல்களை முற்றிலுமாக நீக்கிவிட வேண்டும்.

6) கிரகமுள்ள வீட்டின் பரல்களைக் காட்டிலும் கிரகம் இல்லாத வீட்டின் பரல்கள் எண்ணிக்கையில் அதிகமானவையாக இருப்பின், கிரகம் இல்லாத வீட்டின் பரல்களைக் கிரகம் உள்ள வீட்டின் பரல்களுக்குச் சமமாக இருக்கும்படி குறைத்துவிட வேண்டும்.

7). ஒரு கிரகத்தின் ஆதிபத்தியத்தில் உள்ள இரண்டு இராசிகளில், ஒரு இராசியில் பரல்களே இல்லாமல் இருப்பின், மற்றொரு இராசியில் உள்ள பரல்களில் மாற்றம் எதுவும் செய்ய வேண்டியதில்லை.

**விளக்கம்:** இந்தப் பாடலில் ஒரு கிரகத்தின் ஆதிபத்தியத்திலுள்ள இரண்டு வீடுகளில் ஒன்றில் மட்டும் கிரகம் இருந்து மற்றொன்றில் கிரகம் இல்லாவிட்டால், எவ்வாறு ஏகாதிபத்திய சோதனை செய்ய வேண்டும் என்பது எடுத்துரைக்கப் பட்டுள்ளது. நான்கு, ஐந்து, ஆறு, ஏழாம் விதிகளாக கூறப்படும் நான்கு விதிகள் இதற்கு அமைந்துள்ளன.

### நான்காம் விதி

நான்காம் விதியின்படி, ஒரு கிரகத்தின் ஆதிபத்தியத்திலுள்ள இரண்டு வீடுகளில் ஒன்றில் மட்டும் கிரகம் இருந்து மற்றொன்றில் கிரகம் இல்லாமல் இருந்து, கிரகம் உள்ள வீட்டின் பரல்களைக் காட்டிலும் கிரகம் இல்லாத வீட்டின் பரல்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தால், கிரகம் இல்லாத வீட்டில் உள்ள பரல்கள் அனைத்தையும் நீக்கிவிட வேண்டும்.

எடுத்துக்காட்டு :

சாதக இராசிச் சக்கரம்

| | | | |
|---|---|---|---|
| | செவ் கேது | சுக் | சூரி சந் |
| | இராசிச் சக்கரம் | | புதன் |
| | | | |
| | சனி | குரு இராகு | ல |

திரிகோண சோதனைக்குப் பின்பு

| | | | |
|---|---|---|---|
| 3 | 2 | 1 | 2 |
| 2 | செவ்வாய் திரிகோண சோதனை | | 3 |
| 1 | | | 2 |
| 2 | 3 | 2 | 1 |

இந்த இராசிச் சக்கரத்தில் புதனின் ஆட்சி வீடுகளான மிதுனத்தில் கிரகங்கள் உள்ளன. கன்னியில் கிரகம் இல்லை.

மிதுனத்தில் இரண்டு பரல்கள் உள்ளன. கன்னியில் ஒரு பரல் மட்டுமே உள்ளது. நான்காம் விதிப்படி, கணக்கிட கிரகம் உள்ள வீட்டின் பரல்களைக் காட்டிலும் கிரகம் இல்லாத கன்னி இராசியில் பரல்கள குறைவாக இருப்பதால், அந்தப் பரலை நீக்கிவிட வேண்டும் எனவே, ஏகாதிபத்திய சோதனைக்குப் பின்பு, மிதுனத்தில் இரண்டு பரல்களும் கன்னி இராசியில் பரல்கள் எதுவும் இன்றி வெற்றிடமாகவும் இருக்கும்.

## ஐந்தாம் விதி

ஐந்தாம் விதிப்படி, கிரகம் உள்ள வீட்டின் பரல்களும் கிரகம் இல்லாத வீட்டின் பரல்களும் எண்ணிக்கையில் சமமாக இருந்தால், கிரகம் இல்லாத வீட்டின் பரல்களை முற்றிலுமாக நீக்கிவிட வேண்டும்.

எடுத்துக்காட்டு :

சாதக இராசிச் சக்கரம்

| | | | |
|---|---|---|---|
| | செவ் கேது | சுக் | சூரி சந் |
| | இராசிச் | | புதன் |
| | சக்கரம் | | |
| | சனி | இராகு குரு | ல |

திரிகோண சோதனைக்குப் பின்பு

| | | | |
|---|---|---|---|
| 3 | 3 | 3 | 3 |
| 3 | குரு திரிகோண | | 3 |
| 3 | சோதனை | | 5 |
| 3 | 3 | 3 | 3 |

இந்த இராசிச் சக்கரத்தில் புதனின் ஆட்சி வீடான மிதுனத்தில் கிரகங்கள் உள்ளன. கன்னியில் கிரகம் இல்லை. மிதுனத்தில் மூன்று பரல்கள் உள்ளன. அதாவது கிரகம் உள்ள வீட்டிலும் கிரகம் இல்லாத வீட்டிலும் பரல்கள் சமமாக உள்ளன. அவ்வாறு இருந்தால் கிரகம் இல்லாத வீட்டின் பரல்களை முற்றிலுமாக நீக்கிவிட வேண்டும் என்ற ஐந்தாவது விதியின் படி, கன்னி இராசியில் உள்ள மூன்று பரல்களை நீக்கிவிட வேண்டும். இதனால் ஏகாதிபத்திய சோதனைக்குப

பின்பு, மிதுனத்தில் மூன்று பரல்கள் இருக்கும் கன்னியில் இருந்த மூன்று பரல்களும் நீக்கப்பட்டு வெற்றிடமாக இருக்கும்.

## ஆறாவது விதி

கிரகமுள்ள வீட்டின் பரல்களைக காட்டிலும் கிரகம் இல்லாத வீட்டின் பரல்கள் எண்ணிக்கையில் அதிகமானவையாக இருப்பின், கிரகம் இல்லாத வீட்டின் பரல்களைக கிரகம் உள்ள வீட்டின் பரல்களுக்குச் சமமாக இருக்கும்படி குறைத்துவிட வேண்டும்.

எடுத்துக்காட்டு :

சாதக இராசிச் சக்கரம்

| | | | |
|---|---|---|---|
| | செவ் கேது | சுக் | சூரி சந் |
| | இராசிச் சக்கரம் | | புதன் |
| | | | |
| | சனி | இராகு குரு | ல |

திரிகோண சோதனைக்குப் பின்பு

| | | | |
|---|---|---|---|
| 4 | 3 | 3 | 2 |
| 2 | சந்திரன் திரிகோண சோதனை | | 4 |
| 3 | | | 3 |
| 3 | 4 | 2 | 3 |

இந்த இராசிச் சக்கரத்தில் புதனின் ஆட்சி வீடான மிதுனத்தில் கிரகங்கள் உள்ளன. கன்னியில் கிரகம் இல்லை. மிதுனத்தில் இரண்டு பரல்கள் உள்ளன. கன்னியில் மூன்று பரல்கள உள்ளன. அதாவது கிரகம் உள்ள வீட்டில் உள்ள பரல்களைக் காட்டிலும் கிரகம் இல்லாத வீட்டின் பரல்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. எனவே ஆறாவது விதிப்படி கிரகம் இல்லாத வீட்டின் பரல்களுக்குச் சமமாக இருக்கும்படி குறைத்துவிட வேண்டும். எனவே, மிதுனத்தில் உள்ள இரண்டு பரல்களுக்குச் சமமாக இருக்கும்படி, கன்னியில் உள்ள மூன்று பரல்களை இரண்டு பரல்களாகக் குறைத்துவிட வேண்டும். இதனால் ஏகாதிபத்திய சோதனைக்குப் பின்பு மிதுனத்தில் இரண்டு பரல்களும் கன்னியில் இரண்டு பரல்களும் இருக்கும்.

## ஏழாவது விதி

ஏழாவது விதியின்படி, ஒரு கிரகத்தின் ஆதிபத்தியத்தில் உள்ள இரண்டு இராசிகளில், ஒரு இராசியில் பரல்களே இல்லாமல் இருப்பின், மற்றொரு இராசியில் உள்ள பரல்களில் மாற்றம் எதுவும் செய்ய வேண்டியதில்லை.

எடுத்துக்காட்டாக நூல் கூறப்பட்ட சாதகத்தைத் தவிர மற்றொரு சாதகத்தில் சுக்கிரனின் பின்னாஷ்டக வர்க்கத்தில் திரிகோண சோதனைக்குப் பின்பு,

| | | | |
|---|---|---|---|
| 4 | 4 | 2 | 2 |
| 2 | சுக்கிரனின் பின்னாஷ்டக வர்க்கம் | | 4 |
| 2 | | | 4 |
| 4 | 4 | 2 | 2 |

என்று இருப்பதாகக் கொள்வோம். இதில் செவ்வாயின் ஆட்சி வீடான மேஷத்தில் கிரகம் உள்ளது. மற்றொரு வீடான விருச்சிகத்தில் கிரகம் இல்லை என்று கொள்வோம். மேஷத்தில் ஒரு பரல் உள்ளது. விருச்சிகத்தில் பரல் எதுவும் இல்லை. ஏழாவது விதியின்படி, ஒரு கிரகத்தின் ஆதிபத்தியத்தில் உள்ள இரண்டு இராசிகளில் ஒரு இராசியில் பரல்களே இல்லாமல் இருந்தால், மற்றொரு இராசியில் உள்ள பரல்களில் எவ்வித மாற்றமும் செய்ய வேண்டியதில்லை. எனவே, மாற்றம் எதுவுமின்றி, ஏகாதிபத்திய சோதனைக்குப் பின்னும் மேஷத்தில் ஒரு பரலும், விருச்சிகத்தில் வெற்றிடமாகவும் இருக்கும்.

எடுத்துக் காட்டாக அமைந்துள்ள சாதக இராசிச் சக்கரத்திற்கான சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு,

சுக்கிரன், சனி ஆகிய ஏழு பின்னாஷ்டக வர்க்கங்களின் திரிகோண சோதனைக்குப் பின்பு உள்ள நிலையும் ஏகாதிபத்திய சோதனைக்குப் பின்பு உள்ள நிலையும் கீழே காட்டப்பட்டுள்ளன.

திரிகோண சோதனைக்குப் பின்பு

| | | | |
|---|---|---|---|
| 4 | 4 | 2 | 2 |
| 2 | சூரியன் திரிகோண சோதனை | | 4 |
| 2 | | | 4 |
| 4 | 4 | 2 | 2 |

ஏகாதிபத்திய சோதனைக்குப் பின்பு

| | | | |
|---|---|---|---|
| 0 | 4 | 2 | 2 |
| 0 | சூரியன் ஏகாதிபத்திய சோதனை | | 4 |
| 0 | | | 4 |
| 0 | 4 | 2 | 0 |

| | | | |
|---|---|---|---|
| 4 | 3 | 3 | 2 |
| 2 | சந்திரன் திரிகோண சோதனை | | 4 |
| 3 | | | 3 |
| 3 | 4 | 2 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 3 | 3 | 3 | 2 |
| 2 | சந்திரன் ஏகாதிபத்திய சோதனை | | 4 |
| 2 | | | 3 |
| 3 | 4 | 2 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 3 | 2 | 1 | 2 |
| 2 | செவ்வாய் திரிகோண சோதனை | | 3 |
| 1 | | | 2 |
| 2 | 3 | 2 | 1 |

| | | | |
|---|---|---|---|
| 2 | 2 | 1 | 2 |
| 1 | செவ்வாய் ஏகாதிபத்திய சோதனை | | 3 |
| 1 | | | 2 |
| 2 | 3 | 2 | 0 |

திரிகோண சோதனைக்குப் பின்பு

| | | | |
|---|---|---|---|
| 4 | 3 | 3 | 3 |
| 3 | புதன் திரிகோண சோதனை | | 4 |
| 3 | | | 3 |
| 3 | 4 | 3 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 3 | 3 | 3 | 3 |
| 3 | குரு திரிகோண சோதனை | | 3 |
| 3 | | | 3 |
| 3 | 3 | 3 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 5 | 2 |
| 2 | சுக்கிரன் திரிகோண சோதனை | | 2 |
| 5 | | | 3 |
| 3 | 2 | 2 | 5 |

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 1 | 1 |
| 1 | சனி திரிகோண சோதனை | | 2 |
| 1 | | | 3 |
| 3 | 2 | 1 | 1 |

ஏகாதிபத்திய சோதனைக்குப் பின்பு

| | | | |
|---|---|---|---|
| 3 | 3 | 3 | 3 |
| 0 | புதன் ஏகாதிபத்திய சோதனை | | 4 |
| 0 | | | 3 |
| 3 | 4 | 3 | 0 |

| | | | |
|---|---|---|---|
| 0 | 3 | 3 | 3 |
| 0 | குரு ஏகாதிபத்திய சோதனை | | 3 |
| 0 | | | 3 |
| 0 | 3 | 3 | 0 |

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 5 | 2 |
| 2 | சுக்கிரன் ஏகாதிபத்திய சோதனை | | 2 |
| 2 | | | 3 |
| 2 | 2 | 2 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 1 | 1 |
| 0 | சனி ஏகாதிபத்திய சோதனை | | 2 |
| 0 | | | 3 |
| 2 | 2 | 1 | 0 |

## இராசி குணகாரம்

அரியகர் கடகம் சிங்கத்துக் கேயோ
ராதிபத் தியங்களும் இல்லை
விரிவுறு இராசியின் குணகாரம் விளம்பு
வள்மே டம்கோல் ஏழாம்
அரியுறு மீதுனம் விருச்சிகம் எட்டாம்
மகரமும் கன்னியும் ஐந்தாம்
தெரிவுறு கடகம் நாலென்பர் இடபம்
சிங்கமும் பத்தெனச் செப்பும்

(இ-ள்) சந்திரனுக்கு ஒரேவீடு கடக இராசி;
சூரியனுக்கு ஒரேவீடு சிம்ம இராசி.
எனவே, கடக, சிம்ம இராசிகளுக்கு ஏகாதிபத்திய சோதனை செய்ய வேண்டியது இல்லை.

## இராசி குணகார எண்கள்

| | |
|---|---|
| மேட | இராசிக்குக் குணகார எண் ஏழு |
| துலா | இராசிக்குக் குணகார எண் ஏழு |
| மிதுன | இராசிக்குக் குணகார எண் எட்டு |
| விருச்சிக | இராசிக்குக் குணகார எண் எட்டு |
| மகர | இராசிக்குக் குணகார எண் ஐந்து |
| கன்னி | இராசிக்குக் குணகார எண் ஐந்து |
| கடக | இராசிக்குக் குணகார எண் நான்கு |
| இடப | இராசிக்குக் குணகார எண் பத்து |
| சிம்ம | இராசிக்குக் குணகார எண் பத்து |

குறிப்பு : அஷ்டவர்க்கக் கணிதத்தில் மேடம் முதல் மீனம் வரையிலான ஒவ்வோர் இராசிக்கும் ஒவ்வொரு எண் தரப்பட்டுள்ளது. இதனை 'இராசி குணகார எண்' என்று கூறுவார்கள். இந்தப்பாடலில் பன்னிரு இராசிகளில் ஒன்பது இராசிகளுக்கு மட்டும் இராசி குணகார எண்கள் தரப்பட்டுள்ளன. எஞ்சிய மூன்று இராசிகளுக்கு அடுத்த பாடலில் எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. குணகாரம் என்பது சில நூல்களில் குணாகாரம் என்று குறிப்பிடப்படுகிறது.

## இராசி குணகாரம், கிரக குணகாரம்

அடர்சிலை ஒன்பான் குடம்பதி னொன்றாம்
ஆதிய மீனம்பன்னி ரண்டாம்
துடர்வுடன் இப்பால் கிரகங்கள் குணிதம்
சொல்லுவது மதிகதிர் புந்தி
படர்சனிக் கைந்தாம் குருவுக்குப் பத்தாம்
பகர்செவ்வாய் தனக்குமெட் டென்பார்
தடமுறு வெள்ளிக் கேழெனும் கோட்கள்
தன்குண காரமென் றறைவார் (18)

(இ-ன்) தனுசு இராசிக்கு இராசிமான எண் ஒன்பது; கும்ப இராசிக்கு இராசிமான எண் பதினொன்று; மீன இராசிக்கு இராசிமான எண் பன்னிரண்டு.

### கிரக குணகார எண்கள்

சந்திரனுக்குக் கிரக குணகார எண் ஐந்து
சூரியனுக்குக் கிரக குணகார எண் ஐந்து
புதனுக்குக் கிரக குணகார எண் ஐந்து
சனிக்குக் கிரக குணகார எண் ஐந்து
குருவுக்குக் கிரக குணகார எண் பத்து
செவ்வாய்க்குக் கிரக குணகார எண் எட்டு
சுக்கிரனுக்குக் கிரக குணகார எண் ஏழு

குறிப்பு : அஷ்டவர்க்கக் கணிதத்தில் ஒன்பது கிரகங்களில் இராகு, கேது நீங்கலாக உள்ள ஏழு கிரகங்களுக்கும் ஒவ்வொரு எண் தரப்பட்டுள்ளது. இதனைக் கிரக குணகார எண் என்று கூறுவார்கள்.

துணங்கிய இராசி தன்னிலே உள்ள
சோத்திய விந்துவை அறிந்தே
இணங்கிரா சிக்கே சொலுங்குண காரத்
தியற்கையாம் தொகையினைக் கூட்டி

கணம்பயில் இராசி விந்துவுக் கெல்லாம்
கனித்திடும் தொகையினைத் தானே
குணம்பெற ஒன்றாய்க் கூட்டவே இராசி
குணிதமாம் என்னவே கூறும். (19)

(இ-ள்) அஷ்ட வர்க்கங்களில் திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை செய்த பிறகு, ஒவ்வொரு கிரகத்தின் அஷ்டக வர்க்கத்திலும் மேஷம் முதல் மீனம் வரை உள்ள ஒவ்வொரு இராசியிலும் அமைந்துள்ள சோத்தியப் பரல்களை இராசிமான எண்களால் பெருக்க வேண்டும். இவ்வாறு பன்னிரு இராசிகளிலும் கிடைக்கும் பெருக்குத் தொகைகளின் கூட்டுத் தொகையைக் கணக்கிட வேண்டும். இது அந்தக் கிரகத்தின் அஷ்டவர்க்க இராசி குணகாரம் எனப்படும். இராகு, கேது நீங்கலாக உள்ள ஏழு கிரங்களின் அஷ்ட வர்க்க இராசி குணகாரத் தொகைகளைக் கூட்டக் கிடைப்பது 'இராசி குணிதம்' எனப்படும்.

குறிப்பு : அஷ்டவர்க்கங்களில் திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை செய்த பிறகு வரும் ஏழு கிரகங்களின் ஏகாதிபத்திய சோதனைக் கட்டங்களில் ஒவ்வொரு இராசியிலும் உள்ள பரல்களுக்குச் சோத்தியபரல் அல்லது சோத்திய பிந்து என்று பெயர். இவ்வாறாக ஒவ்வொரு கிரகத்தின் ஏகாதிபத்திய சோதனைக் கட்டத்தில் பன்னிரண்டு இராசிகளிலும் உள்ள சோத்திய பரல்களைக் கூட்ட வருகின்ற மொத்தத் தொகைக்கு அந்தக் கிரகத்தின் சோத்தியபிண்டம் என்று பெயர்.

## இராசி குணகாரம் கணக்கிடல்

விளக்கம் : எடுத்துக் காட்டாகக் கூறப்பட்டுள்ள சாதக இராசிச்சக்கரத்தில் ஏகாதிபத்திய சோதனை செய்தபிறகு, அந்த இராசியில் உள்ள பரல்களை அந்தந்த இராசிக்குரிய இராசி குணகார எண்ணால் பெருக்க வேண்டும். பூஜ்யத்தை ஒரு எண்ணால் பெருக்க, பூஜ்யமே வரும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

## சூரிய அஷ்ட வர்க்கத்தின் இராசி குணகாரம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 4 | 2 | 2 | 4 | 4 | 0 | 2 | 4 | 0 | 0 | 0 | 0 |
| இராசி குணகார எண்கள் | 7 | 10 | 8 | 4 | 10 | 5 | 7 | 8 | 9 | 5 | 11 | 12 |
| | 28 | 20 | 16 | 16 | 40 | 0 | 14 | 32 | 0 | 0 | 0 | 0 |
| | | | | | | | | | | கூடுதல் | | 166 |

## சந்திர அஷ்ட வர்க்கத்தின் இராசி குணகாரம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 3 | 3 | 2 | 4 | 3 | 2 | 2 | 4 | 3 | 2 | 2 | 3 |
| இராசி குணகார எண்கள் | 7 | 10 | 8 | 4 | 10 | 5 | 7 | 8 | 9 | 5 | 11 | 12 |
| | 21 | 30 | 16 | 16 | 30 | 10 | 14 | 32 | 27 | 10 | 22 | 36 |
| | | | | | | | | | | கூடுதல் | | 264 |

## செவ்வாய் அஷ்ட வர்க்கத்தின் இராசி குணகாரம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 2 | 1 | 2 | 3 | 2 | 0 | 2 | 3 | 2 | 1 | 1 | 2 |
| இராசி குணகார எண்கள் | 7 | 10 | 8 | 4 | 10 | 5 | 7 | 8 | 9 | 5 | 11 | 12 |
| | 14 | 10 | 16 | 12 | 20 | 0 | 14 | 24 | 18 | 5 | 11 | 24 |
| | | | | | | | | | | கூடுதல் | | 168 |

## புதன் அஷ்ட வர்க்கத்தின் இராசி குணகாரம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 3 | 3 | 3 | 4 | 3 | 0 | 3 | 4 | 3 | 0 | 0 | 3 |
| இராசி குணகாரங்கள் | 7 | 10 | 8 | 4 | 10 | 5 | 7 | 8 | 9 | 5 | 11 | 12 |
| | 21 | 30 | 24 | 16 | 30 | 0 | 21 | 32 | 27 | 0 | 0 | 36 |
| | | | | | | | | | | கூடுதல் | | 237 |

## குரு அஷ்ட வர்க்கத்தின் இராசி குணகாரம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 3 | 3 | 3 | 3 | 3 | 0 | 3 | 3 | 0 | 0 | 0 | 0 |
| இராசி குணகாரங்கள் | 7 | 10 | 8 | 4 | 10 | 5 | 7 | 8 | 9 | 5 | 11 | 12 |
| | 21 | 30 | 24 | 12 | 30 | 0 | 21 | 24 | 0 | 0 | 0 | 0 |
| | | | | | | | | | | கூடுதல் | | 162 |

## சுக்கிரன் அஷ்ட வர்க்கத்தின் இராசி குணகாரம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 3 | 5 | 2 | 2 | 3 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |
| இராசி குணகாரங்கள் | 7 | 10 | 8 | 4 | 10 | 5 | 7 | 8 | 9 | 5 | 11 | 12 |
| | 21 | 50 | 16 | 8 | 30 | 10 | 14 | 16 | 18 | 10 | 22 | 24 |
| | | | | | | | | | | கூடுதல் | | 239 |

## சனி அஷ்ட வர்க்கத்தின் இராசி குணகாரம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 3 | 1 | 1 | 2 | 3 | 0 | 1 | 2 | 2 | 0 | 0 | 2 |
| இராசி குணகார எண்கள் | 7 | 10 | 8 | 4 | 10 | 5 | 7 | 8 | 9 | 5 | 11 | 12 |
| | 21 | 10 | 8 | 8 | 30 | 0 | 7 | 16 | 18 | 0 | 0 | 24 |

கூடுதல் 142

இராகு, கேது நீங்கலாக உள்ள ஏழு கிரகங்களின் அஷ்டவர்க்கங்களின் இராசி குணகாரங்களைக் கூட்ட, இராசி குணகாரம் கிடைக்கும்.

1. சூரிய அஷ்டவர்க்கத்தின் இராசி குணகாரம் 166
2. சந்திர அஷ்டவர்க்கத்தின் இராசி குணகாரம் 264
3. செவ்வாய் அஷ்ட வர்க்கத்தின் இராசி குணகாரம் 168
4. புதன் அஷ்டகவர்க்கத்தின் இராசி குணகாரம் 237
5. குரு அஷ்ட வரக்கத்தின் இராசி குணகாரம் 162
6. சுக்கிர அஷ்ட வர்க்கத்தின் இராசி குணகாரம் 239
7. சனி அஷ்டவர்க்கத்தின் இராசி குணகாரம் 142

மொத்த இராசி குணகாரம் 1378

## சர்வாஷ்ட வர்க்க இராசி குணகாரம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சர்வாஷ்ட ஏகாதிபத்திய பரல்கள் | 21 | 18 | 15 | 22 | 21 | 4 | 15 | 22 | 12 | 5 | 5 | 12 |
| இராசி குணகார எண்கள் | 7 | 10 | 8 | 4 | 10 | 5 | 7 | 8 | 9 | 5 | 11 | 12 |
| | 147 | 180 | 120 | 88 | 210 | 20 | 105 | 176 | 108 | 25 | 55 | 144 |

கூடுதல் 1378

## கிரக குணகாரம்

அஷ்ட வர்க்கங்களில் திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை செய்த பிறகு, ஒவ்வொரு கிரகத்தின் அஷ்ட வர்க்கத்திலும் மேஷம் முதல் மீனம் வரை ஒவ்வொரு இராசியிலும் கிரகங்கள் அமைந்துள்ள சோத்திய பரல்களைக் கிரகமான எண்ணால் பெருக்க வேண்டும். இவ்வாறு கிரகங்கள் இருக்கும் இராசிகளில் கிடைக்கும் பெருக்குத் தொகைகளின் கூட்டுத்தொகைகளைக் கணக்கிட வேண்டும். இது அந்தக் கிரகத்தின் கிரக குணகாரம் எனப்படும். இராகு, கேது நீங்கலாக உள்ள ஏழு கிரகங்களின் அஷ்டவர்க்க கிரக குணாகாரங்களின் கூட்டுத்தொகை கிரக குணிதம் அல்லது கிரக குணகாரமாகும்.

## கிரக குணகாரம் கணக்கிடல்

விளக்கம் : எடுத்துக் காட்டாகக் கூறப்பட்ட சாதக இராசிச் சக்கரத்தில் ஏகாதிபத்திய சோதனை செய்த பிறகு, அந்தந்த இராசிகளில் இருக்கும் கிரகங்களை அவ்வவற்றின் கிரகமான எண்ணால் பெருக்க வேண்டும். பூஜ்யத்தை ஒரு எண்ணால் பெருக்க, பூஜ்யமே வரும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு பன்னிரு இராசிகளிலும் கிடைக்கும் பெருக்குத் தொகைகளின் கூட்டுத்தொகையைக் கணக்கிட வேண்டும்.

### சூரிய அஷ்ட வர்க்கத்தின் கிரக குணகாரம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 4 | 2 | 2+2 | 4 | 4 | 0 | 2 | 4 | 0 | 0 | 0 | 0 |
| கிரக குணகார எண்கள் | 8 | 7 | 5 | 5 | 0 | 0 | 10 | 5 | 0 | 0 | 0 | 0 |
| | 32 | 14 | 20 | 20 | 0 | 0 | 20 | 20 | 0 | 0 | 0 | 0 |

கூடுதல் 126

## சந்திர அஷ்ட வர்க்கத்தின் கிரக குணகாரம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 3 | 3 | 2+2 | 4 | 3 | 2 | 2 | 4 | 3 | 2 | 2 | 3 |
| கிரக குணகார எண்கள் | 8 | 7 | 5 | 5 | 0 | 0 | 10 | 5 | 0 | 0 | 0 | 0 |
| | 24 | 21 | 20 | 20 | 0 | 0 | 20 | 20 | 0 | 0 | 0 | 0 |
| | | | | | | | | | | கூடுதல் | | 125 |

## செவ்வாய் அஷ்ட வர்க்கத்தின் கிரக குணகாரம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 2 | 1 | 2 | 3 | 2 | 0 | 2 | 3 | 2 | 1 | 1 | 2 |
| கிரக குணகார எண்கள் | 8 | 7 | 5 | 5 | 0 | 0 | 10 | 5 | 0 | 0 | 0 | 0 |
| | 16 | 7 | 20 | 15 | 0 | 0 | 20 | 15 | 0 | 0 | 0 | 0 |
| | | | | | | | | | | கூடுதல் | | 93 |

## புதன் அஷ்ட வர்க்கத்தின் கிரக குணகாரம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 3 | 3 | 3 | 4 | 3 | 0 | 3 | 4 | 3 | 0 | 0 | 3 |
| கிரக குணகார எண்கள் | 8 | 7 | 5 | 5 | 0 | 0 | 10 | 5 | 0 | 0 | 0 | 0 |
| | 24 | 21 | 30 | 20 | 0 | 0 | 30 | 20 | 0 | 0 | 0 | 0 |
| | | | | | | | | | | கூடுதல் | | 145 |

## குரு அஷ்ட வர்க்கத்தின் கிரக குணகாரம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 3 | 3 | 3 | 3 | 3 | 0 | 3 | 3 | 0 | 0 | 0 | 0 |
| கிரக குணகார எண்கள் | 8 | 7 | 5 | 5 | 0 | 0 | 10 | 5 | 0 | 0 | 0 | 0 |
| | 24 | 21 | 30 | 15 | 0 | 0 | 30 | 15 | 0 | 0 | 0 | 0 |
| | | | | | | | | | | கூடுதல் | | 135 |

## சுக்கிர அஷ்ட வர்க்கத்தின் கிரக குணகாரம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 3 | 5 | 2 | 2 | 3 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |
| கிரக குணகார எண்கள் | 8 | 7 | 5 | 5 | 0 | 0 | 10 | 5 | 0 | 0 | 0 | 0 |
| | 24 | 35 | 20 | 10 | 0 | 0 | 20 | 10 | 0 | 0 | 0 | 0 |
| | | | | | | | | | | கூடுதல் | | 119 |

## சனி அஷ்ட வர்க்கத்தின் கிரக குணகாரம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 3 | 1 | 1 | 2 | 3 | 0 | 1 | 2 | 2 | 0 | 0 | 2 |
| கிரக குணகார எண்கள் | 8 | 7 | 5 | 5 | 0 | 0 | 10 | 5 | 0 | 0 | 0 | 0 |
| | 24 | 7 | 10 | 10 | 0 | 0 | 10 | 10 | 0 | 0 | 0 | 0 |
| | | | | | | | | | | கூடுதல் | | 71 |

இராகு, கேது நீங்கலாக உள்ள ஏழு கிரகங்களின் அஷ்ட வர்க்கங்களின் அஷ்ட வர்க்கங்களின் கிரக குணகாரங்களைக் கூட்ட கிரக குணகாரம் கிடைக்கும்.

1. சூரிய அஷ்ட வர்க்கத்தின் கிரக குணகாரம் = 126
2. சந்திர அஷ்ட வர்க்கத்தின் கிரக குணகாரம் = 125
3. செவ்வாய் அஷ்ட வர்க்கத்தின் கிரக குணகாரம் = 93
4. புதன் அஷ்ட வர்க்கத்தின் கிரக குணகாரம் = 145
5. குரு அஷ்ட வர்க்கத்தின் கிரக குணகாரம் = 135
6. சுக்கிர அஷ்ட வர்க்கத்தின் கிரக குணகாரம் = 119
7. சனி அஷ்ட வர்க்கத்தின் கிரக குணகாரம் = 71

மொத்த கிரக குணகாரம் = 814

## சர்வாஷ்ட வர்க்க கிரக குணகாரம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 21 | 18 | 15 | 22 | 21 | 4 | 15 | 22 | 12 | 5 | 5 | 12 |
| | 8 | 7 | 5 | 5 | 0 | 0 | 10 | 5 | 0 | 0 | 0 | 0 |
| | 168 | 126 | 150 | 110 | 0 | 0 | 150 | 110 | 0 | 0 | 0 | 0 |
| | | | | | | | | | | | கூடுதல் | 814 |

என்றவ முறைபொற் கிரகங்கள் நின்ற
இராசியின் விந்துவை அறிந்து
துன்றிய கோட்டுச் சொலுங்குண காரச்
சோத்திய தொகையினாற் றாக்கி
ஒன்றவே வரைமாகக் கூட்டியத் தொகையே
உரைக்குங் கோளின்குண காரம்
வென்றிசேர் மதவேள் அறிவினை மயக்குமே
மணமயிற் சாயலஞ் சுகமே ! (20)

(இ-ள்) இவ்வாறாக முறைப்படி மேஷம் முதல் மீனம் வரை ஒவ்வொரு இராசியிலும் கிரகங்கள் அமைந்துள்ள

சோத்திய பரல்களைக் கிரக குணகார எண்களால் பெருக்க, வேண்டும். இவ்வாறு கிரகங்கள் இருக்கும் இராசிகளில் கிடைக்கும் பெருக்குத் தொகைகளின் கூட்டுத்தொகையைக் கணக்கிட வேண்டும். இது அந்தக் கிரகத்தின் குணகாரம் எனப்படும் என்பதனை வெற்றியையுடைய மன்மதனின் அறிவினை மயக்கக்கூடிய மயில் போன்ற சாயலையும் குயில் போன்ற குரலையும் உடைய பெண்ணே அறிவாயாக.

## அஷ்டகவர்காயுசு

கூறிய இராசி குணிதமும் கிரகக்
குணிதமும் ஒன்றதாய்க் கூட்டி
ஈறிலா ஏழில் தாக்கிய இருபத்
தேழினில களைந்திடும் ஈவே
வீறிலா ஆண்டாம் மிஞ்சிநின் றதனை
மிகும்பனி ரண்டினில் தாக்கி
மீறிலா இருபத் தேழினில் களைய
வருவது மாதமே யாகும். (21)

(இ-ள்) இராசி குணிதத்தையும் கிரக குணிதத்தையும் ஒன்றாகக் கூட்டி, ஏழில் பெருக்க வேண்டும். இந்தத் தொகையை இருபத்து ஏழில் வகுக்கக் கிடைக்கும் ஈவு ஒருவருடைய ஆயுளின் முழு ஆண்டுகளாகும். மீதி இருப்பதைப் பன்னிரண்டால் பெருக்கி, இருபத்து ஏழில் வகுக்கக் கிடைப்பது மாதங்களாகும்.

## இதுவுமது

மாதம்போய்க் குறுகி நின்றசே டத்தை
வகுக்கும்நாள் முப்பதில் மாறிப்
பேதமில் இருபத் தெழுக்கே ஈயப்
பெறுமீவும் நாளொன்பா ரதனில்
நீதில்சே டத்தை அறுபதில் தாக்கித்
திகழ்முன்னர்க் கேநா ழிகையாம்
ஓதுமிச் சத்தை அறுபதில் மாறி
உயர்முன்னர் கேதுவி நாடி. (22)

(இ-ள்) மாதங்களைக் கணக்கிட்டபின் கிடைக்கும் மீதியை, முப்பதில் பெருக்கி, இருபத்து ஏழில் வகுக்க நாட்களாகும் நாட்களைக் கணக்கிட்டபின் கிடைக்கும் மீதியை அறுபதில் பெருக்கி, இருபத்து ஏழில் வகுக்க நாழிகைகளாகும். நாழிகைகளைக் கணக்கிட்டபின் கிடைக்கும் மீதியை அறுபதில் பெருக்கி, இருபத்து ஏழில் வகுக்க விநாடிகளாகும்.

விசிய வருடம் மாதநாட் கடிகை
 வினாடிஎன் றடடவிலே தெரிந்துப்
பேசிய முன்னூற் றிருபத்து நாலிற்
 பெருக்கிய தொகையொன்றாய்க் கூட்டிக்
காசிலா முன்னூற் றறுபத்தஞ் சினிலே
 கழித்திடும் ஈவுதான் ஆண்டாம்
மாசிலா மீச்சம் தன்னைபிற் களைந்தே
 மாதம்நாள் நாழிகை காணே ! (23)

(இ-ள்) ஆண்டு, மாதம், நாழிகை, வினாடி என்பனவற்றைத் தெரிந்த பின்பு முன்னூற்று இருபத்து நான்கில் பெருக்கி, பெருக்கிய தொகையை ஒன்றாகக் கூட்டி முன்னூற்று அறுபத்து அஞ்சில் வகுக்க கிடைக்கும் ஈவு ஆண்டாகும். மீதியைக் கொண்டு மாதம், நாள், நாழிகை முதலானவற்றைக் காண வேண்டும்.

## இதுவுமது

சீருள உச்ச முழுப்பல மூலத்
 திரிகோண முக்கால்பலம் என்பார்
ஏதுறு மாட்சிஅரைப்பலம் மிகவும்
 மித்துரு மூன்றத்தொன் றாகும்
சாருறு பகைக்குக் கால்பலம் நீசம்
 தனக்கரைக் கால்பலம் என்பர்
நேருறும் அதிக நீசன்தன் பலமாம்
 நிகழ்மூடம் எட்டிலொன் றென்பார். (24)

(இ-ள்) கிரகங்களுக்கு அவற்றின் உச்ச வீடுகளில் இருக்கும் பொழுது முழு பலம் ; மூல, திரிகோண வீடுகளில் இருக்கும்

பொழுது முக்கால் பலம் ; ஆட்சி வீடுகளில் இருக்கும் பொழுது அரைபலம் ; நட்பு வீடுகளில் இருக்கும் பொழுது மூன்றில் ஒரு பங்கு பலம் ; பகை வீடுகளில் இருக்கும் பொழுது கால் பலம் ; நீசவீட்டில், அதிநீச வீட்டில், மூடம் பெற்று இருக்கும் பொழுது எட்டில் ஒரு பங்கு பலம் என்று கூறுவர். இத்தகைய பலங்களுக்கு ஏற்ப அவை ஆயுள் பலனைக் கொடுக்கும்.

குறிப்பு : உச்சத்தில் இருப்பவனுக்கு அந்த ஆயுர்த்தாயமானது இரட்டிப்பாகும், நீசத்திலிருந்தவனுக்கும் மூடத்தை அடைந்தவனுக்கும் வந்த ஆயுர்த்தாயத்தில் பாதியாகும். வக்கிரத்தை அடைந்த அங்காரகனுக்கு இரட்டித்த ஆயுர்த்தாயம் எனப்படும்.

அறைதரு கோள்கள் இயம்பிய வண்ணம்
அவரவர் கொடுக்குமா யுளைத்தான்
கறைபடக் கூட்டிக் கண்டவா யுளைத்தான்
கொல்லுநூ றாண்டினிற் களைந்தே
வரையமாய் நின்ற தொகையினைக் கண்டு
விளம்பிய சாதகன் தனக்கே
முறைமையாய் நடக்கும் ஆயுளீ தென்றே
மொழிந்தனர் கணிதவல் லவரே. (25)

(இ-ள்) கிரகங்களின் பலங்களுக்கு ஏற்ப அவை ஆயுளை உரைக்க வல்லன. அவையவை தரும் ஆயுளை நூற்றாண்டில் நீக்கி, மீதியுள்ள தொகையைச் சாதகனுடைய ஆயுள் என்று கணித வல்லவர்கள் கூறியுள்ளார்கள்.

## இதுவுமது

பகரன்னை தந்தை மாமன்மைத் துனைவன்
பாலகன் தாரந்தன் ஆயுள்
புகழ்வய துரைக்க கதிர்மதி குசன்மால்
பொன்புகர் சனியிவர் தங்க
திகர்கத்தப் பிண்டம் தன்னையே பெருக்கி
நேர்கதிர் ஒன்பது மதிமாற்

அலகவு நான்காம் செய்க்கோர் மூன்று

குருவுக்காம் சுக்கிர னேழ்சனிக் கெட்டே. (26)

(இ-ள்) தாய், தந்தை, மாமன், நண்பன், பிள்ளைகள், மனைவி ஆகியோரின் வயதினை உரைக்க, சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி இவர்களுடைய சுத்த பிண்டத்தைச், சூரியனுக்கு ஒன்பது; சந்திரனுக்கு ஆறு; செவ்வாய்க்கு மூன்று; புதனுக்கு நான்கு; குருவுக்கு ஏழு; சுக்கிரனுக்கு ஏழு; சனிக்கு எட்டு என்னும் கணக்கில் பெருக்க வேண்டும்.

குறிப்பு : ஒவ்வொரு கிரகத்திற்கும் கிடைத்துள்ள இராசி குணிதத்தையும் கிரகுணிதத்தையும் ஒன்றாகக் கூட்டிய கூட்டுத்தொகைக்குச் சோத்திய பிண்டம் அல்லது சுத்த பிண்டம் என்று பெயர்.

விளக்கம் :

| | |
|---|---|
| சூரியனுடைய மொத்த இராசிக்குணிதம் | = 166 |
| சூரியனுடைய மொத்த கிரக குணிதம் | = 126 |
| சூரியனுடைய சுத்த பிண்டம் | = 292 |
| சூரிய சுத்த பிண்டத்தைப் பெருக்க வேண்டிய எண் | = 9 |
| | = 2628 |
| சந்திரனுடைய மொத்த இராசிக்குணிதம் | = 264 |
| சந்திரனுடைய மொத்த கிரக குணிதம் | = 125 |
| சந்திரனுடைய சுத்த பிண்டம் | = 389 |
| சந்திரனுடைய சுத்த பிண்டத்தைப் பெருக்க வேண்டிய எண் | = 4 |
| | = 1556 |

செவ்வாயின் மொத்த இராசிக் குணிதம் = 168
செவ்வாயின் மொத்த கிரக குணிதம் = 93
செவ்வாயின் சுத்த பிண்டம் = 261
செவ்வாயின் சுத்த பிண்டத்தைப் பெருக்க
வேண்டிய எண் = 3
= 783

புதனின் மொத்த இராசிக் குணிதம் = 237
புதனின் மொத்த கிரக குணிதம் = 145
புதனின் சுத்த பிண்டம் = 382
புதனின் சுத்த பிண்டத்தைப் பெருக்க
வேண்டிய எண் = 4
= 1528

குருவின் மொத்த இராசிக் குணிதம் = 162
குருவின் மொத்த கிரக குணிதம் = 135
குருவின் சுத்தபிண்டம் = 297
குருவின் சுத்த பிண்டத்தைப் பெருக்க
வேண்டிய எண் = 7
= 2079

சுக்கிரனின் மொத்த இராசிக் குணிதம் = 239
சுக்கிரனின் மொத்த கிரக குணிதம் = 119
சுக்கிரனின் சுத்த பிண்டம் = 358
சுக்கிரனின் சுத்த பிண்டத்தைப் பெருக்க
வேண்டிய எண் = 7
= 1673

சனியின மொத்த இராசிக் குணிதம் = 142
சனியின் மொத்த கிரக குணிதம் = 71
சனியின் சுத்த பிண்டம் = 213
சனியின் சுத்த பிண்டத்தைப் பெருக்க
வேண்டிய எண் = 8
= 1704

ஈறிலா ஏழுக் கிரகவித் துவையும்

இயல்புடன் ஒன்றதாய்க் கூட்டின்

மாறிலாச் சருவ அட்டக வர்க்கம்

மாமென்பர் மீனமே முதலாய்க்

கூரிய கும்ப வரைபனி ரண்டும்

குலவிய மூன்றுகூ றாக்கி

பீறிய மூன்றில் கூட்டி விந் தெல்லாம்

வெவ்வேறு தொகையதாய்க் கொள்ளே. (27)

(இ-ன்) சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி அட்டக வர்க்கங்களில் ஒவ்வொரு இராசியிலும் வந்திருக்கின்ற பரல்களின் மொத்த கூட்டுத்தொகை சர்வாஷ்டக வர்க்கம் எனப்படும். இவற்றுள் மீனம் முதலாக கும்பம் வரையிலும் உள்ள பன்னிரண்டு இராசிகளையும் மூன்று பிரிவுகளாகப் பிரித்து, அவற்றில் உள்ள பரல்களைக் கூட்டிக் கொள்ள வேண்டும்.

விளக்கம் : எடுத்துக்காட்டுச் சாதகத்தின் ஏழு கிரகங்களின் அஷ்டவர்க்கத்தின் பன்னிரு இராசிகளிலும் விழுந்துள்ள பரல்கள் அனைத்தையும் ஒன்று கூட்ட வேண்டும்.

| அஷ்டவர்க்கம் | | இராசிகள் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கிரகத்தின் பெயர் | பரல்கள் | மேஷ | இட | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
| சூரியன் | 48 | 5 | 3 | 5 | 4 | 4 | 3 | 2 | 6 | 5 | 2 | 5 | 4 |
| சந்திரன் | 49 | 5 | 3 | 3 | 4 | 5 | 4 | 2 | 6 | 3 | 6 | 4 | 4 |
| செவ்வாய் | 39 | 4 | 3 | 2 | 4 | 4 | 4 | 3 | 6 | 2 | 1 | 3 | 3 |
| புதன் | 54 | 5 | 6 | 4 | 6 | 3 | 6 | 3 | 5 | 5 | 3 | 4 | 4 |
| குரு | 56 | 6 | 4 | 3 | 6 | 3 | 3 | 7 | 3 | 5 | 6 | 5 | 5 |
| சுக்கிரன் | 52 | 3 | 6 | 5 | 6 | 4 | 6 | 2 | 2 | 4 | 5 | 5 | 4 |
| சனி | 39 | 5 | 1 | 4 | 2 | 3 | 5 | 1 | 2 | 3 | 3 | 4 | 6 |
| மொத்த பரல்கள் | 337 | 33 | 26 | 26 | 32 | 26 | 31 | 20 | 30 | 27 | 26 | 30 | 30 |

| | | | |
|---|---|---|---|
| 30 | 33 | 26 | 26 |
| 30 | சர்வாஷ்ட வர்க்கம் | | 32 |
| 26 | | | 26 |
| 27 | 30 | 20 | 31 |

மீனம் தொடங்கி கும்பம் வரையிலும் உள்ள பன்னிரு இராசிகளையும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்க, அவற்றில் அமையும் இராசிகள்.

முதல்பிரிவு மீனம், மேஷம், இடபம், மிதுனம்

இந்த இராசிகளில் உள்ள பரல்கள் 30, 33, 26, 26

இவற்றின் கூட்டுத்தொகை = 115 பரல்கள்

இரண்டாம் பிரிவு கடகம், சிம்மம், கன்னி, துலாம்

இந்த இராசிகளில் உள்ள பரல்கள் 32, 26, 31, 20

இவற்றின் கூட்டுத்தொகை = 109 பரல்கள்

மூன்றாம் பிரிவு விருட்சிகம், தனுசு, மகரம், கும்பம்

இந்த இராசிகளில் உள்ள பரல்கள் 30, 27, 26, 30

இவற்றின் கூட்டுத்தொகை = 113 பரல்கள்

## இதுவுமது

கொண்டதோர் தொகைகள் மூன்றினில் தானே
குறித்திடும் பலன்கள்யா தென்னில்
கண்டிடு மொருவர்க் குள்ளவா யுளைத்தான்
கருதிடு மூன்றுகூ றாக்கிப்
பண்டைமுன் னடுவீ றாகயே பகுத்துப்
பண்புறு விந்துக்கள் அதனால்
விண்டமத் தளமே பெரிகை துடியே
விளங்குமெக் காலமும் என்பார். (28)

(இ-ள்) சமுதாய அஷ்டவர்க்கச் சக்கரத்தில் மீனம் முதல் கும்பம் வரை உள்ள பன்னிரண்டு இராசிகளையும் மூன்று கூறுகளாக்கி, அந்த நான்கு நான்கு இராசிகளில் அஷ்டவர்க்கப் பரல்களைக் கூட்டி முதல், நடு, கடைசி என்று மூன்றாகப பகுத்துக் கொள்ள வேண்டும். அதனைக் கொண்டு மத்தளக் கண்டம், பேரிகைக் கண்டம், துடிக் கண்டம் என்ற பெயரிட்டு ஒருவருடைய ஆயுள் அவர் சிறப்பாக வாழும் காலம் முதலானவற்றைக் கூறு முடியும் என்று சோதிடத்தில் வல்லவர்கள் கூறியுள்ளார்கள்.

குறிப்பு : மீனம் முதல் மிதுனம் வரையில் முதல் கண்டம் என்றும் கடகம் முதல் துலாம் வரையில் இரண்டாவது கண்டமென்றும் விருச்சிகம் முதல் கும்பம் வரையில் மூன்றாவது கண்டமென்றும் நாரதரால் சொல்லப்பட்டன. இலக்கினம் முதல் நான்கு இராசிகளுக்கு ஒரு கண்டமாகப் பன்னிரண்டு இராசிகளை மூன்று கண்டங்களாகச் செய்து கொள்ள வேண்டிய தென்று கோபிலர் சொல்லியிருக்கிறார். மேஷம் முதலாக நான்கு இராசிகளை ஒவ்வொரு கண்டமாகப் பன்னிரண்டு இராசிகளையும் மூன்று கண்டங்களாகச் செய்து கொள்ள வேண்டுமென்று கர்க முனிவர் சொல்லியிருக்கிறார். இவ்வாறு அவரவர்கள் தத்தம் கருத்துக்களைக் கூறியுள்ளார்கள். இதில் முதல் கண்டம் பூர்வ வயதென்றும், இரண்டாவது கண்டம் மத்திய வயதென்றும் மூன்றாவது கண்டம் அந்திய வயதென்றும் அறிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அறிந்து கொண்ட பின்பு எந்தக் கண்டத்தில அதிகமான பரல்கள் இருக்கின்றனவோ அந்த வயதின் காலத்தில் சாதகனின் வாழ்க்கை மகிழ்ச்சிகர மானதாகவும் செல்வம் நிறைந்ததாகவும் விளங்கும்.

-(அஷ்டகவர்கு. ப. 58)

விளக்கம் : இந்நூலாசிரியரின் கருத்தின்படி, சமுதாய அஷ்ட வர்க்க சக்கரத்தில் மீனம் முதல் மிதுனம் வரை காணப்படுகின்ற நான்கு இராசிகளில் உள்ள பரல்களின் கூட்டுத் தொகையைக் காண வேண்டும். இது அந்தச் சாதகனின் குழந்தைப் பருவத்தைக் குறிப்பதாகும்.எடுத்துக் காட்டாகக் கூறப்

பட்டுள்ள சாதகத்தில் இந்தக் கூட்டுத்தொகை 115 ஆகும். கடகம் முதல் துலாம் வரை உள்ள நான்கு இராசிகளில் காணப்படுகின்ற பரல்களின் கூட்டுத் தொகையைக் காண வேண்டும். இது அந்தச் சாதகரின் வாலிபப் பருவத்தைக் குறிப்பதாகும். எடுத்துக் காட்டாகக் கூறப்பட்டுள்ள சாதகத்தில் இந்தக் கூட்டுத் தொகை 109 ஆகும். விருச்சிகம் முதல் கும்பம் வரை உள்ள நான்கு இராசிகளில் காணப்படுகின்ற பரல்களின் கூட்டுத் தொகையைக் காண வேண்டும். இது அந்தச் சாதகனின் முதுமைப் பருவத்தைக் குறிப்பதாகும். எடுத்துக் காட்டாகக் கூறப்பட்டுள்ள சாதகத்தில் இந்தக் கூட்டுத்தொகை 113 ஆகும்.

குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், முதுமைப்பருவம் என்று கூறப்படும் மூன்று பகுதிகளில் எந்தப் பகுதியில் அதிகமான பரல்கள் இருக்கின்றனவோ அப்பகுதியில் அமைந்த பருவ காலத்தில் சாதகனின் வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாகவும் செல்வம் நிறைந்ததாகவும் விளங்கும். அதற்கேற்ப எடுத்துக் காட்டாகக் கூறப்பட்டுள்ள சாதகத்தில் முதல் பகுதியில் 115, இரண்டாவது பகுதியில் 109, மூன்றாவது பகுதியில் 113 பரல்கள் உள்ளன. இவற்றில் அதிக ஏற்ற இறக்கம் இல்லை. இருப்பினும், முதல்பகுதியில் அதிகமான எண்ணிக்கையில் பரல்கள் உள்ளதால், அந்தக் கால கட்டத்தில், அதாவது சாதகனின் குழந்தைப் பருவம் செல்வம், இன்பம் நிறைந்ததாக மகிழ்ச்சி மிக்கதாக விளங்கும்.

## இதுவுமது

கருமத்தா னத்தில் இருந்தவித் துவக்குக்
　　கனம்பெறும் இலாபத்தின் மீறில்
தருமிக்கு இலாபம் இலாபத்துக் கேதான்
　　சாற்றிய வியமது குறைந்தால்
பெருகுநற் செல்வம் வியத்துக்கே உதயம்
　　பெருகிடில் செல்வமும் புகழும்
வருமிக்க வாக்கி உதயத்தை மீறில்
　　வல்லமை வித்தையும் உண்டே. (29)

(இ-ள்) சர்வாஷ்ட வர்க்க சக்கரத்தில் சென்ம இலக்கினத்தில் பத்தாம் இடத்தில் உள்ள பரல்களின் எண்ணிக்கையைக் காட்டிலும், இலாபஸ்தானமான பதினோராமிடத்தில் உள்ள பரல்கள் அதிகமாக இருந்தால், தொழிலில் மிகுந்த இலாபம் கிடைக்கும். பதினோராமிடத்தில் உள்ள பரல்களின் எண்ணிக்கையை விட பன்னிரண்டாமிடத்தில் உள்ள பரல்கள் குறைவாக இருந்தால், செல்வம் மேன்மேலும் பெருகும். பன்னிரண்டாமிடத்தில் உள்ள பரல்களைக் காட்டிலும் சென்ம இலக்கினத்தில் அதிக எண்ணிக்கையில் பரல்கள் இருந்தால், இந்தச் சாதகனுக்குச் செல்வமும் புகழும் பெருகும். சென்ம இலக்கினத்தில் உள்ள பரல்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் இரண்டாமிடமான வாக்கு ஸ்தானத்தில் பரல்கள் அதிகமாக இருந்தால், இந்தச் சாதகன் வித்தைகளில் வல்லவனாக விளங்குவான்.

விளக்கம் :

| | | | |
|---|---|---|---|
| | செவ் கேது | சுக் | சூரி சந் |
| | இராசிச் | | பு |
| | சக்கரம் | | |
| | சனி | குரு இராகு | ல |

| | | | |
|---|---|---|---|
| 30 | 33 | 26 | 26 |
| 30 | சர்வாஷ்ட | | 32 |
| 26 | வர்க்கம் | | 26 |
| 27 | 30 | 20 | 31 |

எடுத்துக் காட்டாகக் கூறப்பட்டுள்ள சாதகத்தில் கர்மஸ்தானமான பத்தாமிடத்தில் 26 பரல்கள் உள்ளன. இலாபஸ்தானத்தில் 32 பரல்கள் உள்ளன. எனவே, இச்சாதகனுக்குத் தொழிலில் இலாபம் கிடைக்கும். இலாபஸ்தானமான பதினோராமிடத்தில் 32 பரல்களும் விரயஸ்தானமான பன்னிரண்டாமிடத்தில் 26 பரல்களும் உள்ளன. எனவே, இச்சாதகனுக்குச் செல்வம் மேன்மேலும் பெருகும். பன்னிரண்டாமிடத்தில் 26 பரல்களும் உள்ளன. சென்ம இலக்கினத்தில் 31 பரல்கள் உள்ளன. எனவே, செல்வமும் புகழும் பெருகும். இச்சாதகனுக்குச் சென்ம இலக்கினத்தில் 31

பரல்களும் வாக்குஸ்தானமான இரண்டாமிடத்தில் 20 பரல்களும் உள்ளன. இலக்கினத்தில் உள்ள பரல்களைக் காட்டிலும் இரண்டாமிடத்தில் பரல்கள் குறைவாக இருப்பதால், இச்சாதகன் வித்தைகளைக் கற்பதில் குறைபாடு உடையவனாக இருப்பான். அல்லது மிகுந்த தடைகள் ஏற்படும்.

குறிப்பு : பத்தாமிடத்திலிருக்கும் பிந்துக்களைவிட பதினோராம் இடத்துப் பிந்துக்களதிகமும், பதினோராமிடத்து பிந்துக்களைவிட பன்னிரண்டாவது இராசியிலிருக்கும் பிந்துக்கள் குறையவும், பன்னிரண்டாவது ஸ்தானத்திலிருக்கும் பிந்துக்களைவிட இலக்கினத்திலிருக்கும் பிந்துக்கள் அதிக கணக்குடையதுமாயின் ஸுக, கீர்த்தி, திரவியங்களதிகமாக உண்டாகும்.

(அஷ்டகவர்கு, ப.57)

## சூரிய அட்டவர்க்கம்

## இதுவுமது

இரவிசுத்த பிண்டத்தை இரவிநின்ற இராசிக்
கிசையுமொன் பதாம்ராசி விந்துவினால் பெருக்கி
பரவுமிரு பத்தேழில் சித்தமிச்சம் தன்னைப்
பண்ணுமசு வினிமுதலாய் எண்ணிக்கண்ட நாளில்
விரவுமிதின் திரிகோண நாளிற்சனி வருங்கால்
மிக்கபிதுர் மரணமென்ப இதனில்பொன் வருங்கால்
திரவியமும் பிதிர்சுகமும் சவுக்கியமுண் டாகும்
தெள்ளமுதி னுடன்பிறந்த திங்கள்முக மயிலே. (30)

(இ-ள்) அமுதைப் பொழியும நிலவையொத்த முகத்தையும் மயில் போன்ற சாயலையும் உடைய பெண்ணே! சூரியனின் அஷ்ட வர்க்க சக்கரத்தில் திரிகோண சோதனையும் ஏகாதிபத்திய சோதனையும் செய்த பிறகு, சூரியனின் இராசி குணகாரத்தையும் கிரக குணகாரத்தையும் கூட்டினால் கிடைக்கும் சுத்த பிண்டத்தைச், சூரியன் நின்ற இராசிக்கு ஒன்பதாம் இராசியில் உள்ள பரல்களினால் பெருக்கி, இருபத்து ஏழால் வகுத்து, மீதியை அசுவினி முதலாய் எண்ணிக் கண்ட

நாள், அதற்கு ஐந்தாம் நாள், அல்லது ஒன்பதாம் நாளில் சனி வரும் காலத்தில், சாதகனின் தந்தைக்கு மாரகம் ஏற்படும் என்று கூறுவார்கள். இதில் குரு வரும் காலத்தில் தந்தைக்குச் செல்வமும் சுகமும் உண்டாகும்.

விளக்கம் : எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ள சாதகத்தின் சூரிய அஷ்ட வர்க்கம் தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| | செவ் கேது | சுக் | சூரி சந் |
| | இராசிச் சக்கரம் | | பு |
| | | | |
| | சனி | குரு இராகு | ல |

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 3 | 5 |
| 5 | சூரியனின் பின்னாஷ்டக வர்க்கம் 48 | | 4 |
| 2 | | | 4 |
| 5 | 6 | 2 | 3 |

சூரியனின் இராசி குணகாரம் 166

சூரியனின் கிரக குணகாரம் 126

292

சூரியனின் சுத்த பிண்டம் = 292

சூரியன் நின்ற இராசிக்கு ஒன்பதாம்

இராசியில் நின்ற பரல்கள் = 5

இரண்டையும் பெருக்க, 292 x 5

= 1460

இதனை 27 ஆல் வகுக்க = 1460 / 27

= ஈவு 54 மீதி 2

மீதி 2 வருவதால் அசுவதி, பரணி என்று வருகிறது. பரணிக்கு ஐந்தாவது நட்சத்திரம் திருவாதிரை. ஒன்பதாவது நட்சத்திரம் மகம். எனவே பரணி, திருவாதிரை, மகம் ஆகிய

மூன்று நட்சத்திரக் கால்களில் கோச்சார ரீதியாக சனி வருகின்ற காலத்தில் இச்சாதகனின் தந்தைக்கு மாரகம் ஏற்படும். இந்த நட்சத்திரக் கால்களில் குரு வருகின்ற காலத்தில் சாதகனின் தந்தைக்கு நன்மைகள் உண்டாகும்.

## இதுவுமது

இலக்கிரவி சுத்தபிண்டம் தனைக்குருதான் நின்ற
இராசிவிந்து வால்பெருக்கி இருபத்தேழ் கழிக்கத்
துலங்கிநின்ற மிச்சத்தில் வியாழன்வரும் காலம்
சூரியன்தன் சோத்தியத்தை இரவிநின்ற இராசி
தலத்திருந்த விந்துவால் பெருக்குமே வொன்பான்
தனக்கிந்து மிச்சத்தில் ஆதித்தன் வரும்நாள்
கலைக்கணுறாப் பிதுர்தனக்கே அரிட்டமெனலாகும்
அமுதகல சம்போலும் அழகியபூண் முலையே ! (31)

(இ-ள்) அமுத கலசத்தைப் போன்ற அழகிய அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்ட தனங்களைக் கொண்ட பெண்ணே ! சூரியனின் சுத்த பிண்டத்தைக் குரு நின்ற இராசியில் உள்ள பரல்களால் பெருக்கி, இருபத்து ஏழில் வகுக்கக் கிடைக்கும் மீதியை அசுவதி முதலாக எண்ணிப் பார்க்க எந்த நட்சத்திரம் வருகிறதோ அந்த நட்சத்திரங்களில் குரு வரும் காலம் தந்தைக்குக் கண்டமாகும். சூரியனுடைய சோத்தியப் பிண்டத்தையும் சூரியனின் அஷ்ட வர்க்கச் சக்கரத்தில் சூரியன் நின்ற இராசியில் உள்ள பரல்களையும் பெருக்கி வரும் தொகையை இருபத்தேழில் வகுத்து, ஈவை நீக்கி விட்டு, மீதியை அசுவனி முதலாக எண்ணிப் பார்க்க எந்த நட்சத்திரம் வருகிறதோ அந்த நட்சத்திரக் கால்களில் சூரியன் வரும் நாளில், சாதகனின் தந்தைக்குக் கண்டம் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் ஏற்படும்.

எடுத்துக்காட்டு

| | | | |
|---|---|---|---|
| | செவ் கேது | சுக் | சூரி சந் |
| | இராசிச் சக்கரம் | | பு |
| | | | |
| | சனி | குரு இராகு | ல |

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 3 | 5 |
| 5 | சூரியனின் பின்னாஷ்டக வர்க்கம் 48 | | 4 |
| 2 | | | 4 |
| 5 | 6 | 2 | 3 |

சூரியனின் இராசி குணகாரம் 166

சூரியனின் கிரக குணகாரம் 126

292

சூரியனின் சுத்த பிண்டம் 292

குரு நின்ற இராசியில் உள்ள பரல்கள் 2

இரண்டையும் பெருக்க, 292 x 2

584

இதை 27 ஆல் வகுக்க $\frac{584}{27}$

= ஈவு 21 மீதி 17

மீதி 17 வருவதால், அசுவதி முதலாக எண்ணி வரும் பொழுது 17 ஆவது நட்சத்திரம் கேட்டை. இந்த கேட்டை நட்சத்திரக் கால்களில் குரு, கோசார ரீதியாகச் சஞ்சாரம் செய்யும் காலத்தில் தந்தைக்குக் கண்டம் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.

சூரியனின் சுத்த பிண்டம் = 292

சூரியன் நின்ற இராசியில் இருந்த பரல்கள் = 5

இரண்டையும் பெருக்க = 292 x 5

= 1460

இதனை 27 ஆல் வகுக்க = $\frac{1460}{27}$

= ஈவு 54, மீதி 2

மீதி 2 வந்துள்ளது. அசுவதி முதலாக எண்ணும் பொழுது இரண்டாவது நட்சத்திரமாகப் பரணி வருகிறது. எனவே, பரணியின் நட்சத்திரக் கால்களில் சூரியன் வரும்பொழுது, சாதகனின் தந்தைக்குக் கண்டங்கள் தோன்றும்.

## இதுவுமது

கதிரவன் சுத்த பிண்டத்தை வைத்துக்
கலைமதி இருந்தஇரா சியிலே
எதிருற இருந்த விந்துவால் பெருக்க
இருபத்தேழ் கழித்தமிச் சத்தில்
விதிர்கலை மதியம் வந்திடும் காலம்
விளம்பிய தந்தைக்கே மரணம்
முதிர்கன்னி மானே! பொற்கருந் தேனே
முழங்கிய கயற்கண்முன் னரசே (32)

(இ-ள்) முதிர்ந்த கன்னி மானைப் போன்ற சாயலையும் பொலிவுடைய கரிய தேன் போன்ற மொழியினையும், கயல் மீனைப் போன்ற கண்களையும் கொண்டு, பெண்களில் தலை சிறந்தவளாக விளங்குபவளே! சூரியனுடைய சுத்த பிண்டத்தால், சூரிய அஷ்ட வர்க்கத்தில் சந்திரன் இருந்த இராசியில் உள்ள பரல்களைப் பெருக்கி வரும் தொகையை இருபத்து ஏழால் வகுக்க வேண்டும். ஈவை நீக்கிவிட்டு, மீதியை அசுவனி முதலாக எண்ணிப்பார்க்க எந்த நட்சத்திரம் வருகிறதோ, அந்த நட்சத்திரக்கால்களில் சந்திரன் கோசார ரீதியாக வரும் காலத்தில் தந்தைக்கு மரணம் நிகழலாம்.

விளக்கம் :

சூரியனின் சுத்த பிண்டம் = 292

சந்திரன் நின்ற இராசியில் உள்ள பரல்கள் = 5

இரண்டையும் பெருக்க, 292 x 5

= 1460

இதனை 27 ஆல் வகுக்க = $\frac{1460}{27}$

= ஈவு 54, மீதி 2

மீதி 2 என்று வந்துள்ளது. அசுவினி முதலாக எண்ணை இரண்டாவதாக பரணி நட்சத்திரம் வருகிறது. எனவே பரணி நட்சத்திரக்காலில் சந்திரன் கோசார ரீதியாக வரும் காலத்தில், இச்சாதகனின் தந்தைக்கு மரணம் நேரிடலாம்.

## இதுவுமது

சூரியனஷ் டகவர்க்க நாற்பத்தெட் டுவிந்தும்
சோதியா முன்னமே சூரியன்தான் நின்ற
சீரியதா கியராசிக் கொன்பதாம் இராசிச்
சிறந்தவிந்து வால்பெருக்கி இருபத்தேழ்க் கழித்தே
மூரியாய் நின்றமிச்சம் தன்னையசு வினிமே
முதலாக வேளெண்ணிக் கண்டநாள் தனிலே
காரிவரும் காலத்தில் பிதுர்மரணம் என்பர்
கருதுமிதன் திரிகோணம் தனிலுமெனக் காண்பார்(33)

(இ-ள்) சூரியனுடைய பின்னாஷ்டக வர்க்கத்தில் திரிகோண சோதனையும் ஏகாதிபத்திய சோதனையும் செய்வதற்கு முன்னால், சூரியன் நின்ற இராசிக்கு ஒன்பதாம் இராசியில் உள்ள பரல்கள் சூரியனுடைய அஷ்ட வர்க்கப் பரல்கள் ஆகிய இரண்டையும் பெருக்கி, இருபத்தேழில் வகுத்து, ஈவு போக, நின்ற மீதியை அசுவினி முதலாக எண்ணத் தொடங்க வேண்டும். அப்பொழுது எந்த நட்சத்திரம் வருகிறதோ, அந்த நட்சத்திரக் கால்களில் சனிவரும் காலத்தில் தந்தைக்கு மரணம் என்று கூறுவார்கள். இதைப்போலவே, இந்த நட்சத்திரத்திற்கு ஐந்து, ஒன்பதாம் நட்சத்திரக் கால்களில் சனி வரும் காலத்தும் தந்தைக்கு மரணம் நிகழும் என்று கூறுவார்கள்.

விளக்கம் :

எடுத்துக்காட்டு

| | | | |
|---|---|---|---|
| | செவ் கேது | சுக் | சூரி சந் |
| | இராசிச் சக்கரம் | | பு |
| | | | |
| | சனி | குரு இராகு | ல |

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 3 | 5 |
| 5 | சூரியனின் பின்னாஷ்டக வர்க்கம் 48 | | 4 |
| 2 | | | 4 |
| 5 | 6 | 2 | 3 |

சூரியனுடைய பின்னாஷ்டக வர்க்கம் = 48

திரிகோண சோதனையும் ஏகாதிபத்திய சோதனையும்

செய்வதற்கு முன்னால் சூரியன் நின்ற இராசியின்

ஒன்பதாம் இராசியின் பரல்கள் = 5

இரண்டையும் பெருக்க = 48 X 5

இதனை 27 ஆல் வகுக்க = ஈவு 8, மீதி 24

மீதி 24 வந்துள்ளது. அசுவனி முதலாக 24 ஆவது நட்சத்திரத்தை எண்ண, சதயம். இதற்கு ஐந்தாவது நட்சத்திரம் அசுவனி, சதயத்திற்கு ஒன்பதாவது நட்சத்திரம் மிருகசிரிடம். எனவே, சதயம், அசுவனி, மிருகசிரீடம் இவற்றின் நட்சத்திரக் கால்களில் சனிவரும் காலங்களில், இச்சாதகனின் தந்தைக்கு மரணம் நிகழும் என்று கூறுவார்கள்.

## இதுவுமது

சந்திரனட் டகவர்க்க சுத்தபிண்டம் தன்னைச்
சந்திரனின் நிடும்இராசிக் கேநாலாம் இராசி
வந்தவிந்து வுடன்பெருக்கி யோரிருபத் தேழில்
வகையுடனே கழித்துமிச்சம் இத்தனையென் றறிந்தே
வந்தஅசு வினிமுதல்என் ணிக்கண்ட நாளில்
அதிசனியன் வருங்காலம் மாதுர்கண்ட மென்பார்
கொத்துலவும் குருவருங்கால் மாதுர்சவுக் கியமாம்
குலவுதரு மிவைபார்த்து நாளுமொக்கக் கூறே. (34)

(இ-ள்) சந்திர பின்னாஷ்டக வர்க்கத்தின் சுத்த பிண்டத்தை, சந்திரன் இருக்கும் இராசிக்கு நான்காம் இடத்தில் உள்ள இராசியின் பரல்களால் பெருக்கி, அதனை இருபத்து ஏழால் வகுத்து, மீதி என்ன என்பதனை அறிந்து, அசுபதி முதலாக எண்ணிக் கண்ட நட்சத்திரம் எதுவோ அந்த நட்சத்திரக் காலில், சனி கோசார ரீதியாக வரும் காலத்தில் தாய்க்குக் கண்டம் நேரிடும். அதைப் போல அந்த நட்சத்திரக் கால்களில் கோசார ரீதியாகக் குரு வருங்காலத்தில் தாயாருக்குச் செல்வம் பெருகும்.

இன்பமும் மகிழ்ச்சியும் உண்டாகும். எனவே தாயாருக்குப் பலன் கூறும்பொழுது, கோசார ரீதியாகக் குறிப்பிட்ட நட்சத்திரக் கால்களில் கிரகங்கள் வரும் நாளைப் பார்த்துப் பலன் கூற வேண்டும்.

விளக்கம் :

எடுத்துக்காட்டு

| | | | |
|---|---|---|---|
| | செவ் கேது | சுக் | சூரி சந் |
| | இராசிச் சக்கரம் | | பு |
| | | | |
| | சனி | குரு இராகு | ல |

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 3 | 5 |
| 4 | சூரியனின் பின்னாஷ்டக வர்க்கம் | | 4 |
| 6 | | | 5 |
| 3 | 6 | 2 | 4 |

சந்திரனின் சுத்த பிண்டம் = 389

சந்திரன் இருக்கும் இராசிக்கு நான்காம்
இடத்தில் உள்ள பரல்கள் = 4

இரண்டையும் பெருக்க = 1556

இதனை இருபத்து ஏழால் வகுக்க = $\frac{1556}{27}$

= ஈவு 57, மீதி 17

மீதியாக 17 வந்துள்ளது. அசுவனி முதலாக எண்ணி வரும்பொழுது, பதினேழாவது நட்சத்திரமாக வருவது அனுஷம். எனவே, அனுஷ நட்சத்திரக்காலில், சனி கோசார ரீதியாக வருங்காலத்தில் தாய்க்குக் கண்டம் நேரிடும். அதைப் போல அனுஷ நட்சத்திரக்காலில் குரு கோசார ரீதியாக வருங்காலத்தில் தாயாருக்குச் செல்வம் பெருகும். இன்பமும் மகிழ்ச்சியும் உண்டாகும். அதைப் போலவே கோசார ரீதியாகப் பிற கிரகங்கள் அனுஷ நட்சத்திரக் கால்களில் வரும்பொழுது கிரகத்தின் தன்மைக் கேற்ப பலன்கள் உண்டாகும்.

நிலவினுட சுத்தபிண்டத் தைவியா முந்தான்
நின்றஇரா சியிலுள்ள விந்துவினால் பெருக்கி
மலியுமிரு பத்தேழில் களைந்துநின்ற சேடம்
வருநாளில் மந்திரிதான் வந்துநிற்கும் காலம்
குலவியமா துருகண்டம் சனியுடனே குருவும்
துடியென்றாய் அந்நாளில் குறுக்குமந்த நாளில்
நலமிகுமா துருமரணம் திரிகோணம் தனிலும்
நண்ணிடினும் இப்பலனே நடக்குமெனச் சொல்லே.

(35)

(இ-ள்) சந்திரனுடைய சுத்த பிண்டத்தைச் சந்திரனுடைய அஷ்ட வர்க்கத்தில் குரு நின்ற இராசியில் இருந்த பரல்களோடு பெருக்கி, இருபத்து ஏழால் வகுக்க வேண்டும். ஈவை நீக்கி, மீதியை அறிந்து அசுவனி நட்சத்திரம் முதலாக எண்ணிக் காண வேண்டும். எந்த நட்சத்திரம் வருகின்றதோ அந்த நட்சத்திரத்தில் கோசார ரீதியாகக் குரு வரும் நாளில், தாயாருக்குக் கண்டம் என்று கூறுவர். அந்த நாளில், அல்லது அந்த நட்சத்திரத்திற்கு ஐந்து, ஒன்பதாம் நட்சத்திரக் கால்களில் கோசார ரீதியாக சனியும் குருவும் சேர்ந்து வரும் காலத்தில் தாயாருக்குக் கண்டம் வரும்.

விளக்கம் :

எடுத்துக்காட்டு

| | | | |
|---|---|---|---|
| | செவ் கேது | சுக் | சந் சூ |
| | இராசிச் சக்கரம் | | பு |
| | | | |
| | சனி | குரு இராகு | ல |

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 3 | 3 |
| 4 | சந்திரனின் பின்னாஷ்டக வர்க்கம் | | 4 |
| 6 | | | 5 |
| 3 | 6 | 2 | 4 |

சந்திரனின் சுத்த பிண்டம் = 389

குரு இருக்கும் இராசியில் உள்ள பரல்கள் = 2

இரண்டையும் பெருக்க, = 778

இதனை இருபத்து ஏழால் வகுக்க = $\frac{778}{27}$

= ஈவு 28, மீதி 22

மீதியாக 22 வந்துள்ளது. அசுவனி முதலாக எண்ணி வரும்பொழுது இருபத்து இரண்டாவது நட்சத்திரமாக வருவது திருவோணம். எனவே திருவோண நட்சத்திரக்காலில் குரு கோசார ரீதியாக வரும் காலத்தில் தாயாருக்குக் கண்டம் நேரிடும். திருவோண நட்சத்திரக் கால்களில் அல்லது இந்த நட்சத்திரத்திற்கு ஐந்தாவது நட்சத்திரமான உத்திரட்டாதி, ஒன்பதாவது நட்சத்திரமான கிருத்திகை ஆகிய நட்சத்திரங்களின் கால்களில் சனியுடன் குரு கோசார ரீதியாக வரும் காலங்களில் தாயாருக்குக் கண்டம் நேரிடும்.

ஒளிருமதி அட்டவர்க் கஞ்சோதி யாமுன்
உள்ளவிந் தாகியநாற்பத் தொன்பதையும் வைத்தே
வளருமதி சுத்தபிண்ட மாமதனால் மாறி
வருந்தொகையோர் மூவொன்பா விற்களைந்த மிச்சம்
தளவறிந்த அச்சுவினி முதலாக எண்ணித்
தன்தொகையில் வருநாளில் சனியன்வருங் காலம்
தளர்வில்லா மாதுர்திரி யாணமெனச் சொல்வார்
சாற்றுமிதன் திரிகோணம் தனையுமொக்கச் சாற்றே.
(36)

(இ-ள்) திரிகோண சோதனையும் ஏகாதிபத்திய சோதனையும் செய்வதற்கு முன்பு, சந்திரனின் அட்டவர்க்கப் பரல்களான நாற்பத்து ஒன்பதையும் சந்திரனின் சுத்த பிண்டத்தால் பெருக்க வேண்டும். அதனைப் பின்பு இருபத்து ஏழால் வகுக்க வேண்டும். ஈவை நீக்கி மீதியை அறிந்து அசுவனி நட்சத்திரம் முதலாக எண்ணிக் காண வேண்டும். அவ்வாறு வரும் நட்சத்திரம், அதற்கு ஐந்தாவது மற்றும் ஒன்பதாவது நட்சத்திரக் கால்களில் கோசார ரீதியாகச் சனி வரும் காலத்தில் தாயாருக்கு மரணம் ஏற்படும் என்று கூறுவாயாக.

விளக்கம் :

எடுத்துக்காட்டு சாதகத்தின் படி,

| | |
|---|---|
| சந்திரனின் சுத்த பிண்டம் | = 389 |
| சந்திரனின் அட்டவர்க்கப் பரல்கள் | = 49 |
| இரண்டையும் பெருக்க, | = 19061 |

இதனை இருபத்து ஏழால் வகுக்க, = ஈவு 705, மீதி 26

மீதியாக 26 வந்துள்ளது. அசுவனி முதலாக எண்ணி வரும்பொழுது, இருபத்து ஆறாவது நட்சத்திரமாக வருவது உத்திரட்டாதி. அதற்கு ஐந்தாவது நட்சத்திரமாக வருவது கிருத்திகை, உத்திரட்டாதிக்கு ஒன்பதாவது நட்சத்திரமாக வருவது புனர்பூசம் ஆகிய நட்சத்திரக் கால்களில் சனி கோசார ரீதியாக வரும்பொழுது, சாதகனின் தாயாருக்கு மரணம் ஏற்படும்.

## செவ்வாயின் அஷ்ட வர்க்கம்

வக்கிரனட் டகவர்க்கம் சுத்தபிண்டம் தன்னை
மன்னுசெவ்வாய் நின்றதோர் இராசிக்கு மூன்றில்
தக்கவிந்து வால்பெருக்கி மூவொன்பான் தனக்கே
தானீந்து நின்றமிச்சம் தலைப்பரிநாள் முதலாய்
மிக்கவெண்ணிக் கண்டநாள் சனியன்வரும் காலம்
விளங்குசகோ தரர்களுக்கு மேபரிட்டம் உண்டாம்
முக்கியமாய் அந்நாளில் வியாழமே வந்தால்
மூன்றுனைவர்க் கனுகூலம் பின்துணைவர் உண்டாம்

37

(இ-ள்) செவ்வாயின் அஷ்ட வர்க்க சுத்தபிண்டத்தைச், செவ்வாய் நின்ற இராசிக்கு மூன்றாம் இராசியில் நிற்கும் பரல்களால் பெருக்க வேண்டும். அதனை இருபத்து ஏழால் வகுத்து, ஈவை நீக்கி, மீதியை அறிந்து அசுவனி நட்சத்திரம் முதல் எண்ணிக் காண வேண்டும். அந்த நட்சத்திரக் கால்களில் சனி கோசார ரீதியாக வரும் காலத்தில் சகோதரர்களுக்குக் கண்டம் நேரிடும். அந்த நட்சத்திரக் கால்களில் குரு கோசார ரீதியாக வரும் காலத்தில் மூத்த சகோதரர்களுக்கு நன்மை உண்டாகும். இளைய சகோதரர்கள் பிறப்பார்கள்.

விளக்கம் :

எடுத்துக்காட்டு

| | | | |
|---|---|---|---|
| | செவ் கேது | சுக் | சூரி சந் |
| | இராசிச் சக்கரம் | | புதன் |
| | | | |
| | சனி | இராகு குரு | ல |

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | 3 | 2 |
| 3 | செவ்வாயின் பின்னாஷ்டக வர்க்கம் | | 4 |
| 1 | | | 4 |
| 2 | 6 | 3 | 4 |

செவ்வாயின் இராசி குணகாரம் 168

செவ்வாயின் கிரக குணகாரம் 93

செவ்வாயின் சுத்த பிண்டம் 261

செவ்வாயின் நிற்கும் இராசிக்கு மூன்றாம்

இராசியில் உள்ள பரல்கள் = 2

செவ்வாயின் சுத்த பிண்டத்தை

இந்த இரண்டால் பெருக்க 261 x 2

= 522

இதனை 27 ஆல் வகுக்க = 522 / 27

= ஈவு 19 மீதி 9

மீதி 9 வந்துள்ளது. அசுவனி நட்சத்திரம் முதலாக எண்ணி வரும்பொழுது, ஒன்பதாவது நட்சத்திரமாக வருவது ஆயிலியம். அந்த ஆயிலிய நட்சத்திரக் கால்களில் கோசார ரீதியாகச் சனி வரும் காலத்தில் சாதகரின் சகோதரர்களுக்கு கண்டம் நேரிடும். அந்த நட்சத்திரக் கால்களில் குரு கோசார ரீதியாக வரும் காலத்தில் மூத்த சகோதரர்களுக்கு நன்மைகள் உண்டாகும். இளைய சகோதரர்கள் தோன்றுவார்கள்.

## இதுவுமது

இனியசெவ்வாய் நின்றதோர் ராசிக்கு மூன்றாம்

இடத்திலே சுபக்கிரக விந்துகளைத் தனையாம்

மணமுவந்தத் தனைபேர்ச கோதரமுன் டென்பர்
மறுத்துநின்ற பாவியர்கள் வித்துவையும் தெரிந்தே
மூனிவிலுச்ச நட்டாட்சி வரில்பாவர் பலமே
உற்றிடினும் கனிட்டருண்டாம் உயிர்க்குமூன்றாம் இடமும்
கனிவில்சேய் இருந்திடமும் சேய்க்குமூன்றாம் இடமும்
கண்டவற்றின் வகையறிந்து பலமறிந்து கருதே. (38)

(இ-ள்) செவ்வாய் நின்ற இராசிக்கு மூன்றாம் இராசியில் உள்ள சுபக்கோள்களின் பரல்களையோ அத்தனை சகோதரர்கள் சாதகனுக்கு இருப்பார்கள் என்று கூறுவார்கள். அந்த மூன்றாம் இராசியில் நின்ற பாவர்களின் பரல்களையும், உச்சம், நட்பு, ஆட்சி முதலானவைகளில் பாவர்கள் பலம்பெற்று விளங்கினால், இளைய சகோதரர்கள் இருப்பார்கள். இலக்கினத்திற்கு மூன்றாமிடம், செவ்வாய் இருக்கும் இடம், செவ்வாய் நிற்கும் இடத்திற்கு மூன்றாமிடம் ஆகியவற்றின் பலத்தைக்கொண்டு, இளைய சகோதர்களைப் பற்றி கூறவேண்டும்.

குறிப்பு : இந்தப் பாடலில் கூறப்பட்டுள்ள செய்திக்கு மாறுபட்ட கருத்து வீமேசுர உள்ள மூடையான் நூலில் காணப்படுகிறது. செவ்வாய் அஷ்டவர்க்கங்களில் செவ்வாய் நின்ற இராசிக்கு மூன்றாம் இராசியிலும் இரண்டாம் இராசியிலும் இருந்த பரல்கள் எத்தனையோ அத்தனையும் சகோதரர்களாவர். செவ்வாய் நின்ற இராசிக்கு பதினொன்று, பன்னிரண்டாம் இடங்களில் சுபக்கிரகங்களிருந்தால், அந்த இராசிகளிலிருந்த பரல்கள் அத்தனையும் இவனுக்கு முன்பிறந்த சகோதர மென்று அறிய வேண்டும். செவ்வாய் எந்த அங்கிசத்தில் உள்ளதோ அந்த இராசியிலிருந்த பரல்கள் சகோதரர்கள் என்பதை அறிய வேண்டும். மேஷம் முதலாக மீனம் வரை உள்ள பன்னிரு இராசிகளை மூன்று மூன்றாகப் பிரித்து, அதில் அதிகமான பரல்கள் உள்ள திசையில் பூமி இலாபம், வஸ்திர லாபம், சகல பொருள்களும் சேரும் என்பதை.

பந்து செவ்வாய்க்கு மூன்றிலும் வாண்டிலிம்
பரந்தவிந்து சகோதர மத்தனை

உற்ற பன்னொன் றீராரினும் நல்லகோள்
ஓங்குவிந்தச் சகோதர முற்றபேர்
நற்று செவ்வா யிருந்தத் வாங்கிச
ராசிவிந்துச் சகோதர ரத்தனை
பெற்ற மேடாதி மூன்றுமுன் னோரையில்
பெருக்கவந்த நிசைநலம் பித்தரே !

-(விமேஸ்வர உள்ளமுடையான், அஷ்டகவர்க்கப் படலம்: பா 27)

என்று கூறப்பட்டுள்ளது. இங்கு மாறுபட்ட கருத்து சொல்லப்பட்டிருப்பது சிந்தனைக்குரியது.

சொல்லிய செவ்வாய் பலம்குறைந் திருக்கில்
துணைவரற் பாயுவாம் என்பர்
புல்லிய மூன்றாம் இடத்தில்சேய் இருக்கில்
பொற்புடன் பின்னுண்டாம் துணைவர்
அல்லலுற் றிருப்பார் சனியுடன் கூட
அல்லது பார்க்கினும் தானே
மல்லுயர் தத்துப் புத்திர னாவன்
மற்றோர்தாய் பிள்ளையே துணையாம் (39)

(இ-ள்) செவ்வாய் பலம்குறைந்து இருந்தால் உடன்பிறந்த சகோதரர்களுக்கு அற்பாயுள் என்று கூறுவார்கள். சென்ம இலக்கனத்திற்கு மூன்றாம் இடத்தில் செவ்வாய் இருந்தால், அந்தச் சாதகருக்குப் பின்னால் பிறக்கும் இளைய சகோதரர்கள் துன்பமுற்று வாழ்வார்கள். செவ்வாய், சனியுடன் கூடி இருந்தாலும், சனியால் பார்க்கப் பட்டாலும், இச்சாதகன் தத்துபுத்திரனாக இருப்பான் மற்றோர் தாயின் பிள்ளைகளே உடன்பிறந்த சகோதரர்களாக விளங்குவர்.

## இதுவுமது

துய்யசெவ்வாய் தன்னுடைய அட்டகவர்க் கத்தைச்
சோதித்தப் பிறகுசெவ்வாய் நின்றஇரா சிக்கே
செய்யவிந் துடன்சென்ம இலக்கனம்திரி கோணம்
செறிந்தவிந்தை யும்கூட்டிக் கண்டதொகை தன்னை

வையமிலாக் கனிட்டர்சங் கைச்சொல்வர் சேயுரைத்த
வரியநா ளாம்இராசித் திரிகோண வித்தை
பையவே தொகைகண்டு கிராமாதி பத்யம்
பண்பான பூலாபம் படைப்பதுவும் சொல்லே (40)

(இ-ள்) செவ்வாயின் பின்னாஷ்டக வர்ககத்தில் திரிகோண சோதனையும் ஏகாதிபத்திய சோதனையும் செய்துபிறகு, செவ்வாயின் அட்டக வர்க்கத்தில் செவ்வாய் நின்ற இராசியின் பரல்கள், சென்ம இலக்கினத்தில் நின்ற பரல்கள், ஐந்தாம் இராசி, ஒன்பதாம் இராசி இவற்றில் நின்ற பரல்கள் அனைத்தையும் கூட்டி உடன்பிறந்த இளைய சகோதரர்களைப் பற்றிக் கூறுவார்கள். செவ்வாய் நிற்கும் இராசி, அதற்கு நான்காம் இராசி, ஐந்தாம் இராசி, ஒன்பதாம் இராசி இவற்றில் உள்ள பரல்களைக் கொண்டு கிராமத்திற்கு அதிபதியாக இருப்பது, பூமி இலாபம் பெறுவது போன்றவற்றைக் கூறுவார்கள்.

## புதன் அஷ்ட வர்க்கம்

புதனட்ட கவர்க்கம் இட்டவுடன் அதற்குப்
பொருந்திரண்டாம் இடத்திருந்த விந்துதொகை அறிந்தே
அதனையன்னா ருடையவிந்தென் றறிந்துபலன் சொல்க
அவ்விடஞ்சூ னியமாகில் அந்தகனே யாவன்
சதிரிலஃ தொன்றிரண்டு மூன்றுவிந்தே இருக்கில்
தவறிலா லட்சணவாக் காகவே இருப்பன்
முதிர்நாலு விந்திருக்கில் ஒருவர்சொன்ன வார்த்தை
முடிவிலே தான்சொன்ன தாகவே இருப்பன் (41)

(இ-ள்) புதனுடைய அஷ்ட வர்க்க சக்கரத்தில் புதனுக்கு இரண்டாம் வீட்டில் உள்ள பரல்களின் எண்ணிக்கையை அறிந்து, அந்தப் பரல்கள் எந்தக் கிரகங்களால் கொடுக்கப்பட்ட பரல்கள் என்பதையும் அறிந்து பலன் சொல்ல வேண்டும். புதனுக்கு இரண்டாமிடத்தில் பரல்கள் இல்லாவிட்டால், அச்சாதகன் குருடனாக விளங்குவான். அந்த இராசியில் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று பரல்கள் இருந்தால்,

திருத்தமாகப் பேசக் கூடியவனாக இருப்பான். புதன் இருக்கும் இராசிக்கு இரண்டாமிடத்தில் நான்கு பரல்கள் இருக்குமானால், அவன் பேச்சை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள்.

மாலுக்கு ரண்டிடத்தே ஐந்துவிந் திருக்கின்
மன்னியசத் தியவாக்கு மகிழும்வித்தை பேச்சு
மேலுமோ ராறுவிந்துக் கலையறிந்து சொல்வன்
ஏழுவிந்து தானிருக்கில் சிலாக்கியவா னாவன்
கோலுமெட்டு விந்திருக்கில் பூரணவா சகத்தின்
கூறுமெப் படிக்கொத்த வேந்தரையும் வாக்கால்
சாலவே வசப்படுத்தி எதிர்வார்த்தை சொல்வாச்
சமர்த்தனெனக் கொண்டாடச் சத்தியுள னாமே (42)

(இ-ள்) புதனுடைய அட்டகவர்க்கத்தில் புதன் இருந்த இராசிக்கு இரண்டாமிடத்தில் ஐந்துபரல்கள் இருந்தால் சத்திய வாக்கு உரைப்பவனாவான். மேலும், அனைவரும் விரும்பும் வண்ணம் பேசும் பேச்சு வல்லமை உடையவனாக விளங்குவான்; புதன் இருந்த இராசிக்கு இரண்டாமிடத்தில் ஆறுபரல்கள் இருப்பின், கற்றோர் சபையில் பேசக்கூடிய திறமை உடையவனாவான்; ஏழு பரல்கள் இருந்தால் சிறந்த பேச்சுத் திறமையுள்ளவனாக விளங்குவான்; புதன் இருந்த இராசிக்கு இரண்டாமிடத்தில் எட்டுப் பரல்கள் இருந்தால், எப்படிப்பட்ட அரசராக இருப்பினும் வாக்கினால் அவர்களைத் தன்வசப்படுத்தி, எதிர்வார்த்தைக் கூறாமல் செய்யக்கூடிய திறமை பொருந்தியவனாக விளங்குவான்.

## இதுவுமது

என்றுமால் வர்க்கிரண்டி னில்சனிசேய் இரவி
இவர்களுட னேவிந்து விழுந்திருக்கத் தானே
வென்றியுடன் உபசாரம் பேசவனுட் புகுந்து
விசாரிக்கில் தரித்திரந்தான் மிக்குளனாய் இருப்பன்
துண்டசேய் விந்துற்றால் கலகமே செய்வன்
சூரியன்விந் தாகிலுயர் ஞானம்தான் சொல்வன்

குண்டுசனி விந்துக்குப் பொய்துட்ட வார்த்தை
கொடும்வஞ்சகம் கூறுசுப விந்துக்கிங் கிதனே. (43)

புதனுடைய அஷ்ட வர்க்கத்தில் புதன் இருந்த இராசிக்கு இரண்டாமிடத்தில் சனி, செவ்வாய், சூரியன் இவர்களுடைய பரல்கள் காணப்படின், தன்னைச் செல்வனாகக் காட்டிக் கொள்பவனாக இருப்பினும், வறுமை உடையவனாக இருப்பான். செவ்வாயால் தரப்பட்ட பரல் இருக்குமாயின், கலகம் செய்பவனாவான்; சூரியனால் தரப்பட்ட பரல் இருக்குமாயின், ஞானம் பேசக் கூடியவன்; சனியால் தரப்பட்ட பரல் இருக்குமாயின், பொய், தீய வார்த்தை, வஞ்சகம் இவற்றைப் பேசக் கூடியவனாக விளங்குவான்; சுபக்கோள்களால் தரப்பட்ட பரல்கள் இருக்குமாயின், இனிமையான வார்த்தைகளை உடையவனாக விளங்குவான்.

இலகுபுதன் பெலத்திருக்கில் சவுந்தரிய வசனன்
எடுத்துரைப்பன் பெலன்தாழில் புலையான வார்த்தை
நிலவரமி லாவார்த்தை யாடுவன்சா துரியன்
நிசமாக வேசொல்வன் பாவிகள்வித் துவுக்குச்
சொல்லரிய துர்வாக்குச் சொல்வனிரண் டுடைய
துரிதமாம் திக்கோளைச் சிரராகு குளிகன்
உலவியதோர் நோக்குமுறின் வேண்டாமை போல
உரைப்பன்வெகு புலைகனவோ டீவார்த்தை உரைப்பன்.
44

(இ-ள்) ஒரு சாதகத்தில், புதன் பலவானாக இருந்தால், இனிய சொற்களைப் பேசக் கூடியவனாக இருப்பான். புதன் வலிமைகுன்றி இருப்பின், தாழ்வான வார்த்தைகளையும் கொடுமையான வார்த்தைகளையும் பேசக்கூடியவனாக இருப்பான். புதன் அஷ்ட வர்க்கத்தின் இரண்டாமிடத்தில் தீயக்கோள்களால் தரப்பட்ட பரல்கள் இருந்தால், அச்சாதகன் தீய வாக்கினை உடையவன். இரண்டாம் இடத்தில் உள்ள தீயக்கோளை, இராகு, குளிகன் முதலான தீயக் கோள்கள் பார்வையிட்டால், வீணானவற்றைப் பேசுவான். கீழ்மையுடன் தீயவார்த்தைகளைப் பேசுவான்.

புந்தியின்அட் டகவர்க்கச் சோத்தியவின் டத்தைப்
புகழாக வேயிரண்டா மிடத்துவிந்தி னாலே
அந்தமுட னேபெருக்கிக் கண்டதொகை தன்னை
அரியதொரு பன்னிரண்டில் களைந்தசே டத்தைத்
தந்திரமாய் மேடமுதல் எண்ணிக்கண்ட இராசித்
தனக்கதிபன் திசைபுத்தி தனில்வித்தை விளங்கும்
வந்திரண்டு ஆனிடமா னாலும்சே டத்தை
வருமீரா றில்கழித்துப் பலன்முன்போல் உரையே. 45

(இ-ள்) புதனுடைய அட்ட வர்க்கச் சுத்த பிண்டத்தை, புதனுக்கு இரண்டாமிடத்தில் இருக்கும் பரல்களால் பெருக்க வேண்டும். கண்டதொகையைப் பன்னிரண்டால் வகுத்துக் கொள்ள வேண்டும். ஈவை நீக்கிவிட்டு, மீதியை மேஷ இராசி முதல் எண்ணிக் கண்ட இராசியாதிபனின் திசை, புத்தி முதலானவை வரும் காலங்களில் வித்தை, தொழில் முதலானவற்றில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். புதனுடைய அட்டவர்க்கத்தில் புதனுக்கு இரண்டாமிடத்தில் பரல்கள் இல்லையென்றாலும், புதனின் அஷ்டகவர்க்கச் சுத்த பிண்டத்தைப் பன்னிரண்டால் வகுத்துப், பலனைக் கூற வேண்டும்.

விளக்கம் :
எடுத்துக்காட்டு

| | | | |
|---|---|---|---|
| | செவ் கேது | சுக் | சூரி சந் |
| | இராசிச் சக்கரம் | | புதன் |
| | | | |
| | சனி | இராகு குரு | ல |

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 6 | 4 |
| 4 | புதனின் பின்னாஷ்டக வர்க்கம் | | 6 |
| 3 | | | 3 |
| 5 | 5 | 3 | 6 |

புதன் அஷ்டக வர்க்கத்தின் இராசிகுணகாரம் = 237
புதன் அஷ்டக வர்க்கத்தின் கிரக குணகாரம் = 145
புதன் அஷ்டக வர்க்கத்தின் சுத்த பிண்டம் 382
புதனுக்கு இரண்டாமிடத்தில் இருக்கும் பரல்கள் = 3

இரண்டையும் பெருக்க 382 x 3

= 1146

இதனைப் பன்னிரண்டால் வகுக்க $= \frac{1146}{12}$

= இவு 95, மீதி 6

மீதி 6 வந்துள்ளது. மேஷ இராசி முதல் எண்ணி வரும்பொழுது கன்னி இராசி வருகின்றது. கன்னி இராசியின் அதிபதி புதன். எனவே, இச்சாதகனுக்கு புதன் திசை, புதன் புத்தி முதலானவை வரும் காலங்களில் வித்தை, தொழில் முதலானவற்றில் நல்ல முன்னேற்றம் உண்டாகும்.

பண்டிதனட் டகவர்க்க சோத்தியபிண் டத்தைப்
பாருமிரண் டாமிடத்து விந்துவினால் பெருக்கி
கண்டுநா லாமிடத்தில் இருந்தவிந்தில் களைந்தே
கண்டத்தை அட்டமத்து விந்துவினால் தாக்கி
சொன்டிருபத் தேழுதனில் களைந்தசே டத்தை
கூறும்அசு வினிமுதலா எண்ணிமிக அறிந்தே
அண்மயதோ ரந்தநா ளில்சனியன் தானே
அடைந்துநின்ற நாள்முதல்மும் சொன்னநாள் வரையே.

46

(இ-ள்) புதனுடைய அட்டகவர்க்கத்தில் புதனுக்கு இரண்டாம் இடத்தில் உள்ள பரல்களைப் புதனுடைய சோத்திய பிண்டத்தால் பெருக்கி, புதனுக்கு நான்காம் இடத்தில் உள்ள பரல்களை அவ்வெண்ணில் வகுத்து, புதனுக்கு எட்டாமிடத்தில் உள்ள பரல்களால் பெருக்கிக் கொள்ள வேண்டும். பின் இருபத்து ஏழால் வகுத்து வந்த மீதியை அசுவனி நட்சத்திரம் முதலாக எண்ணவேண்டும். எந்த நட்சத்திரம் வருகின்றதோ அந்த நட்சத்திரத்தில், கோசர ரீதியாகச் சனி வரும் காலத்தைக் கண்டறிய வேண்டும்.

வரையாக வேளண்ணிக் கண்டறிந்த நாளின்
மந்தன்வரும் காலத்தில் பிராணபத மாகும்
கரையமுத்தோர் நாசமாம் மிகும்உறவோர் நாசம்
காட்டுமென்பார் புதன்வக்கரம் காணிலற்ப வித்தை

தரையதனில் நீசமே யாகிலற்ப வித்தை
சத்துருட் சேத் திரமாகில் தனக்குவர வித்தை
உரையுமுச்சம் ஆட்சிசொட் சேத்திரவீ டாக
வந்துநிற்கில் வித்துவான் வார்த்தைசெயம் உள்ளான். 47

(இ-ள்) கண்டறிந்த நட்சத்திரக் கால்களில் சனி, கோசார ரீதியாக வரும் காலத்தில் உயிருக்கு அழிவுண்டாகும். மூத்தோருக்கு அழிவு ஏற்படும்; உறவினர்கள் நாசமடைவர். புதன் வக்கிரமடைந்து இருப்பின், வித்தை சிறக்காது; நீசமாக இருப்பின், சிறிது வித்தை உடையவன்; பகை வீட்டில் இருந்தால், ஓரளவு வித்தையைக் கற்பான்; புதன் உச்சம், ஆட்சி பெற்று இருந்தால், பண்டிதனாகவும் வாக்கு வன்மை உடையவனாகவும் விளங்குவான்.

பாகவஷ்ட் டகவர்க்க சோத்தியபிண் டத்தைப்
பகர்புதனின் றிடும்ராசி வித்துவினால் பெருக்க
யாகுமிரு பத்தேழில் கழித்தசே டத்தை
அசுவினியே முதலாக எண்ணிக்கண்ட நாளில்
வேகுமிகு சனிவருநாள் அன்னையுடன் பிறந்தான்
மேன்மரணம் பந்துசன்மா னம்வித்தைக் கிடராம்
வாகில்வித்த இருந்திடினும் வியாழன்வரும் நாளும்
மாதுலன்பந் துவுக்கினம் சுபகரவித் தையுமே. 48

(இ-ள்) புதனின் அஷ்டவர்க்க சோத்திய பிண்டத்தைப் புதன் நின்ற இராசியில் உள்ள பரல்களால் பெருக்க வேண்டும். அத்தொகையை இருபத்தேழில் வகுத்து, ஈவை நீக்கி, மீதியை அசுவனி முதலாக எண்ணி வரும் பொழுது காணும் நட்சத்திரக் கால்களில் சனி கோசார ரீதியாக வரும் நாளில் அன்னையுடன் பிறந்த மாமனுக்கு மரணம் நேரிடும். உறவினர்களுக்குத் துயரம் உண்டாகும்; சன்மானம் பெற தடைகள் ஏற்படும்; வித்தைக் குறைபாடு உண்டாகும். இரண்டாமிடத்தில் பரல்கள் இருந்தாலும் மேற்கண்ட நட்சத்திரக் கால்களில் குரு கோசார ரீதியாக வரும் நாட்களில், சாதகனின் மாமனுக்கும் சுகக்குறைவு உண்டாகும். வித்தையிலும் தடைகள் ஏற்படும்.

## இதுவுமது

மந்திரிஅட் டகவர்க்க மாமதனில் பொன்னோன்
மலிவுறுரா சிக்கைந்தாம் இராசிவிந்து வைத்தான்
சந்ததியென் றுரைப்பார்த்து சத்துருநீ சத்தைத்
தானடைந்தோர் விந்துவழித் திடுமென்பார் மற்று
மூந்துபல மாமநனில் ஆண்பெண்கிர கங்கள்
உண்மையறிந் தரைத்திடுவர் நட்பாட்சி உச்சம்
சொந்தமூ லத்திரிகோ ணக்கோட்க ளாலே
சூட்சித்துப் புத்ரசங்கை சொல்லுவது தானே. (49)

(இ-ள்) குருவின் அஷ்ட வர்க்க சக்கரத்தில் குரு நின்ற இராசிக்கு ஐந்தாம் இராசியில் உள்ள பரல்களின் எண்ணிக்கையைப் பிள்ளைகளின் எண்ணிக்கை என்று கூறுவர். அந்த இராசியில் கிரகங்கள் தந்துள்ள பரல்களில், சத்துரு வீட்டை, நீச வீட்டை அடைந்த கிரகங்கள் தந்த பரல்கள் அழிந்திடும் என்று கூறுவார்கள். மீதியுள்ள பரல்களில் ஆண், பெண் கிரகங்களின் பரல்களை அறிந்து ஆண், பெண் குழந்தைகளைப் பற்றி அறிய வேண்டும். மேலும் பரல்களைக் கொடுத்துள்ள கிரகங்களின் நட்பு, ஆட்சி, உச்சம், மூலத்திரிகோணம் முதலானவற்றின் இயல்புகளையும் அறிந்து, சாதகனின் புத்திரர்களைப் பற்றிக் கூற வேண்டும்.

மேன்குருஅட் டகவர்க்க சோத்தியசே டத்தை
வியாழன்நின் றராசிக்கைந் தாம்ராசி தன்னில்
தீங்குணர்விந் தால்பெருக்கி இருபத்தேழ்க் கழித்தே
செப்பரிய சேடத்தை வளர்பக்க மாகில்
வான்துலவும் அசுவனியே முதலெண்ணிக் காண
வருந்திடும்பிற் பக்கமெனில் சித்திரைதொட் டெண்ணல்
தான்குறிக்கும் அந்நாளில் திரிகோணம் அதனில்
சார்ந்துகுரு வருநாளில் சந்ததியுண் டாமே. (50)

(இ-ள்) குருவின் அஷ்ட வர்க்கத்தின் சோத்திய பிண்டத்தைக் குருநின்ற இராசிக்கு ஐந்தாம் இராசியில் உள்ள பரல்களால் பெருக்க வேண்டும். கண்டறிந்தத் தொகையை இருபத்து ஏழால் வகுத்துக் கொண்டு, ஈவை விட்டுவிட்டு

மீதியை எடுத்துக் கொள்ள வேண்டும். வளர்பிறையானால் அசுவனியை முதலாகக் கொண்டு மீதிக்கு ஏற்ப நாளைக் கணக்கிட வேண்டும். தேய்பிறையானால் சித்திரை நட்சத்திரம் முதலாகக் கொண்டு அதற்கு ஐந்தாம் நட்சத்திரம் ஏழாம் நட்சத்திரம் ஆகியவற்றைக் கண்டறிய வேண்டும். இந்த நட்சத்திரக் கால்களில் கோச்சார ரீதியாகக் குரு வரும் காலத்தில் சாதகனுக்குக் குழந்தைகள் பிறக்கும்.

பொன்னவனட் டகவர்க்கம் இட்டறிந்து விந்து
பொலிவான இராசியிலே வியாழம் வருங்கால்
மன்னுகுரு விருந்ததிரி கோணத்திற் குருவே
வருங்காலம் சந்ததியுண் டாகுமென லாகும்
சொன்னலக் கினபுடமும் அஞ்சினுக்கே உடையோன்
துய்யபுட மும்கூட்டிக் கண்டரா சியிலும்
பன்னுமதன் திரிகோணம் தன்னிற்குரு வருங்காற்
பகர்கர்ப்ப உற்பத்தி பாலிக்கு மின்னே. (51)

(இ-ள்) குருவினுடைய அஷ்ட வர்க்கத்தில் அதிகமான பரல்கள் உள்ள இராசியில் கோசார ரீதியாகக் குரு வரும் காலத்திலும், குரு இருந்த இராசிக்குத் திரிகோண இராசியில் கோசார ரீதியாகக் குரு வரும் காலத்திலும் சாதகருக்குப் புத்திரர்கள் தோன்றுவர். இலக்கின புடத்தையும், ஐந்தாமிடத்திற்கு அதிபதியின் புடத்தையும் கூட்டிக் கண்ட இராசியிலும் அதன் திரிகோண இராசியிலும் கோசார ரீதியாகக் குருவரும் காலத்தில் சாதகர்க்குப் புத்திரர்கள் தோன்றுவர்.

துங்கமூர்த்தி யன்புடத்தில் ஐந்துக்கே உடையோன்
சுத்தபிண்டம் தனைக்களைந் துற்றஇரா சியிலே
பொங்குகுரு வருங்காலம் புத்திரர்க்கு நாசம்
புகலுதயத் தோன்புடமும் களத்திரத்தோன் புடமும்
தங்குபுட மும்கூட்டிக் கண்டஇரா சியிலே
சாற்றுகுரு வருங்காலம் விவாகமெனச் சொல்வார்
கொங்கலர் கதிர்புடமும் சுக்கிரன்தன் புடமும்
கூட்டிவருமத் திரிகோண மாதர்கர்ப்ப முறையே. (52)

(இ-ள்) இலக்கினாதிபனுடைய புடத்தில் ஐந்தாமிடத்திற் கதிபதியின் சுத்த பிண்டத்தைக் கழித்து நின்ற இராசியில் கோசார ரீதியாகக் குரு வரும் காலத்தில் புத்திரர்களுக்கு அழிவு நேரிடும். இலக்கினாதிபதியினுடைய புடத்தையும், களத்திரத் தானாதிபதியினுடைய புடத்தையும், களத்திரத் தோனுடைய புடத்தையும் கூட்டிக் கண்ட இராசியில் கோசார ரீதியாகக் குருவரும் காலத்தில் சாதகருக்குத் திருமணம் நடக்கும். சூரியனுடைய புடத்தையும் சுக்கிரனுடைய புடத்தையும் கூட்டிக் கண்ட இராசியில் அல்லது அந்த இராசியின் திரிகோணத்தில் கோசார ரீதியாகக் குரு வரும் காலத்தில் சாதகரின் மனைவி கர்ப்பம் அடைவாள்.

### இதுவுமது

வேதியனட் டகவர்க்கம் அதனிலைத்தோ டொன்பான்
　　மிகுநாலில் சோத்தியத்தில் விந்துகு னியமாய்
வோதியமத் திரிவைந்தில் இருந்தாலும் மந்திரி
　　உகந்துநின்ற இராசிக்கே ஐந்தாமி ராசிக்
கேதிலாத் திரிகோணம் தனில்விந்து சமனாய்
　　இருந்தக்கால் சந்ததியே இல்லையெனச் செப்பே
தீதிலைந்து சனிவீடாய் இருக்கவதில் மதிதான்
　　சேர்ந்திடினும் பார்த்திடினும் தத்துபுத்திரன் என்பார். 53

(இ-ள்) குருவினுடைய அஷ்ட வர்க்கத்தில் குருவிலிருந்து ஐந்தாமிடம், ஒன்பதாமிடம், நான்காமிடம் ஆகிய இராசிகளில் பரல்கள் இல்லையென்றாலும் திரிகோண சோதனை ஏகாதிபத்திய சோதனைக்குப் பிறகு குரு நின்ற இராசிக்கு ஐந்தாமிடம், ஒன்பாமிடம், நான்காமிடம் ஆகியவற்றில் பரல்கள் இல்லாமல் இருந்தாலும், குரு ஐந்தாமிடத்தில் இருந்தாலும் குரு நின்ற இராசிக்கு ஐந்தாம் இராசியில் திரிகோணங்களில் பரல்கள் சமமாக இருந்தால் இச்சாதகனுக்குச் சந்ததிகள் இல்லையென்று கூறவேண்டும். ஐந்தாம் வீடு சனியின் வீடாக இருக்க, அதில் சந்திரன் சேர்ந்து இருந்தாலும், ஐந்தாம் வீட்டில் உள்ள சனியைச் சந்திரன் பார்த்தாலும் இச்சாதகனுக்குத் தத்துப்புத்திரன் என்று கூறுவார்கள்.

## இதுவுமது

சுக்கிரனட் டகவர்க்க சுத்தபிண்டம் தன்னைத்
தூயவெள்ளி நின்றராசிக் கேழாம் இராசி
மிக்கவிந்து வால்பெருக்கி இருபத்தேழ்க் கனித்தே
மிஞ்சிநின்ற சேடத்தை அசுவினிதொட் டெண்ணி
தொக்கவரும் அந்நாளில் திரிகோணம் தன்னில்
தொடர்சனியன் வருங்காலம் மனையாளுக் கரிட்டம்
மைகுழலாய் ! அந்நாளில் வியாழன்வரு நாளின்
மணமுண்டாம் மனைவிக்கே மகிழ்ச்சியுமுண் டாமே
(54)

(இ-ள்) கரிய கூந்தலையுடைய பெண்ணே ! சுக்கிரனுடைய சுத்த பிண்டத்தைச் சுக்கிரனின் அஷ்ட வர்க்கத்தில் சுக்கிரன் நின்ற இராசிக்கு ஏழாம் இராசியால் பெருக்கிக் கொள்ள வேண்டும். மீதியை அசுவனி நட்சத்திரம் முதல் எண்ணி வரும் நட்சத்திரத்திலும் திரிகோண நட்சத்திரங்களாகிய பத்தாம் நட்சத்திரத்திலும் கோசார ரீதியாகச் சனிவரும் காலத்தில் மனைவிக்குக் கண்டம் நேரிடும். அந்த நட்சத்திரக் கால்களில் கோசார ரீதியாகக் குரு சஞ்சாரம் செய்யும் காலத்தில் சாதகனுக்குத் திருமணம் நடைபெறும். சாதகனின் மனைவிக்கு மிகுந்த மனமகிழ்ச்சி உண்டாகும்.

## இதுவுமது

சவ்வியனட் டகவர்க்கம் தனிலேழு விந்து
தனையுடைய கிரகங்க ளில்பொசிப்பில் ஊனில்
சொல்லியலக் கணம்தன்னை உதயநா யகனைச்
சூழுதயத் திருந்தவனைத் தோன்றிடப்பார்த் தவன்தான்
மல்லுயர்சுக் கிரன்பின்னே இருக்கிலுத யந்தோன்
மருவதிசை அபகாரம் கூடச்சூட் சித்தே
நல்பெலமும் துர்ப்பலமும் அறிந்துசொல்லல் வேண்டும்
நண்ணியகற் பகத்தருவில் படர்ந்தபசுங் கொடியே !
55

(இ-ள்) கற்பக மரத்தில் படர்ந்த பசுங்கொடியைப் போன்ற பெண்ணே ! சுக்கிரனுடைய அஷ்ட வர்க்கத்தில் ஏழு பரல்களையுடை கிரகங்களின் திசை, புத்தி சென்ம இலக்கனம், இலக்கினாதிபதி, இலக்கினத்தில் இருந்தவன், இலக்கினத்தைப் பார்த்தவர்கள், சுக்கிரன் பின்னே இருக்கில் இலக்கினாதிபதியின் திசை, புத்தி, சுக்கிரனின் வலிமை, பலவீனம் முதலானவற்றை அறிந்து பலன் சொல்லல் வேண்டும்.

பிரகரனட் டகவர்க்கம் தன்னிலு செயத்திற்
பெருவிந்து நாசம் பலமில்லை என்பார்
அரியவஞ்சு நாலில்விந்து சூனியமே யாகி
அதிற்சனியன் வருங்காலம் களத்திரமே நாசம்
நிறவுவெள்ளி சோத்தியத்தில் விந்திருந்த இராசி
நிற்கின்ற திக்கிலே பூமிபொருளும் உண்டாம்
நிறவெள்ளி நிற்கின்ற இராசிக்கே ஏழாம்
திக்கிலே விவாகமணம் செப்புவர்செந் திருவே. 56

(இ-ள்) திருமகளையொத்த அழகுடை பெண்ணே! சுக்கிரனுடைய அஷ்ட வர்க்கத்தில் உபசெய விடுகளில் பரல்கள் இருப்பின் நன்மையில்லை. ஐந்தாமிடம், நான்காமிடம் ஆகியவற்றில் பரல்கள் இன்றி, கோசார ரீதியாக அதில் சனி வரும் காலத்தில் களத்திரத்திற்கு அழிவு நேரிடும். வெள்ளியினுடைய சோத்தியத்தில் பரல்கள் இருந்த இராசி நிற்கின்ற திசையில் பூமி இலாபமும் பொருள் இலாபமும் கிட்டும். சுக்கிரனுடைய அஷ்ட வர்க்கத்தில் சுக்கிரன் நின்ற இராசிக்கு ஏழாம் இராசி அமைந்துள்ள திக்கில் களத்திரம் அமையும் என்று சொல்லுவார்கள்.

சுங்கனட் டகவர்க்கம் தனைசோதி யாமுன்
சொல்லியவே ழொன்பதுக்கு இறைவர்நின்ற இராசி
தங்குமிரு வகையுமெத் தனைஅத்த னைதான்
தாரமுண் டாமென்பார் கடகராசி வேந்தர்
இங்கிதமாம் ஆட்சியுச்சம் வக்கிரத்தி லேதான்
இருக்கவேகு களத்திரமுண் டென்பர்வக் ரமுச்சம்
பங்குறின்மும் மடங்குபலம் நீசமின்றி மறைவில்
பாரிக்கே அரிட்டமெனப் பகருவர்பைந் தொடியே! 57

(இ-ள்) பசுமையான கொடி போன்ற பெண்ணே ! சுக்கிரனுடைய அஷ்ட வர்க்கத்தில் திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை செய்வதற்கு முன்னால் ஏழாமிடத்திற்கு அதிபதி, ஒன்பதாமிடத்திற்கு அதிபதி ஆகியோர் நின்ற இராசிகளில் எத்தனை பரல்கள் உள்ளனவோ அத்தனை தாரங்கள் சாதகனுக்கு வரும் என்று சொல்வார்கள். சந்திரன், ஆட்சி, உச்சம், வக்கிரம் ஆகிய நிலைகளைப் பெற்று இருந்தால் சாதகனுக்குப் பல தாரங்கள் என்று கூறுவார்கள். வக்கிரம், உச்சம் இருந்தால் மும்மடங்கு பலனாகும். சந்திரன் நீசம் பெற்று இருக்க, அல்லது மறைய தாரத்திற்குக் கண்டங்கள் ஏற்படும்.

விளக்கம் : சனியின் அஷ்ட வர்க்கத்தில் சனி நின்ற இராசிக்கு எட்டாவது இராசியில் உள்ள பரல்கள் 3 எனக் கொள்வோம். சனியினுடைய சோத்திய பிண்டம் 390 எனக் கொண்டு, இரண்டையும் பெருக்க, 390 x 3=1170 இதை இருபத்து ஏழால் வகுக்க வேண்டும். ஈவு 43, மீதி 9. ஈவைத் தள்ளிவிட்டு மீதியுள்ள ஒன்பதை அசுவதி நட்சத்திரம் முதலாய் எண்ண, ஆயில்ய நட்சத்திரம் வரும். இந்த ஆயில்ய நட்சத்திரத்தில் கோசார ரீதியாகச் சனிவரும் நாளில் சாதகருக்குக் கண்டம் வர வாய்ப்புண்டு. அந்த ஆயில்ய நட்சத்திரத்தில் கோசார ரீதியாகக் குரு வரும் காலத்தில் சாதகருக்குச் சுகம் கிட்டும். மகிழ்ச்சி உண்டாகும்.

சனியுடைய அட்டகவர்க் கத்தில்சோத் தியத்தை
சனிநின்ற இராசிக்கெட் டாம்ராசி தன்னில்
இலியவிந்து வால்பெருக்கி இருபத்தேழில் கழித்தே
இருந்தமிச்சம் தன்னைஅசு வினிமுதலாய் எண்ணி
தொனிபெறுமித் நாளிலே சனியன்வரும் காலம்
சொல்லுவர்கா தகர்க்கரிட் டம்தோற்றுமந்த நாளில்
வனிதையே ! குருவருங்கால் சாதகர்க்குச் சுகமும்
மகிழ்ச்சியுண் டாகுமென்பர் மறைவல்லோர் தாமே.

58

(இ-ள்) பெண்ணே ! சனியினுடைய அஷ்ட வர்க்கத்தில் சனி நின்ற இராசிக்கு எட்டாவது இராசியில் உள்ள பரல்களைச்

சனியினுடைய சுத்த பிண்டத்தால் பெருக்கி, இருபத்து ஏழால் வகுக்க வேண்டும். மீதியுள்ள எண்ணை அசுவனி நட்சத்திரம் முதலாய் எண்ணிக் கண்ட நட்சத்திரத்தில் கோசார ரீதியாகச் சனி வரும் நாளில் சாதகருக்குக் கண்டம் வர வாய்ப்புண்டு. அந்த நட்சத்திரத்தில் கோசார ரீதியாகக் குரு வரும் காலத்தில் சாதகருக்குச் சுகமும், மகிழ்ச்சியும் உண்டாகும் என்று வேதங்களைக் கற்ற வல்லவர்கள் கூறுவர்.

## இதுவுமது

காரியின்அட் டகவர்க்க சோத்தியபிண் டத்தைக்
கருதியவி யாழநின்ற இராசிவித்து வதனால்
சீரியதா கப்பெருக்கிப் பன்னிரண்டில் கழித்தே
சேடத்தை மேடமுதல் எண்ணியே கண்ட
நேரியதாம் இராசிதனில் வியாழன்வரும் காலம்
நீலனுடைச சோத்தியத்தில் இரவிநின்ற இராசிக்
கூரியவித் தால்பெருக்கி இருபத்தேழ்க் கழித்தே
குலவுமிச்சம் தனிலிரவி வரில்வரிட்டம் என்பார். 59

(இ-ள்) சனியினுடைய அஷ்டவர்க்கத்தில் குரு நின்ற இராசியிலிருந்த பரல்களைச் சனியுடைய சோத்திய பிண்டத்தால் பெருக்கி, பன்னிரண்டால் வகுக்க வேண்டும். மீதியை மேட இராசி முதல் எண்ணி கண்ட இராசியில் குரு வருங்காலத்திலும், சனியினுடைய சோத்திய பிண்டத்தால், சனியின் அட்டவர்க்கத்தில் சூரியன் நின்ற இராசியில் உள்ள பரல்களைப் பெருக்கி, 27 ஆல் வகுக்க வேண்டும். மீதியை அசுவனி நட்சத்திரம் முதல் எண்ணிவரும் நட்சத்திரத்தில் சூரியன் வரும் காலத்திலும் சாதகர்க்கு மாரகம் ஏற்பட வாய்ப்புண்டு என்று கூறுவர்.

விளக்கம் : சனியின் அஷ்டவர்க்கத்தில் குருநின்ற இராசியில் உள்ள பரல்கள் 3 எனக் கொள்வோம் சனியினுடைய சோத்திய பிண்டம் 390 எனக் கொண்டு, இரண்டையும் பெருக்க, 390x3=1170. இதனைப் பன்னிரண்டால் வகுக்க வேண்டும். ஈவு97. மீதி 6.சவைத்தன்னி விட்டு மீதியை மேடம் முதல் எண்ணிக் கண்ட இராசி, கன்னி இராசியாகும். இந்தக் கன்னி

இராசியில் கோசார ரீதியாகக் குரு சஞ்சாரம் செய்யும் காலத்தில் சாதகனுக்குக் கண்டம் ஏற்படலாம் என்பர்.

சனியின் அஷ்டவர்க்கத்தில் சூரியன் நின்ற இராசியில் உள்ள பரல்களை நான்கு எனக் கொள்வோம். சனியினுடைய சோத்தியபிண்டம் 390 எனக் கொண்டு, இரண்டையும் பெருக்க 390x4=1560. இதனை இருபத்து ஏழால் வகுக்க, ஈவு 57. மீதி 21 இந்த மீதியை அசுவதி முதலாக எண்ண வேண்டும். அவ்வாறு எண்ணினால் வருகின்ற நட்சத்திரம் உத்திராடமாகும். இந்த உத்திராட நட்சத்திரத்தில் கோசார ரீதியாகச் சூரியன் சஞ்சாரம் செய்யும் காலத்தில், சாதகருக்குக் கண்டம் நேர வாய்ப்புண்டு.

ஒரு சாதகத்தில் சனியினுடைய அஷ்டவர்க்கத்தில் சந்திரன் நின்ற இராசியில் இருந்த பரல்களின் எண்ணிக்கை 3 எனக் கொள்வோம். சனியினுடைய சோத்திய பிண்டம் 390 எனக் கொண்டு, இரண்டையும் பெருக்க 390 x 3 = 1170. இதனை இருபத்து ஏழால் வகுக்க, ஈவு 43. மீதி 9. ஈவை நீக்கிவிட்டு மீதியை அசுவதி நட்சத்திரம் முதல் எண்ண வேண்டும். அவ்வாறு எண்ணினால் வருகின்ற நட்சத்திரம் ஆயில்யமாகும். ஆயில்ய நட்சத்திரத்தில் கோசார ரீதியாகச் சந்திரன் வருகின்ற நாளில் சாதகருக்கு மரணத்திற்கு ஒப்பான கண்டங்கள் நேரிடும். இந்த நட்சத்திரத்தின் திரிகோண நட்சத்திரங்களான - பத்தாம் நட்சத்திரமான கேட்டை நட்சத்திரத்திலும் பத்தொன்பதாவது நட்சத்திரமான ரேவதி நட்சத்திரத்திலும் கோசார ரீதியாகச் சந்திரன் சஞ்சாரம் செய்கின்ற நாட்களிலும் சாதகருக்கு மரணத்திற்கு ஒப்பான கண்டங்கள் நேரிடும்.

## இதுவுமது

காரியிஷ்ட்ட கவர்க்க சோத்தியபிண் டத்தைக்
கலைமதிநின் றிடும்இராசி விந்துவினால் பெருக்கித்
தெரியுமிரு பத்தேழில் கழித்தியா நின்றச்
சேடத்தை அசுவினிதொட் டெண்ணிகண்ட நாளில்

விரிவுறவெண் மதிவருங்கால் சாதகர்க்கே அரிட்டம்
விளங்குமிதன் திரிகோணம் தன்னிலுமிப் பலமாம்
அரிபிர்மர்க் கரிதான கணிதசா கரத்தின்
அறிவறிந்து பதினெண்பேர் அறிந்துரைத்த படியே.
60

(இ-ள்) திருமால், பிரம்மா ஆகியோருக்கும் அறிவதற்கு அரியதான கணித சாரத்தின் தன்மையை அறிந்து, பதினெண் ரிஷிகள் எடுத்துரைத்துள்ளபடி, சனியின் அஷ்டவர்க்கத்தின் சந்திரன் நின்றுள்ள இராசியின் பரல்களைச் சனியின் சோத்திய பிண்டத்தினால் பெருக்கி, அதனை இருபத்து ஏழில் வகுக்க வேண்டும். ஈவைத் தள்ளி, மீதியை அசுவனி தொட்டு எண்ண வேண்டும். எந்த நட்சத்திரம் வருகின்றதோ அந்த நட்சத்திரத்தில் சனி கோசர ரீதியாக வரும் காலத்திலும், அந்த நட்சத்திரத்திற்குத் திரிகோண நட்சத்திரங்களில் சனி கோசர ரீதியாக வரும் காலத்திலும் சாதகருக்கு மாரகம் நேரலாம் என்பர்.

## இதுவுமது

மந்தன் அட்டக வர்க்கத்தில் சூனியம்
ஐந்து ராசியில் உற்றதோர் சூரியன்
சந்தி ரன்சனி தானடுத் தேவரும்
மந்த நாளில் அரிட்டம தாகுமே. 61

(இ-ள்) சனியின் அஷ்ட வர்க்கத்தின் சனிநின்ற இராசியில் பரல்கள் இல்லாமல், அதற்கு ஐந்தாம் இராசியில் சூரியன், சந்திரன், சனி ஆகிய கோள்கள் கோசார ரீதியாக வரும் நாட்களில் சாதகருக்குக் கண்டம் நேர வாய்ப்புண்டு.

## இதுவுமது

## பொது

மன்னுமுத லாயபல மேழுகோ ளுக்கும்
வகுத்திடுமட் டகவர்க்கம் சோதியா முன்னம்
விண்ணமில்லா விராறு இராசிதனி லுந்தான்
விந்துக்கள் ஒன்றிரண்டு மூன்றுமிருந் தாக்கால்

சொன்னதனை தானியநாற் காலிசே தமுமாம்
தொகுத்தவிந்து நாலிருக்கில் சமமாக இருக்கும்
பன்னிருமுதலேழுவரைக் கும்நல்ல பலமாம்
பகருமெட்டு விந்துற்றால் நினைத்தபலன் பலிக்கும்.
62

(இ-ள்) சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய ஏழு கிரகங்களின் அஷ்டவர்க்கங்களிலும் மேடம் முதல் மீனம் வரையிலான பன்னிரண்டு இராசிகளிலும் ஒன்று, இரண்டு, மூன்று வரையிலான பரல்கள் இருந்தால், செல்வம், தானியம், கால்நடை முதலானவை சேதமாகும்; நான்கு பரல்கள் இருப்பின் நன்மை, தீமை இன்றி சமபலனாக இருக்கும்; ஐந்து முதல் ஏழு வரையிலான பரல்கள் இருப்பின் நல்ல பலன்களாகும்; எட்டு பரல்கள் இருப்பின் நினைத்த காரியம் நிறைவேறும்.

**இதுவுமது**

**சனி அஷ்டவர்க்கம்**

நீலண்ட் டகவர்க்கம் சோதியா முன்னம்
நின்றஇரா சியிலுமிலா பப்பாக்கியம் தன்னில்
நாலுவிந்துக் கதிகமாம் மிஞ்சியே இருந்தால்
நலமான பாக்கியமு மாய்வர்த் திக்கும்
சீலமா கியபத்துச் சூனியமா யதிலே
சிறந்தசனி வருங்காலம் தொழில்முடக்கம் வியத்தில்
ஏழும்விந்துசூனியமாய் இருக்கிலதில் சனியன்
எய்துநாள் தனநாசம் உயிர்சேதம் என்பர் 63

(இ-ள்) திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை செய்வதற்கு முன்னால் சனியினுடைய அட்டக வர்க்கத்தில், சனி நின்ற இராசியிலும் பதினோராம் தானமாகிய இலாபத் தானத்திலும் ஒன்பதாம் இடமாகிய பாக்கியத்தனத்திலும் நான்கு பரல்களுக்கு அதிகமான பரல்கள் இருப்பின், அனைத்துப் பாக்கியங்களும் உண்டாகும். செல்வம் போன்றவை மேன்மேலும் பெருகும். பத்தாம் இடமாகிய

கருமத்தானத்தில் பரல்கள் இன்றி, அங்கு கோசார ரீதியாகச் சனி வருங்காலம் தொழிலில் முடக்கம் ஏற்படும். பன்னிரண்டாம் இடத்தில் பரல்கள் இன்றி, அங்கு கோசார ரீதியாகச் சனி வரும் காலத்தில் பொருள் நாசமும் உயிர்ச்சேதமும் உண்டாகும் என்பர்.

## சூரியன் அஷ்டவர்க்கம்

இலக்கினமே சூரியனுக் காட்சியுட்ச மாகி
இருக்கவொன்று முதனாலு விந்துமட்டில் இருக்கின்
மலக்குசந்த னாரோக்யம் ஐந்துமுதல் எட்டு
வரையினில்வித் துடனிருக்கில் இராசயோகம் என்பர்
துலக்கிரவி யுடனாலு மூன்றுகோள் கூடில்
துய்யதீர்க் காயுளென்பர் கடகமுத லான
உலப்பினட்டின் மூன்றுமுதல் ஐந்துவிந்தோ டிரவி
உறையில்பதி னேழாண்டில் பிதுர்க்கண்டம் என்பர்
64

(இ-ள்) இலக்கினம், சூரியனுக்கு ஆட்சி வீடாக அல்லது நட்பு வீடாக அமைந்து, ஒன்று முதல் நான்கு பரல்கள் வரை அவ்விராசியில் இருந்தால், உடலாரோக்கியம் என்பர். ஐந்து முதல் எட்டுப் பரல்கள் வரை இருந்தால் இராசயோகமாகும். சூரியனுடன் மூன்று, நான்கு கோள்கள் சேர்ந்திருப்பின் தீர்க்காயுள் என்பர். கடகம் முதலான நட்பு வீடுகளில் சூரியன் மூன்று முதல் ஐந்து பரல்களோடு இருந்தால், சாதகரின் பதினேழாம் வயதில் தந்தைக்குக் கண்டம் நேரும் என்று கூறுவர்.

அஞ்சுமுதல் விந்துடனே திரிகோண கேந்திரத்
தருக்கனிருந் திடிலிருபத் திரண்டுபத் தைந்து
மிஞ்சமிரு பத்தாறு முப்பதினில் பிதுர்க்கே
மிக்ககண்டம் அல்லாது சரீரமே அரிட்டம்
வஞ்சமில்சோத் தியமதனில் நான்குவிந்து உடனே
மதிபுதனைக் கூடிரவி இருக்கில்பத் தாண்டில்
தஞ்சமாம் பிதுருவுக்குத் தனராச பத்யம்
தானுண்டாம் களபமுலைத் தையலருக் கரசே. 65

(இ-ள்) சந்தனம் பூசப்பட்ட தனங்களையுடைய பெண்ணரசே ! சூரியனுடைய அஷ்ட வர்க்கத்தில், திரிகோண, கேந்திர வீடுகளில் சூரியன் ஐந்திற்கும் மேற்பட்ட பரல்களோடு இருந்தால், இருபத்து இரண்டு, இருபத்தைந்து, இருபத்தாறு, முப்பது ஆகிய வயதுகளில் தந்தைக்கு கண்டம் ஏற்படலாம் அல்லது மாரகம் ஏற்படலாம் என்பர். சூரியனின் அஷ்டவர்க்கத்தில் நான்கு பரல்களோடு சந்திரன், புதன், சூரியன் ஆகியவை சேர்ந்திருக்கில் பத்தாண்டுகளில் தந்தைக்கு செல்வமும் இராசயோகமும் உண்டாகும்.

## இதுவுமது

உரைத்தசோத் தியத்தினிலா றேழெட்டு வித்தி
  னுடனிரவி ஆட்சிஉச்ச மாகிக்கேந் திரத்தில்
நிரைத்துநிற்க வல்லதுமத் திமகண்ட முறினும்
  நிகர்பிதா நூறுயோ சனைக்கதிப னாவன்
வரைப்பில்வே தியனால் கிராமாதி பதியாய்
  வாய்ப்பில்யா கங்கள்செய்வன் மன்னவனே யாகில்
இரைகடல்சூழ் புவியாள்வன் மற்றொருவ ராகில்
  திரவியவான் தேசாதி காரனென இசைப்பர். 66

(இ-ள்) சூரியனுடைய அஷ்டவர்க்கத்தில் ஏழு, எட்டு பரல்களுடன் சூரியன் ஆட்சி உச்சமாகி கேந்திரத்தில் நிற்க, மத்திம கண்டம் பெற்றாலும் பிதா நூறு யோசனை தூரமுள்ள இடத்திற்கு அதிபதியாக விளங்குவான். குரு, அவ்வாறு இருந்தால் கிராமத்திற்கு அதிபதியாக விளங்கி, வேள்விகள் பலவற்றையும் செய்வான்; மன்னவனாக இருப்பானாகில், அலை கடலால் சூழப்பட்ட இவ்வுலகை அரசாள்வன். வேறொருவனாக இருந்தால், செல்வ முடையவனாகவும் தேசாதிகாரனாகவும் விளங்குவான்.

## இதுவுமது

இவ்வண்ணம் அட்டமத்தில் இருக்கவற்ப பலமாம்
  ஏற்றமூன்றா றுபதினோன் றினிலா தித்தன்

செவ்வியதாய் நாலைந்து விந்துடனே கூடிச்
        செறிந்திருந்த இராசியுடைப் பலவிர்த்தி உண்டாம்
பவ்வமுறும் ஒன்றிரண்டு மூன்றுவித் துடனே
        பானுவிருந் திடும்இராசி பலன்விபல மாகும்
அவ்வியமா கியவோரா சாரமதில் தானே
        அட்டகவர்க் கத்துரைத்த அதிசயமிப் படியே       67

(இ-ள்) இதைப் போன்று அஷ்டமத் தானத்தில் சந்திரன் இருக்க சிறிதளவு பலனே கிடைக்கும். மூன்று, ஆறு, பதினொன்று ஆகிய இடங்களில், நான்கு அல்லது ஐந்து பரல்களுடன் சூரியன் நின்றால், அந்தப் பாவத்தின் பலன் அதிகமாகக் கிடைக்கும். ஒன்று, இரண்டு மூன்று பரல்களுடன் சூரியன் நின்றால், சூரியன் நின்ற இராசியின் பலன் குறைவாக இருக்கும். ஓரா சாத்திர நூலில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**சந்திரனின் அஷ்டவர்க்கப் பலன்**

மிக்கசன்ம லக்கினத்தில் ஒன்றிரண்டு மூன்று
        விந்துடனே மதிஇருக்கில் சயரோகி யாவன்
திக்குநிறை மதியுடனே இரண்டொருகோள் கூடில்
        திகழிருபத் தேழெட்டில் சயரோகம் எய்தும்
மூக்கியகேந் திரக்கோணம் தன்னிலே நீச
        மூடமாயொன் றிரண்டின் மூன் றுவிந்தி னுடனே
தக்கதேய் மதியிருக்கில் அந்தந்த பாவம்
        தானாச மாகுமெனச் சாற்றினர்சான் றோரே.       68

(இ-ள்) சந்திரனின் அஷ்ட வர்க்கத்தில் சன்ம இலக்கினத்தில் சந்திரன் ஒன்று, இரண்டு, மூன்று பரல்களுடன் இருந்தால் சயரோகியாக விளங்குவான். பூரணச் சந்திரனுடன் இரண்டொரு கோள் சேர்ந்து இருந்தால், இருபத்தேழாம் வயதில் சயரோகம் வரும். கேந்திர திரிகோணங்களில் சந்திரன் மூடமாகவோ, நீசமாகவோ, ஒன்று, இரண்டு, மூன்று பரல்களுடன் தேய்பிறைச் சந்திரனாகவோ இருந்தால் அந்தப் பாவம் நாசமாகும் என்று சான்றோர்கள் கூறியுள்ளார்கள்.

## இதுவுமது

துய்யமதி புதயதிற்கில் சாமிபெலங் குறைந்தே
துர்தானத் தோனிரண்டு விந்துடனி ருக்கி
னையும்வினைப் பகுதியால் வெகுமாதுர் நாசம்
நாலுமுதல் ஏழெட்டு விந்துவரை கோணம்
செய்யகேந் திரலாபம் தன்னிலே இருக்கில்
சிறக்குமந்தத் தானங்கள் விருத்திதனை அடையும்
வெய்யதோர் எட்டுபனி ரண்டினிலைந் தாறு
விந்துடனே மதியிருக்கில் ஆயுள்விர்த்தி யாமே. 69

(இ-ள்) சந்திரனின் அஷ்டவர்க்கத்தில் சந்திரன் இலக்கினத்தில் நிற்க, இலக்கினாதிபதி பலம் குறைந்து இரண்டாமிடத்தோன் இரண்டு பரல்களுடன் இருக்கில், தீவினையால் தாயார்க்கு மாரகம் உண்டாகும் என்பர். நான்கு முதல் எட்டு பரல்கள்வரை கேந்திர, கோண, இலாப வீடுகளில் இருக்கின், அந்தத் தானங்களின் பலன்கள் மிகுதியாகக் கிடைக்கும். எட்டு, பன்னிரண்டாம் வீடுகளில் சந்திரன், ஐந்து அல்லது ஆறு பரல்களுடன் இருந்தால், நீண்ட ஆயுளாகும்.

## இதுவுமது

பேசுமொரு விந்துடனே ஐந்தில்மதி இருக்கில்
பிறந்தவரு டத்தரிட்டம் இரண்டுவிந்தி னுடனே
மாசிலாறா மிடத்திலிருக் கிலைந்தாம் வருட
அரிட்டமாம் ஆறேழின் மூன்றுவிந்தோ டிருக்கில்
வீசுமா றாம்வயதில் கண்டமா நாலு
விந்துடனே அட்டமத்தில் வீற்றிருக்கில் தானே
காசிலாப் பன்னிரண்டு வருடத்தின் மாதே
கண்டமென வேயுரைத்தார் கற்றுணர்ந்தோர் தாமே.
70

(இ-ள்) சந்திரனின் அஷ்டவர்க்கத்தில், சந்திரன் ஐந்தாமிடத்தில் ஒரு பரலோடு இருப்பின், பிறந்த வருடத்தில் பாலகனுக்கு அரிட்டம்; இரண்டு பரல்களோடு ஆறாம் இடத்தில் இருப்பின், ஐந்தாம் வயதில் பாலகனுக்கு அரிட்டம்;

ஆறு, ஏழாம் இடங்களில் மூன்று பரல்களோடு இருப்பின், ஆறாம் வயதில் பாலகனுக்குக் கண்டமாகும்; நான்கு பரல்களோடு சந்திரன் எட்டாமிடத்தில் இருப்பின், பன்னிரண்டு வயதில் பாலகனுக்குக் கண்டம் என்று சோதிடத்தைக் கற்றுணர்ந்த வல்லுநர்கள் கூறியுள்ளார்கள்.

சொல்லுதயம் தனிலிரண்டு மூன்றுவிந்தி னுடனே
தூயகலை மதியிருக்க மாதுருத்தா னேசன்
வல்லமையாம் பெலவீன மகியே பாவ
வர்க்கமுற்றுப் பாவருட னேகூடி இருக்கில்
வெல்லுமுப்பத் தாறான்சடின் மாதுர்கண்ட மாகும்
இரண்டுமிவர் துர்ப்பலமாய்ச் சோத்தியம்கு னியமாய்
அல்லதுறின் மாதாவுக் காயுதத்தால் விஷத்தால்
அரிட்டம்வரும் எனவுரைத்தார் அறிவுடையோர் தாமே
71

(இ-ள்) சந்திரனின் அஷ்டவர்க்கத்தில், இலக்கினத்தில் இரண்டு அல்லது மூன்று பரல்களுடன் சந்திரன் இருந்து, நான்காம் இடத்தோன் பலவீனமாக, பாவரோடு சேர்ந்து அல்லது பாவர் பார்வை பெற்று இருக்கில், முப்பத்தாறு வயதில் தாயாருக்குக் கண்டமாகும். சந்திரனும் நான்காம் இடத்தோனும் வலிமையற்றுச் சந்திரன் இருந்த இராசியில் பரல்களே இல்லாமல் இருந்தால், தாயாருக்கு ஆயுதத்தால், விஷத்தால் மாரகம் வரும் என்று சோதிடத்தை கற்றுணர்ந்த சான்றோர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

## இதுவுமது

திரிகோண கேந்திரத்தில் இந்துவிந்து வுடனே
திங்களிருந் திடவந்த ராசிதனின் மற்று
மரியுமந்த இராசிநவாங் கிசத்திரவி வருங்கால்
அந்தந்தப் பாவமெல்லாம் அதிகவிர்த்தி உண்டாம்
குரியுடைய திரிகோண கேந்திரத்தின் மதிதாங்
குலவுமெட்டு விந்துடனே இருக்கின்மன்ன னாவன்
வெரிகமழ்ப்பங் கயப்பொகுட்டில் இருக்கும்இளம் கொடியே
மிகுமோரா சாரமதில் விளம்பியதில் வகையே. 72

(இ-ன்) சந்திரனுடைய அஷ்டவர்க்கத்தில் கேந்திர திரிகோணங்களில் சந்திரன் நின்று, சந்திரன் இருந்த இராசியில் ஐந்து பரல்கள் இருந்து, அந்த இராசி, நவாங்கிசத்தில் சூரியன், கோசர ரீதியாக வரும் காலத்தில் அந்தப் பாவத்தின் பலன் மிருதியாகக் கிடைக்கும். கேந்திர திரிகோணங்களில் சந்திரன் நின்று, சந்திரன் இருந்த இராசியில் எட்டு பரல்கள் இருக்க, அந்தச் சாதகன் மன்னனாவான். மணம் கமழும் தாமரை மலரில் வீற்றிருக்கும் இளங்கொடி போன்ற திருமகளே! ஓராசாரத்தில் இவ்வாறு எடுத்தோதப்பட்டுள்ளது என்பதை அறிவாயாக.

## செவ்வாய் அஷ்டவர்க்கம்

உற்றசெவ்வாய் எட்டுவித் துடனாலு பத்தி
உறையில்வெகு கிராமாதி பதியாம்மன் னவனே
சொற்திரமாம் வெகுதேவ பதியாவ னுச்ச
சொட்சேத்ர மடைந்தைந்து வித்துமுத லாக
வெற்றியுட னொன்றுபத்தோ டொன்பதுபன் னொன்றில்
வீற்றிருக்கில் கோடிதிர வியலாபம் உடையன்
கொற்றவரெட் டினிலைந்து வித்தொடுசே யிருக்கில்
கூறுசத்ரு திரவியத்தை எந்நாளும் கொள்வன். 73

(இ-ன்) செவ்வாயின் அஷ்ட வர்க்கத்தில், செவ்வாய் நான்காம் இடத்திலாவது பத்தாம் இடத்திலாவது எட்டுப் பரல்களோடு இருப்பின், அந்தச் சாதகன் ஒரு கிராமத்துக்கு அதிபதியாக விளங்குவான். அல்லது அதிக தேசங்களுக்கு மன்னவனாக விளங்குவான். செவ்வாய் உச்சம், ஆட்சி அடைந்து ஐந்து பரல்களோடு ஒன்று, பத்து, ஒன்பது, பதினோராம் இடங்களில் இருப்பின், கோடீசுவரனாக விளங்குவான். செவ்வாய், எட்டாமிடத்தில் ஐந்து பரல்களோடு விற்றிருப்பின், பகைவருடைய செல்வத்தைப் பெறுபவனாக விளங்குவான்.

## இதுவுமது

மேடலக் கனமாய்க்கா ரியுநீச மூட
மேயுநினும் ஐந்தாறு வித்துடனே இருக்கில்

நீடியவா யுளும்விர்த்தி யாகும்விய மெட்டு
நீசபகை மூடத்தில் ஒன்றிரண்டு வித்தோ
டுடியசெவ் வாயிருக்கில் பிராதுருநா சமதாம்
உயர்தனுக மேடசிங்கக் கேந்திரமாய்க் கடகம்
கூடியலக் கினகேந்திர மாகவிந்து நாலில்
குறையாமல் சேயிருக்கில் தேசாதிபதி யாமே. 74

(இ-ள்) மேட இலக்கினமாகச் சனியுடன் செவ்வாய், நீசம், மூடமாக இருந்து ஐந்து அல்லது ஆறு பரல்கள் பெற்று இருப்பின் நீண்ட ஆயுளாகும். பன்னிரண்டு, எட்டாம் இடங்களில் நீசம், பகை, மூடம் இவற்றோடு செவ்வாய் இருந்த இராசியில் ஒன்றிரண்டு பரல்கள் இருப்பின், சகோதரர்களுக்கு அழிவு ஏற்படும். தனுசு, மேடம், சிங்கம், கடகம் ஆகிய இராசிகள் இலக்கின கேந்திரமாக, அந்த இராசிகளில் செவ்வாய் நான்கு பரல்களுக்குக் குறையாமல் இருப்பின், அச்சாதகன் தேசாதிபதியாக விளங்குவான்.

## புதனின் அஷ்டவர்க்கம்

புந்தியெட்டு விந்துடனே திரிகோண கேந்திரம்
பொருந்திநிற்கில் சுயசாதி வித்தைமுற்றும் கற்பன்
விந்துவதும் ஒன்றிரண்டு மூன்றெனத்தா னத்தின்
மிக்கபுதன் இருக்கிலந்தத் தானபலம் நாசம்
சொந்தவுச்ச மானக்கால் தோடமில்லை சனியன்
சூனியத்தில் இருக்கின்மைந் தர்பந்துமே நாசம்
முந்தகி கவிந்துவிட்டி இரவிவரும் காலம்
முயன்றுவித்தை தனைப்படிப்பன் முழுவித்தை யாமே.
75

(இ-ள்) புதனுடைய அஷ்ட வர்க்கத்தில் புதன் திரிகோண, கேந்திர இராசிகளில் பொருந்தி, எட்டு பரல்களோடு நிற்கில், குலத்தொழிலை முழுமையாகக் கற்றுக் கொள்பவனாக விளங்குவான். புதன், ஒன்று, இரண்டு, மூன்று பரல்களைப் பெற்று இந்த இடங்களில் இருப்பின், அந்தந்தத் தானங்களின் பலன் குறையும். ஆட்சி, உச்சம் போன்றவற்றில் இருப்பின்

தோடம் இல்லை. புதனுடைய அஷ்டவர்க்கத்தில் சனி இருக்கும் இராசியில் பரல்களே இல்லாவிடில் பிள்ளைகள், உறவினர்களுக்கு அழிவு ஏற்படும். அதிக பரல்கள் புதனிருக்கும் இராசியில் இருப்பின் கோசர ரீதியான சூரியன் வரும் காலத்தில் இச்சாதகன் வித்தையைச் சிறப்பாகக் கற்றுக் கொள்வான்.

குருவெட்டு வித்துடனே ஆட்சிஉச்சம் கேந்திர
　　கோணத்தின் நீசமின்றி யேயிருக்கில் மன்னன்
திருவுறைவே தியனாகின் மன்னவர்க்குச் சரியாய்ச்
　　சிலதுகிரா மாதிபதி ஆவன்வணி கனெனில்
பெருகுதன பதியாவன் சூத்திரனே யாகில்
　　பிரபலமாய்ச் சேனாதி பதிப்பிரபு வாவன்
வெருவுறா நீசரெனில் செல்வவா னாவன்
　　வேலனைய கண்மடவாய் விளம்பினர்மே லவரே. 76

(இ-ள்) வேல்போன்ற கண்களைக் கொண்ட மடப்பம் பொருந்திய பெண்ணே ! குருவினுடைய அஷ்ட வர்க்கத்தில், குரு ஆட்சி, உச்சம், கேந்திர கோணம் பெற்று நீசமின்றி எட்டுப் பரல்களோடு இருந்தால், அவன் சிறந்த மன்னனாக விளங்குவான்; அச்சாதகன் அந்தணனாக இருப்பின், மன்னவனுக்குச் சரிநிகராக கிராமங்களை உடையவனாக விளங்குவான்; அச்சாதகன் வணிகனாக இருப்பின், பெருஞ் செல்வனாக விளங்குவான்; அச்சாதகன் சூத்திரனாக இருப்பின், சேனாதிபதியாக விளங்குவான். குரு. நீசனாக இருப்பின், செல்வனாக இருப்பான் என்று சோதிடத்தில் வல்லவர்கள் விளம்பியுள்ளார்கள்.

ஏழுவித்தி னுடன்பொன்னோன் முன்சொன்ன படியே
　　இருக்கில்வெகு தாரத்தை இனிதாகக் கொள்வன்
நீளுமைந்து வித்துடனே நாலில்பொன் இருக்கில்
　　நிகரில்வெகு வாகனமுண் டாகுமெனச் சொல்வார்
கேளுமொன்று முதல்நாலு வித்துடனே கோண
　　கேந்திரத்தில் பொன்னிருக்கில் அப்பலன்தான் சொற்பம்
கோளுறுநீ சத்தையுயிர்த் தூர்ப்பலமாய் வித்து
　　குறைந்தக்கால் தேசபிரட் டமுறும் கூறே. 77

(இ-ன்) முன்பு சொன்னபடி ஏழு பரல்களோடு குரு விளங்கினால், அதிக தேவியரைப் பெற்றிருப்பான். குரு ஐந்து பரல்களோடு, நான்காம் இடத்தில் இருப்பின், அதிக வாகனங்களைப் பெற்றவனாக விளங்குவான். ஒன்று முதல் நான்கு பரல்கள் வரை பெற்று கோண, கேந்திரங்களில் இருப்பின், அதன் பலன் மிகவும் குறையும். குரு, நீசத்தையடைந்து அல்லது பலவீனமாக மிகவும் குறைந்த பரல்களைப் பெற்றிருக்கில் நாட்டை விட்டு வெளியேற நேரிடும்.

ஆனகுரு நீலத்தில் அதிகவிந்தோ டிருக்கில்
அற்பாயு ளாகுமுச்சாங் கிசந்தன்னி லேறி
ஈனமுறு இராசபங்க ராசயோ கத்தான்
எட்டாறு பன்னிரண்டில் விந்ததிக மாகில்
நாளிகர்சத் துருநாசம் ஆயுள்விர்த்தி உண்டாம்
தராதரங்கண் டறிந்துசொற்ப விரயமே செய்வான்
ஊனமில்வித் துகுறையில் விபரீதப் பலமாம்
உரகபணா முடியல்குல் ஒப்பியபொற் கொடியே 78

(இ-ன்)பாம்பின் படத்தையொத்த அல்குலைக் கொண்ட பொற்கொடி போன்ற பெண்ணே! குரு, சனியினுடைய வீட்டில் அதிக பரல்களோடு இருப்பின், அற்பாயுளாகும். உச்சாங்கிசத்தில் இருப்பின் இராசயோகமாகும். எட்டு, ஆறு, பன்னிரண்டாம் இடங்களில் குரு, அதிக பரல்களோடு இருப்பின், பகைவர்கள் அழிவர், நீண்ட ஆயுள் உண்டு. சொற்ப விரயம் உண்டாகும். அவ்வாறன்றி இவ்விடங்களில் குரு, குறைந்த பரல்களோடு இருக்கில் விபரீதப் பலன்களாகும்.

எதிர்மூன்று பன்னொன்றில் விந்துதான் ஏறி
இனியசகோ தரவிர்த்தி இனியதன லாபம்
சதிரில்விந்து குறைந்தக்கால் விபரீதப் பலமாம்
அட்டாட்ட வியமின்றி விந்துவே ஏறி
பதியுமந்த இராசியே இலக்கநே சனுக்கே
பட்சமுறத் தானந்த இராசிஇலக் கனத்தில்
அதிகப்பிரி யத்துடனே திரிகோணம் செய்யில்
அழகான சந்ததியுண் டாகுமென்றார் ஆய்ந்தோர். 79

(இ-ள்) மூன்று, பதினொன்று ஆகிய இடங்களில் பரல்கள் அதிகமாக இருப்பின், சகோதரர்கள் பிறப்பர். செல்வ இலாபம் உண்டாகும். இவ்விடங்களில் பரல்கள் குறைந்து இருப்பின், எதிர்மறையான பலன்களாகும். ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களில் அல்லாமல், பிற இடங்களில் பரல்கள் அதிகமாக இருந்து அந்த இராசி, இலக்கினேசனுக்குத் திரிகோணத்தில் அமைந்து இருந்தால் அழகான சந்ததிகள் உண்டாகுமென்று சோதிடத்தை ஆய்ந்தோர் கூறியுள்ளார்கள்.

## இதுவுமது

மந்திரியட் டகவர்க்கத் தினில்விந்து மீறில்
வருநீச மூடசத்துரு அன்றியே இருக்க
வுந்துசுப ரிருக்கநல்லோர் பார்க்கவந்த இராசி
உதயத்தில் திரிகோணம் செய்யின்மைந் தருண்டாம்
முந்துகொறி முதல்மீனம் வரையில்பன்னி ரண்டு
மும்மூன்றாய்ப் பிரித்ததனில் விந்ததிக ரிக்கில்
சொந்தவாக் னந்தனதா னியம்வஸ்த்ரா பரணம்
தோற்றுமந்த முகம்பொக்கிஷம் வீடுகட்ட நலனே! 80

(இ-ள்) குருவின் அஷ்ட வர்க்கத்தில் ஒரு இராசியில் சுபக்கோள்கள் நீச மூடம் இன்றி, அதிக பரல்களுடன் இருக்கில், அந்த இராசி இலக்கினத்திற்குத் திரிகோணத்தில் இருந்தால், மைந்தர்கள் உண்டாம். மேட இராசி முதல் மீன இராசி வரையிலான பன்னிரண்டு இராசிகளையும் மும்மூன்றாகப் பிரித்துப் பார்க்க, குரு நின்ற பகுதியில் பரல்கள் அதிகமாக இருப்பின், சொந்த வாகனம், செல்வம், தானியம், உயர்ந்த பட்டாடைகள், உயர்ந்த அணிகலன்கள், வீடு முதலானவற்றைப் பெற்று அச்சாதகன் அனைத்து நலன்களுடன் விளங்குவான்.

ஈனவிந்து இராசியி லே இரவி வருங்கால்
இனியசுப சோபனங்கள் யாத்திரைக்கா காது
வானபாக் கியன்தருமத் ததிகுருவி னுக்கே
அருட்கேத்திரம் தனில்மூன்று விந்துகுறை யாமல்

ஆளமுற வெயிருக்கில் குலசிலாக் கியனாம்
சாற்றியசோத் தியவிந்து இவ்வண்ணம் இருக்கில்
நாளிலமேல் தளபதியாய்க் குலசிலாக் கியனாம்
நாளுக்குநாள் கீர்த்திதுலங் கும்செல்வ னாமே. 81

(இ-ள்) குருவின் அஷ்ட வர்க்கத்தில், குறைந்த பரல் உள்ள இராசியில் சூரியன் கோசர ரீதியாக வரும் காலத்தில் சுப காரியங்கள், யாத்திரைகள் செய்யக் கூடாது. ஒன்பதாம், பத்தாம் இடங்களில் உள்ள குருவுக்குக் கேந்திரங்களில் மூன்று பரல்களுக்குக் குறையாமல் இருப்பின், குலத்தோரால் போற்றப்படுவான். குரு இருக்கும் இராசியிலும் மூன்று பரல்களுக்குக் குறையாமல் இருந்தால் செல்வமுடையவனாக குலத்தோரால் போற்றப்படுவான். புகழும் செல்வமும் நாளுக்குநாள் உயரும்.

## இதுவுமது

ஒன்றேட்டுக் குடையவர்கள் இருவரிலே ஒருவர்
உயர்குருகேந் திரத்திலைந்து விந்துகுறை யாமல்
வென்றியுட னேயிருக்கில் பிதாவிலும்பிர தாபன்
மிகும்ஒன்றொன் பதுக்குடையோன் இரவிக்குக் கேந்திர
துன்றியகோ ணத்திலைந்த விந்துகுறை யாமல்
சொட்சேத்திர உச்சநவாங் கிசம்பெற்றே இருக்கில்
தென்திசையா சாரியனாம் தேசாதி பதியாம்
தெண்டநா யகனாவான் குலமறைகண் டுரையே. 82

(இ-ள்) இலக்கினத்திற்கு அதிபதி, எட்டாமிடத்திற்கு அதிபதி ஆகிய இருவரிலே ஒருவர், குருவினுடைய கேந்திரத்தில் ஐந்து பரல்களுக்குக் குறையாமல் இருக்கில், தந்தையைக் காட்டிலும் புகழ்படைத்தவனாக விளங்குவான். இலக்கினாதிபதி, பாக்கியாதிபதி ஆகியோர் சூரியனுக்குக் கேந்திர கோணங்களில் ஐந்து பரல்களுக்குக் குறையாமல் ஆட்சி, உச்சம், நவாங்கிசம் பெற்று இருக்கில், ஆசாரியனாகவோ, மன்னவனாகவோ சேனாதிபதியாகவோ, அவரவர் குலத்துக்கு ஏற்றவாறு விளங்குவான்.

## இதுவுமது

பொன்னவனுக் கைந்திடத்தில் விந்துளதேல் மைந்தர்
    பொருந்துறதுர்த் தானமொன்றின் மைந்தரே இல்லை
மின்னுகுரு வுக்கந்த இராசியதி பதிதான்
    மேடமுதல் எத்தனையங் கிசமேறி னானோ
வன்னிலக் கினத்தோன்பஞ் சமத்தோன்பொன் னவனுக்
    கதிநீச மூடபகை விந்தெல்லாம் அகற்றி
இன்னலின்றி நிறைவிந்தே ஆண்பெண்ணின் தொகைகள்
    டிவ்வளவென் புத்ரசங்கை இயம்புவர்மே லவரே. 83

(இ-ள்) குருவிற்கு ஐந்தாமிடத்தில் பரல்கள் இருப்பின், மைந்தர்கள் உண்டு. குரு தீய இடங்களில் இருப்பின், மைந்தர்கள் இல்லை. குரு இருக்கும் வீட்டின் இராசியாதி மேடம் முதலாக எந்தநவாம்சத்தில் ஏறியுள்ளானோ அவன் இலக்கினத்ததிபதி, ஐந்தாமிடத்துக் கதிபதி, குருவிற்கு நீச, மூட, பகை முதலான பரல்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஆண், பெண் பிள்ளைகளின் தொகையினைக் கூற வேண்டும் என்று சோதிடவல்லவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.

## இதுவுமது

விந்தேரெண் டைந்தேழோன் பதிலுதயத் ததிக
    விந்துடனே பாபியர்கள் சுபர்களிருந் தாலும்
மைந்தருவாம் வெகுபுத்ராள் குருநின்ற இராசிக்
    கைந்தாலே ழதனில்விந்து சமனாக இருக்கின்
மைந்தரில்லை என்பர்குரு பலமாய்நின் றாலும்
    மன்றுபுத்ர ரில்லைநத்து புத்திரருண் டாகும்
தந்தவைந்தோ டாறேழில் குருசாமி அந்த
    தானத்தோன் நிற்கினும்பார்க் கினும்தோட மிலையே.
84

(இ-ள்) இரண்டாமிடம், ஐந்தாமிடம், ஏழாமிடம் ஆகிய வற்றில் அதிக பரல்களுடன் பாவக் கோள்களும் சுபக் கோள்களும் இருப்பின், அதிக மைந்தர்கள் தோன்றுவர். குரு நின்ற இராசிக்கு ஐந்தாமிடம், ஏழாமிடம் ஆகியவற்றில் பரல்கள்

சம எண்ணிக்கையில் இருந்தால், மைந்தர்கள் இல்லை என்பர். இவர்களுக்குக் குரு பலமாக இருந்தாலும் மைந்தர்கள் இல்லை. தத்து புத்திரர்கள் இருப்பார்கள். ஐந்தாமிடம், ஏழாம் இடத்திலும் குரு, இலக்கினாதிபதி, ஐந்தாமிடத்து அதிபதி நின்றாலும் பார்த்தாலும் தோஷம் இல்லை.

### சுக்கிர அஷ்டவர்க்கம்

வெள்ளியெட்டு வித்துடனே கேந்திரதிரி கோண
மீதிருக்கில் பிறந்தநாள் முதலுள்ள மட்டும்
சொல்லியசம் பத்துடைய வாகனமும் உடையன்
சுங்கனேழ் வித்துவுடன் இவ்வண்ணம் இருக்கில்
தன்னரிய நவரத்தின பூடணபோக் கிஷத்தின்
தானீச மூடந்துர்த் தானமெனில் பவழம்
கொள்ளுமஞ் சாறேழு வித்துடனே கேந்திரம்
குறுகிடிலத் தனைதாரங் கொள்வவனெனக் கூறும்.

85

(இ-ள்) சுக்கிரனின் அஷ்டவர்க்கத்தில், சுக்கிரன், கேந்திர திரிகோணங்களில் எட்டுப் பரல்களுடன் இருக்கில், அச்சாதகன், பிறந்தநாள் முதல் வாழ்நாள் வரை நிறைந்த செல்வங்களும் வாகனங்களும் உடையவனாக இருப்பான். இதே போன்று சுக்கிரன் ஏழு பரல்களுடன் இருந்தால், நவரத்தினங்களால் ஆன அணிகலன்களைப் பெற்றவனாக விளங்குவான். சுக்கிரன் அந்த இராசியில் நீசம், மூடம் பெற்றிருந்தாலோ, அந்த இராசி சுக்கிரனுக்குத் தீய வீடாகவோ இருப்பின், பவழ அணிகலன்களைப் பெற்றிருப்பான். சுக்கிரன் கேந்திரத்தில் ஐந்து, ஆறு, ஏழு பரல்களுடன் இருந்தால், அத்தனை தேவியர் அவனுக்கு உண்டு என்று சொல்லுவார்கள்.

நிறையுமொன்று மூன்றிரண்டு வித்துவுடன் புகரோன்
நீசமூடம் பகையில்நிற் கில்பூத் தவனை
குறையுநீச ஸ்திரீயையணை வனென்று முதலாய்க்
கூறரிய நால்வித்து வகையாட்சி உச்சம்

முறையில்கேந் திரகோணம் தனில்புகர்தான் இருக்கின்
முதல்தனக்குத் தாழ்ந்தகுலப் பெண்ணைமணம் செய்வன்
இறையுமைந்தில் ஐந்துவித்தோ டிருக்கிலவன் திசையில்
இருக்கினத்தி தனைப்போல்வி வாகமுண்டாம் என்னே.
86

(இ-ள்) சுக்கிரன் ஒன்று, இரண்டு, மூன்று பரல்களுடன் நீசம், மூடம், பகை இராசிகளில் நின்றால் கீழான பெண்களுடன் உறவு கொள்வான். கேந்திர திரிகோணங்களில் ஆட்சி, உச்சத்துடன் நான்கு பரல்களுடன் சுக்கிரன் இருந்தால், தன்னைக் காட்டிலும் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் புரிவான். சுக்கிரன் ஐந்தாம் இடத்தில் ஐந்து பரல்களோடு இருக்கில், சுக்கிரதிசையில் ஐந்து முறை திருமணமாகும் என்று சொல்வார்கள்.

உரைத்திடும்ஐந் தாறெட்டுப் பன்னிரண்டில் தானே
ஒன்றிரண்டு மூன்றுவித் துடன்புகரே இருக்கில்
நிரைக்குமது பாவவர்க்க நீச வீடாகில்
நீசஸ்திரீ தனைச்சேர்வன் நிகரேழில் கங்கன்
வரைக்குதிரு மாகவெட்டு வித்துடனே இருக்க
மன்னுகுரு கடகத்தில் எட்டுவித் துடனே
தரைக்குள்மகிழ் வுடனிருக்க மற்றுநல்லோர் பார்க்கில்
தராபதியாய் வெகுதாரம் தனையணைந்து வாழ்வான்.
87

(இ-ள்) சுக்கிரன் அஷ்ட வர்க்கத்தில், இலக்கினத்திற்கு ஐந்து, ஆறு, பன்னிரண்டாம் இடங்களில் சுக்கிரன் ஒன்று, இரண்டு, மூன்று பரல்களுடன் இருந்து அந்த வீட்டில் பாவர்கள் இருந்து, சுக்கிரனுக்கு அது நீச வீடாக இருக்குமானால், கீழான பெண்ணைச் சேர்வான். இலக்கினத்திற்கு ஏழாமிடத்தில் கங்கன் எட்டுப்பரல்களுடன் இருக்க, கடக இராசியில் குரு எட்டுப் பரல்களுடன் இருக்க, நற்கோள்கள் பார்க்கில் பலபெண்களுடன் சேர்ந்து வாழ்வான்.

## சனியின் அஷ்டவர்க்கப் பலன்

சூரியவனட் டகவர்க்கத் தெட்டுவிந்தி னுடனே
காரியே இருந்தக்கால் கிராமாதி பதியாம்
பாரிவுடைய ஆட்சிஉச்சம் ஆகிற்றே சாதி
பதியாவன் ஒருமூன்று நாலுவிந்து வுடனே
விரிவுடைய உதயமுச்ச மாட்சியினில் இருக்கில்
வெகுஸ்திரீகள் வெகுபுத்ரர் தனதான்யம் உள்ளோன்
புரியுமைந்து வித்துடனே புகலரிய சனியன்
பொருந்திஎங்கு இருந்தாலும் தீர்க்காயுள் உண்டே.

88

(இ-ள்) சனியுடைய அஷ்ட வர்க்கத்தில், சனி எட்டுப் பரல்களுடன் இருப்பின், அச்சாதகன் ஒரு கிராமத்திற்கு அதிபதியாக விளங்குவான். சனி ஆட்சி, உச்சம் பெற்று விளங்கினால், அவ்வினத்தார்க்குத் தலைவனாக விளங்குவான். மூன்று அல்லது நான்கு பரல்களுடன் இலக்கினம், உச்சம், ஆட்சி முதலான வீடுகளில் இருப்பின், அதிக தாரங்கள், அதிக பிள்ளைகள் இருப்பார்கள். பெருஞ் செல்வம் உடையவனாக விளங்குவான். சனி, ஐந்து பரல்களுடன் எந்த வீட்டில் இருப்பினும் நீண்ட ஆயுள் உள்ளவனாக இருப்பான்.

ஒட்டிய வைந்தாறு வித்துடனோன் றிரட்டி
ஒருநாலில் ஆட்சியுச்சம் மூலத்திரி கோணம்
சூட்டியே இருக்கில்சே னாதிபதி யாவான்
சொல்லும்விய நீசமாய் ஒன்றுநான் முதலாய்
சுட்டியவிந் துடனிருக்கில் சனமுதல் தரித்ரன்
இலக்கனம்தொட் டீராறு இராசிதனி லேதான்
காட்டியதோ ரைந்துவிந்தி னுடன்சனியன் இருக்கில்
கருதுமந்த பாவபலன் வர்த்தனையுண் டாமே. 89

(இ-ள்) சனி, ஐந்தாறு பரல்களுடன் இலக்கினம், இரண்டு, நான்காம் இடங்களிலும் மூலத்திரிகோணம் முதலான இடங்களிலும் ஆட்சி, உச்சம் பெற்று இருப்பின், சேனாதிபதியாக விளங்குவான். பன்னிரண்டாமிடத்தில் சனி

நீசம் பெற்று ஒன்று முதல் நான்கு வரையிலான பரல்களுடன் இருந்தால் பிறப்பு முதல் தரித்திரனாக இருப்பான். இலக்கினத்திலிருந்து பன்னிரண்டாம் இராசியில் ஐந்து பரல்களுடன் சனி இருப்பின் அந்தத் தானத்தின் பலன் பெருகும்.

## இதுவுமது

விரும்புமொன்று நாலெட்டில் ஒன்றுமுதல் நாலு
விந்துடனே சனியிருக்கில் அற்பாயுள் உடையன்
பொருந்தியவாக் கியனினன் தரித்திரனே யாவன்
பொற்பாக இவ்வண்ணம் திரிகோணத் திருக்கில்
வருந்துமன நோயான கனரோகம் உடையன்
மன்னுசுப ருடன்கூடச் சுபர்பார்க்கில் தானே
முருந்துநகை யாய்த்தரித்திர மாரோகந் தானும்
முற்றாம னாடனிலே தணியுமெனச் சொல்லே. 90

(இ-ன்) சனியின் அஷ்ட வர்க்கத்தில், ஒன்று, நான்கு, எட்டு ஆகிய இடங்களில் ஒன்று முதல் நான்கு பரல்களுடன் சனி இருக்கில் அற்பாயுள் உடையவன். தாழ்மையும் தரித்திரமும் உடையவன். இதே போன்று திரிகோணத்தில் இருந்தால், கனரோகம் எனப்படும் மனநோய் உடையவன். திரிகோணத்தில் சனியுடன் நற்கோள்கள் சேர, அல்லது நல்ல கோள்கள் பார்க்க, தரித்திரத்துடன், நோயுடனும் உள்ள நிலை மாறும் என்று சொல்வாயாக.

## சர்வாஷ்டக வர்க்கம்

மிகுசர்வாஷ் டகவர்க்கம் இட்டதனில் தானே
மீனமுதல் மிதுனவரை நாலிரா சியிலும்
தகைகோளின் துதனையொன்றாய்க் கூட்டிமுதல் வைத்தே
தருகடக முதற்கோல் மட்டுமுன விந்தைத்
தொகுதியாய்க் கூட்டிநடு வாகவைத்துப் பின்னர்
சொல்லுந்தேள் முதல்கும்பம் வரையிலுள்ள விந்தை
பகுதியால் கூட்டியதை யொடுக்கத்தில் வைத்தூர்
படுமூன்று கண்டமெனப் பகுந்துவைத்துப் பாரே. 91

(இ-ள்) சர்வாட்டக வர்க்கத்தில் மீனம் முதல் மிதுன இராசி வரையிலுமான நான்கு இராசிகளிலும் உள்ள பரல்களைக் கூட்டி முதலானதாக வைத்துக் கொள்ள வேண்டும். கடக இராசி முதல் துலா இராசி வரையிலுமான நான்கு இராசிகளிலும் உள்ள பரல்களைக் கூட்டி நடுவானதாக வைத்துக் கொள்ள வேண்டும். விருச்சிக இராசி முதல் கும்ப இராசி வரை உள்ள பரல்களைக் கூட்டி கடைசியாக வைத்துக் கொண்டு, இவற்றை மூன்று கண்டங்களாகக் கருத வேண்டும்.

சாதகன்தன் பரமாயுள் இத்தனையென் றறிந்தே
 நாளதனை மூன்றுகண்ட மாகவே பகுத்துப்
பேதமிலா விந்துக்க ளேறியகண் டத்தில்
 பெற்றிடுவன் கனயோகம் திரவியலா பமுமே
போதருமா ரோக்கியமும் சுகமும்மிக உண்டாய்
 புகலுமா றெட்டுபனி ரண்டுள்ள விந்து
மோதுகிர கப்பெலமும் அவரவர்க்கு நீசம்
 உச்சமுடன் அஸ்தமன மூடன்தெரிந்து பாரே. 92

(இ-ள்) சாதகனுடைய ஆயுட் காலத்தைக் கணக்கிட்டு, அதனை மூன்று கண்டங்களாகப் பகுத்துப் பரல்கள் அதிகமாக உள்ள கண்டத்தில், அதிக யோகங்களையும் செல்வங்களையும் ஆரோக்கியத்தையும் சுகங்களையும் பெற்று வாழ்வான். ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் உள்ள பரல்களோடு, அங்குள்ள கிரகங்களின் பலம், நீசம், உச்சம், அஸ்தமனம், மூடம் முதலானவற்றைக் கண்டு பலன் அறிய வேண்டும்.

## இதுவுமது

அட்டமந்தொட் டுதயமட்டும் ஆணதுதா னாகும்
 ஆனஉத யம்தொடுத்தே ஆறுமட்டும் பெண்ணாம்
கிட்டிலே பூமிடமே ஆணொடுபெண் என்பார்
 கேடில்லா ஒற்றித்த ராசிவிந்து புருடன்
ரெட்டித்த ராசிவிந்து பெண்ணெனவும் சொல்வார்
 ஏதமிலாப் புருடனே வலப்பால்பெண் இடப்பால்
மட்டவிழ்பெண் கொண்டுமா துருபரம் பரையும்
 மற்றதுகொண் டேபிதுர் பரம்பரையும் சொல்வர். 93

(இ-ள்) சர்வாட்டக வர்க்கத்தில் எட்டாம் தானம் முதல் இலக்கினம் வரை ஆணாகும். இலக்கினம் முதல் ஆறுவரை பெண்ணாகும். ஏழாமிடம் ஆணொடு பெண் என்று கூறுவர். ஒற்றித்த இராசியில் உள்ள பரல்கள் ஆண்களாகும். இரட்டித்த இராசியில் உள்ள பரல்கள் பெண்களாகும். புருடன் வலப்பக்கம் பெண் இடப்பக்கம் என்பாரும் உண்டு பெண் கொண்டு தாயாரின் பரம்பரையைப் பற்றியும் ஆண் கொண்டு தந்தையின் பரம்பரையைப் பற்றியும் கூறுவர்.

## இதுவுமது

சாற்றும்சர் வாட்டக வர்க்கந்தன்னி லேதான்
சனிசெவ்வாய் இவர்கள்நின்ற இராசிதன்னி லேதான்
தேற்றியவிந் துவைக்கூட்டி யேழுதனுக் கியச்
சொல்லுமிரு பத்தேழில் தான்கழித்த பலமே
ஏற்றியதோர் வருடமென்ப ரதில்மிச்சம் தன்னை
இறலைநான் முதல்தொடங்கி எணிக்கண்ட இனத்தில்
ஆற்றரிய சனிவருங்கால் கெட்டபலன் என்ப
அம்புயத்தில் வீற்றிருக்கும் அழகியபொற் கொடியே.
94

(இ-ள்) தாமரை மலரில் வீற்றிருக்கும் அழகிய பொற்கொடியே ! சர்வாஷ்டக வர்க்கத்தில் சனி, செவ்வாய் இவர்கள் நின்ற இராசிகளில் உள்ள பரல்களைக் கூட்டி ஏழால் பெருக்கி, இருபத்தேழில் வகுக்க வருவது ஆண்டாகும். மீதியை அசுவனி நட்சத்திரம் முதலாக எண்ணவேண்டும். அவ்வாறு எண்ணி வரும்பொழுது எந்த நட்சத்திரம் வருகின்றதோ அந்த நட்சத்திரத்தில் கோசார ரீதியாகச் சனி சஞ்சரிக்கும் காலத்தில் தீய பலன்களாகும்.

வஞ்சமிலாச் சனிநின்ற இராசிமுதல் உதயம்
மட்டுமெண்ணிக் கண்டவிந்தை ஒன்றாகக் கூட்டி
மிஞ்சியஏ ழில்பெருக்கி இருபத்தேழில் கழித்தால்
மிகுவருட மாமதனில் மிஞ்சியசே டத்தைத்
தஞ்மாம் அசுவினியே முதலாக எண்ணி
தான்கண் நாளிகூல சனியள்வரும் காலம்

நஞ்சனையக் கெட்டபல மிதைஆண்டில் களைந்தே
நற்சேடம் தனில்சனியை நயந்துகண்டு கொள்ளே.

95

(இ-ள்) சர்வாஷ்டக வர்க்கத்தில், சனி நின்ற இராசி முதல் இலக்கினம் வரை உள்ள இராசிகளில் உள்ள பரல்களை ஏழால் பெருக்கி, இருபத்து ஏழில் வகுத்தால் வருவது ஆண்டாகும். மீதியை அசுவனி நட்சத்திரம் முதலாக எண்ண வேண்டும். அவ்வாறு எண்ணி வரும் பொழுது எந்த நட்சத்திரம் வருகிறதோ அந்த நட்சத்திரத்தில் கோசார ரீதியாகச் சனி சஞ்சாரம் செய்யும் காலத்தில் தீய பலன்களாகும்.

## இதுவுமது

ஊனுதயம் முதல்சனியன் இருந்தவிந்தத் தனையும்
ஒன்றாக்கிக் குளிகன்முதல் சனிநின்ற வரையில்
காணும்விந்தின் தொகைகண்டே உதயம்முதல் செவ்வாய்
கலந்துநின்ற இராசிமட்டில் உள்ளவிந்தும் எண்ணிப்
பூணுமிந்த மூன்றுவகை விந்துமான்றாய்க் கூட்டிப்
புகழுமே ழில்பெருக்கி இருபத்தேழ்க் களித்தால்
தேனுமாண் டாமதற்கு மிச்சமக விளியைத்
தொட்டெண்ணிக் கண்டநாள் சனிவாரின்ம ரணமே

96

(இ-ள்) சர்வாஷ்டக வர்க்கத்தில் இலக்கினம் முதல் சனி இருக்கும் இராசி வரை உள்ள பரல்கள் அனைத்தையும் கூட்ட வேண்டும். இலக்கினம் முதல் செவ்வாய் நிற்கும் இராசி வரையில் உள்ள பரல்கள் அனைத்தையும் கூட்ட வேண்டும். (குளிகன் நின்ற இராசி முதல் சனி நின்ற இராசி வரை உள்ள பரல்கள் அனைத்தையும் கூட்ட வேண்டும்). பின்னர் மூன்று கூட்டுத் தொகைகளையும் ஒன்றாகக் கூட்டி ஏழால் பெருக்கி, இருபத்து ஏழால் வகுக்க வேண்டும். ஈவு ஆண்டாகும். மீதியை அசுவனி நட்சத்திரம் முதல் எண்ண வேண்டும். எந்த நட்சத்திரம் வருகிறதோ அந்த நட்சத்திரத்தில் சனி வரும் காலத்தில் சாதகர்க்கு மரணம் நேரிடும் என்பர்.

## இதுவுமது

இயல்சர்வாஷ் டகவர்க்கம் தன்னிலிலக் கனத்தில்
எத்தனைவிந் திருந்ததோ அத்தனையாண் டதன்மேல்
தயவுபெறு சவுக்கியமாம் அவருக்கே அதிபன்
சனிவீட்டில் இருக்கவன்றி சனியுடனே இருக்க
வயர்விலா எட்டோனுக் கிறைவரெண்டு பேரில்
அடுத்திருபத் தைந்துவிந்தில் குறைந்தவிந்தோ டிருக்கில்
செயுமுதய இலக்கனத்தில் எத்தனைவிந் துளவோ
சிறந்தவந்தத் தொகைவருடம் கண்டமெனச் செப்பே. 97

(இ-ள்) சர்வாஷ்ட வர்க்கத்தில் இலக்கினத்தில் எத்தனை பரல்கள் உள்ளனவோ, அத்தனை ஆண்டுகளுக்கு மேல் நன்மைகள் உண்டாகும். இலக்கினாதிபதி சனி வீட்டில் இருக்க, அல்லது சனியுடனே சேர்ந்து இருக்க, எட்டாமிடத்திற்கு அதிபதி, சனி ஆகிய இருவரில் ஒருவர் இருபத்து ஐந்து பரல்களைக் காட்டிலும் குறைந்த பரல்களோடு இருக்கில், இலக்கினத்தில் எத்தனைப் பரல்கள் உள்ளனவோ அந்தத்தொகை ஆண்டு அச்சாதகனுக்குக் கண்டம் என்று சொல்வாயாக.

## இதுவுமது

எடுத்தநா லுக்கிறைவன் இலக்கனத்தில் இருக்க
இலக்கனத்தில் இலாபேசன் இருக்க இவர் தாமே
அடுக்குடனே முப்பத்து மூன்றுவிந்துக் குறையா
தடைந்திருக்கில் பூமிபரி பாலனமே செய்வன்
வகுத்தவிரு நாலொன்றுக் குடையவர்கள் கிரக
மாறிநின்று முப்பத்து மூன்றுபரல்வித் துடனே
தொகுத்தபல மாயிருக்கின் மிகுந்தருள்சம் பத்தும்
சகலவசதி உடையனெனச் சொல்லுவர்பெண் ணரசே. 98

(இ-ள்) பெண்களுக்கெல்லாம் அரசியாக விளங்குபவளே ! இராசிச் சக்கரத்தில் நான்காமிடத்துக்கதிபதி இலக்கினத்தில் இருக்க, இலக்கனத்தில் இலாபாதிபதி இருக்க, அவ்விடத்தில் முப்பத்து மூன்று பரல்கள் இருப்பின், மன்னனாக விளங்குவான். நான்காமிடத்துக்கு உடையவனும் இலக்கனாதிபதியும் கிரகம் மாறி நின்று (பரிவர்த்தனைப் பெற்று) முப்பத்து மூன்று பரல்களுடன்

பலம்பெற்று இருக்கில், மிகுந்த பாக்கியங்கள் பெற்று அனைத்து வசதிகளுடனும் சுகமாக வாழ்வான் என்று சொல்லுவார்கள்.

மூடவன்பாக் கியத்திலிரு பத்தைந்து முதலாய்
முப்பதுவித் துக்குள்வரை யுடனிருக்கி லேதான்
திடமுறவே வயதிருபத் தெட்டுக்கு மீது
செய்யநர வாகனமும் உடையனெனை வாகும்
துடருதயம் கருமத்தில் இலாபத்தில் தானே
சொல்லியமுப் பதுவித்தில் குறையாம லிருக்கில்
திடமுடைய வதுவுந்தான் நாற்பதுக்கு மீது
செப்பரிய தேசாதி காரனென்பர் தெரிந்தோர். 99

(இ-ள்) சனி, பாக்கியஸ்தானத்தில் இருபத்து ஐந்து முதல் முப்பது பரல்கள் வரை பெற்று இருக்கில், இருபத்தெட்டு வயதிற்கு மேல் உயர்ந்த வாகனங்களைப் பெற்றவனாக விளக்குவான். இலக்கினம், பத்தாமிடம், பதினோராமிடம் இவற்றில் முப்பது பரல்களுக்குக் குறையாமல் இருந்தால், நாற்பது வயதிற்கு மேல் தேசத்திற்கு அதிபதியாக விளங்குவான் என்று சோதிடம் தெரிந்தோர் கூறியுள்ளார்கள்.

## இதுவுமது

ஆறுக் குடையோன் சுபனாகி
அரிய சனிசே யுடன்கூடிக்
கூறிட் டிடுமுப் பதுவித்தில்
குறையா திருக்கில் அதிபதியாம்
வீறித் திருக்கும் சத்துருவை
வென்றே அவர்தன் இராச்சியதன்
பேறுற் றடைவன் செழுங்கமலப்
பெண்ணா ரமுதே பெண்ணரசே. 100

(இ-ள்) செழித்திருக்கும் தாமரை மலரில் வீற்றிருக்கும் அமுதையொத்த பெண்களுக்கெல்லாம் அரசியே ! ஆறாமிடத்திற்கு உடையவன் சுபக்கோளாகி, சனியுடனும் செவ்வாயுடனும் கூடி முப்பது பரல்களுக்குக் குறையாமல் பரல்களைப் பெற்றிருந்தால், பகைவருடைய நாட்டை வென்று அந்நாட்டிற்கும் அதிபதியாக விளங்குவான்.

## இதுவுமது

என்ற உதயம் தனினாலுக்
　　கிறைவன் முப்பான் விந்துடனே
ஒன்று மீச்சம் சொட்சேத்ரம்
　　துலங்கி இருக்கச் சுவாமிதான்
வென்றி யுடனே பெலத்திருக்கின்
　　மேன்மேல் செல்வன் அவனாவான்
கன்றி நாலா யிரக்குதிரைக்
　　கதிப னாவன் ஆரணங்கே ! 101

ஆரணங்கே ! இலக்கினத்தில் நான்காம் இடத்திற்கு அதிபதி முப்பது பரல்களுடன் நிற்க, இலக்னாதிபதி ஆட்சி வீட்டில் பலத்துடன் விளங்கினால், அச்சாதகன் மேலும் மேலும் செல்வம் உடையவனாகி, நாலாயிரம் குதிரைகளுக்கு அதிபனாவான் என்பதை அறிவாயாக.

ஆதித்தன் மேடத்தில் நாற்பதுவிந் துடனே
　　அதுகேந்திரத் திரிகோண மாகவே இருக்க
வோதியிரண் டாமிடத்துக் குடையாம்சம் பெற்றே
　　ஒன்பதினில் புகர்இருக்கில் தேசாதி பதியாம்
கோதிலா ரவிமேட இலக்கினமாய் இருக்கில்
　　கூறுநண்டில் நாற்பதுவிந் துடன்குருவே இருக்கில்
நீதிலாத் தேசாதி பத்தியமே செய்வன
　　சேலனைய விழிமானே செழுங்கமலத் தேனே ! 102

(இ-ள்) கயல்மீன் போன்ற கண்களையும் மானையொத்த சாயலையும் கொண்ட வளப்பம் பொருந்திய தாமரை மலரின் தேன்போன்று இனிமையாக விளங்குபவளே ! சூரியன், மேட இராசியில் நாற்பது பரல்களுக்கு மேல் பெற்றிருந்து அந்த இராசி கேந்திர திரிகோணமாக இருந்து, இரண்டாமிடத்துக்குடைய அம்சம் பெற்று, ஒன்பதாம் இடத்தில் சுக்கிரன் இருந்தால், தேசாதிபதியாக விளங்குவான். மேட இலக்கினத்தில் சூரியன் இருக்க, கடகத்தில் நாற்பது பரல்களுடன் குரு இருந்தால், மன்னனாக அரசாட்சி செய்வான் என்பதை அறிவாயாக.

## இதுவுமது

ஓங்குசெவ்வாய் முப்பத்து மூன்றுவிந்து தானே
உயர்மகராங் கிசத்தில்தான் மகரத்தி லேதான்
தீங்கில்லாத் திரிகோணம் கேந்திரமே யாகில்
செயவிலங்கை முதல்கங்கை வரைக்குமதி பதியாம்
பாங்கின்முப் பத்தாறு விந்துடனு தயவாடயம்
பகருஞ்சஞ் சொட்சேத்திர மாகிச்சேய் இருக்க
பூங்கொடியே நாலிடத்தில் சனிதான்சுக் கிரன்தான்
பொருந்திநின் றிடில்சேது வரைக்குமதி பதியே! 103

(இ-ன்) செவ்வாய் முப்பத்து மூன்று பரல்களுடன் மகராங்கிசத்தில் அல்லது மகரத்தில் இருக்க, அது செவ்வாய்க்கு திரிகோண கேந்திர இராசியாக அமையின், இலங்கை முதல் கங்கை வரைக்குமான நாடுகளுக்கு அதிபதியாக விளங்குவான். செவ்வாய் இலக்கினம், பதினோராமிடம் ஆட்சி வீட்டில் முப்பத்தாறு பரல்களுடன் இருக்க நான்காமிடத்தில் சனியாவது சுக்கிரனாவது நின்றால், சேதுசமுத்திரம் வரைக்கும் அதிபதியாக விளங்குவான்.

உரைக்குமே டத்தி னாற்பது விந்தி
உடன்குசன் பானுவும் கூடி
நிரைத்துற இருக்கத் தனத்தில்பாக் கியத்தில்
நிலைபெறு சுக்கிரன் தானே
வரைத்திடு முச்சாங்கிசம் சேயாங்கி சத்தின்
மகிழ்ந்துயர் மேடலக் கனத்தில்
தன்ரக்குளே பிறந்தோன் சுபதி யாவன்
தண்கடல் பிறந்ததெள் ளமுதே! 104

(இ-ன்) குளிர்ந்த கடலில் தோன்றிய தெளிந்த அமுதையொத்த இனியவளே! மேடத்தில் நாற்பது பரல்களுடன் செவ்வாய், சூரியனுடன் கூடி இருக்க, இரண்டாமிடத்திலாவது ஒன்பதாமிடத்திலாவது சுக்கிரன் உச்சாங்கிசம் பெற்றிருக்க, மேட இலக்கினத்தில் செவ்வாயின் அங்கிசத்தில் பிறந்தவன் மன்னனாக விளங்குவான்.

வந்திடு மேட இலக்கின மாக
மகரத்தி லேமுப்பத் தாறு
விந்துடன் செவ்வாய் இருந்திடில் சேது
இமயமா வரைக்குமன் னவனாம்
இந்தமே டத்தில் கதிர்நிற்கக் கடகத்
தினில்குரு நாற்பது விந்தோ
டுந்துற மேட இலக்கன மாகில்
ஒருலட்சம் குதிரைக்கா திபனே. 105

(இ-ள்) மேடம் இலக்கினமாக, மகரத்தில் முப்பத்தாறு பரல்களுடன் செவ்வாய் இருந்திடில், தெற்கே சேது சமுத்திரம் முதல் வடக்கே இமயமலை வரைக்கும் மன்னனாக விளங்குவான். இந்த மேட இராசியில் சூரியன் நிற்க, கடகத்தில் குரு நாற்பது பரல்களுடன் விளங்க, மேடம் இலக்கினமாகில் ஒரு இலட்சம் குதிரைகளுக்கு அதிபதியாக விளங்குவான்.

உயர்சிலை உதயம் தன்னாற் பதுவிந்
துடன்குரு இருக்கமீ னத்தில்
அயர்வில்சுக் கிரனும் மகரத்தில் சேயும்
அழகிய கும்பத்தில் சனியும்
முயலவே இருக்கில் உலகெ லாம்புகழ்
மூன்றுசிங் காதனம் தனக்கே
செயமிகு மன்னன் ஆவனென் றுரைத்தார்
திருந்திய தவமுனி யாரே ! 106

(இ-ள்) தனுசு இலக்கினமாக அதில் நாற்பது பரல்களுடன் குரு இருக்க, மீன இராசியில் சுக்கிரனும் மகர இராசியில் செவ்வாயும், கும்ப இராசியில் சனியும் இருந்தால் உலகமெல்லாம் புகழும் வண்ணம் மூன்று சிங்காதனங்களுக்கு வெற்றியுடைய மன்னனாக ஆவான் என்று திருந்திய தவமுனிவர்கள் கூறியுள்ளார்கள்.

அட்டகவர்க் காயுள்தா மதனையே அறையில்
அருக்கன்மதி செய்மால்பொன் அசுரர்மந்திரி சனியன்
இட்டமுடன் அவரவர்கள் கொடுத்தவரு டத்தை
எடுத்தோர்தொகை யாய்க்கூட்டி இவ்வளவென் றறிந்தே
வட்டமதி இருந்தவஞ்ச ராசிதனக் கதிபன்
வருடமுதல் ஏழ்வருட திசைநடத்தல் என்பார்
கட்டழகும் ஒப்பனையும் ஒவியான் மிக்கோர்
கைவருந்தி எழுதரிதாங் கன்னியருக் கரசே ! 107

(இ-ள்) கட்டழகும் அலங்காரமும் மிகுந்த ஒவியரும் கைவருத்தி எழுதுவதற்கு அரிதான கன்னியருக்கு அரசே ! அஷ்டவர்க்கத்தில் ஆயுளைப் பற்றி செல்ல வேண்டுமென்றால், சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன் ஆகியோர் கொடுத்த ஆண்டுகளை கூட்டி அறிந்து, சந்திரன் இருந்த அங்கிச இராசிக்கு அதிபன் ஆண்டு முதல் ஏழு ஆண்டுகள் திசை நடத்தல் என்று கூறுவர்.

திருந்திய பார்மேல் அஷ்டக வர்க்கச்
சிறப்பினைக் கங்கைவளர் சடையோன்
முருந்துறல் முறுவல் உமையவட் குரைத்த
முதுமறை தனைமுனி வர்கள்
பொருந்திய பொருளால் வடமொழி யதனால்
புகன்றனர் அதனைச்செந் தமிழால்
அருந்தவன் செல்வன் தில்லைநா யகவேள்
அரும்பொருள் விரித்துரைத தனனே. 10

(இ-ள்) கங்கையைத் தன்சடாமுடிமேல் தாங்கிய சிவபெருமான் புன்னகை பூத்த உமையவளுக்கு உரைத்த பழமைமிகு வேதப்பொருளை, முனிவர்கள் வடமொழியில் பொருள் பொதித்ததாக எடுத்துரைத்ததை அருந்தவச் செல்வனாகிய தில்லைநாயகம் அரும்பொருளாக விரித்துரைத்துள்ளார்.

அஷ்டவர்க்கம் முற்றிற்று

# நூல் - 2

## சோதிடம் - அஷ்ட வர்க்கம்[1]

## சூரியன் அஷ்ட வர்க்கம்

109. சூரியன்தன் அட்டவர்க்கப் பரல்தான் பார்க்கச்
சொல்லுகிறேன் (ஒன்றிரண்டு நாலேழ் எட்டுச்)
சாரமாய் ஒன்பதுபத்(து) பதினொன் றாகும்
சந்திரர்க்கு மூன்றாறு பத்துப்பதி னொன்று
பாரான குசன்தனக்கு ஒன்றிரண்டு நாலேழ்
பின்னுமெட் டொன்பதுபத் துப்பதி னொன்று
சீரான புந்திக்குமூன் றஞ்சா றொன்பது
சிறந்தபத்துப் பதினொன்றுபன் னிரண்டு சொல்லே (1)

(இ-ள்) சூரியனில், (சூரிய அஷ்ட வர்க்கத்தில்)

| | | |
|---|---|---|
| சூரியன் | 1,2,4,7,8,9,10,11 | ஆக எட்டு |
| சந்திரன் | 3,6,10,11 | ஆக நான்கு |
| செவ்வாய் | 1,2,4,7,8,9,10,11 | ஆக எட்டு |
| புதன் | 3,5,6,9,10,11,12 | ஆக ஏழு |

110. சொல்லக்கேள் சூரியனில் குருதனக்கஞ் சாறு
தொகுப்பான ஒன்பதுடன் பதினொன்று மாகும்
நல்லவெள்ளிக் காறேழு பன்னிரண்டு மாகும்
நற்காரிக் கொன்றிரண்டு நாலே வெட்டுத்
துல்லியமாய் ஒன்பதுபத் துப்பதி னொன்று
சூரியன்தன் இலக்கனத்தில் மூன்றுநா லாறு
வல்லபத்துப் பதினொன்று பன்னிரண்டுங் கூட்டி
வாய்ப்பாக வேபரலை நாற்பத்தெட்டுக் கூட்டே. (2)

| | | |
|---|---|---|
| (இ-ள்) வியாழன் | 5,6,9,11 | ஆக நான்கு |
| சுக்கிரன் | 6,7,12 | ஆக மூன்று |
| சனி | 1,2,4,7,8,9,10,11 | ஆக எட்டு |
| இலக்கினம் | 3,4,6,10,11,12 | ஆக ஆறு |

ஆகச் சூரியனுக்கு அஷ்ட வர்க்கப்பரல் 48-ம் சரி

1. சுவடி. எண் 802 (b)

## சந்திரன் அஷ்ட வர்க்கம்

111. கூட்டுவீர் சந்திரனிற் சூரியன்றன் பரலைக்
கூறுவீர்மூன் றாறேழெட்டுப் பத்துப்பதி னொன்று
நாட்டுவீர் மதிக்கொன்று மூன்றாறேழ் பத்து
நயமாகப் பதினொன்றும் நாடிச் சேரு
மூட்டுவீர் குசன்தனக்கு ரண்டுமூன்றஞ் சாறு
மும்மூன்றும் பத்தும்பதி னொன்றுங் கூட்டு
தீட்டுவீர் புதன்தனக்கொன் றுமூன்றுநா லஞ்சேழ்
தேர்ந்துபார் எட்டுபத்துப் பதினொன் றாமே.

(3)

(இ-ள்) சந்திரனில், (சந்திர அஷ்ட வர்க்கத்தில்)

| | | |
|---|---|---|
| சூரியன் | 3,6,7,8,10,11 | ஆக ஆறு |
| சந்திரன் | 1,3,6,7,10,11 | ஆக ஆறு |
| செவ்வாய் | 2,3,5,6,9,10,11 | ஆக ஏழு |
| புதன் | 1,3,4,5,7,8,10,11 | ஆக எட்டு |

112. பதிவான சந்திரனில் குருவுகொன் றிரண்டு
பண்புடனே நாலெட்டு பத்துப்பதி னொன்று
மூதியசுங் கன்தனக்கு மூன்றுநாலஞ் சேழொன்பது
மூகனைபெறப் பத்துப்பதி னொன்றுங் கூட்டு
அதியசனிக் கேமூன்றஞ் சாறுபதி னொன்று
ஆலைக்க மூன்று பத்துப்பதி னொன்று
மதியினுட பரல்தொகையே நாற்பத் தொன்ப
தென்றுவர ரிஷிபகவான் வகுத்த வாறே. (4)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| வியாழன் | 1,2,4,7,8,10,11 | ஆக ஏழு |
| சுக்கிரன் | 3,4,5,7,9,10,11 | ஆக ஏழு |
| சனி | 3,5,6,11 | ஆக நான்கு |
| இலக்கினம் | 3,6,10,11 | ஆக நான்கு |

ஆகச் சந்திரனுக்கு அஷ்ட வர்க்கப்பரல் நாற்பத்து ஒன்பதும் சரி.

## செவ்வாய் அஷ்ட வர்க்கம்

113 வாகான செவ்வாயில் பருதிப்பரல் மூன்றஞ்சு
வளமான ஆறுபத் துப்பதி னொன்று
ஆகமுறும் அம்புலிக்கு மூன்றாறு பதினொன்
றதியசேய்க் கொன்றுரண்டு நாலேழ் எட்டுப்
பாகமுட னேபத்தும் பதினொன்றுஞ் சேரு
பகர்புந்தி மூன்றஞ்சா றுபதி னொன்று
ஏககுரு ஆறுபத்து பதினொன்று பனிரண்டு
இயல்(பாகச்) சுக்கிரனுக் காறெட்டுப் பதி
னொன்றுபனி ரண்டே. 5

(இ-ள்) செவ்வாயில், (செவ்வாய் அஷ்ட வர்க்கத்தில்)

| | | |
|---|---|---|
| சூரியன் | 3,5,6,10,11 | ஆக ஐந்து |
| சந்திரன் | 3,6,11 | ஆக மூன்று |
| செவ்வாய் | 1,2,4,7,8,10,11 | ஆக ஏழு |
| புதன் | 3,5,6,11 | ஆக நான்கு |
| குரு | 6,10,11,12 | ஆக நான்கு |
| சுக்கிரன் | 6,8,11,12 | ஆக நான்கு |

## புதன் அஷ்ட வர்க்கம்

114 பதிவான சனிக்கொன்று நாலேழ் எட்டுப்
பாகமுட னொன்பதுபத் துப்பதி னொன்று
மூதியலக் கனந்தனக்கு ஒன்றுமூன் றாறுபத்து
முழுக்குபரல் பதினொன்று தொகைமுப்பத் தொன்பது
அதியபுந்தி தனக்கருக்கன் அஞ்சா றொன்பது
அறிவாகப் பதினொன்றும் பன்னிரண்டும் கூட்டே
புதியவிந்து தனக்குரண்டு நாலா றெட்டுப்
புகழ்பெறவே பத்துப்பதி னொன்றுங் கூட்டே
(6)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சனி | 1,4,7,8,9,10,11 | ஆக ஏழு |
| இலக்கினம் | 1,3,6,10,11 | ஆக ஐந்து |

ஆகச் செவ்வாயின் பரல் முப்பத்து ஒன்பதும் சரி.

புதனில், (புதன் அஷ்ட வர்க்கத்தில்)

| | | |
|---|---|---|
| சூரியன் | 5,6,9,11,12 | ஆக ஐந்து |
| சந்திரன் | 2,4,6,8,10,11 | ஆக ஆறு. |

115 கூட்டுப்புந்தி குசனுக்கொன் (றிரண்டு)நான் கேழெட்
டுண்டாக வேபத்துப் பதினொன் றாகும்
நீட்டுபுதன் ஒன்றுமூன்றஞ் சாறொன்ப துபத்துத்
திடமாகப் பதினொன்று பன்னிரண் டாகும்
சேட்டுபுகர் ஒன்றிரண்டு மூன்றுநாலஞ் செட்டொன்
சாரமாய்ப் பதினொன்று குருவுக்கா றெட்டுடன்
தாட்டிமையாய் பதினொன்றும் பன்னிரண்டும் கூட்டு
சனிக்கொன்று ரண்டுநாலேழ் தன்னுடனே சேரு
(7)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| செவ்வாய் | 1,2,4,7,8,10,11 | ஆக ஏழு |
| புதன் | 1,3,5,6,9,10,11,12 | ஆக எட்டு |
| குரு | 6,8,11,12 | ஆக நான்கு |
| சுக்கிரன் | 1,2,3,4,5,8,9,11 | ஆக எட்டு |
| சனி | 1,2,4,7,8,9,10,11 | ஆக எட்டு |

## குரு அஷ்ட வர்க்கம்

116 சேரடா எட்டொன்பது பத்துப்பதி னொன்று
திறமான இலக்கனத்துக் கொன்றுரண்டு மூன்றுநாலு
பாரடா ஆறெட்டுப் பத்துப்பதி னொன்று
பார்த்ததொகை ஐம்பத்து நாலாகச் சொல்லு
ஏரடா குருவிலா தித்த னுக்கு
இயல்பாக ஒன்றிரண்டு மூன்றுநா லேழு
தோடா எட்டொன்பது பத்துப்பதி னொன்று
சிறந்தமதி தனக்குரண்டஞ் சேழொன்பது
பதினொன்றே. (8)

(இ-ள்)

இலக்கினத்திற்கு 1,2,3,4,6,8,10,11 ஆக எட்டு

ஆக புதன் அஷ்ட வர்க்கப்பரல் ஐம்பத்து நான்கும் சரி.

வியாழத்தில், (குருவின் அஷ்ட வர்க்கத்தில்)

| | | |
|---|---|---|
| சூரியன் | 1,2,3,4,7,8,9,10,11 | ஆக ஒன்பது |
| சந்திரன் | 2,5,7,9,11 | ஆக ஐந்து |

117 பதிவான குருவினில்செய்க் கொன்றிரண்டு நாலேழ்
பாங்குடனே எட்டு(ப்)பத்துப் பனிரெண்டு கூட்டு
அதியபுந்தி தனக்கொன்று ரண்டுநாலஞ் சாறு
அன்புபெறு மொன்பதுபத் துப்பதி னொன்று
முதியபொன் றனக்கொன்று ரண்டுமூன்று நாலேழ்
முறையாகஎட்டு(ப்)பத்துப் பதினொன்று கூட்டு
நிதிவெள்ளி தனக்குரெண்டு அஞ்சே மொன்பது
நிச்சயமாய்ப் பரல்பத்துப் பதினொன்றுங் காணே.
(9)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| செவ்வாய் | 1,2,4,7,8,10,11 | ஆக ஏழு |
| புதன் | 1,2,4,5,6,9,10,11 | ஆக எட்டு |
| குரு | 1,2,3,4,7,8,10,11 | ஆக எட்டு |
| சுக்கிரன் | 2,5,7,9,10,11 | ஆக ஆறு |

## சுக்கிரன் அஷ்ட வர்க்கம்

118 காணுவாய் சனிக்குமூன்றஞ் சாறுபன்னி ரண்டு
சுதிபெறும்லக் கனத்துக்கொன் றிரண்டு நாலு
ஊனுகுரு தனக்குப்பரல் ஐம்பத் தாறாய்
உலகில்வர ரிஷிபகவான் உரைக்கின் றார்காண்
பேணிப்பா ரஞ்சாறு ஏழொன் புதுந்தான்
பிசகாமல் பரல்பத்தும் பதினொன்றுங் கூட்டு
கோணாத வெள்ளிப்பரல் இரவிக் கெட்டு
குறிப்பாகப் பதினொன்றும் பனிரண்டும் சேரே.
10

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சனி | 3,5,6,12 | ஆக நான்கு |
| இலக்கினம் | 1,2,4,5,6,7,9,10,11 | ஆக ஒன்பது |

ஆக வியாழன் அஷ்ட வர்க்கப்பலன் ஐம்பத்து ஆறும் சரி.

சுக்கிரனில், (சுக்கிரன் அஷ்ட வர்க்கத்தில்),

| | | |
|---|---|---|
| சூரியன் | 8,11,12 | ஆக மூன்று |

119 சேர்ந்தகங்க ளிம்பிறைக்கு ஒன்றிரண்டு மூன்று
சிறந்தநா லஞ்செட் டொன் புதுபன் னொன்று
வாய்ந்தகுசன் தனக்குமூன்று நாலாறோ டொன்பது
வளமாகப் பதினொன்றும் பன்னிரண்டுங் கூட்டுச்
சேந்தபுந்தி மூன்றஞ்சா றொன்பதுபன் னொன்று
செப்பகுருவுக் கஞ்செட் டொன்று பத்துபதி னொன்று
அய்ந்துபகர் வெள்ளிக்கு ஒன்றிரண்டு மூன்நாலு
அஞ்சோடொன் புதுபத்துப பதினொன்று பரியே.
11

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சந்திரன் | 1,2,3,4,5,8,9,11 | ஆக எட்டு |
| செவ்வாய் | 3,4,6,9,11,12 | ஆக ஆறு |
| புதன் | 3,5,6,9,11 | ஆக ஐந்து |
| குரு | 5,8,9,10,11 | ஆக ஐந்து |
| சுக்கிரன் | 1,2,3,4,5,8,9,10,11 | ஆக ஒன்பது |

## சனி அஷ்ட வர்க்கம்

120 பரிவான வெள்ளிதனில் சனிக்குமூன்று நாலு
பரலஞ்செட் டொன்பதுபத் துப்பதி னொன்று
தெரிவான சுங்கனுட லக்னத்துக் கொன்று
சிறந்தரண்டு மூன்றுநா லஞ்செட் டொன்பது
புரிகுவீர் பத்துடனே பதினொன்றுங் கூட்டிப்
புகலுவீர் தொகையை ஐம்பத்து ரண்டு
கரிவோர்க்குச் சூரியனில் ஒன்றிரண்டு நாலேழ்
காணுவீர் எட்டுடனே பத்துப்பதி னொன்றாய்.
(12)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சனி | 3,4,5,8,9,10,11 | ஆக ஏழு |
| இலக்கினம் | 1,2,3,4,5,8,9,10,11 | ஆக ஒன்பது |

ஆகச் சுக்கிரன் அஷ்ட வர்க்கப்பரல் ஐம்பத்து இரண்டும் சரி.

சனியில் (சனியின் அஷ்ட வர்க்கத்தில்)

| | | |
|---|---|---|
| சூரியன் | 1,2,4,7,8,10,11 | ஆக ஏழு |

121 பத்தியுள்ள சனியில்சந் திரர்க்கு மூன்று
பாகமுட னேஆறும் பதினொன்றுங் கூட்டு
சத்தியுள்ள குசனுக்குமூன் றஞ்சாறு பத்து
தயவாகப் பதினொன்றும் பனிரண்டும் கூட்டு
வித்தைகா ரகன்தனக்கா றெட் டோ டொன்பதும்
விஜிப்பாய பத்துப்பதி ரெண்டுபனி ரெண்டு
சுத்தமுள்ள குருவுக்கஞ் சாறுபன்னொன்று பன்னிரண்டு
சுங்கனுக்கு ஆறுபன்னொன் றுபன்னி ரண்டு. 13

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சந்திரன் | 3,6,11 | ஆக மூன்று |
| செவ்வாய் | 3,5,6,10,11,12 | ஆக ஆறு |
| புதன் | 6,8,9,10,11,12 | ஆக ஆறு |
| குரு | 5,6,11,12 | ஆக நான்கு |
| சுக்கிரன் | 6,10,12 | ஆக மூன்று |

122 ஏகமுள்ள சனிக்குமூன்றஞ் சாறுபன் னொன்று
இலக்கனத்துக் கொன்றுமூன்று நாலாறுபத்துப்
பதினொன்று
ஆகவேதொ கைமுப்பத் தொன்ப தாக
அருக்கன்முதல் சனியீறாய் லக்கனத் தொகையும்
பாகமாய் முன்னூற்று முப்பத் தேழாய்
பாடினார் வராகிஷி பகவான் தானும்
தாசமுற்ற தமிழ்வல்லோர் உலகில் தேர்ந்தோர்
தானறிந்து சாதகத்தை விரித்துச் சொல்லே. 14

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சனி | 3,5,6,11 | ஆக நான்கு |
| இலக்கினம் | 1,3,4,6,10,11 | ஆக ஆறு |

ஆகச் சனி அஷ்ட வர்க்கம் பரல் முப்பத்து ஒன்பது சரி. இவ்வாறு அஷ்ட வர்க்க சக்கரங்களுக்கு உரிய பரல்கள்கள் குறித்து வராகிஷி

பகவான் வடமொழியில் பாடினார். அது குறித்து அறிந்து கொள்ள விரும்பும் தமிழ் வல்லவர்கள், உலகில் சோதிடத்தில் வல்லவர்கள் அறிந்து அதனை விவரித்துக் கூறவேண்டும்.

அஷ்ட வர்க்கம் போட்டபிறகு அதிலே திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனையென்று இரண்டு சோதனை உண்டு. (இரண்டு சோதனைகள் செய்ய வேண்டும்)

## திரிகோண சோதனை

மேடம் - சிம்மம் - தனுசு இந்தப்படி இராசி பன்னிரண்டுக்கும் நான்கு திரிகோணம் உண்டு. அதிலே ஒவ்வொரு திரிகோணத்திற்கும் மூன்று இராசிகள் உண்டு. அது சோதிக்கும்படி...

1. அந்த மூன்று இராசிகளில் பரல் குறைந்திருக்கிற இராசி எந்த இராசி என்றறிந்த அதிலும் அந்தப்படி இரண்டு இராசிகளிலும் பரல் களைந்து போடவும்.

2. மூன்று இராசிகளிலும் பரல் சரியாக இருந்தால், அந்த மூன்று இராசிகளிலும் பரல்களைச் சரியாகக் களைந்து போடவும்.

3. ஒரு இராசியிலே பரலொன்றும் இல்லாதிருந்தால், மற்ற இரண்டு இராசியும் சோதிக்க வேண்டாம் என்றறிவது.

## ஏகாதிபத்திய சோதனை

ஒரு கோளுக்கு இரண்டு கிரகம் உள்ள இடத்தே ஒன்றில் பரல் குறைந்தும் மற்ற இரண்டிலும் கோள்கள் இல்லாமலும் இருந்தால், குறைந்த தித்தனை ஏதி நின்றதில் களைந்து போடவும்.

இரண்டிலும் பரல் ஒத்திருந்து கோள்களும் இல்லாமலும் இருந்த இந்த இரண்டு இராசியிலும் பரல் முழுதும் களைந்து கோடவும். இரண்டிலும் கோளுண்டாயும் பரல் ஒத்திருந்தாலும் பரல் குறைந்திருந்தாலும் பரல் இல்லாமல் இருந்தாலும் சோதிக்க வேண்டாம் என்ற அறிவது.

ஒன்றில் கோள் இல்லாதேயும் அதிலே பரல் ஏறியும் ஒன்றிற் கோள்கள் குறைஞ்சும் இருக்க, அப்போது கோள்கள் இருக்கிற இடத்துப் பரல்போலே ஆக்குக என்றறிவது.

கோள்களிருக்கிற இடத்தே பரலேறியும் கோளில்லாத இடத்தில் குறைந்தும் இந்தால் குறைந்த இடத்துப் பரல் முழுதும் களைந்து போடவும்.

கோள்கள் உள்ள இடத்துப் பரல் குறைந்தும் கோள்கள் இல்லாத இடத்துப் பரலேறியும் இருந்தால், கோள்கள் இருக்கிற பரல்படி களைந்து போடவும்.

ஒன்றில் கோள்கள் உண்டாய் பரலும் உண்டாய், ஒன்றில் கோளுமில்லாமல் பரலும் ஒத்திருந்தால், கோளும் இல்லாத இடத்துப் பரல் களைந்து போடவும்.

இந்தப்படிக்கு இருவகைக்கும் சோதனை சோதிச்ச சோத்திய பிண்டம் அறிவது.

இராசி குணகாரம் கிரக குணகாரம் என்று இரண்டுண்டு.

## இராசி குணகாரம்

இராசிதோறும் இருந்த சோத்தியங்களைப் பெருக்கி ஒருவரிசையாகப் புறம்பாக வைப்பது.

## கிரக குணகாரம்

கோள்கள் நின்ற இராசி தோறும் இருந்த சோத்தியங்களைப் பெருக்கி, ஒரு வரையாக பிறம்பாக வைப்பது. ஆக இரண்டும் பெருக்கிப் பிறம்பாக வைத்து ஒன்றாய்க் கூட்டச் சோத்திய பிண்டமாம் என்றறிவது.

## இராசி குணகாரம் பெருக்கிறதுகரு வகை

இடபம் - சிங்கமும் பத்தில் பெருக்க மிதுனமும் விருச்சிகமும் எட்டில் பெருக்க மேட துலாம் ஏழில் பெருக்க

கன்னி, மகரம் ஐந்தில் பெருக்க கற்கடகம் நான்கில் பெருக்க. தனுசு ஒன்பதில் பெருக்க. கும்பம் பதினொன்றில் பெருக்க மீனம் பன்னிரண்டில் பெருக்க என்றறிவது.

### கிரக குணகாரம் பெருக்கிறதுககு வகை

ஆதித்தனுக்கு ஐந்தில் பெருக்க, சந்திரனுக்கு ஐந்தில் பெருக்க, செவ்வாய்க்கு எட்டில் பெருக்க புதனுக்கு ஐந்தில் பெருக்க. வியாழத்துக்குப் பத்தில் பெருக்க. சுக்கிரனுக்கு ஏழில் பெருக்க. சனிக்கு ஐந்தில் பெருக்க என்றறிவது.

கிரக குணகாரம், இராசி குணகாரம் ஏகாதிபத்திய சோதனை, திரிகோண சோதனை மூற்றும்.

### ஆதித்தன் அஷ்ட வர்க்கம்
### அஷ்ட வர்க்கத்துக்கு வகை சொல்லும்படி

ஆதித்தன், பிராண காரகன், பிதுரு காரகன், தேவ காரகன், ஆத்ம காரகன், திவரகாரகன், அத்தி காரகன், இராச காரன், நித்தியகாரகன் என்று அறிவது.

ஆதித்தனுக்கு அஷ்டவர்க்கம் இட்டால் ஆதித்தன் நின்ற இராசி ஆத்ம சிவருபமும் பிதுரு தேகமும்
இரண்டாம் இராசி ஆத்ம பிரகாசம்
மூன்றாம் இராசி ஆத்ம குணமும் சத்தியும்
நான்காம் இராசி ஆத்ம சுகமும் நித்திய சுகமும் திவரசுகமும்
ஐந்தாம் இராசி ஆத்ம ஆரம்ப புத்தியும் சுத்தியும்
ஆறாம் இராசி ஆத்ம பீடையும் தோஷமும்
ஏழாம் இராசி ஆத்ம மதமும் நித்திய கர்மமும் திவர மைதுனமும்
எட்டாம் இராசி நித்திய துக்கமும் திவர துக்கமும் திவர போசனமும் திவர நித்திரையும் பிதாவினுடைய ஆயுசும்
ஒன்பதாம் இராசி ஆத்ம பிதாவினுடைய பிதிர் பாரம் வரையும் பிதுரு சுருபமும், ஆத்ம சுத்தியும், ஆத்ம தவசும்
பத்தாம் இராசி ஆத்ம பூரணமும் நித்திய காமமும்
பதினோராம் இராசி நித்திய விருத்தியும் நித்திய இலாபமும்
பன்னிரண்டாம் இராசி ஆத்ம சயனமும் நித்திய வியமும்

இந்தப்படி பன்னிரண்டு இராசிகளிலும் பரல் நாலேறினால், முன் சொல்லிய பலன் பூரணமாக இருக்கும். நாலில் மத்தியமாக இருக்கும். நாலில் குறைந்தால் அதர்மமாக இருக்கும். இந்தப்படி சூரியன் அஷ்ட வர்க்கம் என்றறிவது.

## சந்திரனின் அஷ்ட வர்க்கம்

சந்திரன் நின்ற இராசி கொண்டு மாதுரு தேகமும், இரண்டாம் இராசி கொண்டு மனப்பிரகாசமும், மூன்றாம் இராசி கொண்டு மாதாவினுடைய குணமும், நான்காம் இராசி கொண்டு மாதாவினுடைய புத்தி சுகமும் மனசுகமும் சகல செலக்கியங்களும், ஐந்தாம் இராசி கொண்டு ஆத்ம புத்தியும் சுத்தியும், ஆறாம் இராசி கொண்டு மாதாவினுடைய மனபீடையும் புத்திபீடையும், ஏழாம் இராசி கொண்டு புத்தி மதமும் மனோமதமும் மாதுரு வாஞ்சையும் நிசா சொற்பனமும், எட்டாம் இராசி கொண்டு மாதுரு சரிபோசனமும், ஒன்பதாம் இராசி கொண்டு மனசுத்தி, மாதுரு சுத்தி, மாதுரு தவசும், பத்தாம் இராசி கொண்டு கர்மமும் ஆக்கினையும், மாதாவினுடைய கர்ம ஆக்கினையும், பதினோறாம் இராசி கொண்டு புத்தியினுடைய உன்னதமும், மனதினுடைய உதாரமும் மாதாவினுடைய உதாரமும், பன்னிரண்டாம் இராசி கொண்டு மனோபுத்தியின் காயமும் மாதுரு வியமும்.

இந்தப்படி பலன் உண்டாயிருக்கும் என்று சொல்வது.

## செவ்வாய் அஷ்ட வர்க்கம்

செவ்வாய் நின்ற இராசியைக் கொண்டு பிராதுரு தேக சுருபமும் பிராதுரு சுருபம், பூமி வர்த்தனையும் இரண்டாம் இராசியைக் கொண்டு தேகப்பிரகாசமும் மூன்றாம் இராசியைக் கொண்டு ஆத்மபலம் பிராதுரு குணம், பிராதுரு சக்தி. நான்காம் இராசி கொண்டு தேகசுகம், பிராதுரு சுகம், ஐக்கிய சுகம், பலிதம். அஞ்சாம் இராசியைக் கொண்டு பிராதுரு மனது.

ஆறாம் இராசி கொண்டு பிராதுரு தோசம் ஏழாம் இராசி கொண்டு பிராதுரு மதம். எட்டாம் இராசி கொண்டு பிராதுரு துக்கம். ஒன்பதாம் இராசி கொண்டு பிராதுரு சுத்தி. பத்தாம் இராசி கொண்டு பிராதுரு கர்மம். பதினோராம் இராசி கொண்டு பிராதுரு லாபம். பூமி இலாபம், பிராதுரு உன்னிதம். பன்னிரண்டாம் இராசி கொண்டு பிராதுரு வியம், பூமி சயம் (பூமி ஜெயம்).

## புதன் அஷ்ட வர்க்கம்

புதன் நின்ற இடம் கொண்டு வித்தியா சுருபம், மாதுலன் தேகம், இரண்டாம் இராசி வித்யா பிரகாசம், மாதுலன் தனம், வாக்குப் பிரகாசம், வித்தியா தனம். மூன்றாம் இராசி வாக்குச் சத்தியாக் குணம், மாதுல குணம், வாக்குக் குணம். நான்காம் இராசி வாக்குச் சுகம், வித்தியா சுகம், மாதுல சுகம். அஞ்சாமிடம் வித்தியா ஞானம், மாதுல ஞானம், வாக்குத் தோஷம், தனம். ஆறாமிடம் வித்தியா தோசம், வாக்குத்தோசம், மாதுல தோஷம். ஏழாமிடம் மாதா வாக்கியம், மாதுல மகம், வித்தியாமதம், சஞ்சார மதம். எட்டாமிடம் வித்தியா துக்கம், மாதுல துக்கம், சஞ்சார துக்கம். ஒன்பதாமிடம் வாக்குச் சுத்தி, மாதுலன் சுத்தி, மாதுல தர்மம், மாதுல தவசு. பத்தாமிடம் வித்தியா பூர்ணம், மாதுல சஞ்சாரம் மாதுல கர்மம். பதினோராமிடம் மாதுலன் இலாபம், வித்தை இலாபம். பன்னிரண்டாம் வித்தை வியம், வாக்கு வியம், சஞ்சார வியம், மாதுலன் வியம்.

1. புதன் நின்ற இராசிக்கு ஐந்தாமிடத்திலும் இரண்டாமிடத்திலும் பரல் ஏறினால், சொன்ன பலனெல்லாம் மிகுதியாகச் சொல்ல வேண்டும்.

2. இரண்டாமிடத்தைக் காட்டிலும் ஐந்தாமிடத்தில் பரல் ஏறினால், முன் சொன்ன பலத்தை மிகுதியுங் குவியச் சொல்ல வேண்டும்.

3. மூன்றாமிடத்தைக் காட்டிலும் ஆறாமிடத்தில் பரல் ஏறினால் வாக்கு தோஷமாகப் படும்.

## வியாழன் அஷ்ட வர்க்கம்

வியாழன் நின்ற இராசியில் பரல்கொண்டு தேகம், அர்த்தம், புத்தி, புத்திரர், பாதுகளுடனே சௌக்கியம் உண்டாய் நன்மையாய் இருக்கும். இரண்டாமிடம் முன்சொன்ன வெல்லாம் வார்த்தனையும் பிரகாசமும் பரலோக பிரகாசமும். மூன்றாமிடம் குணமும் சுத்தியும். நான்காமிடம் சுகம். ஐந்தாமிடம் பரலோக ஞானமும் புத்திர சம்பத்தும். ஆறாமிடம் தேகம் அர்த்தம், புத்திரர் இதுகளுக்கெல்லாம் தோஷம் உண்டாய் இருக்கும். ஏழாமிடம் மதம். எட்டாமிடம் முன் சொல்லிய துக்கம், எல்லா துக்கமும் அபாயமும். ஒன்பதாமிடம் தவசும் தயவும். பத்தாமிடம் முன்சொல்லியதுக்கெல்லாம் பூரண தயவும் கருமம் உண்டாய் இருக்கும். பதினோராமிடம் இலாபமும் உன்னதமும். பன்னிரண்டாம் இடம் ஆதாயமும் வியமும்.

## சுக்கிரனின் அஷ்ட வர்க்கம்

சுக்கிரன் நின்ற இராசியின் பரல் கொண்டு களத்திர சுருபமும் வைஸ்த்திர போகாதி அனுபவமும் வாகனமும். இரண்டாமிடம் இகலோக பிரகாசமும், வாகனப் பிரகாசமும் களத்திரப் பிரகாசமும். மூன்றாமிடம் முன் சொல்லிய துக்கங்களுடனே குணமும் சத்தியும். நான்காமிடம் இகலோக சுகம். ஐந்தாமிடம் இகலோக ஞானம். ஆறாமிடம் முன்சொல்லிய துக்கமெல்லாம் அனுபவ தோஷம். ஏழாமிடம் களத்திர துக்கம், வஸ்திராதி அனுபவ துக்கம். ஒன்பதாமிடம் களஸ்திர தவசு, வஸ்திராதி அனுபவ சுத்தி. பத்தாமிடம் களஸ்திர கர்மம், வஸ்திர வாகனாதி அனுபவ பூரணம். பதினோராமிடம் முன்சொல்லியதுகளுடைய இலாபம். களத்திர உன்னிதம். பன்னிரண்டாமிடம் இவற்றினுடைய வியமும் ஆதாயமும்.

## சனி அஷ்ட வர்க்கம்

சனிக்கும் இத்தப்படி 12 இராசிகளிலும் பரல் நாலில் ஏறினால், பலன் ஏறியிருக்கும். நாலில் குறைந்தால், அதமப் பலனாய் இருக்கும்.

## சுத்த பிண்டம்

திரிகோண சோதனையும் ஏகாதிபத்திய சோதனையும் செய்து இராசி குணகாரம், கிரக குணகாரமும் செய்து ஒன்றிச்சுக் கூட்டியது சுத்தபிண்டம். அது கொண்டு உள்ள பிரயோகம் பிரதானமாகிறது.

1. ஆதித்தன் சுத்த பிண்டம் கொண்டு பிதுரு சிந்தனை சொல்லுக.

2. சந்திரன் சுத்த பிண்டம் கொண்டு மாதுரு சிந்தனை சொல்லுக. இந்தப்படிமதத்துகளுங் கண்டு கொள்க.

1. ஆதித்தன் சுத்த பிண்டத்தை வேறே வைத்து ஆதித்தன் நின்ற இராசிக்கு ஒன்பதாம் இராசியின் பரல் கொண்டு பெருக்கி, 27 இல் அரித்தது போக நின்ற சேடம் அசுபதி முதல் எண்ணிக் கண்ட நாளில் சனிவரும் நாள பிதுர் மரணம். அந்த நாளுக்குப் பத்தாம் நாள், இரண்டாம் பத்தாம் நாள் இதில் சனிவரும் நாளும் முன்போலே சொல்லுக.

2. ஆதித்தன் சுத்த பிண்டம் வைத்து வியாழன் நின்ற இராசியில் பரல்கொண்டு பெருக்கி, இருபத்தேழில் அரித்தது போக நின்ற சேடம், அசுபதி முதல்நாள் எண்ணிக் கொண்டு, அந்தநாளில் வியாழம் செல்லும் நாளில் திரியாணம்.

வியாழன், ஆதித்தன் சுத்தபிண்டம் வைத்து ஆதித்தன் நின்ற இராசியின் பரல் கொண்டு பெருக்கி, இருபத்தேழில் அரித்தது போக நின்ற சேடம் வந்த நாளில் ஆதித்தன் வரும் நாள் மரண மாதம்.

ஆதித்தன் சுத்தபிண்டம் வைத்துச் சந்திரன் நின்ற இராசியின் பரல் கொண்டு பெருக்க இருபத்தேழில் அரித்து வந்த சேடம் நாளில் சந்திரன் செல்லும் நாளில் பிதுர் மரணம். எல்லாவற்றிற்கும் இருவகை பத்தாம் நாள் கூடச் சொல்லுக.

சந்திரன் சுத்த பிண்டத்தை வைத்து வியாழன் நின்ற இராசியின் பரல் கொண்டு, பெருக்கி, இருபத்தேழில் அரித்து

நின்ற சேடம் வந்த நாளில் வியாழன் செல்லும் நாள் மாதுரு நிரியாணம். இந்த நாளுக்கு இருவகைப் பத்தாம் நாளில் சனியும் வியாழனும் ஒத்து வரும்நாள் மாதுரு நிரியாணம் சொல்லுக.

ஆதித்தனைக் கொண்டு மாதம், சந்திரனைக் கொண்டு நாளும், மாத்துரு தானாதிபதி, அந்தத் தானத்தை நோக்கியவன், அதில் நின்றவன், மாதுரு காரகன் இவர்கள் திசை அபகாரங்கள் கூட சூட்சித்துச் சொல்லுக. பகல்பிறக்கில், சுக்கிர திசை அபகாரங்கள் கூட சூட்சித்துச் சொல்லுக. இது மாதுரு நிரியாணத்திற்குச் சொன்ன சங்கை என்று அறிவது. எல்லாவற்றிற்கும் முதல் பத்தாம் நாளும் இரண்டாம் பத்தாம் நாளும் கூடச் சொல்லுக. இந்த நாட்களைத் திரிகோண நாட்கள் என்று அறிவது.

வியாழனுடைய அஷ்டவர்க்கம் இட்டால், வியாழன் நின்ற இராசிக்கு ஐந்தாமிடத்தில் பரல் புத்திரர் ஜனனம். அதில் சத்துருவினுடைய பரல், நீச சேத்திரத்தில் நின்றவனுடைய பரல், அழிந்து போம். அது போக நின்றது பலமுள்ள சந்ததி என்று அறிவது. அதில் ஸ்திரி கிரகத்தினுடைய பரல் பெண் என்பது. புருஷக் கிரகத்தினுடைய பரலாகில் ஆண் என்று சொல்லுக. உச்சம், மூல சேத்திரம், ஸ்வ சேத்திரம் (ஆட்சி வீடு) இவைகளின் கிரமத்திலே சூட்சித்துச் சங்கை சொல்க.

வியாழத்தினுடைய சுத்த பிண்டத்தை வைத்து வியாழன் நின்ற இராசிக்கு ஐந்தாம் இராசியின் பரல் கொண்டு பெருக்கி, இருபத்தேழில் அரித்து, சேடத்தைப் பூர்வபட்சமாகில், அசுபதி முதலாய் எண்ணிக் காண்க. அமர பட்சமாகில் பிரதிநாள் சித்திரை பின்னரை முதல் எண்ணிக் காண்க. இப்படி எண்ணிக் கண்ட நாள், திருகோண நாள் இதில் வியாழன் வரும் நாள் சந்தி உண்டாம். இந்த நாட்கள், இராசிக்கு ஏழாம் இராசியில் வியாழன் வரும் நாள் சந்ததி உண்டாம். முன்சொன்ன நட்சத்திரம், திரிகோணம். புருஷன் ஜென்ம நட்சத்திரம், புத்திர தானாதிபதி புத்திரகாரகன் புத்திரத் தானத்தில் நின்றவன், தானத்தை நோக்கியவன் இவர்கள் திசையபகாரங்கள் கூட

போகம் வரும் நாள் சந்ததி உண்டாம். புத்திர தானாதிபதி எத்தனை அங்கிசம் சென்றான் அத்தனை சந்ததியுண்டாம். அத்தனை அங்கிஷங்களைக் கொண்டு, ஆண் பெண் இத்தனை என்று சொல்லுக.

சுக்கிரன் சுத்த பிண்டத்தை வைத்து சுக்கிரன் நின்ற இராசிக்கு ஏழாம் இராசியில் பரல் கொண்டு பெருக்கி, இருபத்தேழில் கழித்து வந்த நாளில் சனி செல்லும் நாள் களத்திர போகம். அதன் திரிகோணமும் சொல்லலாம். அவிட்டத்திலே வந்த நட்சத்திர திரிகோணம் களத்திர நட்சத்திரம் சுக்கிரன் நின்ற கோணத்தில் விழுந்த பரல், கிரகங்களின் திசை அபகாரங்களிலும் இலக்கினத்துக்கும். ஏழாமிடத்தை யுடையவனை, அதை நோக்கினவனுடைய திசை அபகாரங்கள் கூட சூட்சித்து, இலக்கினாதிபதி இவர்கள் திசை அபகாரங்கள் கூட சூட்சித்துச் சொல்க.

இராசியில் பரல் 1, 2, 3 இப்படி இருந்தால், தன தானியம் உடையவன். நாலு பரல் இருந்தால், மத்திமமாக இருக்கும். பரல் குறைந்திருக்கின்ற இராசியில் நின்ற கிரகத்தினுடைய திசை அபகாரமும் மத்திமமாக இருக்கும். ஐந்து முதல் ஏழு பரல்வரையும் குணாதிக்கமாக இருக்கும் 8 பரல் நினைத்த காரியமெல்லாம் முடியும்.

## சர்வாஷ்டக வர்க்கம்

சர்வாஷ்டக வர்க்கத்தில் பத்தாம் இடத்தைக் காட்டிலும் பதினோராமிடத்தில் பரல் ஏறி இருக்க, பதினோராமிடத்தைக் காட்டிலும் பன்னிரண்டாமிடம் பரல் குறைந்திருக்க, பன்னிரண்டாம் இடத்தைக் காட்டிலும் இலக்கினத்தில் பரல் ஏறி இருக்க, இப்படி இருந்தால் ஆகுரியவானாகவும் (ஐஸ்வரியவானாகவும்) போகவானாகவும் இருப்பான் என்றவாறு.

மீனம் முதல் மிதுனம்வரைக்கும் உள்ள பரல் ஒன்றாய்க் கூட்டியது முதல் வயது. கடகம் முதல் துலாம் வரைக்கும்

ஒன்றாய்க் கூட்டியது நடுவயது. தேள் முதல் கும்பம் வரைக்கும் ஒன்றாய்க் கூட்டியது ஒடுக்கத்து வயது. எந்த வயதில் பரல் ஏறி இருக்கிறதோ அந்த வயதில் இராச யோகம், திரவிய யோகம் முதலான சுகம் சொல்வது. இப்படி இந்த மூன்று வகையிலேயும் கிரக பலமும் பாவர் நீசமும் அத்தமனமும் கூட குட்சித்துச் சொல்க.

அஷ்டம் முதல் இலக்கினம் வரைக்கும் புருஷன், ஆறாம் இடம் முதல் எதிரேறாக இலக்கினம் வரைக்கும்பெண். ஏழாமிடம் புருஷனும் பெண்ணும்.

## பொது

ஒற்றித்த இராசியின் பரல் புருஷன் இரட்டித்த இராசியின் பரல் பெண். புருஷன் வலப்பாகம். பெண் இடப்பாகம். பெண்கொண்டு மாதுரு பரம்பரை புருஷனைக் கொண்டு பிதிரு பரம்பரை அறிவது.

விழிப்பு - நித்திரை - மிகுந்த நித்திரை இவற்றில் இலக்கினம் விழிப்பு, நித்திரை ஏழாமிடம், மிகுந்த நித்திரை அட்டமம் என்று அறிவது.

தருமம், அர்த்தம், கருமம், மோட்சம் என்ற நான்கு வகையுண்டு.

தருமம் - ஒன்பதாமிடம்
அர்த்தம் - இரண்டாமிடம்
கர்மம் - ஏழாமிடம்
மோட்சம்- எட்டாமிடம்

என்று அறிவது.

இலக்கினம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடம், இரண்டாமிடம், ஒன்பதாமிடம் இந்த ஆறு இராசியும் தேவதான் சிந்தனை. இதுயோக நின்ற ஆறு இராசியும் லோக சிந்தனை என்று அறிவது.

இராசி பன்னிரெண்டுக்குத் திரிகோணம் நான்கு உண்டு. இலக்கினத் திரிகோணம் பந்துக்களோடு கூடியிருக்கும்.

இரண்டாம் திரிகோணம் சேவகா விருத்தியாக இருப்பன். மூன்றாம் திரிகோணம் சிறிது சனங்களை இரட்சிப்பன். நான்காம் திரிகோணம் உபத்திரவம் பண்ணுவான் என்று அறிவது.

கிரகம், வாகனம், ஆபரணாதி. கிரகம் மூன்றாமிடம். வாகனம் பன்னிரண்டாமிடம், ஆபரணாதி இரண்டாமிடம் என்று அறிவது.

பொசித்தல், இலக்கினம், நித்திரை, மைதுனம் என்று நான்கு வகையுண்டு. பொசித்தல் மூன்றாமிடம். இலக்கினம் பன்னிரண்டாமிடம். நித்திரை எட்டாம் இடம். மைதுனம் ஏழாமிடம் என்று அறிவது.

பூர்வ ஜெனனம், இந்த ஜெனனம், வருகிற ஜெனனம் என்று மூன்று உண்டு., இதில் இரண்டாமிடம், ஐந்தாமிடம், எட்டாமிடம், பதினோராமிடம் இந்த நான்கும் பூர்வ ஜெனனம் என்று அறிவது. இலக்கினம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் இந்த நான்கும் இந்த ஜெனனம் என்று அறிவது. மூன்றாமிடம், ஆறாமிடம், ஒன்பதாமிடம், பன்னிரண்டாமிடம் இந்த நான்கும் வருகிற ஜெனனம் என்று அறிவது. பூர்வ ஜெனனம் பிதாக்கள். இந்த ஜெனனம் புத்திரர் என்றவாறு.

, சாத்திகம், இராசதம், தாமதம். மூன்றாமிடம் சாத்திகம். பதினோராமிடம் இராசதம். பன்னிரண்டாமிடம் தாமதம் என்றவாறு.

அந்தந்த இலக்கினங்களுக்கும் கோள்களுக்கும் பலாபலம் பொதுவாகச் சொல்லும்படி., இரண்டாமிடம் வர்த்தனை. பன்னிரண்டாமிடம் வியம் மூன்றாமிடம் சக்தி. பதினோராமிடம் உள்ளதம். நான்காமிடம் சுகம், பத்தாமிடம் பூரணம் என்றவாறு.

ஆதித்தனுக்கு ஒன்பதாம் இடம் பித்ரு பரம்பரை. ஆதித்தன் அஷ்ட வர்க்கத்தில் ஒன்பதாம் இடத்தில் விழுந்த பரல்களுடைய கிரகங்கள் பலகீனனாகிலும் நித்திய தோஷம் உண்டாம். பிதிரு பரம்பரையாகத் தரிசனம் பண்ணி வருகிற தெய்வங்கள் பின்னப்பட்டுப்போம். பிதாவுக்குப் பிரமை

உண்டாம். இந்தப்படி சந்திரனுக்கு நான்காமிடம் மாதாவுக்குச் சொல்லுக.

சர்வாஷ்டக வர்க்கத்திலே இப்படி கண்டு கொள்ளவும். பரல் தோன்றில் மிகுந்திருந்தால் வெகு பலனாகச் சொல்லவும்.

சர்வாஷ்டக வர்க்கம் முற்றும்

## திசை வகுக்கும் கிரமம்

இராகுவும் சனியும் செவ்வாயும் நிற்கின்ற இராசிகளில் உள்ள பரல்களை ஒன்றாகக் கூட்டி ஏழில் பெருக்கி, இருபத்தேழில் கழிக்க கண்ட பலம் வருஷம் என்றறிவது. அதில் நின்ற சேடம் அசுபதி தொடங்கி எண்ணி வந்த நாளில் சனி செல்லும் நாள் கஷ்டகாலம் என்றறிவது.

சனி நிற்கிற இராசி முதல் இலக்கினம் வரைக்கும் உள்ள பரல் ஒக்க கூட்டி, ஏழில் பெருக்கி, இருபத்தேழில் அரித்த பலன் வருஷம். சேடம் அசுபதி முதல் எண்ணிக் கண்ட நாளில் சனி செல்லும் நாள் கஷ்ட காலம் என்றறிவது.

இலக்கினம் முதலாக சனி நின்ற இராசி வரைக்கும் உள்ள பரல்களை ஒன்றாய்க் கூட்டி இட்டும், குளிகன் நிற்கின்ற இலக்கினம் முதல் சனி நிற்கும் இராசி வரைக்கும் ஒன்றாகக் கூட்டியிட்டும் ஏழில் பெருக்கி, இருபத்தேழில் கழிச்சு வந்தது வருஷம். சேஷத்தில் சனி செல்லும் நாள் நிரியாணம்.

முன்பே பின்னாஷ்டக வர்க்கத்தில் பன்னிரண்டு இராசிகளிலும் வெவ்வேறே ஏழு பேருக்குஞ் சொல்லிய பலன்கள் பரல் குறைந்தால், அப்பலம் அனுபவிக்கத் தேவையில்லை. பரல் ஏறி அனுபவிக்கிறதாய் இருந்தாலும் பீடையொடுங் கூடி இருக்கும் நிச்சயம். இப்பலங்கள் குருவுபதேசமாக உள்ள சாரத்தைச் சொல்லுகின்றது.

யாதொரு கிரகம், யாதொரு ராசியில் சென்றிது அந்த இராசியில் கிரகம் போலே முன்பே அந்த இராசிக்குச் சொல்லிய பலம் போலே அனுபவிக்கும். பரல் குறைந்ததானால் அனுபவிக்கவில்லை. பரல் ஏறினால் அனுபவிக்கும் என்று அறிவது.

ஆதித்தன் நின்ற இராசியை ஆருடம் என்று வகை செய்து அதற்கு ஒன்பதாமிடம் பிதிருகிரகம் என்றறிய ஒன்பதாம் இடத்தை சோதிக்கும் முன்பே உள்ள பரல் எத்தனை என்று அறிந்து. அதனைக் கொண்டு ஆதித்தன் குண சமூகத்தைப் பெருக்கி, இருபத்தேழில் கழித்து நின்ற சேடம், அசுபதி முதலாய் உள்ள நட்சத்திரத்தில் சனி செல்லும் நாள் பிதுர் மரணம்.

சனி, செனன காலத்தில் நிற்கின்ற நாள் முதல் சென்ம நட்சத்திரம் வரைக்கும் எண்ணிக் கண்டதை இத்தனை நாளென்று தொகையைச் சென்ம நட்சத்திரம் முதல் அந்தந்த தொகை நாளைக் கண்டு அதிலே சனி வரும் நாள் பிதுர் மரணம் என்றிறந்து ஆதித்தன் சோத்திய சேடம் அனைத்தையும் ஒன்றாகக் கூட்டியது சோத்திய சேடமுகம் என்று பேராம். அதை ஒன்பதாம் இடத்துச் சோத்திய சேடங் கொண்டு பெருக்கி, இருபத்து ஏழில் கழித்த சேடம் அசுபதி முதல் எண்ணிக் கண்ட நாளில் சனி வரும் நாள் பிதுர் மரணம் ஒன்பதாமிடம் இராசியிலே சோத்தியமில்லையாகில் சோத்திய சேட முகத்தை இருபத்தேழில் கழித்து அறிக என்றவாறு.

## ஆதித்தன் அஷ்ட வர்க்கம்

ஆதித்தன் அஷ்டவர்க்கங் கொண்டு அதன் வியன் அறிந்து. பிதிரு சிவபூசை செய்வன் அறிந்து கொள்ளவும். ஆதித்தனுடைய சோத்திய பிண்டத்தை ஆதித்தனின் எட்டாம் இராசியின் பரல் கொண்டு பெருக்கி, அதில் கழித்த சேடம், மேடம் முதல் எண்ணிக் கண்ட இராசியில் ஆதித்தர் நிற்கும் நாள் பிதுர் திரியாணம்.

ஆதித்தன் அஷ்டவர்க்கம் முற்றும்

## சந்திரன் அஷ்ட வர்க்கம்

சந்திரன் அஷ்டவர்க்கம் பரலிட்டால் அதை முன்போலே சோதனைகளில்லாம் சோதித்து அதிலே வந்த சூனிய இராசியில் சந்திரன் செல்லும் நாள், அசுப கர்மங்கள் செய்வன்.

சந்திரனுக்கு நாலாம் இராசியில் பரல் சோதிக்கும் முன்னே அது இன்னதென்று அறிந்து அதனால் சோத்திய பிண்டத்தைப் பெருக்கி, இருபத்தேழில் கழித்து, சேடம் கண்டதை அசுபதி முதலாகக் கண்ட நாளில் சனி செல்லும் நாள் மாதுரு நிரியாணம். அதன் திரிகோண நாட்களில் சனி வந்தாலும் நிரியாணம்.

சந்திரனுக்கு நான்காமிடத்தில் சுபகிரகத்தின் பரல் இன்னதென்று அறிந்து சூட்சித்துச் சொல்லுக.

திரிகோண சோதனையும் ஏகாதிபத்திய சோதனையும் செய்கின்றதில் சூனிய இராசி ஆவது உண்டு. அதில் சந்திரன் செல்லும் நாள் விக்கினங்களெல்லாம் உண்டாம் என்றவாறு. பரல் மிகுந்திருந்த இராசியில் விவாகம் முடியும் என்று அறிவது. கலியாண மணப்பொருத்தத்துக்குச் சொன்ன இராசிப் பொருத்தமும் கூடப் பார்த்து நிலவரம் சொல்லவும்.

சந்திரன் அஷ்டவர்க்கம் முற்றும்

## செவ்வாய் அஷ்ட வர்க்கம்

செவ்வாய் அஷ்ட வர்க்கங் கொண்டு பிராதுரு குணம் சொல்வது. செவ்வாய் நின்ற இராசிக்கு மூன்றாமிடத்தில் சுபக்கிரகங்களுடைய பரல்கள் எத்தனை விழுந்துள்ளது என்பதை அறிந்து அத்தனை பிராதாக்கள் உண்டு என்று சொல்லுக.

மூன்றாமிடத்தில் பாவிகளுடைய பரலையும் பார்த்து, நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம் அறிந்து சூட்சித்துச் சொல்லுக.

செவ்வாய் அஷ்டவர்க்கம் முற்றும்.

# புதன் அஷ்ட வர்க்கம்

புதன் அஷ்டவர்க்க மிட்டு அவனுக்கு இரண்டாமிடத்துப் பரல் எத்தனை என்றறிந்து, அது இன்னாருடையது என்று அறிக. இரண்டாமிடம் சூனியமாகில் அந்தத் தானாதிபன் பரல் 1,2,3 இருந்தால், அவலட்சண வாக்காக இருக்கும். நான்காகில் ஒருவர் சொல்லுகிற வார்த்தை முடிவிலே நானும் சொன்னேன் என்கிறதாக கூடவே பேசுவன். அஞ்சாகில் அநேகவிதமாய் உள்ள வாக்கும் சக்தியும் உண்டாயிருக்கும். ஆறு பரல் இருந்தால் எல்லாம் அறிந்து பேசுவன். ஏழு பரலிருந்தால் மகா சிரேஷ்டான வாக்காக இருக்கும். எட்டாகில் வசன பரி பூரணமாக இருக்கும். எப்படிப்பட்ட இராசாவும் பிரதி உத்திரம் சொல்லுகிற வாக்காக இருக்கும். உச்சிதங்களும் சித்தியும் உண்டாகும்.

இரண்டாமிடத்தில் செவ்வாய், சனி, ஆதித்தன் இவர்கள் மூவர் பரல் விழுந்திருந்தால், டம்பா சாரமாய்த் திரிவான். இரண்டாமிடத்தைப் பார்த்தால், தரித்திரவானாக இருப்பான். இரண்டாமிடத்தில் செவ்வாயாகில் கலகமே பேசுவன். ஆதித்தனாகில் ஞானமே பேசுவன். சனியினுடைய பரலுக்குத் துஷ்ட வார்த்தை, வஞ்சனை, பொய்களே பேசுவன். சுபக்கிரகங்களின் பரலுக்குச் சுத்தவசனம் பேசுவன். புதன் பலவானாகில், சௌந்தர்ய வசனம் பேசுவன். பலவீனனாகில், புலம்பல் வார்த்தையாகப் பேசுவான். நிலவரமில்லாத வார்த்தையாகவும் பேசுவன். பாவிகள் பரலுக்குத் துர்வாக்காக இருக்கும்.

இரண்டாமிடத்தில் விழுந்த பரலுக்குடைய பாவிகள் குளிகன், இராகு, கேது இவர்களின் நோக்கும் பெற்று இருக்கில், வேண்டாமை போலே வார்த்தையும், இனிது இல்லாத வசனமும் மனத்தோசம் சபைக்கீனமாகிய களவும் புலையாட்டும் உண்டாம். அவன் பொய் பேசுவான். புதனுடைய சோத்திய சேஷத்தை சோத்திய பிண்டத்தை இரண்டாமிடத்துப் பரல் கொண்டு பெருக்கி, பன்னிரண்டில் கழித்துக் கண்ட சேடம் மேடாதி முதல் கண்ட இராசியாதிபதியுடைய திசை

அபகாரங்களில் வித்தியா வர்த்தனை விளங்கும். இரண்டாமிடத்தில் பரல் இல்லாது இருந்தால், மூன் கொண்ட பிண்ட சேடங்களைப் பன்னிரண்டில் கழித்து முன்போலே பார்த்துச் சொல்லவும்.

பிண்டத்தை இரண்டாமிடத்துப் பரல் கொண்டு பெருக்கி, நான்காமிடத்துப் பரல் கொண்டு அரித்து (வகுத்து) கண்ட பலத்தை, அஷ்டமத்தின் பரல் கொண்டு பெருக்கி, இருபத்தேழில் க்ழித்து (வகுத்து) கண்ட சேடம் அசுபதி முதல் எண்ணி யறிந்து சென்ன காலத்தில் சனி நின்ற நாள் முதல் மூன் சொன்ன நாள் வரைக்கும் எண்ணித் தொகையறிந்து. அந்தத் தொகை நாளில் சனிவரும் நாள் பிராணபதமாக இருக்கிற பந்து நாசம் மிகுந்த உறவுநாசம் என்றவாறு.

சோத்திய சேடம் மிகுந்த காலத்தில் சூனிய இராசி யாதொன்றில் சனி செல்லும் நாள், புத்திரர் நாசம். சூனிய இராசி உபய இராசியாகில் நாசத்திற்குப் பெருக பலமில்லை. ஐந்தாமிடமும் நான்காமிடமும் சூனியமாகில், அதில் சனிவரும் நாள் புத்திரர் நாசம். மித்திரர் நாசம். ஏழாமிடம் சூனியமாகில், அதில் சனி செல்லும் நாள் பிதுர் நாசம். பத்தாமிடம் சூனியமாகில், அதில் சனி செல்லும் நாள் பிரவர்த்தி நாசம். பன்னிரண்டாமிடம் சூனியமாகில் அதில் சனி செல்லும் நாள் தனம் நாசம் என்றவாறு. புதன் பலவீனப்பட்டுக் கிடக்கில் வித்யா ஈனன். நீசனாகில் அற்ப வித்தை. உச்ச வீடு, சொற்சேத்திரவீடாகில் அவன் வித்துவானாவான். ஆறாமிடத்தும் அஷ்டமத்தும் பிழைபட்ட வித்தை. பன்னிரண்டாமிடத்தும் அஷ்டமத்து புதன் மற்றுள்ள இடங்களில் நிய பலன் கொடுப்பன். வக்கிரனாகில் நன்று. சுபக்கிரகங்கள் நோக்கிலும் பலஹீன சந்திரனோடும் ஆதித்தனோடும் செவ்வாயோடும் கூடுகிலும், புதன் பாவியாவான். ஆகையால் துட்ட, தன்னிச்சை வித்தை சிறிதுண்டாம். அதில் விசேஷம் கண்டும், புத்தி கண்டும், கால தேச நிலைப்பு கண்டும் அவனவன் சிந்தை விரிவு கண்டு பார்த்துப் புத்தி கூட்டித்துச் சொல்லுக.

புதன் அஷ்ட வர்க்கம் முற்றும்.

# வியாழன் அஷ்ட வர்க்கம்

வியாழத்தின் அஷ்டவர்க்கமிட்டால், அது கொண்டு வருஷம் பிரவர்த்தியுள்ள குணதோசம், சந்ததிலட்சணம் இதுகள் அறிந்து சொல்லவும். சோத்திய பிண்டத்தையும் சோத்திய சேடத்தையும் அறிய.

வியாழன் நின்ற இராசிக்கு ஐந்தாம் இராசியில் பரல் எத்தனை என்றும் இன்னாருடையது என்றும் அறிந்து வியாழனுடைய சத்துரு, நீச கிரகங்கள் இந்த வகைப் பரலையும் நீக்கி நின்ற சேடத்தைப் புத்திரர் என்று அறிவது.

இலக்கினத்துக்கு ஐந்தாம் இடத்துக்குச் சத்துருக் கிரகங்கள் இருந்தவகைப் பரலை நீக்கக் கண்ட சேடமும் அறிந்து கொள்ளவும். வியாழத்தினுடைய வீட்டுக்கு ஐந்தாம் இராசி அதிபதிக்குச் சத்துரு, நீசக் கிரகங்களுடைய பரலும் நீக்கி கண்ட சேடங்களும் அறிந்து கொள்ளவும்.

இவ்வாறு ஒன்று, இரண்டு, மூன்று என்று விகற்பம், இது இவ்வாறு மூன்று விதம் உண்டு. இதை ஆலோசித்துப் பண்ணி நாமம் செய்து வருகிறது. முதற் சொன்னதும் இரண்டாம் தரம் சொன்னதும் யோசனைப் பண்ணினால் போதும். மூன்றாம் தரம் சொன்னது தேவையில்லை. பின்னையும் விசேஷங்கள் சொல்லுகிறோம்.

சத்துரு, நீச கிரகங்கள் என்று தள்ளி, கிரகங்களை ஆண், பெண் என்று அறிவது. புருஷக் கிரகங்களாகில், ஆண். அலி கிரகமாகில் அலி. ஸ்திரி கிரகமாகில் பெண் என்று அறிவது. வியாழனுடைய சோத்திய சேட காலத்தில் எல்லா இராசியிலும் பரல் இருக்கிறது இன்னதென்று அறிந்து, அதிலே பாவிகள் இருக்கிற ராசிக்குள்ள பரல் நீக்கி, விசேஷித்துப் புத்திர சங்கை என்று அறிவது.

வியாழத்துக்கு அஷ்டவர்க்கமிட்ட பரல் மிகுந்திருக்கிற இராசியிலே வியாழன் செல்லும் தான் சந்ததி உண்டாம்.

வியாழன் அஷ்ட வர்க்கம் முற்றும்.

## சுக்கிரன் அஷ்ட வர்க்கம்

சுக்கிரன் அஷ்ட வர்க்கம் கொண்டு களத்திர சிந்தனை சொல்லுக. திரிகோண சோதனையும் ஏகாதிபத்திய சோதனையும் செய்தால், யாதொரு இராசியிலும் பரல் அதிக முண்டாயிருந்ததோ அந்த இராசி நிற்கின்ற திக்கிலே உள்ள பூமி வரவும் அர்த்த (செல்வம்) வரவும் சொல்லுக.

சுக்கிரனுக்கு ஏழாமிடத்துப் பாரி கலியாணம். களத்திராதிகளுள் பிரதானத்துக்குச் சொல்லலாம். ஸ்தானாதிபன் ஆட்சி, உச்சம், நீசம் இதிலும் சொல்லலாம். ஸ்தானாதிபதியுடனேயும் சுக்கிரனுக்கு ஏழாமிடத்திலே இருந்தவனையும் சமபாகமாகக் கூட இருந்தவனையும் சமமாகக் கூட இருந்தவன் ஆட்சி, உச்சம், நீசம் இதிலும் சொல்லலாம்.

ஒன்பதாமிடத்துக்கு உடையவனும் ஏழாமிடத்துக்கு உடையனும் நின்ற இராசியிலே சோதிக்கும் முன்பாக இருந்த பரல் எத்தனை என்று அறிந்து விவாகம், களத்திராதிபன் வக்கிரனாகத்தான் உச்சமாகத் தான் சொற் சேத்திரமாகத்தான் இருக்கில், களத்திரம் மிகவும் உண்டாம். உச்சமாக இது இருக்கில், மும்மடங்குப் பலனுண்டு என்று அறிவது. மறைந்திருக்கிலும் நீசமாக இருக்கிலும் களத்திரம் அரிட்டம் என்று அறிவது.

சுக்கிரன் அஷ்ட வர்க்கம் முற்றும்.

## சனி அஷ்ட வர்க்கம்

சனி அஷ்ட வர்க்கங் கொண்டு தன்னுடைய நிரியாண லட்சணம் சொல்லுகிறோம். இராசி குணாகாரம் செய்து நின்ற சமுகத்தை வைத்துச் சோதிக்கும் முன்பே சனி நின்ற இராசியின் பரல் கொண்டு பெருக்கி, இருபத்தேழில் கழித்து நின்ற சேடம்,

அசுபதி முதலாக எண்ணிக் கண்ட நட்சத்திரத்தில் சனி செல்லும் நாள் மரணம். இருபத்தேழில் கழிக்கப் போதாதாகில் அசுபதி முதலாக நட்சத்திரத்தை எண்ணிக் கொள்ளவும். சமுகத்தை வைத்து வியாழன் நின்ற இராசியில் பரல் கொண்டு பெருக்கி, பன்னிரண்டில் கழித்துக் கண்ட இராசியிலே வியாழன் செல்லும் நாள் நிரியாணம். அவிட்டத்துக்குப் பலாபலங்கள் சொல்லவும்.

ஆதித்தன் நின்ற இராசியில் பரல் கொண்டு குணசமுகத்தைப் பெருக்கி இருபத்தேழில் கழித்து அசுபதி முதலாக எண்ணிக் கண்ட நட்சத்திரத்தில் நாள் செல்லும் நாள் மரணம்.

சந்திரனுடைய பரல் கொண்டு பெருக்கி இருபத்தேழில் கழித்து, அசுபதி முதலாக எண்ணிக் கண்ட நட்சத்திரத்தில் சந்திரன் செல்லும் நாள் மரணம் என்றவாறு.

சனியினுடைய சோத்திய சேட காலத்தில் சூனிய இராசியில் சனி செல்லும் நாள் அரிட்ட பலன்.

சனி அஷ்ட வர்க்கம் முற்றும்.

**வேந்து ஐக்கியம் 1 :** சந்திரன், செவ்வாய் பரல் தொகை கூட்டில், எட்டுக்கு மேல் பதினாறு வரை உத்தமம். குறைந்தால் தீது.

**ஆற்பன ஐக்கியம் 2 :** வியாழன், சனி, ஆதித்தன் பரல் தொகை கூட்டில், பன்னிரண்டுக்கு மேல் இருபத்து நான்கு அனுகூலம். எட்டுக்கு மேல் பதினொன்று வரை மத்திமம். எட்டுக்குக் குறைந்தால் தீது.

**புத்திர ஐக்கியம் 3 :** சந்திரன், வியாழன் தொகை கூட்டி. எட்டுக்கு மேல் பதினாறு வரை உத்தமம். எட்டுக்குக் குறைந்த இராசி மத்திமம்.

**பிதிர்வழி ஐக்கியம் 4 :** செவ்வாய், ஆதித்தன், சந்திரன் தொகை கூட்டி. பன்னிரண்டுக்கு மேல் இருபத்து நான்கு வரை உத்தமம். எட்டுக்கு மேல் பதினொன்று மத்திமம். எட்டுக்குக் குறைந்தால் தீது, கஷ்டம்.

குறிப்பு : இன்று வழக்கில் இல்லாமையாலும் பிற நூல்களில் இந்த ஐக்கியம் குறித்துக் கூறப்படாததாலும் பொருள் விளங்கவில்லை.

சர்வாஷ்டக வர்க்கத்தில் மேடம் முதல் மிதுனம் வரை கிழ்த்திசை. கற்கடகம் முதல் கன்னி வரை தென்திசை. துலாம் முதல் தனுசு வரை மேல்திசை. மகரம் முதல் மீனம் வரை வடதிசை. இப்படி திசை அறிவது.

இலக்கினம் முதல் மூன்று இராசி கிரகச் சூறாபுரி யோகம். நான்கு இராசி கேந்திர யோகம். ஐந்து இராசி பிரதாப யோகம் ஆறு இராசி சுகபுரி துட்டயோகம். ஏழு இராசி நிரைக்கில், கிரகமாலை யோகம்.

அவனவன் குணசமூகத்தை ஏழில் பெருக்கி, இருபத்தேழில் கழித்து, நின்ற சேடத்தைப் பன்னிரண்டில் பெருக்கி இருபத்தேழில் கழித்து, மீதி நின்ற சேடத்தை முப்பதில் பெருக்கி இருபத்து ஏழில் கழிக்க, நாள். நின்ற சேடத்தை அறுபதில் பெருக்கி, இருபத்தேழில் கழிக்க நாழிகை இந்தப்படி. ஏழு கிரகதிற்கும் திசை வகுத்தவும், வகுத்தி ஆரணம் பண்ணை வகை.

1. ஒரு கிரகத்தோடே ஒரு கிரகம் கூடி நின்றால், இருவர் திசையும் பாதி பண்ண (வேண்டும்)

2. நீசம் ஏறின கிரகத்துக்கும் அத்தமன கிரகத்திற்கும் பாதி பண்ண வேண்டும்.

3. சத்துரு வீட்டில் நின்ற கிரகத்துக்கு மூன்றிலொரு பங்கு வாங்கிப் போட வேண்டும்.

4. யுத்தத்திலே தோற்றவனுக்கும் மூன்றிலொரு பங்கு வாங்கிப் போட வேண்டும்.

இப்படி வாங்கி 324 இல் பெருக்கி, 365 இல் கழித்து வந்த பேறு சுத்தாயுள்.

குணசமூகம் முற்றும்.

அவனவன் சோத்திய பிண்டம் கொண்டு காரகனுக்கு எட்டாமிடப் பரல் கொண்டு பெருக்கி, பன்னிரண்டில் கழித்து நின்ற இராசி, நட்சத்திரத்தில் வியாழன் வரில் உத்தமம். இதில் சனி வரில் கஷ்டம்.

## ஆதித்தன் நின்ற இராசிக்கு

ஒன்பதாம் இராசிப் பரலினாலே பெருக்கவும். சந்திரனுக்கு நான்காம் இராசிப் பரலினாலே பெருக்கவும். செவ்வாய்க்கு மூன்றாம் இராசிப் பரலினாலே பெருக்கவும். புதனுக்கு நாலாம் இராசிப் பரலினாலே பெருக்கவும். வியாழனுக்கு ஐந்தாம் இராசிப் பரலினாலே பெருக்கவும். சுக்கிரனுக்கு ஏழாம் இராசிப் பரலினாலே பெருக்கவும். சனிக்கு அட்டம இராசிப் பரலினாலே பெருக்கி நலம் தீங்கு அறியவும்.

சர்வாஷ்டக வர்க்கத்தில் அட்டமாதிபன் நின்ற இராசி முதல் இலக்கினம் வரைக்கும் விழுந்த பரலைத் தொகை கூட்டி, ஏழில் பெருக்கி, இருபத்தேழில் கழித்து வந்த பேறு. நின்ற சேடத்தில் மிகுந்து வரும் பாவக்கிரகங்கள் வந்தால் என்று அறியவும். சுபக்கிரகங்களுக்கு நல்லபலன். இந்தப்படி ஏழு கிரகத்துக்கும் அறிந்து கொள்ளவும்.

இலக்கினத்தில் முப்பது பரல்களுக்கு மேற்பட்டால், உத்தமம். பத்துக்குப் பதினோராமிடம் ஏறியும், பன்னிரண்டா மிடம் பரல் குறைந்து, இலக்கினம் ஏறியும் இருந்தால் நல்ல பலன். எந்த இராசியில் பரல் ஏறி இருக்கிறதோ அந்த இராசி, சுகப்பலன் கொடுக்கும்.

மீனம் முதல் நான்கு இராசிகள் பிரதமை கண்டம். நின்ற நான்கு இராசிகள் (கடகம் முதல் துலாம்வரை) துதிகை கண்டம், நின்ற நான்கு இராசிகள் (விருச்சிகம் முதல் கும்பம் வரை) திரிதிகை கண்டம். ஏறின கண்டத்தில் நின்ற கிரகதிசை பலன் கொடுக்கும்.

உதாரண சாதகம் : 1[1]

## சூரியன் அஷ்ட வர்க்கம்

| | | | |
|---|---|---|---|
| 3 | 3 | 3 | 4 |
| 6 | பரல்கள் 48 | | 3 |
| 8 | | | 3 |
| 5 | 3 | 3 | 4 |

திரிகோண சோதனைப் பரல் - 36

மேடம், சிங்கம், தனுசு = 9

இடபம், கன்னி, மகரம் = 9

மிதுனம், துலாம், கும்பம் = 9

கடகம், விருட்சிகம், மீனம் = 9

ஏகாதிபத்தியம் = 18

இராசி குணகாரம் = 42

கிரக குணகாரம் = 135

ஆயிலியம், கேட்டை, ரேவதியில் கடகம், விருச்சம், மீனம் இந்த இராசியில் வியாழன் வரும் காலம் பிதாவுக்குச் செளக்கியம். சாதகனுக்குத் தனதானிய இலாபம். சனிவருங்காலம் பிதாவுக்குக் கஷ்டம்.

---

1. உதாரண சாதகம் : 1 என்று குறிப்பிட்டிருப்பினும் அந்த சாதகத்தின் இராசிச்சக்கரம் தரப்படவில்லை.

## சந்திரன் அஷ்ட வர்க்கம்

| | | | |
|---|---|---|---|
| 2 | 2 | 6 | 5 |
| 3 | பரல்கள் | | 4 |
| 7 | 49 | | 4 |
| 5 | 4 | 3 | 4 |

திரிகோண சோதனைப்பரல் = 33
ஏகாதிபத்தியம் = 21
இராசி குணகாரம் = 82
கிரக குணகாரம் = 118

உ.ரோகிணி, அத்தம், திருவோணம். இடபம், கன்னி, மகரம் இதில் வியாழன் வருங்காலம் மாதுரு சௌக்கியம். சாதகனுக்குத் தனதானிய இலாபம். இதில் சனி வரும் காலம் மாதுரு பீடை வந்து திரும்.

## செவ்வாய் அஷ்ட வர்க்கம்

| | | | |
|---|---|---|---|
| 4 | 2 | 2 | 4 |
| 4 | பரல்கள் | | 2 |
| 6 | 39 | | 4 |
| 3 | 1 | 3 | 4 |

திரிகோண சோதனைப் பரல் = 24
ஏகாதி பத்தியம் = 18
இராசி குணகாரம் = 71
கிரக குணகாரம் = 79

ஆயிலியம், கேட்டை இரேவதி, கடகம், விருட்சிகம் மீனம் இவற்றில் வியாழன் வருங்காலம் சாதகனுக்குச் சரீர சௌக்கியம், பூமி பலிதம், கன்று காலி உண்டாம். இதில் சனி வரும் காலம் சகோதர பீடை வந்து தீரும்.

## புதன் அஷ்ட வர்க்கம்

| | | | |
|---|---|---|---|
| 7 | 5 | 3 | 4 |
| 4 | பரல்கள் | | 4 |
| 6 | 54 | | 2 |
| 6 | 4 | 4 | 5 |

திரிகோண சோதனைப் பரல்கள் = 27
ஏகாதிபத்தியம் = 18
இராசி குணகாரம் = 74
கிரக குணகாரம் = 118

ஆயிலியம், கேட்டை, இரேவதியில், கடகம், விருச்சிகம் மீனம் இதில் வியாழன் வருங்காலம் மாதுலன் வழி சௌக்கியம், தனலாபம், வித்தியா இலாபம் உண்டாம். இதில் சனிவருங் காலம் கஷ்ட பலன்.

## வியாழன் அஷ்ட வர்க்கம்

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 4 | 5 |
| 4 | பரல்கள் | | 7 |
| 5 | 56 | | 5 |
| 7 | 5 | 2 | 3 |

திரிகோண சோதனைப் பரல் = 39
ஏகாதிபத்தியம் = 29
இராசி குணகாரம் = 119
கிரக குணகாரம் = 146

பரணி, பூரம், பூர்டம், மேடம், சிங்கம், தனுசு இதில் வியாழன் வருங்காலம் தன தானிய இலாபம், கன்று காலி பலிதம், இராச வெகுமதி இவை உண்டாம். இதில் சனி வருங்காலம் புத்திரான் பீடை, ஆதாயம் மிஞ்சின செலவு. வியாழத்துக்கு ஐந்தில் மீனத்தில் மித்திர சேப்பரல் ஒன்றும் இலக்கனம் பரல் ஒன்றும் நிற்கையால் மீனங் குரு வருங்காலம் நாகப் பிரதிட்டையும், சர்ப்ப சாந்தியும் செய்தால், புத்திர பாக்கியம்.

## சுக்கிரனின் அஷ்ட வர்க்கம்

| | | | |
|---|---|---|---|
| 4 | 4 | 6 | 4 |
| 4 | பரல்கள் 52 | | 5 |
| 6 | | | 3 |
| 4 | 7 | 3 | 2 |

திரிகோண சோதனைப் பரல் = 36
ஏகாதிபத்தியம் = 28
இராசி குணகாரம் = 130
கிரக குணகாரம் = 142

பரணி, பூரம், பூராடம், மேடம், சிங்கம், தனுசு இதில் குரு வருங்காலம் சரீர சௌக்கியம், ஸ்திரி வழி இலாபம், சரீர சாந்தி. இராச வெகுமதி. இதில் சனி வருங்காலம் தனசெலவு, களத்திர பீடை இவை உண்டாம்.

## சனி அஷ்ட வர்க்கம்

| | | | |
|---|---|---|---|
| 3 | 3 | 4 | 2 |
| 5 | பரல்கள் 39 | | 2 |
| 5 | | | 5 |
| 1 | 3 | 4 | 4 |

திரிகோண சோதனைப் பரல் = 21
ஏகாதிபத்தியம் = 14
இராசி குணகாரம் = 59
கிரக குணகாரம் = 70

பரணி, பூரம், பூராடம், மேடம், சிங்கம், தனுசு இதில் வியாழன் வருங்காலம் சரீர சௌக்கியம், ஆயுள் விருத்தி, தன தானிய இலாபம், கன்று காலி சேர்க்கை இவை உண்டாம். இதில் சனி வருங்காலம் சாதகனுக்கு மனச்சடைவு, பொருட் செலவு, அதிக செலவு, சரீர வாத ரோகம் கண்டு நிவர்த்தியாம்.

## சர்வாஷ்டக வர்க்கம்

| | | | |
|---|---|---|---|
| 27 | 24 | 28 | 26 |
| 30 | | | 27 |
| 43 | | | 26 |
| 31 | 27 | 22 | 23 |

பிரதமை கண்டம் பரல் 103; துவிதிகை கண்டம் பரல் 124; திரிதிகை கண்டம் பரல் 110. கீழ்த்திசை சமபலன், தெற்கு, மேற்கு, வடக்குத் திக்கிலும் பூமி பலிதம். விசேஷ தனலாபம், தொழில் முயற்சி, தன தான்யக் கட்டு.

திருவோணத்தில் சனி வருங்காலம் சனிதிசையில் சந்திரன் அபகாரத்தில் மகரத்தில் சனி வருங்காலம் மாதுரு கஷ்டம்.

## சூரியன் அஷ்டவர்க்கம்

மேஷம் - 4 சிங்கம் - 4 தனுசு - 3
ரிஷபம் - 5 கன்னி - 7 மகரம் - 2
மிதுனம் - 3 துலாம் - 4 கும்பம் - 6
கற்கடகம் - 2 விருச்சிகம்-3 மீனம் - 5
ஆகப்பரல்கள் 48

| | | | |
|---|---|---|---|
| 5 | 4 | 5 | 3 |
| 6 | பரல்கள் 48 | | 2 |
| 2 | | | 4 |
| 5 | 3 | 4 | 7 |

## திரிகோண சோதனை

| | | | |
|---|---|---|---|
| 3 | 3 | 2 | 3 |
| 3 | | | 2 |
| 2 | | | 3 |
| 3 | 2 | 3 | 2 |

மேடம், சிங்கம், தனுசு = 9
ரிஷபம், கன்னி, மகரம் = 6
மிதுனம், துலாம், கும்பம் = 9
கற்கடகம், விருச்சிகம், மீனம் = 6

ஆகப்பரல் 30. இலக்கினம் கற்கடகத்துக்கு ஒன்பதாமிடம் மீனப்பரல் பெருக்கி, 27இல் கழித்த மிச்சம் 15. திருவாதிரை, சோதி, சதயத்தில் சனி வருங்காலம் பிதுர் கஷ்டம். இதில் வியாழன் வருங்காலம் அனுகூலம்.

## ஏகாதிபத்தியம்

மேஷம் - 2 மிதுனம் - 4 தனுசு - 3
விருச்சிகம் - 2 கன்னி - 4 மீனம் - 2
ரிஷபம் - 2 கடகம் - 2 கும்பம் - 3
துலாம் - 2 சிங்கம் - 3 மகரம் - 0
ஆகப்பரல் 30

| | | | |
|---|---|---|---|
| 2 | 2 | 2 | 2 |
| 3 | | | 2 |
| 0 | | | 3 |
| 3 | 2 | 2 | 2 |

## இராசி குணகாரம்

| | | | |
|---|---|---|---|
| 24 | 14 | 20 | 16 |
| 33 | | | 8 |
| 0 | | | 30 |
| 27 | 16 | 14 | 10 |

மேஷம் - 14 சிங்கம் - 30 தனுசு - 27
ரிஷபம் - 20 கன்னி - 10 கும்பம் - 33
மிதுனம் - 16 துலாம் - 14 மீனம் - 24
கடகம் - 8 விருச்சிகம்-16 மகரம் - 0

## இராசி குணகாரம் 212 ற்கு விளக்கம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 2 | 2 | 2 | 2 | 3 | 2 | 2 | 2 | 3 | 0 | 3 | 2 |
| இராசி குணகார எண்கள் | 7 | 10 | 8 | 4 | 10 | 5 | 7 | 8 | 9 | 5 | 11 | 12 |
| | 14 | 20 | 16 | 8 | 30 | 10 | 14 | 16 | 27 | 0 | 33 | 24 |

கவடியில் இச்சக்கரங்கள் கொடுக்கப்படவில்லை. விளக்கத்திற்காகப் பதிப்பாசிரியரால் தரப்பட்டுள்ளன.

## கிரக குணகாரம்

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | 10 | வியாழன் | 20 |
| சந்திரன் | 15 | சுக்கிரன் | 14 |
| செவ்வாய் | 24 | சனி | 15 |
| புதன் | 10 | | |

ஆக கிரக குணகாரம் 108

ஆக இராசி குணாகாரம் 212. கிரக குணாகாரம் 108. மொத்தம் 320-க்கு 30-ல் கழித்து வருடம் 10, மாதம் - 8 ஆதித்தன் கொடுத்த வயது வருடம் 10. மாதம் 8.

## 2. சந்திரன் அஷ்டவர்க்கம்

| | | |
|---|---|---|
| மேஷம் - 3 | சிம்மம் - 2 | தனுசு - 8 |
| ரிஷபம் - 6 | கன்னி - 6 | மகரம் - 2 |
| மிதுனம்- 5 | துலாம் - 3 | கும்பம் - 4 |
| கற்கடகம் - 4 | விருச்சிகம்-4 | மீனம் - 2 |

ஆகப்பரல்கள் 49

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 6 | 5 |
| 4 | பரல்கள் 49 | | 4 |
| 2 | | | 2 |
| 8 | 4 | 3 | 6 |

## திரிகோண சோதனை

| | | | |
|---|---|---|---|
| 2 | 2 | 2 | 3 |
| 3 | | | 2 |
| 2 | | | 2 |
| 2 | 2 | 3 | 2 |

மேஷம், சிங்கம், தனுசு = 6
இடபம், கன்னி, மகரம் = 6
மிதுனம், துலாம், கும்பம் = 9
கற்கடகம், விருச்சிகம், மீனம் = 6
ஆகப்பரல் 27.

(கற்கடக) இலக்கினத்திற்கு நான்காமிடம் (துலாம்) பரலில் பெருக்கி, 27-இல் கழிச்ச மிச்சம் (இல்லை). 27-க்கு ஆயிலியம், கேட்டை, இரேவதியில் சனிவருங் காலம் மாதாவழிப் பீடைவரும். இதில் வியாழன் வருங்காலம் அனுகூலம்.

## ஏகாதிபத்தியம்

| | | | |
|---|---|---|---|
| 2 | 0 | 2 | 2 |
| 3 | | | 2 |
| 0 | | | 2 |
| 2 | 2 | 2 | 2 |

ரிஷபம்-2 கன்னி-2 கும்பம்-3
மிதுனம்-2 துலாம்-2 மீனம் - 2
கடகம் -2 விருச்சிகம்-2
சிங்கம் -2 தனுசு - 2
ஆகப்பரல் 21

## சந்திரன் இராசி குணகாரம்

| | | | |
|---|---|---|---|
| 24 | 0 | 20 | 16 |
| 33 | | | 8 |
| 0 | | | 20 |
| 18 | 14 | 14 | 10 |

மேஷம் - 0　சிம்கம் - 20　தனுசு - 18
ரிஷபம் -20　கன்னி - 10　கும்பம் - 33
மிதுனம் - 16　துலாம் - 14　மீனம் -24
கடகம் - 8　விருச்சிகம்-14　மகரம் - 0

ஆகப்பரல் 179

இதற்கு விளக்கம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ராசியிடத்திய பரல்கள் | 0 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 0 | 3 | 2 |
| இராசி குணகார எண்கள் | 7 | 10 | 8 | 4 | 10 | 5 | 7 | 8 | 9 | 5 | 11 | 12 |
| | 0 | 20 | 16 | 8 | 20 | 10 | 14 | 16 | 18 | 0 | 33 | 24 |

## கிரக குணகாரம்

சூரியன் 10　வியாழம் - 20
சந்திரன் 15　சுக்கிரன் - 14
செவ்வாய் 16　சனி - 15
புதன் 10

ஆகக் கிரக குணகாரம் 100.

இராசி குணகாரம் 179. கிரக குணகாரம் 100. ஆக சமூகம் 279. சந்திரன் கொடுத்த வருடம் 9, மாதம் 3, நாழிகை 18.

## செவ்வாய் அஷ்ட வர்க்கம்

மேஷம் -2　சிம்மம்-4　தனுசு -2
ரிஷபம் -4　கன்னி - 6　மகரம் - 1
மிதுனம் -1　துலாம் - 6　கும்பம்-5
கடகம் -3　விருச்சிகம் - 2　மீனம் -3

சோதிடம்-21

| | | | |
|---|---|---|---|
| 3 | 2 | 4 | 1 |
| 5 | பரல்கள் 39 | | 3 |
| 1 | | | 4 |
| 2 | 2 | 6 | 6 |

## திரிகோண சோதனை

மேடம், சிங்கம், தனுசு - 6
ரிஷபம், கன்னி, மகரம் - 3
மிதுனம், துலாம், கும்பம் - 3
கற்கடகம், விருச்சிகம், மீனம் - 6

| | | | |
|---|---|---|---|
| 2 | 2 | 1 | 1 |
| 1 | | | 2 |
| 1 | | | 2 |
| 2 | 2 | 1 | 1 |

ஆகப் பரல் 18. மூன்றாமிடம் பரல் பெருக்கி 27-ல் கழித்த மிச்சம். ஆயிலியம், கேட்டை, ரேவதியில் சனி வருங் காலம் சகோதர பீடை. இதில் வியாழன் வருங்காலம் அனுகூலம்.

## ஏகாதிபத்தியம்

ரிஷபம் - 1
கற்கடகம் - 2
சிங்கம் - 2
விருச்சிகம் - 2
ஆகப்பரல் 12

தனுசு- 2
கும்பம் - 1
மீனம் - 2

| | | | |
|---|---|---|---|
| 2 | 0 | 1 | 0 |
| 1 | | | 2 |
| 0 | | | 2 |
| 2 | 2 | 0 | 0 |

## செவ்வாய் இராசி குணகாரம்

மேஷம் -0 சிங்கம் -20 தனுசு - 18
ரிஷபம் - 10 கன்னி - 0 மகரம் - 0
மிதுனம்-0 துலாம் - 0 கும்பம் - 11
கடகம் - 8 விருச்சிகம்-16 மீனம்-24
ஆக இராசி குணகாரம் 107

| | | | |
|---|---|---|---|
| 24 | 0 | 10 | 0 |
| 11 | | | 8 |
| 0 | | | 20 |
| 18 | 16 | 0 | 0 |

இதற்கு விளக்கம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முறைபடுத்திய பரல்கள் | 0 | 1 | 0 | 2 | 2 | 0 | 0 | 2 | 2 | 0 | 1 | 2 |
| இராசி குணகார எண்கள் | 7 | 10 | 8 | 4 | 10 | 5 | 7 | 8 | 9 | 5 | 11 | 12 |
| | 0 | 10 | 0 | 8 | 20 | 0 | 0 | 16 | 18 | 0 | 11 | 24 |

## கிரக குணகாரம்

சூரியன் - 5
சந்திரன் - 10
செவ்வாய் - 16
புதன் - 5
வியாழன் - 20
சுக்கிரன் - 14
சனி - 5

ஆகக் கிரக குணகாரம் 75.

இராசி குணகாரம் 107. கிரக குணகாரம் 75. ஆகச் சமுகம் 182-க்குச் செவ்வாய் கொடுத்த வயது வருடம்6. நாள் 24.

## புதன் அஷ்டவர்க்கம்

| | | |
|---|---|---|
| மேஷம் - 6 | சிம்மம் -3 | தனுசு - 2 |
| ரிஷபம் - 6 | கன்னி - 6 | மகரம் - 4 |
| மிதுனம் - 3 | துலாம் - 7 | கும்பம் - 4 |
| கடகம் - 4 | விருச்சிகம் -3 | மீனம் - 6 |

ஆகப் பரல் 54

| | | | |
|---|---|---|---|
| 6 | 6 | 6 | 3 |
| 4 | பரல்கள் | | 4 |
| 4 | 54 | | 3 |
| 2 | 3 | 7 | 6 |

## திரிகோண சோதனை

| | |
|---|---|
| மேஷம், சிங்கம், தனுசு | - 6 |
| ரிஷபம், கன்னி, மகரம் | - 12 |
| மிதுனம், துலாம், கும்பம் | - 9 |
| கற்கடகம் விருச்சிகம் மீனம் | - 9 |
| | 36 |

| | | | |
|---|---|---|---|
| 3 | 2 | 4 | 3 |
| 3 | | | 3 |
| 4 | | | 2 |
| 2 | 3 | 3 | 4 |

ஆகப்பரல் 36. நான்காமிடம் பரலைப் பெருக்கி, இருபத்தேழில் கழித்த மிச்சம் 27-க்கு அயிலியம், கேட்டை, இரேவதியிற்சனி வருங்காலம் மாதுர் பீடை. வியாழன் வருங்காலம் அனுகூலம்.

## ஏகாதிபத்தியம்

| | | | |
|---|---|---|---|
| 3 | 0 | 4 | 3 |
| 3 | | | 0 |
| 3 | | | 2 |
| 2 | 3 | 0 | 3 |

| | | |
|---|---|---|
| மேஷம் - 0 | சிம்மம் - 2 | தனுசு - 2 |
| ரிஷபம் - 4 | கன்னி - 3 | மகரம் - 3 |
| மிதுனம் - 3 | துலாம் - 0 | கும்பம்- 3 |
| கடகம் - 0 | விருச்சிகம் - 3 | மீனம் - 3 |

ஆகப்பரல் 24.

## புதனின் இராசி குணகாரம்

| | | |
|---|---|---|
| மேஷம் - 0 | சிம்மம் - 20 | தனுசு - 18 |
| ரிஷபம் - 40 | கன்னி - 1[illegible] | மகரம் - 15 |
| மிதுனம் - 24 | துலாம் - 0 49 | கும்பம்- 33 |
| கடகம் - 0 | விருச்சிகம்-24 | மீனம் - 36 |

ஆக இராசி குணகாரம் 201.

| | | | |
|---|---|---|---|
| 36 | 0 | 40 | 24 |
| 33 | | | 0 |
| 15 | | | 20 |
| 18 | 24 | 0 | 15 |

குறிப்பு : இதற்கு விளக்கம்;

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஊறிடுத்திய பரல்கள் | 0 | 4 | 3 | 0 | 2 | 3 | 0 | 3 | 2 | 3 | 3 | 3 |
| இராசி குணகாரங்கள் | 7 | 10 | 8 | 4 | 10 | 5 | 7 | 8 | 9 | 5 | 11 | 12 |
| | 0 | 40 | 24 | 0 | 20 | 15 | 0 | 24 | 18 | 15 | 33 | 36 |

## இரக குணகாரம்

சூரியன் 20 வியாழன் 30

சந்திரன் 10 சுக்கிரன் 21

செவ்வாய் 16 சனி 15

புதன் 20

ஆகக் இரக குணகாரம் 132.

இராசி குணகாரம் 201. இரக குணகாரம் 132. ஆகச் சமுகம் 333 க்குப் புதன் கொடுத்த வயது வருடம் 11, மாதம் 1, நாள் 6

## குரு அஷ்ட வர்க்கம்

மேஷம் - 4 சிங்கம் - 7 தனுசு - 4

ரிஷபம் - 5 கன்னி - 3 மகரம் - 7

மிதுனம் - 6 துலாம் - 3 கும்பம் - 4

கற்கடகம்-4 விருச்சிகம்-5 மீனம் - 4

| | | | |
|---|---|---|---|
| 4 | 4 | 5 | 6 |
| 4 | பரல்கள் 56 | | 4 |
| 7 | | | 7 |
| 4 | 5 | 3 | 3 |

## திரிகோண சோதனை

மேஷம், சிங்கம், தனுசு - 12
ரிஷபம், கன்னி, மகரம் - 9
மிதுனம், துலாம், கும்பம் - 9
கர்கடகம், விருச்சிகம், மீனம் - 12
42

| | | | |
|---|---|---|---|
| 0 | 4 | 3 | 0 |
| 0 | | | 0 |
| 3 | | | 4 |
| 4 | 0 | 0 | 3 |

ஆகப் பரல் 42-க்கு புத்திரத்தானம் ஐந்தாமிடம் பரல் பெருக்கி இருபத்தேழில் கழித்த மிச்சம் 21. கார்த்திகை, உத்திரம், உத்திராடத்தில் சனி வருங்காலம் புத்திரருக்குக் கஷ்டம். இதில் குரு வருங்காலம் அனுகூலம்.

## ஏகாதிபத்தியம்

| | | | |
|---|---|---|---|
| 4 | 0 | 3 | 0 |
| 3 | | | 4 |
| 0 | | | 4 |
| 4 | 4 | 0 | 0 |

| | | |
|---|---|---|
| மேஷம் - 0 | சிம்மம் - 4 | தனுசு - 4 |
| ரிஷபம் - 3 | கன்னி - 0 | மகரம் - 0 |
| மிதுனம் - 0 | துலாம் - 0 | கும்பம் - 3 |
| கடகம் - 4 | விருச்சிகம் - 4 | மீனம் - 4 |

ஆகப்பரல்கள் 26

## வியாழன் இராசி குணகாரம்

| | | | |
|---|---|---|---|
| 48 | 0 | 30 | 0 |
| 33 | | | 16 |
| 0 | | | 40 |
| 36 | 32 | 0 | 0 |

மேஷம் - 0 சிம்மம் - 40 தனுசு - 36

ரிஷபம் - 30 கன்னி - 0 மகரம் - 0

மிதுனம் - 0 துலாம் - 0 கும்பம் - 33

கடகம் - 16 விருச்சிகம் - 32 மீனம் - 48

ஆகப்பரல்கள் 235

குறிப்பு : இதற்கு விளக்கம்.

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 0 | 3 | 0 | 4 | 4 | 0 | 0 | 4 | 4 | 0 | 3 | 4 |
| இராசி குணகாரங்கள் | 7 | 10 | 8 | 4 | 10 | 5 | 7 | 8 | 9 | 5 | 11 | 12 |
| | 0 | 30 | 0 | 16 | 40 | 0 | 0 | 32 | 36 | 0 | 33 | 48 |

## கிரக குணகாரம்

சூரியன் 30 வியாழன் 40

சந்திரன் 16 சுக்கிரன் 28

செவ்வாய் 40 சனி 15

புதன் 32

ஆகப் பரல்கள் 165.

இராசி குணகாரம் 235. கிரக குணகாரம் 165. ஆகச் சமுகம் 400-க்கு வியாழன் கொடுத்த வயது வருடம் 1, மாதம் 4.

## 6. சுக்கிரன் அஷ்ட வர்க்கம்

| | | |
|---|---|---|
| மேஷம் - 5 | சிம்மம் - 3 | தனுசு - 4 |
| ரிஷபம் - 3 | கன்னி - 4 | மகரம் - 4 |
| மிதுனம் - 4 | துலாம் - 6 | கும்பம் - 2 |
| கடகம் - 6 | விருச்சிகம் - 5 | மீனம் - 6 |

| | | | |
|---|---|---|---|
| 6 | 5 | 3 | 4 |
| 2 | பரல்கள் | | 6 |
| 4 | 52 | | 3 |
| 4 | 5 | 6 | 4 |

## திரிகோண சோதனை

| | | | |
|---|---|---|---|
| 5 | 3 | 3 | 2 |
| 2 | | | 5 |
| 3 | | | 3 |
| 3 | 5 | 2 | 3 |

| | |
|---|---|
| மேஷம், சிங்கம், தனுசு | - 9 |
| ரிஷபம், கன்னி, மகரம் | - 9 |
| மிதுனம், துலாம், கும்பம் | - 6 |
| கற்கடகம் விருச்சிகம் மீனம் | - 15 |
| | 39 |

ஆகப்பரல் 39-க்கு ஏழாமிடப் பரல் பெருக்கி, இருபத்தேழில் கழித்த மிச்சம் 21-க்குக் கார்த்திகை உத்திரம், உத்திராடத்தில் சனி வரும் காலம் களத்திர கஷ்டம். வியாழன் வரும் காலம் அனுகூலம்.

## ஏகாதிபத்தியம்

| | | | |
|---|---|---|---|
| 5 | 0 | 3 | 2 |
| 2 | | | 5 |
| 2 | | | 3 |
| 3 | 5 | 0 | 2 |

| | | |
|---|---|---|
| மேஷம் - 0 | சிம்மம் - 3 | தனுசு - 3 |
| ரிஷபம் - 3 | கன்னி - 2 | மகரம் - 2 |
| மிதுனம் - 2 | துலாம் - 0 | கும்பம் -2 |
| கடகம் - 5 | விருச்சிகம்- 5 | மீனம் - 5 |

ஆகப்பரல்கள் 32.

## சுக்கிரனின் இராசி குணகாரம்

| | | | |
|---|---|---|---|
| 60 | 0 | 30 | 16 |
| 22 | | | 20 |
| 10 | | | 30 |
| 27 | 40 | 0 | 10 |

| | | |
|---|---|---|
| மேஷம் - 0 | சிம்மம் - 30 | தனுசு - 27 |
| ரிஷபம் - 30 | கன்னி - 10 | மகரம் - 10 |
| மிதுனம் - 16 | துலாம் - 0 | கும்பம் - 22 |
| கடகம் - 20 | விருச்சிகம் - 40 | மீனம் - 60 |

ஆக இராசி குணகாரம் 265.

குறிப்பு : இதற்கு விளக்கம்

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 0 | 3 | 2 | 5 | 3 | 2 | 0 | 5 | 3 | 2 | 2 | 5 |
| இராசி குணகார எண்கள் | 7 | 10 | 8 | 4 | 10 | 5 | 7 | 8 | 9 | 5 | 11 | 12 |
| | 0 | 30 | 16 | 20 | 30 | 10 | 0 | 40 | 27 | 10 | 22 | 60 |

## சுக்கிரன் கிரக குணகாரம்

சூரியன் - 15
சந்திரன் - 15
செவ்வாய் - 24
புதன் - 15
வியாழன் - 50
சுக்கிரன் - 35
சனி - 10

ஆகக் கிரக குணகாரம் 171.

சுக்கிரனின் இராசி குணகாரம் 265. கிரக குணகாரம் 171. ஆக 436 - க்குச் சுக்கிரன் வயது வருடம் 2, மாதம் 3, நாள் 18.

## சனி அஷ்ட வர்க்கம்

மேஷம் - 4
ரிஷபம் - 4
மிதுனம் - 3
கடகம் - 3
சிம்மம் - 2
கன்னி - 2
துலாம் - 5
விருச்சிகம் - 1
தனுசு - 5
மகரம் - 3
கும்பம் - 4
மீனம் - 3

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | 4 | 3 |
| 4 | பரல்கள் 39 | | 3 |
| 3 | | | 2 |
| 5 | 1 | 5 | 2 |

## திரிகோண சோதனை

மேஷம், சிங்கம், தனுசு - 6
ரிஷபம், கன்னி, மகரம் - 6
மிதுனம், விருச்சிகம், மீனம் - 9
கற்கடகம், துலாம், கும்பம் - 3
24

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 2 | 3 |
| 3 | | | 1 |
| 2 | | | 2 |
| 2 | 1 | 3 | 2 |

ஆகப் பரல்கள் 24-க்கு எட்டாமிடம் பரல் கொண்டு பெருக்கி, இருபத்தேழில் கழித்த மிச்சம் 15-க்குத் திருவாதிரை, சோதி, சதயத்தில் சனி வருங்காலம் கஷ்டம். வியாழன் வருங்காலம் அனுகூலம்.

## ஏகாதி பத்தியம்

| | | | |
|---|---|---|---|
| 1 | 1 | 2 | 2 |
| 3 | | | 1 |
| 0 | | | 2 |
| 2 | 1 | 2 | 2 |

| | | |
|---|---|---|
| மேஷம் - 1 | சிம்மம் - 2 | தனுசு - 2 |
| ரிஷபம் - 2 | கன்னி - 2 | மகரம் - 0 |
| மிதுனம் - 2 | துலாம் - 2 | கும்பம் - 3 |
| கடகம் - 1 | விருச்சிகம் - 1 | மீனம் - 1 |

ஆகப் பரல்கள் 19

## சனியின் இராசி குணகாரம்

| | | | |
|---|---|---|---|
| 12 | 7 | 20 | 16 |
| 33 | | | 4 |
| 0 | | | 20 |
| 18 | 8 | 14 | 10 |

மேஷம் - 7 சிம்மம் - 20 தனுசு - 18
ரிஷபம் - 20 கன்னி - 10 மகரம் - 0
மிதுனம் - 16 துலாம் - 14 கும்பம் - 33
கடகம் - 4 விருச்சிகம் - 8 மீனம் - 12
ஆக இராசி குணகாரம் 150.

குறிப்பு: சனியின் இராசி குணகாரம் 162 என்று வரவேண்டும். சுவடியில் தவறாக உள்ளது.

இதற்கு விளக்கம்.

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| [illegible]டத்திய பரல்கள் | 1 | 2 | 2 | 1 | 2 | 2 | 2 | 1 | 2 | 0 | 3 | 1 |
| இராசி குணகார எண்கள் | 7 | 10 | 8 | 4 | 10 | 5 | 7 | 8 | 9 | 5 | 11 | 12 |
| | 7 | 20 | 16 | 4 | 20 | 10 | 14 | 8 | 18 | 0 | 33 | 12 |

## கிரக குணகாரம்

சூரியன் - 10 வியாழன் - 10
சந்திரன் - 10 சுக்கிரன் - 7
செவ்வாய் - 16 சனி - 15
புதன் - 10

ஆகக் கிரக குணகாரம் 78.

சனியின் இராசி குணகாரம் 150. கிரக குணகாரம் 78. ஆகச் சமூகம் 228-க்குச் சனி கொடுத்த வருடம் 7, மாதம் 7, நாள் 6.

குறிப்பு : இராசி குணகாரம் தவறாக 150 என்று கொடுக்கப்பட்டுள்ளதால் சனியின் சமூகம் 228 என்று வந்துள்ளது. இது 240 என்று வரவேண்டும். இதனால் சனி கொடுத்துள்ள வயது மாறுபடும்.

## சர்வாஷ்டக வர்க்கம்

| | | | |
|---|---|---|---|
| 29 | 26 | 33 | 25 |
| 29 | | | 26 |
| 23 | | | 25 |
| 28 | 23 | 34 | 34 |

பிரதமை கண்டம் 115
துவிதிகை கண்டம் 119
திரிதிகை கண்டம் 103
337

ஆகப்பரல் 337.
மீனம் முதல் மிதுனம் வரை பிரதமை கண்டம்
கடகம் முதல் துலாம் வரை துவிதிகை கண்டம்
விருச்சிகம் முதல் கும்பம் வரை திரிதிகை கண்டம்.

## திரிகோண சோதனை

| | | | |
|---|---|---|---|
| 23 | 25 | 23 | 25 |
| 25 | | | 23 |
| 23 | | | 25 |
| 25 | 23 | 25 | 23 |

மேடம், சிங்கம், தனுசு - 75
ரிஷபம், கன்னி, மகரம் - 69
மிதுனம், துலாம், கும்பம் - 75
கர்க்கடகம், விருச்சிகம், மீனம் - 69
288

ஆகப்பரல் 288.

## ஏகாதிபத்தியம்

| | | | |
|---|---|---|---|
| 23 | 23 | 23 | 23 |
| 25 | | | 23 |
| 0 | | | 25 |
| 25 | 23 | 23 | 23 |

| | | |
|---|---|---|
| மேஷம் - 23 | சிம்மம் - 25 | தனுசு - 25 |
| ரிஷபம் - 23 | கன்னி - 23 | மகரம் - 0 |
| மிதுனம் - 23 | துலாம் - 23 | கும்பம் - 25 |
| கடகம் - 23 | விருச்சிகம் - 23 | மீனம் - 23 |

ஆக இராசி குணகாரம் 259.

## சர்வாஷ்டக வர்க்க இராசி குணகாரம்

| | | | |
|---|---|---|---|
| 276 | 161 | 230 | 184 |
| 277 | | | 92 |
| 0 | | | 250 |
| 225 | 184 | 161 | 115 |

| | | |
|---|---|---|
| மேடம் - 161 | சிம்மம் - 250 | தனுசு - 225 |
| ரிஷபம் - 230 | கன்னி - 115 | மகரம் - 0 |
| மிதுனம் - 184 | துலாம் - 161 | கும்பம் - 275 |
| கடகம் - 92 | விருச்சிகம் - 184 | மீனம் - 276 |

ஆக இராசி குணகாரம் 2153.

குறிப்பு இதற்கு விளக்கம் :-

| இராசிகள் | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏகாதிபத்திய பரல்கள் | 23 | 23 | 23 | 23 | 25 | 23 | 23 | 23 | 25 | 0 | 25 | 23 |
| இராசி குணகாரங்கள் | 7 | 10 | 8 | 4 | 10 | 5 | 7 | 8 | 9 | 5 | 11 | 12 |
| | 161 | 230 | 184 | 92 | 250 | 115 | 161 | 184 | 225 | 0 | 275 | 276 |

## கிரக குணகாரம்

சூரியன் - 115
சந்திரன் - 125
செவ்வாய் - 200
புதன் - 115
வியாழன் - 230
சுக்கிரன் - 161
சனி - 125

ஆக கிரக குணகாரம் 1071 ஆக கிரக சமூகம் 3224

# நூல் - 3

## பன்னிரண்டாம் சருக்கம் - அஷ்ட வர்க்கம் [1]

## சூரியன் அஷ்ட வர்க்கம் - சூரியனின் பரல்கள் 8

123 செருக்கந்தான் அட்டவர்க்கப் பரலும் போட்டுச்
செஞ்சுடரும் நின்றமனை தன்னி லொன்று
பருக்கவே ரெண்டிலொன்று நாலி லொன்று
பகையேழு மனையினிலே ஒன்று போடு
கருக்கமாய் எட்டிலொன்று ஒன்பதி லொன்று
தொகையான பத்திலொன்று பதிலொன்றி லொன்று
இருக்கவே பரலெல்லாம் எண்ணிப் போடு
இசைவான பரலெட்டு இனிது கேளே. 123

(இ-ள்) ஒரு ஜாதகத்தில் அஷ்டவர்க்கத்தைக் கணிப்பதற்கு முதலில் இராசிச் சக்கரத்தில் சூரிய அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட்டு எழுத வேண்டும். சூரியன் தானிருக்கும் இராசியிலிருந்து 1,2,4,7,8,9,10,11 ஆகிய எட்டு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக எட்டுப் பரல்களைப் போடவேண் டும்.

## சூரியன் அஷ்ட வர்க்கம் - சந்திரனின் பரல்கள் - 4

2 கேளப்பா சந்திரனை முதலாய்க் கொண்டு
கெடியான மனைமூன்றில் ஒன்று போடு
மீளப்பா ஆறிலே ஒன்று போடு
விளங்கவே பத்திலே ஒன்று போடு
சூளப்பா பதினொன்றில் ஒன்று போடு
சுகமான பரல்நாலும் அறிந்து கொள்வாய்
வாரிப்பா செவ்வாய்மு தன்மை யாக
வைத்துஅதில் ஒன்றுவைத்து ரெண்டி லொன்றே. 124

(இ-ள்) சூரிய அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, சந்திரன் இருக்கும் இராசியை முதலாகக் கொண்டு 3,6,,10,11 ஆகிய நான்கு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக நான்கு பரல்களைப் போடவேண்டும். சூரிய அஷ்ட

---

சுவடி எண் 1975[c]

வர்க்கத்தைக் கணக்கிட, செவ்வாய் இருக்கும் இராசியை முதலாகக் கொண்டு ஒன்று, இரண்டு ஆகிய இராசிகளில் பரல்களைப் போட வேண்டும்.

**சூரியன் அஷ்ட வர்க்கம் - செவ்வாயின் பரல்கள் - 8**

3 ஒன்றுவிட்டு நாலிலே ஒன்று போடு
உத்ததொரு ஏழிலே ஒன்று போடு
நன்றெனவே எட்டிலே ஒன்று போடு
நயமான ஒன்பதிலே ஒன்று போடு
சென்றதொரு பத்திலே ஒன்று போடு
சீரான பதிலொன்றி லொன்று போடு
வென்றிதரும் பரலெட்டு பண்ணிப் போடு
விதவிதமாய் இந்தவகை அறிந்து பாரே. 125

(இ-ள்) மேலும் 4,7,8,9,10,11 ஆகிய ஆறு இராசிகளையும் சேர்த்து எட்டு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக எட்டுப் பரல்களைப் போடவேண்டும்.

**சூரியன் அஷ்ட வர்க்கம் - புதனின் பரல்கள் - 7**

4 அறிந்துபார் புதனாதி பனைய மாக
அதுகடந்து மூன்றிலே ஒன்று போடு
செறிந்துவிடும் அஞ்சிலே ஒன்று போடு
சீரான ஆறிலே ஒன்று போடு
பிரிந்ததொரு ஒன்பதிலே ஒன்று போடு
பேசியதோர் பத்திலே ஒன்று போடு
குறித்தபதி னொன்றிலொன்று பனிரெண்டி லொன்று
குணமான பரலேழு எண்ணிப் போடே. 126

(இ-ள்) சூரிய அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, புதன் இருக்கும் இராசியில் இருந்து 3,5,6,9,10,11,12 ஆகிய ஏழு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஏழு பரல்களைப் போட வேண்டும்.

## சூரியன் அஷ்ட வர்க்கம் - குருவின் பரல்கள் - 4

5 எண்ணுவாய் வியாழனின்ற மனைதா னாதி
இசையவே மனையஞ்சில் ஒன்று போடு
ஊணவே ஆறிலொன்று வைத்துப் போடு
ஒன்பதிலே ஒன்றுவைத்துத் திரும்பக் கேளு
நண்ணவே பதினொன்றில் ஒன்று போடு
நாலுபரல் இதுதவறி நாட்டக் கேளு
பண்ணவே பரலெண்ணி வைத்துக் கொண்டு
பதிவான சுக்கிரர்க்குப் பரலைக் கேளே! 127

(இ.ள்) சூரிய அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட குரு இருக்கும் இராசியிலிருந்து 5,6,9,11 ஆகிய நான்கு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக நான்கு பரல்களைப் போட வேண்டும்.

## சூரியன் அஷ்ட வர்க்கம் - சுக்கிரனின் பரல்கள் - 3

6 சுக்கிரனும் பாதியாய் மூன்றாம் வீட்டில்
சுகமான பரலொன்று துணிந்து போடு
தக்கதோர் ஏழிலே ஒன்று போடு
சாத்தியதோர் பனிரெண்டில் ஒன்று போடு
மிக்கதோர் சுக்கிரர்க்குப் பரல்மூன் றாக
வேண்டியே இந்தபரலை விளங்க வைத்து
அக்கரவம் பூண்டவன் அருளுண் டானால்
அகத்திசர் வாக்கருளால் உரைத்திட் டேனே.
128

(இ-ள்) சூரியனுடைய அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட சுக்கிரன் இருக்கும் இராசியிலிருந்து 6,7,12 ஆகிய மூன்று இராசிகளில் ஒவ்வொரு இராசியிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக மூன்று பரல்களைப் போட வேண்டும். இதனை எலும்பையும் அணிந்திருக்கும் சிவபெருமானின் அருளால் அகத்திசர் அறிய, அவரருளால் இன்று எடுத்துரைக்கின்றேன்.

## சூரியன் அஷ்ட வர்க்கம் - சனியின் பரல்கள் - 8

7 உரைத்திட்டேன் சனிமனையில் ஒன்று போடு
ஓங்கியதோர் ரெண்டிலே ஒன்று போடு
நிரைத்திட்ட நாலிலே ஒன்று போடு
நிரைத்ததொரு ஏழிலே ஒன்று போடு
விரைதிடவே எட்டிலே ஒன்று போடு
விளங்கவே ஒன்பதொன்று பத்தி லொன்று
இரைத்தபதி லொன்றிலே ஒன்று போட்டு
எட்டான பரலதுக்கு இசைந்து போடே. 129

(இ.ள்) சூரியனுடைய அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, சனி இருக்கும் இராசியில் இருந்து 1,2,4,7,8,9,10,11 ஆகிய எட்டு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக எட்டுப் பரல்களைப் போட வேண்டும்.

## சூரியன் அஷ்ட வர்க்கம் - இராகுவின் பரல்கள் - 6

8 போடவே இராகுதனை முதலாய் வைத்துப்
புகலவே முதல்வீட்டில் ஒன்று போடு
சாடவே ரெண்டிலே ஒன்று போடு
தயவான ஏழிலே ஒன்று போடு
நாடவே ஒன்பதிலே ஒன்று போடு
நயமான பதினொன்றில் ஒன்று போடு
கூடவே பரலாறு துணிந்து போட்டுச்
சொல்லவே இன்னமொன்று சொல்லக் கேளே!
130

(இ-ள்) சூரியனின் அட்டக வர்க்கத்தைக் கணக்கிட, இராகு நிற்கும் இராசியிலிருந்து 1,2,7,9,11 ஆகிய இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாகப் போட வேண்டும்.

---

சூரியனின் அட்டவர்க்கத்தில் இராகுவின் பரல்களாக, 1,2,7,9,11 ஆகிய பரல்கள் கூறப்பட்டுள்ளன. ஆனால், நான்காம் பாடலடியில் பரல் ஆறு என்று கூறப்பட்டுள்ளது இங்குச் சுட்டத்தக்கது.

## சூரியன் அஷ்ட வர்க்கம் - கேதுவின் பரல்கள் - 6

9 சொல்லவே கேதுவை முதலாய் வைத்துச்
சுகமான முதல்வீட்டடில் ஒன்று போடு
நல்லதொரு மூன்றிலே ஒன்று போடு
நாலிலே ஒன்றுவைத்து ஆறி லொன்று
வெல்லுமே ஒன்பதிலே ஒன்று போடு
விரும்பியே பனிரெண்டில் ஒன்று போட்டு
செல்லுமே பரலாறு எண்ணிப் போடு
தேனேகேள் ! பின்னுமொரு இசைந்து கூறே.
131

(இ-ள்) சூரியனுடைய அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, கேது நிற்கும் இராசியிலிருந்து 1,3,4,6,9,12 ஆகிய ஆறு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஆறு பரல்களைப் போட வேண்டும்.

## சூரியன் அஷ்ட வர்க்கம் - இலக்கினத்தின் பரல்கள் - 6

10 இசையவே லக்கனத்தின் மூன்றாம் வீட்டில்
இருந்ததொரு நாலிலே ஒன்று போடு
இசைந்ததொரு ஆறிலே ஒன்று போடு
இணங்கியதோர் பத்திலே ஒன்று போடு
அசையாத பதினொன்றில் ஒன்று போடு
அன்பான பனிரெண்டில் ஒன்று போடு
நிசந்ததொரு பரலெல்லாம் போட்டுப் பார்த்து
நீங்காத சூரியர்க்கு அறுப தாமே. 132

(இ.ள்) சூரியனின் அஷ்ட வர்க்கங்களைக் கணக்கிட சொன்ன இராசி முதலாக 3,4,6,10,11,12 ஆகிய ஆறு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலை ஆறு பரல்களைப் போட வேண்டும். இவ்வாறாகச் சூரிய அஷ்ட வர்க்கத்தில் அறுபது பரல்கள் வரக் காணலாம்.

| | | |
|---|---|---|
| சூரியன் | - 1,2,4,7,8,9,10,11 | = 8 |
| சந்திரன் | - 3,6,10,11 | = 4 |

| | | |
|---|---|---|
| செவ்வாய் | - 1,2,4,7,8,9,10,11 | = 8 |
| புதன் | - 3,5,6,9,10,11,12 | = 7 |
| குரு | - 5,6,9,11 | = 4 |
| சுக்கிரன் | - 6,7,12 | = 3 |
| சனி | - 1,2,4,7,8,9,10,11 | = 8 |
| இராகு | - 1,2,7,9,11,12 | = 6 |
| கேது | - 1,3,4,6,9,12 | = 6 |
| இலக்கினம் | - 3,4,6,10,11,12 | = 6 |
| | | 60 |

## சந்திரன் அஷ்டவர்க்கம்

### சந்திரன் அஷ்ட வர்க்கம் - சூரியனின் பரல்கள் - 6

11. ராமப்பா சந்திரனார் அட்ட வர்க்கம்
நல்லதொரு ஆதித்தன் முதலாய் வைத்து
வேமப்பா மூன்றிலே ஒன்று போடு
வேண்டியதோர் ஆறிலே ஒன்று போடு
தாறப்பா ஏழிலே ஒன்று போடு
சுகமெட்டி லொன்றுவைத்துப் பத்தி லொன்று
தாமப்பா பதினொன்றில் ஒன்று போடு
சாற்றினோம் வரலாறு தயவு தானே 133

(இ.ள்) சந்திரனின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, சூரியன் நின்ற இராசி முதலாக 3,6,7,8,10,11 ஆகிய ஆறு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஆறு பரல்களைப் போட வேண்டும்.

### சந்திரன் அஷ்ட வர்க்கம் - சந்திரனின் பரல்கள் - 6

12 தயவுதனான் சந்திரனை ஆதி யாகத்
தரித்ததொரு ஒன்றிலே ஒன்று போடு
மயமான மூன்றிலே ஒன்று போடு
வெறுத்ததோர் ஆறிலே ஒன்று போடு
சியமான ஏழிலே ஒன்று போடு
திறமான பத்திலே ஒன்று போடு

தயமான பதினொன்றில் ஒன்று போடு
நல்லதொரு பரலாறு நாடிப் பாரே. 134

(இ.ள்) சந்திரனின் அஷ்டக வர்க்கத்தைக் கணக்கிட, சந்திரன் நின்ற இராசி முதலாக 1,3,6,7,10,11 ஆகிய ஆறு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஆறு பரல்களைப் போட வேண்டும்.

## சந்திரன் அஷ்ட வர்க்கம் - செவ்வாயின் பரல்கள் - 7

13 நாடியே செவ்வாய்க்கு ஆதி யாக
ரெண்டிலே ஒன்றுவைத்து மூன்றிலொன்று போடு
கூடியே அஞ்சிலே ஒன்று போடு
குணமாக ஆறிலே ஒன்று போடு
தேடியே ஒன்பதிலே ஒன்று போடு
சியலான பத்திலே ஒன்று போடு
நீடியே பதினொன்றில் ஒன்று போட்டு
நிச்சயமாய்ப் பரலேழு நிறுத்திப் போடே. 135

(இ.ள்) சந்திரனின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, செவ்வாய் நின்ற இராசியை முதலாக வைத்து 2,3,5,6,9,10,11 ஆகிய ஏழு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலக ஏழு பரல்களைப் போட வேண்டும்.

## சந்திரன் அஷ்ட வர்க்கம் - புதனின் பரல்கள் - 8

14 போடவே புதனுக்கு ஆதி யாகப்
புகழாக ஒன்றிலே ஒன்று போட்டு
தேடவே மூன்றிலொன்று நாலி லொன்று
சியலான அஞ்சிலொன்று ஏழி லொன்று
கூடவே எட்டிலே ஒன்று போடு
குணமான பத்திலே ஒன்று போடு
சாடவே பதினொன்றில் ஒன்று போடு
தயவான பரலெட்டும் சாத்தி னோமே.

(இ.ள்) சந்திரனுடைய அஷ்டக வர்க்கத்தைக் கணக்கிட புதன் நின்ற இராசியை முதலாக வைத்து 1,3,4,5,7,8,10,11ஆகிய

இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக எட்டுப் பரல்களைப் போட வேண்டும்.

### சந்திரன் அஷ்ட வர்க்கம் - குருவின் பரல்கள் - 7

15 சாத்தினோம் வியாழனுக்கு ஆதி யாகத்
தயவாக முதலொன்று ரெண்டி லொன்று
ஏத்தியதோர் நாலிலொன்று ஏழில் ஒன்று
அதிகமாக எட்டிலொன்று போட்டு அப்பால்
பாத்திருக்கும் பத்திலே ஒன்று போடு
பண்பாகப் பரலெடுத்து இன்னம் கேளு
வீத்திருக்கும் பதினொன்றில் ஒன்று போடு
விபரமாய் ஏழுபரல் அறிந்து போடே. 137

(இ.ள்) சந்திரனின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, குரு நின்ற இராசி முதலாக வைத்து1,2,4,7,8,10,11 ஆகிய ஏழு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஏழு பரல்களைப் போட வேண்டும்.

### சந்திரன் அஷ்ட வர்க்கம் - சுக்கிரனின் பரல்கள் - 7

16 அறிந்துபார் சுக்கிரர்க்கு ஆதி யாக
அதுகடந்து மூன்றிலே ஒன்று போடு
செறிந்ததொரு நாலிலே ஒன்று போடு
திறமான அஞ்சிலே ஒன்று போடு
பிரிந்ததொரு ஏழிலே ஒன்று போடு
பேசியதோர் ஒன்பதிலே ஒன்று போடு
குறிந்ததொரு பத்திலொன்று பதினொன்றி லொன்று
குணமான பரலேழு கூர்ந்து பாரே. 138

(இ.ள்) சந்திரனின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, சுக்கிரன் நின்ற இராசியை முதலாக வைத்து 3,4,5,7,9,10,11 ஆகிய ஏழு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஏழு பரல்களைப் போட வேண்டும்.

### சந்திரன் அஷ்ட வர்க்கம் - சனியின் பரல்கள் - 4

17 கூர்ந்துபார் சனிதனையும் முதலாய் வைத்து
குணமாக மூன்றிலே ஒன்று போடு
சாந்தமாய் அஞ்சிலே ஒன்று போடு
சாத்திநோம் ஆறிலே ஒன்று போடு
ஏந்துமே பதினொன்றில் ஒன்று போடு
இனிதான பரல்நாலு இணங்கக் கேளு
ஆய்ந்துபார் சந்தரமே அட்ட வர்க்கம்
அவரவர்தம் மனதுடனே அறிந்து போடே
139

(இ.ள்) சந்திரனின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, சனி நின்ற இராசியை முதலாக வைத்து 3,5,6,11 ஆகிய நான்கு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக நான்கு பரல்களைப் போட வேண்டும்.

### சந்திரன் அஷ்ட வர்க்கம் - இராகுவின் பரல்கள் - 6

18 அறிந்துபார் ராகுதனை முதலாய் வைத்து
ஆதிமனை தன்னிலே ஒன்று போடு
செரிந்ததொரு ரெண்டிலே ஒன்று போடு
சியவாக மூன்றிலே ஒன்று போடு
பிரிந்துவிடா தொன்பதிலே ஒன்று போடு
பெரிதாகப் பத்திலே ஒன்று போடு
குறித்ததொரு பதினொன்றில் ஒன்று போடு
குணமாகப் பரலாறுங் குறித்துப் பாரே. 140

(இ.ள்) சந்திரனின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட இராகு நின்ற இராசியை முதலாகக் கொண்டு, 1,2,3,9,10,11 ஆகிய ஆறு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஆறு பரல்களைப் போட வேண்டும்.

### சந்திரன் அஷ்ட வர்க்கம் - கேதுவின் பரல்கள் - 6

19 குறியான கேதுவையும் முதலாய் வைத்து
குணமான முதல்மனையில் ஒன்று போடு

நெறியாக மூன்றிலே ஒன்று போடு
　　　　நீங்காத நாலிலே ஒன்று போடு
செறிவான ஆறிலே ஒன்று போடு
　　　　சிறந்ததொரு ஒன்பதிலே ஒன்று போடு
அரியவே பனிரெண்டில் ஒன்று போடு
　　　　ஆறுபரல் கேதுவுக்கு அறிந்து செய்யே 141

(இ.ள்) சந்திரனின் அஷ்டக வர்க்கத்தைக் கணக்கிட கேது நின்ற இராசியை முதலாக வைத்து 1,3,4,6,9,12 ஆகிய ஆறு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஆறு பரல்களைப் போட வேண்டும்.

## சந்திரன் அஷ்ட வர்க்கம் - இலக்கனத்தின் பரல்கள் - 6

20 செய்யவே இலக்கனத்தை ஆதி யாகத்
　　　　திடமாக மூன்றிலே ஒன்று போடு
பைய்யவே ஆறிலே ஒன்று போடு
　　　　பதிவான பத்திலே ஒன்று போடு
நையவே பதினொன்றில் ஒன்று போடு
　　　　நலமான பரல்நாலும் நாட்டிப் பாரு
பொய்யாது அறுபத்து ஒன்றே யாகும்
　　　　புகழான பரலதுவும் புனித மாமே. 142

(இ.ள்) சந்திரனின் அஷ்டக வர்க்கத்தைக் கணக்கிட, இலக்கனத்தை முதலாகக் கொண்டு 3,6,10,11 ஆகிய நான்கு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக நான்கு பரல்களைப் போட வேண்டும். இவ்வாறாகச் சந்திர அஷ்டக வர்க்கத்தில் அறுபத்து ஒரு பரல்கள் வரக் காணலாம்.

| | | |
|---|---|---|
| சூரியன் | - 3,6,7,8,10,11 | = 6 |
| சந்திரன் | - 1,3,6,7,10,11 | = 6 |
| செவ்வாய் | - 2,3,5,6,9,10,11 | = 7 |
| புதன் | - 1,3,4,5,7,8,10,11 | = 8 |
| குரு | - 1,2,4,7,8,10,11 | = 7 |

| | | |
|---|---|---|
| சுக்கிரன் | - 3,4,5,7,9,10,11 | = 7 |
| சனி | - 3,5,6,11 | = 4 |
| இராகு | - 1,2,3,9,10,11 | = 6 |
| கேது | - 1,3,4,6,9,12 | = 6 |
| இலக்கனம் | - 3,6,10,11 | = 4 |
| | | 61 |

## செவ்வாயின் அஷ்டவர்க்கம் பரல்கள் 59

## செவ்வாயின் அஷ்ட வர்க்கம் - சூரியனின் பரல்கள் - 5

21 புனிதமாய் செவ்வாயின் அட்ட வர்க்கம்
புகழான சூரியர்க்கு முதலாய் வைத்துத்
தனியான மூன்றிலே ஒன்று போடு
தயவான அஞ்சிலே ஒன்று போடு
இனிதான ஆறிலே ஒன்று போடு
இணங்கவே பத்திலே ஒன்று போடு
கனிவான பதினொன்றில் ஒன்று போடு
கலங்காமல் பரலஞ்சு கண்டு பாரே. 143

(இ.ள்) செவ்வாயின் அஷ்டக வர்க்கத்தைக் கணக்கிட, சூரியன் நின்ற இராசியை முதலாக வைத்து 3,5,6,10,11 ஆகிய ஐந்து இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஐந்து பரல்களைப் போட வேண்டும்.

## செவ்வாயின் அஷ்ட வர்க்கம் - சந்திரனின் பரல்கள் - 3

22 கண்டுபார் சந்திரர்க்கு முதலாய் வைத்து
கணக்காகப் பரல்போட வகையைக் கேளு
சென்றுபார் மூன்றிலே ஒன்று போடு
திடமான ஆறிலே ஒன்று போடு
வேண்டுமே பதினொன்றில் ஒன்று போடு
விதவிதமாய்ப் பரல்மூன்று மேவிக் கேளு
நன்றாகப் பரலெல்லாம் தவறா மல்தான்
நலமான மனைகளிலே எண்ணி வையே. 144

(இ.ள்) செவ்வாயின் அஷ்டக வர்க்கத்தைக் கணக்கிட, சந்திரன் நின்ற இராசியை முதலாக வைத்து 3,6,11 ஆகிய மூன்று இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக மூன்று பரல்களைப் போட வேண்டும்.

## செவ்வாயின் அஷ்ட வர்க்கம் - செவ்வாயின் பரல்கள் - 7

23 எண்ணியே செவ்வாயை முதலாய் வைத்து
இணங்கவே முதல்வீட்டில் ஒன்று போடு
நண்ணியே ரெண்டிலே ஒன்று போடு
நலமான நாலிலே ஒன்று போடு
புண்ணியமாய் ஏழிலே ஒன்று போடு
புகழாக எட்டிலே ஒன்று போடு
வண்ணமாய்ப் பத்திலொன்று பதினொன்றி லொன்று
வலுவானப் பரல்ஏழும் வணக்கம் பாரே.

145

(இ.ள்) செவ்வாயின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, செவ்வாய் நின்ற இராசியை முதலாக வைத்து, 1,2,4,7,8,10,11 ஆகிய ஏழு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஏழு பரல்களைப் போட வேண்டும்.

## செவ்வாயின் அஷ்ட வர்க்கம் - புதனின் பரல்கள் - 5

24 வணக்கமாய்ப் புதன்தனக்குப் பரலைக் கேளு
மைந்தனே முதல்வீடு பதியே யாக
குணங்காமல் மூன்றிலே ஒன்று போடு
குணமாக அஞ்சிலே ஒன்று போடு
இணக்கமாய் ஆறிலே ஒன்று போடு
இன்பமாய்ப் பதினொன்றில் ஒன்று போடு
மணக்கவே அவரவர்கள் மனையில் நின்று
வைத்ததொரு பரல்நாலும் மகிழ்ந்து கேளே.

146

(இ.ள்) செவ்வாயின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, புதன் நின்ற இராசியை முதலாக வைத்து 3,5,6,11 ஆகிய நான்கு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக நான்கு பரல்களைப் போட வேண்டும்.

## செவ்வாயின் அஷ்ட வர்க்கம் - குருவின் பரல்கள் - 4

25 கேளுமே வியாழனுக்கு முதலாய் வைத்து
கெடியாக மனைதோறும் எண்ணிப் பார்த்து
வாளுநீ ஆறிலே ஒன்று போடு
மைந்தனே பத்திலே ஒன்று போடு
தாழ்வுமே வாராது மனைகள் தன்னில்
சாற்றினோம் பதினொன்றில் ஒன்று போடு
கோளுமே வாராது பனிரெண்டி லொன்று
குணமான பரல்நாலுங் குறித்து பாரே. 147

(இ.ள்) செவ்வாயின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, குரு நின்ற இராசியை முதலாக வைத்து 6,10,11,12 ஆகிய நான்கு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக நான்கு பரல்களைப் போட வேண்டும்.

## செவ்வாயின் அஷ்ட வர்க்கம் - சுக்கிரனின் பரல்கள் - 4

26 பாரப்பா சுக்கிரர்க்கு முதலாய் வைத்துப்
பரலெண்ணி ஆறினிலே ஒன்று போடு
திரப்பா மனையெண்ணி எட்டி லேதான்
சிறப்பாக ஒன்றுவைத்து நிடம்பக் கேளு
சாரப்பா பரலெண்ணி பதினொன்றி லேதான்
தயவான பரலொன்று போடு போடு
ஆரப்பா பனிரெண்டி லொன்று போடு
அதுபரலாம் நாலென்று அறிவித் தேனே. 148

(இ.ள்) செவ்வாயின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, சுக்கிரன் நின்ற இராசியை முதலாக வைத்து 6,8,11,12 ஆகிய

நான்கு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக நான்கு பரல்களைப் போட வேண்டும்.

## செவ்வாயின் அஷ்ட வர்க்கம் - சனியின் பரல்கள் - 7

27 அறிவத்தான் சனிபதனை முதலாய் வைத்து
அன்பாக ஆறிலொன்று அறிந்து போடு
பிரிவித்தே நாலிலே ஒன்று போடு
பேச்சரிய ஏழிலே ஒன்று போடு
குறித்துவைத்த எட்டிலே ஒன்று போடு
குணங்காமல் ஒன்பதிலே ஒன்று போடு
நெறிவித்த பத்திலொன்று பதினொன்றி லொன்று
நீங்காமல் ஏழுபரல் நிறுத்திப் பாரே. 149

(இ.ள்) செவ்வாயின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, சனி நின்ற இராசியை முதலாக வைத்து 4,6,7,8,9,10,11 ஆகிய ஏழு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஏழு பரல்களைப் போட வேண்டும்.

## செவ்வாயின் அஷ்ட வர்க்கம் - இராகுவின் பரல்கள் - 6

28 பாரப்பா இராகுவையும் முதலாய் வைத்துப்
பாங்கான முதவீட்டில் ஒன்று போடு
தீரப்பா ரெண்டிலே ஒன்று போடு
திறமான ஏழிலே ஒன்று போடு
தாரப்பா ஒன்பதிலே ஒன்று போடு
தயவான பத்திலே ஒன்று போடு
ஆரப்பா பதினொன்றில் ஒன்று போடு
ஆறுபரல் இதுவென்று அறிந்து பாரே. 150

(இ.ள்) செவ்வாயின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, இராகு நின்ற இராசியை முதலாகக் கொண்டு 1,2,7,9,10,11 ஆகிய ஆறு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஆறு பரல்களைப் போட வேண்டும்.

## செவ்வாயின் அஷ்ட வர்க்கம் - கேதுவின் பரல்கள் - 5

29 அறிந்துபார் கேதுவையும் முதலாய் வைத்து
அன்பாகக் கேதுவீட்டில் ஒன்று போடு
நெறிந்ததொரு மூன்றிலே ஒன்று போடு
நீங்காமல் ஆறிலே ஒன்று போடு
செறிந்ததொரு ஒன்பதிலே ஒன்று போடு
சீரான பனிரெண்டில் ஒன்று போடு
அறிந்துமே பரலஞ்சு எண்ணிப் பார்த்து
அப்பனே திறமாக நிறுத்திப் பாரே. 151

(இ.ள்) செவ்வாயின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, கேது நின்ற இராசியை முதலாகக் கொண்டு, 1,3,6,9,12 ஆகிய ஐந்து இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஐந்து பரல்களைப் போட வேண்டும்.

## செவ்வாயின் அஷ்ட வர்க்கம் - இலக்கினத்தின் பரல்கள் - 5

30 நிறுத்திப்பார் இலக்கினத்தில் ஒன்று போடு
நினைவாக மூன்றிலே ஒன்று போடு
மறுத்துமே ஆறிலே ஒன்று போடு
வகையான பத்திலே ஒன்று போடு
செரிவித்து மனையெண்ணிப் பார்த்துப் பார்த்து
திடமாகப் பதினொன்றில் ஒன்று போடு
அரிவிடுமே பரலஞ்சும் எண்ணிச் செவ்வாய்
ஆகபரல் ஐம்பத்தாம் என்ப தாமே. 152

(இ.ள்) செவ்வாயின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, இலக்கனத்தை முதலாக வைத்து 1,3,6,10,11 ஆகிய ஐந்து இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஐந்து பரல்களைப் போட வேண்டும். இவ்வாறாகச் செவ்வாய் அஷ்ட வர்க்கத்தில் மொத்தம் 50 பரல்கள் வரக் காணலாம்.

| | | |
|---|---|---|
| சூரியன் | - 3,5,6,10,11 | = 5 |
| சந்திரன் | - 3,6,11 | = 3 |
| செவ்வாய் | - 1,2,4,7,8,10,11 | = 7 |
| புதன் | - 3,5,6,11 | = 4 |
| குரு | - 6,10,11,12 | = 4 |
| சுக்கிரன் | - 6,8,11,12 | = 4 |
| சனி | - 4,6,7,8,9,10,11 | = 7 |
| இராகு | - 1,2,7,9,10,11 | = 6 |
| கேது | - 1,3,6,9,12 | = 5 |
| இலக்கினம் | - 1,3,6,10,11 | = 5 |
| | | 50 |

## புதன் அஷ்டவர்க்கம் - 66

### புதன் அஷ்டவர்க்கம் - சூரியனின் பரல்கள் - 5

31 தரமேவு புதனுடைய அட்ட வர்க்கம்
தயவாகச் சூரியனை முதலாய் வைத்து
பூமேவும் அஞ்சிலே ஒன்று போடு
புகழான ஆறிலே ஒன்று போடு
நாமேவும் ஒன்பதிலே ஒன்று போடு
நயமான பதினொன்றில் ஒன்று போடு
வாமேவு பனிரெண்டில் ஒன்று போடு
வகையாகப் பரலஞ்சு விழுந்து வாயே, 153

(இ.ள்) புதனுடைய அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, சூரியன் நின்ற இராசியை முதலாகக் கொண்டு 5,6,9,11,12 ஆகிய ஐந்து இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஐந்து பரல்களைப் போட வேண்டும்.

### புதன் அஷ்டவர்க்கம் - சந்திரனின் பரல்கள் - 6

32 வாயேது சந்திரர்க்கு முதலாய் வைத்து
வளம்பெறவே ரெண்டிலே ஒன்று போடு
நீயேது நாலிலே ரெண்டு போடு
நினைவாக ஆறிலே ஒன்று போடு

காயேது எட்டிலே ஒன்று போடு
கருத்தான பத்திலே ஒன்று போடு
மாயமாய் பதினொன்றில் ஒன்று போடு
வளமான பரலாறு வரிசை தானே. 154

(இ.ள்) புதனுடைய அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, சந்திரன் நின்ற இராசியை முதலாகக் கொண்டு 2,4,6,8,10,11 ஆகிய ஆறு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஆறு பரல்களைப் போட வேண்டும்.

### புதன் அஷ்டவர்க்கம் - சூரியனின் பரல்கள் - 8

33 தானேகேள் செவ்வாயை முதலாய் வைத்துத்
தயவான முதல்வீட்டில் ஒன்று போடு
ஆனதொரு ரெண்டிலொன்று நாலில் ஒன்று
அன்பான ஏழிலொன்று எட்டி லொன்று
மானமாய் ஒன்பதிலே ஒன்று போடு
மைந்தனே பத்திலே ஒன்று போடு
ஏனமாய்ப் பதினொன்றில் ஒன்று போடு
இன்பமாய்ப் பரலெட்டு இன்னங் கேளே.
155

(இ.ள்) புதனுடைய அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட செவ்வாய் நின்ற இராசியை முதலாகக் கொண்டு, 1,2,4,7,8,9,10,11 ஆகிய எட்டு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக எட்டுப் பரல்களைப் போட வேண்டும்.

### புதன் அஷ்டவர்க்கம் - புதனின் பரல்கள் - 8

34 இன்னங்கேள் புதன்தனையும் முதலாய் வைத்து
இணங்கவே முதல்வீட்டில் ஒன்று போடு
சொன்னதொரு மூன்றிலொன்று அஞ்சி லொன்று
சுகமான ஆறிலே ஒன்று போடு
அன்னமது ஒன்பதிலே ஒன்று போடு
அதிவிட்டுப் பத்திலொன்று பதினொன்றி லொன்று
பொன்னதுபோல் பனிரெண்டில் ஒன்று போடு
புகழான பரலெட்டும் புனிதம் தானே. 156

(இ.ள்) புதனின் அஷ்டக வர்க்கத்தைக் கணக்கிட, புதன் நின்ற இராசியை முதலாக வைத்து 1,3,5,6,9,10,11,12 ஆகிய எட்டு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக எட்டு பரல்களைப் போட வேண்டும்.

**புதன் அஷ்டவர்க்கம் - குருவின் பரல்கள் - 4**

35 புனிதமாய் வியாழன்மனை ஆதி யாகப்
புகழ்பெறவே ஆறிலே ஒன்று போடு
இனிதான மனையெட்டில் ஒன்று போடு
இன்பமாய்ப பதினொன்றில் ஒன்று போடு
கனிவான பன்னிரெண்டில் ஒன்று போடு
கருத்தான பரல்நாலுங் கண்டு போடு
வினைதீரும் அட்டவர்க்கப் பரலெல் லாந்தான்
மெய்யாகக் கைமுறையாய் எண்ணிப் போடே.
157

(இ.ள்) புதனின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, குரு நின்ற இராசியை முதலாகக் கொண்டு, 6,8,11,12 ஆகிய நான்கு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக நான்கு பரல்களைப் போட வேண்டும்.

**புதன் அஷ்டவர்க்கம் - சுக்கிரனின் பரல்கள் - 8**

36 போடவே சுங்கனையும் முதலாய் வைத்துப்
பொறிவான முதல்மனையில் ஒன்று போடு
சாடவே ரெண்டிலே ஒன்று போடு
தயவான மூன்றிலே ஒன்று போடு
கூடவே நாலிலே ஒன்று போடு
குணமான அஞ்சிலொன்று எட்டி லொன்று
பாடவே ஒன்பதொன்று பதினொன்று லொன்று
பட்சமாய்ப் பரலெட்டுப் பாடி னோமே.
158

(இ.ள்) புதனின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட சுக்கிரன் நின்ற இராசியை முதலாகக் கொண்டு, 1,2,3,4,5,8,9,11 ஆகிய

எட்டு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக எட்டுப் பரல்களைப் போட வேண்டும்.

### புதன் அஷ்டவர்க்கம் - சனியின் பரல்கள் - 8

37 பாடியே சனியதனை முதலாய் வைத்துப்
பதிவான முதல்மனையில் ஒன்று போடு
தேடியே ரெண்டிலொன்று நாலி லொன்று
செயமான ஏழிலொன்று எட்டி லொன்று
கூடியே ஒன்பதிலே ஒன்று போடு
குணமான பத்திலே ஒன்று போடு
சாடியே பதினொன்றில் ஒன்று போடு
சரியான பரலெட்டுச் சாத்தி னோமே.
159

(இ.ள்) புதனின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, சனி நின்ற இராசியை முதலாகக் கொண்டு 1,2,4,7,8,9,10,11 ஆகிய எட்டு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாகப் போட வேண்டும்.

### புதன் அஷ்டவர்க்கம் - இராகுவின் பரல்கள் - 6

38 சாத்தியே இராகுவையும் முதலாய் வைத்துச்
சங்கையாய் முதல்வீட்டில் ஒன்று போடு
போற்றியே ரெண்டிலே ஒன்று போடு
புகலவே ஏழிலே ஒன்று போடு
பார்த்திடவே ஒன்பதிலே ஒன்று போடு
பதிவான பத்திலே ஒன்று போடு
கார்த்திடவே பதினொன்றில் ஒன்று போடு
கண்டாயே ஆறுபரல் கலந்து கூறே. 160

(இ.ள்) புதனின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, இராகு நின்ற இராசியை முதலாகக் கொண்டு, 1,2,7,9,10,11 ஆகிய ஆறு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஆறு பரல்களைப் போட வேண்டும்.

## புதன் அஷ்டவர்க்கம் - கேதுவின் பரல்கள் - 6

39 கூறக்கேள் கேதுவையும் முதலாய் வைத்து
குணமான முதல்வீட்டில் ஒன்று போடு
தேறவே மூன்றிலே ஒன்று போடு
சித்தியாய் நாலிலே ஒன்று போடு
மாறவே ஆறிலே ஒன்று போடு
வரிசையாய் ஒன்பதிலே ஒன்று போடு
மீறவே பனிரெண்டில் ஒன்று போடு
மிக்கதொரு பரலாறு சங்கை தானே. 161

(இ.ள்) புதனின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட கேது நின்ற இராசியை முதலாகக் கொண்டு, 1,3,4,6,9,12 ஆகிய ஆறு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஆறு பரல்களைப் போட வேண்டும்.

## புதன் அஷ்டவர்க்கம் - இலக்கினத்தின் பரல்கள் - 8

40 சங்கையாய் இலக்கனத்தில் ஒன்று போடு
சமையாக ரெண்டிலே ஒன்று போடு
சங்கையாய் நாலிலே ஒன்று போடு
தலையான ஆறிலே ஒன்று போடு
சங்கையாய் எட்டிலே ஒன்று போடு
தமிழ்பெருகும் பத்திலொன்று பதினொன்றி லொன்று
பொங்குமது பரலேழு தொகையோ டெல்லாம்
புகழான அறுபத்தாறால் பூட்டு வாயே. 162

(இ.ள்) புதனின் அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, இலக்கினத்தை முதலாகக் கொண்டு, 1,2,4,6,8,10,11 ஆகிய ஏழு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஏழு பரல்களைப் போடவேண்டும். இவ்வாறாகப் புதன் அஷ்ட வர்க்கத்தில் மொத்தம் அறுபத்து ஆறு பரல்கள் வரக் காணலாம்.

| | | |
|---|---|---|
| சூரியன் | - 5,6,9,11,12 | = 5 |
| சந்திரன் | - 2,4,6,8,10,11 | = 6 |

| | | |
|---|---|---|
| செவ்வாய் | - 1,2,4,7,8,9,10,11 | = 8 |
| புதன் | - 1,3,5,6,9,10,11,12 | = 8 |
| குரு | - 6,8,11,12 | = 5 |
| சுக்கிரன் | - 1,2,3,4,5,8,9,11 | = 8 |
| சனி | - 1,2,4,7,8,9,10,11 | = 8 |
| இராகு | - 1,2,7,9,10,11 | = 6 |
| கேது | - 1,3,4,6,9,12 | = 6 |
| இலக்கனம் | - 1,2,4,6,8,10,11 | = 7 |
| | | 66 |

## வியாழன் அஷ்டவர்க்கம் - சூரியனின் பரல்கள் 9

41 பூட்டுவாய் வியாழனுட அட்ட வர்க்கம்
பூசியதோர் ஆதித்தன் முதலாய் வைத்துக்
காட்டுமே முதல்வீட்டில் ஒன்று போடு
கருத்தான ரெண்டிலொன்று மூன்றி லொன்று
சாட்டியே நாலிலொன்று ஏழி லொன்று
தயவான எட்டிலொன்று ஒன்ப தொன்று
ஆட்டியே பத்திலொன்று பதினொன்றி லொன்று
அன்பான பரலொன்பது அறிந்து பாரே. 163

(இ.ள்) குருவினுடைய அஷ்டவர்க்கத்தைக் கணக்கிட, சூரியன் நின்ற இராசியை முதலாகக் கொண்டு, 1,2,3,4,7,8,9,10,11 ஆகிய ஒன்பது இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஒன்பது பரல்களைப் போட வேண்டும்.

## வியாழன் அஷ்டவர்க்கம் - சந்திரனின் பரல்கள் 5

42 பாரப்பா சந்திரனை முதலாய் வைத்துப்
பரிவான ரெண்டிலே ஒன்று போட்டுத்
திரப்பா அஞ்சிலே ஒன்று போடு
செயவான ஆறிலே ஒன்று போடு

காரப்பா ஏழிலே ஒன்று போடு
கலங்காத பதினொன்றில் ஒன்று போடு
சாரப்பா பரல்எண்ணி மனைகள் தோறும்
தவறாதே அஞ்சபரல் தானு மாமே. 164

(இ.ள்) குருவினுடைய அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, சந்திரனை முதலாகக் கொண்டு 2,5,6,7,11 ஆகிய ஐந்து இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஐந்து பரல்களைப் போட வேண்டும்.

## வியாழன் அஷ்டவர்க்கம் - செவ்வாயின் பரல்கள் 9

43 தானுமே செவ்வாயை முதலாய் வைத்துத்
தயவான முதல்மனையில் ஒன்று போடு
தேனுமே ரெண்டிலொன்று நாலில் ஒன்று
செப்பியதோர் ஏழிலொன்று எட்டில் ஒன்று
பூணுமே ஒன்பதிலே ஒன்று போடு
புகழான பத்திலே ஒன்று போடு
வேணுமே பதினொன்றில் ஒன்று போடு
மெய்ப்பான பரலெட்டும் மேவிப் பாரே. 165

(இ.ள்) குருவினுடைய அஷ்டக வர்க்கத்தைக் கணக்கிட, செவ்வாய் நின்ற இராசியை முதலாகக் கொண்டு 1,2,4,7,8,9,10,11 ஆகிய எட்டு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக எட்டுப் பரல்களைப் போட வேண்டும்.

## வியாழன் அஷ்டவர்க்கம் - புதனின் பரல்கள் 8

44 மேவியே புதன்மனையை ஆதி யாக
விளங்கவே முதல்மனையில் ஒன்று போடு
தாவியே ரெண்டிலொன்று நாலில் ஒன்று
சமையாக அஞ்சிலொன்று ஆறி லொன்று
கூவியே ஒன்பதிலே ஒன்று போடு
குருவான பத்திலே ஒன்று போடு

காவியே பதினொன்றில் ஒன்று போடு
கலங்காதே! பரலெட்டும் கண்டு தேறே. 166

(இ.ள்) குருவினுடைய அஷ்டவர்க்கத்தைக் கணக்கிட, புதன் நின்ற இராசியை முதலாகக் கொண்டு 1,2,4,5,6,9,10,11 ஆகிய எட்டு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக எட்டுப் பரல்களைப் போட வேண்டும்.

## வியாழன் அஷ்டவர்க்கம் - வியாழனின் பரல்கள் 8

45 தேறவே வியாழனையும் முதலாய் வைத்துச்
செப்பியதோர் முதல்மனையில் ஒன்று போடு
கூறவே ரெண்டிலே ஒன்று போடு
கூசாதே மூன்றிலே ஒன்று போடு
மாறவே நாலிலொன்று ஏழில் ஒன்று
வகையான எட்டிலே ஒன்று போடு
பீறவே பத்திலொன்று பதினொன்றி லொன்று
விளங்கவே பரலெட்டும் மேவிச் செப்பே.
167

(இ.ள்) குருவினுடைய அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட குரு நின்ற இராசியை முதலாகக் கொண்டு, 1,2,3,4,7,8,10,11 ஆகிய எட்டு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக எட்டுப் பரல்களைப் போட வேண்டும்.

## வியாழன் அஷ்டவர்க்கம் - சுக்கிரனின் பரல்கள் 6

46 செய்யவே சுக்கனையும் முதலாய் வைத்துத்
தேடியே ரெண்டிலே ஒன்று போடு
பையவே அஞ்சிலே ஒன்று போடு
பதிவான ஆறிலே ஒன்று போடு
தையவே ஒன்பதிலே ஒன்று போடு
நல்லதொரு பத்திலே ஒன்று போடு
மெய்யாகப் பதினொன்றில் ஒன்று போடு
விளவியே பரலாறும் விளங்கு வாயே. 168

(இ.ள்) குருவினுடைய அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, சுக்கிரனை முதலாகக் கொண்டு 2,5,6,9,10,11 ஆகிய ஆறு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஆறு பரல்களைப் போட வேண்டும்.

## வியாழன் அஷ்டவர்க்கம் - சனியின் பரல்கள் 4

47 விளங்கவே சனிவீடு முதலாய் வைத்து
வினவியே மூன்றிலே ஒன்று போடு
களங்கமாய்ப் பரலெல்லாம் எண்ணி எண்ணிக்
கண்டுபார் ஐந்திலே ஒன்று போடு
முழங்கவே அட்டவர்க்கம் துணைய தாக
முதன்மையாய் ஆறிலே ஒன்று போடு
வழங்கவே சீருடனே பதினொன்றில் ஒன்று
வகையாகப் பரல்நாலும் வைத்தி டாயே. 169

(இ.ள்) குருவினுடைய அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட சனி நின்ற இராசியை முதலாகக் கொண்டு, 3,5,6,11 ஆகிய நான்கு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக நான்கு பரல்களைப் போட வேண்டும்.

## வியாழன் அஷ்டவர்க்கம் - இராகுவின் பரல்கள் 6

48 நாலான இராகுவையும் முதலாய் வைத்து
நன்றான முதனீட்டில் ஒன்று போடு
மேலான ரெண்டிலே ஒன்று போடு
வரிசையாய் யேழிலே ஒன்று போடு
சீலமாய் ஒன்பதிலே ஒன்று போடு
சிறப்பான பத்திலே ஒன்று போடு
ஆகமாய்ப் பதினொன்றில் ஒன்று போடு
அன்பான பரலாறும் அறிந்து செய்யே. 170

(இ.ள்) குருவினுடைய அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, இராகு நின்ற இராசியை முதலாகக் கொண்டு, 1,2,7,9,10,11 ஆகிய ஆறு இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ஆறு பரல்களைப் போட வேண்டும்.

## வியாழன் அஷ்டவர்க்கம் - கேதுவின் பரல்கள் 6

49 செய்யவே கேதுவையும் முதலாய் வைத்துத்
திடமான முதல்வீட்டில் ஒன்று போடு
பையவே மூன்றிலே ஒன்று போடு
பரிவான நாலிலே ஒன்று போடு
துய்யதொரு ஆறிலே ஒன்று போடு
துலங்கவே ஒன்பதிலே ஒன்று போடு
மெய்யாகப் பனிரெண்டில் ஒன்று போடு
மேவியே பரலாறு வைத்தி டாமே 171

(இ.ள்) குருவினுடைய அஷ்ட வர்க்கத்தைக் கணக்கிட, கேது நின்ற இராசியை முதலாகக் கொண்டு, 1,3,4,6,9,12 ஆகிய ஆறு இராசிகளிலும் ஒவ்வொரு பரலாகஆறு பரல்களைப் போட வேண்டும்.

## வியாழன் அஷ்டவர்க்கம் - இலக்கினத்தின் பரல்கள்

50 வைத்திடவே லக்னத்தில் ஒன்று போடு
மாதுவாய் ரெண்டிலே ஒன்று போடு
மெய்த்திடவே நாலிலே ஒன்று போடு
விளங்கவே அஞ்சிலே ஒன்று போடு
செய்திடவே ஆறிலொன்று ஏழில் ஒன்று
தயவாக ஒன்பதொன்று பத்தி லொன்று
........ ............... ............... .........
............... ............... ....... ......

(இ.ள்) குருவின் அஷ்டக வர்க்கத்தைக் கணக்கிட இலக்னத்திலிருந்து1,2,4,5,6,9,10 ஆகிய ........ இராசிகளிலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பரலாக ........ பரல்களைப் போட வேண்டும்[1].

---

1.இத்துடன் இந்நூல் உள்ளது. முழுமையற்றதாக இருப்பினும் புதுமையாக இந்நூலில் இராகு கேதுக்களுக்குப் பரல்கள் தரப்பட்டுள்ளதாலும் இந்நூல் இதுவரை அச்சிடப்படவில்லை ஆதலாலும் இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

# நூல் - 4

## சோதிடம் - அஷ்ட வர்க்கம்[1]

1 சக்கரமும் லக்கினமும் கிரகம் ஏழும்
தானெழுதி கதிர்முதலாய்ப் பரல்போட் டெண்ணி
கைக்குள்வரும் தொகைகதிரோன் நாற்பத் தெட்டுக்
காணும்ம திக்கதிலே ஒன்றைக் கூட்டிச்
சிக்கமொடு முப்பதின்மேல் ஒன்பான் செவ்வாய்
சிறந்தபுதற் கன்பதிலெ நான்கும் சேர்த்து
விளங்கினதோர் குருவுக்கு அன்பத் தாறு
மேவுவெள்ளி அன்பதுடன் ரெண்டாய்ச் செப்பே. 173

(இ.ள்) ஒரு சாதகன் பிறந்த நேரத்தைக் கொண்டு சாதகம் எழுதி. அதற்குரிய இராசிச் சக்கரத்தில் இலக்கினத்தைக் குறித்து. இராகு, கேதுக்கள் நீங்கலாக ஏழு கிரகங்களையும் குறிக்க வேண்டும். அதன்பின் அஷ்ட வர்க்கம் போட வேண்டும். சூரியனுடைய அஷ்டவர்க்கத்தைப் போட, சூரியன் நின்ற இடத்தை முதலாகக் கொண்டு பரல்களை எண்ணிப் போட வேண்டும். சூரிய அஷ்ட வர்க்கத்தின் பரல்கள் 48. சந்திரனுக்கு சூரியனைக் காட்டிலும் ஒன்று அதிகம். ஆதலால் சந்திர அஷ்டவர்க்கத்தின் பரல்கள் 49. செவ்வாய் அஷ்ட வர்க்கத்தின் பரல்கள் 39. புதனின் அஷ்டவர்க்கப் பரல்கள் 54. குருவின் அஷ்டவர்க்கப் பரல்கள் 56. சுக்கிரனின் அஷ்ட வர்க்கப் பரல்கள் 52.

2 மந்தனுக்கு நாற்பதிலே ஒன்றைத் தள்ளி
வருந்தொகை கிரகமுதல் ஏழு பேர்க்கும்
சந்தையமு மில்லைமுன்னு நாய்முப்பத் தேழு
சாதகனுக் கஷ்டவர்க்கம் சதிராய்ப் பார்த்தால்
வித்து வேந்த ராசியில்தன் எட்டு வீழ்ந்தால்
மிகுத்ததன் பரல்பலன் விர்த்தி புண்டாம்
தொந்தாரு அஞ்சாறேழ் தோன்றக் கண்டால்
சுகபலனாம் சமுதாயம் சொல்லு வீரே. 174

1. இந்நூல் இலக்கணபாத பலன் (802c) என்ற நூலுக்கு இறுதியில் அமைந்திருந்தது

(இ.ள்) சனியின் அஷ்டவர்க்கப் பரல்கள் 39. ஆக ஏழு இரகங்களுக்கும் உள்ள அஷ்டவர்க்கப் பரல்கள் 337. ஒரு சாதகனுடைய அஷ்டவர்க்கத்தில் ஒரு இராசியில் எட்டுப் பரல்கள் இருந்தால், மிகுந்த நற்பலன்கள் கிட்டும். அந்த பாவத்தின் பலன்கள் விருத்தியடையும் அஷ்டவர்க்கத்தின் ஒரு இராசியில் 5,6,7 பரல்கள இருக்குமானால், சுகபலன்கள் கிட்டும்.

3 மூன்றுரெண்டு ஒன்றிருந்தால் மொழிந்த பரல்கள்
ஒச்சமெனும் நாலுவிந்து ஒதுங் காலம்
ஆன்றுபலன் சமனாக அறிந்து சொல்லும்
அவ்வோரை தனதிற்பரல்கள் ஆண்ட நாளில்
தோனுமற்த பரலெல்லாம் ரோக மாகும்
சேராமல் தனதுஅட்ட வர்க்கத் தொன்று
கான்றிடவே வெகுரோகம் துக்கம் காணும்
கள்ளமனம் சஞ்சலமாய்க் கண்டு கொள்ளே! 175

(இ.ள்) இராசிகளில் 1,2,3 பரல்கள் இருந்தால் நன்மையான பலன்கள் கிட்டாது. இராசிகளில் நான்கு பரல்கள் இருந்தால், நன்மையான பலன்களும் தீமையான பலன்களும் சம அளவில் இருக்கும். இராசிகளில் ஒரு பரல் நிற்க, நோயும் துக்கமும் உண்டாகும். மனக்குழப்பம் அதிகமாகும்.

4 விந்துரெண்டு தனத்தில்வர பாவ மல்ல
விளங்கிடுமாம் கள்ளர்பயம் வேந்தர் கோபம்
சந்தையமாம் போசனமாம் மனத்தா பங்கள்
சார்ந்திடவே மூன்றுவிந்து தனத்தி லோடில்
வந்தபஞ்ச சஞ்சாரம் உடம்பு நோகும்
மனதில்வியா கூலமென வகுக்க வேணும்
செந்தமதில் நாலுவிந்து தோன்றும் போது
சுகமும்சுகக் கேடுமென்று சொல்லு வீரே. 176

(இ.ள்) சென்ம இலக்கினத்திற்கு இரண்டாமிடத்தில் ஒரு விந்து அல்லது இரண்டு விந்துக்கள் நிற்க, திருட்டுப் பயம்,

மன்னர் கோபம், போசன குறைவு, மனஸ்தாபங்கள் தோன்றும். சென்ம இலக்கினத்திற்கு இரண்டாமிடத்தில் இரண்டு விந்துக்கள் இருக்கின், பாவமல்ல. இரண்டாமிடத்தில் மூன்று விந்துக்கள் இருக்க, வீண் அலைச்சல், உடல் நோய், மனதில் கவலை முதலானவை தோன்றும். நான்கு விந்துக்கள் இருக்க, சுகமும் சுகக்கேடும் சமமான அளவில் உண்டாகும் என்று சொல்லுவீராக!

5 அஞ்சுவிந்து அதிலிருக்க நல்ல ஆடை
அறிவுடைய புத்திரரும் வித்தை யல்லால்
மிஞ்சவரும் பெரியவர்கள் கிருபை உண்டாம்
மிகுந்ததிர வியலாபம் விளங்க லாகும்
கஞ்சமலர் போலாறு பரல்கள் கண்டால்
கனயோக .......... .......... ...........
..... யர்க்கு மதனாவான் பிறந்த ஊரில்
வாகனயோ கமுடனே வாழ்வுண் டாமே.

177

(இ.ள்) சென்ம இலக்கினத்திற்கு இரண்டாமிடத்தில் ஐந்து விந்துக்கள் இருக்க, நல்ல ஆடைகள் கிட்டும். அறிவுள்ள புத்திரர்கள் தோன்றுவார்கள். வித்தைகள் வளரும் பெரியவர்களின் ஆசியும் அருளும் கிட்டும். மிகுந்த செல்வங்கள் வந்து சேரும். சென்ம இலக்கனத்திற்கு இரண்டாமிடத்தில் ஆறு விந்துக்கள் இருக்க, மிகுந்த யோகங்களை உடையவனாக விளங்குவான். பெண்களால் விரும்பப்படுவான். தான் பிறந்த ஊரில் வாகன யோகங்களோடு கூடிய வளமான வாழ்க்கை உடையவனாக விளங்குவான்.

6 சத்தவிந்து தனத்தில்வர திரவிய லாபம்
தனைச்சுகமும் வாகனமு மல்லால் வேறு
சுத்தனென் படைக்குசமா னாக வேணும்
சொல்லரிய திரவியமும் சுகமும் தோன்றும்
மெத்தனவே எட்டுவிந்து விழுந்தால் ராசா
வெகுகுணமும் கீர்த்தியுமே விளங்கு மல்லால்

உத்தமனாம் வெகுபேர்க்கு தர்ம வானாய்
உபசார மொடுபிறர்க்கு உதவு வானே 178

(இ.ள்) சென்ம இலக்கனத்திற்கு இரண்டாமிடத்தில் ஏழு விந்துக்கள் இருக்க, மிகுந்த பொருட் செல்வம் உண்டாம். வாகனங்களை உடையவனாக விளங்குவான். படைத்தளபதியாக விளங்குவான். மிகுந்த செல்வங்களோடு சுகமும் கிட்டும். சென்ம இலக்கனத்திற்கு இரண்டாமிடத்தில் எட்டு விந்துக்கள் நிற்க, மன்னனாக விளங்குவான். சிறந்த குணங்களோடு புகழ்மிக்கவான இருப்பான். தர்மம் செய்பவனாகவும் பிறருக்கு உதவுபவனாகவும் திகழ்வான்.

7 பஞ்சவிந்து ஆட்சிதனில் பதிந்த நாளில்
பரிவுடனே சுபவானாய்ப் பகர வேணும்
வஞ்சகமாய் இராசிகளில் பரலில் லாமல்
வருங்காலம் கோசரத்தில் பலம்வ ராது
மஞ்சலவும் கதிர்நுதலாய் அட்ட வர்க்கம்
வருந்துகையில் சூனியமாய் இராசி வந்தால்
தஞ்சமொரு அவவோரை தன்னில் நீலன்
சார்ந்திடவே சத்துருவும் தமக்கு ரோகம் 179

(இ.ள்) மேகங்கள் உலவுவது போன்ற கூந்தலையும் சூரியனைப் போன்ற ஒளிபொருந்திய நெற்றியையும் உடைய பெண்ணே! நான்காம் இராசியில் ஐந்து பரல்கள் இருக்க, அது ஒரு கிரகத்தின் ஆட்சி வீடாக இருக்க, சுபமான பலன்கள் கிடைக்கும். ஒரு இராசியில் பரல்கள் இல்லாமல் இருக்க, கோசார ரீதியாக நல்ல கிரகங்கள் சஞ்சாரம் செய்யும்பொழுது நல்ல பலன் கிடைக்காது. ஒரு இராசியில் கோசார ரீதியாக சனி வரும் காலத்தில் பகைவர் தோன்றுவர். நோய் உண்டாகும்.

8 ........ நாலுவிந்து திறமாய்க் கண்டால்
தர்மகுண மில்லாத துரோகி யாவான்
சென்மமதில் கதிரிருக்க பகைநீ சாங்சம்
சேர்ந்திடவே சடநேரும் தனத்தா நித்தன்

இன்பமுடன் இல்லாட்சி உச்ச மாக
இயல்புடனே அங்கவிந்து இருக்குங் காலம்
அன்புடனே மிகுகீர்த்தி ராச னாவான்
ஆயுள்வெகு தீர்க்கமென அறிந்து சொல்லே
180

(இ.ள்) சனி கோசார ரீதியாக வருங்காலத்தில் ஒரு இராசியில் நான்கு பரல்கள் இருப்பின், பிறருக்குப் பொருளை வழங்குதலாகிய தர்மகுணம் இல்லாத துரோகியாக விளங்குவான். சூரியனின் அஷ்டவர்க்கத்தில் இலக்கினத்தில் சூரியன் இருந்து, அந்த வீடு சூரியனுக்குப் பகை அல்லது நீச வீடாக இருப்பின் துன்பம் சேரும். சூரியன் ஜென்ம இலக்கினத்திற்கு இரண்டாம் இராசியில் ஆட்சி அல்லது உச்சத்தோடு இருக்க, அந்த இராசியில் ஐந்து பரல்கள் இருப்பின், மிகுந்த புகழையுடைய மன்னனாக விளங்குவான். நீண்ட ஆயுளை உடையவனாக இருப்பான்.

9 ஆதித்தன் திரிகோணம் சேரி லஞ்சா
றேழெட்டு விந்துக்கள் அதிலே கண்டால்
வாதித்த பிதாமரணம் வகையாய்ச் சொல்ல
வருங்குழவி தனக்குவய திருபத் தைத்தில்
சோதித்த முப்பதொடு முப்பத் தாறில்
சொல்லும் இருபத்தி இரண்டு சொல்ல
போதித்த பிதாமரணம் பிசகா தென்று
பெரியோர்கள் உரைத்தமொழி பேசி னோமே.
181

(இ.ள்) சூரியனின் அஷ்டவர்க்கத்தில், சூரியன் திரிகோணத்தில் இருக்க, அந்த இராசியில் 5,6,7,8 பரல்கள் இருந்தால் பிதா மரணத்தைப் பற்றிக் கூறலாம். பிள்ளைக்கு இருப்பதைந்து அல்லது முப்பது அல்லது முப்பத்து ஆறு வயதில் தந்தைக்கு மரணம் நேரிடும். இருபத்து இரண்டாம் வயதிலும் தந்தைக்கு மரணம் நேரக் கூடும் என்று பெரியோர் கூறிய மொழியை எடுத்துரைத்தேன்.

10 சோதிய சேயுமிரண்டு விந்து வோடே
தோன்றிநல்ல கேந்திரத்தில் வெய்யோன் திங்கள்
மாதிரியே புதன்மந்தன வந்த போது
வயதுபத்தில் தகப்பனுக்கு வரும் ராச்சியம்
அந்துடனே நாலுவிந்து அண்ட வல்லால்
நம்பினவர் லாபமதில் நாலு விந்து
நாட்டிடவே பரவா ............ ....................
நான்றாகும் செம்பொன்மிகு எட்டு விந்து
182

(இ.ள்) செவ்வாய் அஷ்டவர்க்கத்தில் பரல்களுடன் இருக்க, கேந்திரத்தில் சூரியன், சந்திரன் ஆகியவை விளங்க, கோசார ரீதியாக புதன் அல்லது சூரியன் வருங்காலத்தில், சாதகனின் பத்தாவது வயதில் அவனுடைய தந்தைக்கு இராச்சியம் கிடைக்கும். நான்கு விந்துக்கள் இலாபத்தில் இருக்க, நன்மை கிட்டும். எட்டு விந்துவுடன் விளங்க, மிகுதியான செம்பொன் கிட்டும்.

11 உச்சாட்சி தன்னில்மதி யோடி வந்து
ஒன்பதிலே ஜென்மமது நாலி லாளும்
மச்சாத எட்டுவிந்து அடவாய்க் கண்டால்
வன்கோடி திரவியங்கள் சேக ரிப்பான்
மச்சம்வில் தேள்மேடம் சிங்க மீதி
லொன்றுவந்து ஜென்மலக்னம் செவ்வா யாக
கசமேற்றிரி கோணமதில் இருக்கும் போது
........... ............... .......... ..........
184

(இ.ள்) உச்ச அல்லது நீச இராசிகளில் சந்திரன் இருக்க, அதற்கு ஒன்பதாம் இராசியில், இலக்கினத்தில், நான்காம் இராசியில் எட்டுப் பரல்கள் இருக்குமானால் இச்சாதகன், மிகுதியான செல்வங்களைச் சேகரிப்பான். மீனம், தனுசு, விருட்சிகம், மேடம், சிங்க இராசிகளில் ஒருபரல் வந்து ஜென்ம இலக்கனத்தில் செவ்வாய் இருக்க,

குறிப்பு : இப்பாடலின் இறுதி ஈற்றடி முற்றுப்பெறவில்லை. ஆதலின் பொருளை முழுமையாக்க இயலவில்லை.

12 சட்டமிடு குசலவித்தை அதிக யோகன்
சாதிவழி யாசாரஞ் சதுர னாவான்
இட்டமுடன் உச்சமதில் இரண்டு மூன்று
மேகவிந்து மாலுடனே இருக்கும் பரல்..
திட்டமுடன் விர்த்திசொல்ல உச்ச மேற
திருக்கில்பவ நட்டமெனச் செப்ப லாமே 184

குறிப்பு : இப்பாடல் முழுமையாக இல்லாததால் பொருள் கூற இயலவில்லை.

13 தனுஅட்ட வர்க்கமதி லேகதன் ராசி
தனில்பரல்கள் அதிகமெனச் சாரும் போது
மனதுடனே அவ்வோரை மாதந் தன்னில்
மைந்தனுக்கு வித்தைகற்க வரும்வி வேகம்
முன்னுரைத்த ராசிகளில் பரலில் லாமல்
முடிடவந்த திங்கள்தனில் நீலன் போக
இன்னமுறை தாயாதி சம்பத்து நாசம்
இதுபுதனின் அட்டவர்ககம் என்று சொல்லே. 185

(இ.ள்) புதனின் அஷ்ட வர்க்கத்தில் புதன் நின்ற இராசியில் 5,6,7,8 போன்ற மிகுதியான விந்துக்கள் இருக்கும் பொழுது. அந்த இராச அல்லது மாதத்தில் வித்தை கற்க, சிறந்த வித்துவானாவான். புதனின் அஷ்டவர்க்கத்தில், புதன் நின்ற இராசியில் விந்துக்கள் இல்லாமல் இருக்க, கோசார ரீதியாக அந்த இராசயில் சனி சஞ்சாரம் செய்யும் பொழுது, உற்றார் உறவினர்களின் செல்வங்கள் நாசமாகும்.

14 குருதனது இவ்வோரை தன்னில் விந்து
கூட்டமுடன் அதிகமெனக் கொண்ட நாளில்
கருக்குடனே அவ்வோரை கணக்காய்ப் பார்த்து
கற்புடையாள் தனக்குகர்ப்ப தானம் பண்ண
தறித்திடுமாம் பிள்ளைநல்ல சமத்த னாகத்
தனக்குமந்த வோரையிலே சதிராய்க் கட்டாய்

விர்த்தியுண்டாம் பாக்கியமும் மாடும் கன்றும்
வேளாண்மை தனமுடனே மிகுந்து வாழ்வான். 186

(இ.ன்) குருவினுடைய அஷ்டவர்க்கத்தில் குரு நின்ற இராசியில் 5,6,7,8 பரல்கள் இருக்கும் இராசியின் காலத்தைக் கண்டு கர்ப்பதானம் செய்ய, நல்ல பிள்ளை பிறக்கும். அவன் மிகுந்த திறமையுடையவனாக விளங்குவான். மேலும் சாதகனுக்கும் மிகுந்த பாககியங்கள் கிட்டும். மாடுகள் கன்றுகள் இவற்றுடன் சிறந்த முறையில் வேளாண்மை செய்து, செல்வச் செழிப்புடன் வாழ்வான்.

15 எந்தஇரா சியில்பரல்கள் குறைந்தபோ யிருக்க
இருக்கவந்த இராசியினில் வெய்யோன் நிற்க
வந்தசுடர் நட்டமென அஞ்சா றோன்தான்
மருவநல்ல குருவுடனே வாழும் நாளில்
இந்தவகை தனிலெட்டில் ஆறில் தானும்
இருந்திடவே சாதகர்க்கு ஆயுள் தீர்க்கம்
சந்தயமில் சத்துருவைச் செயிப்ப ரல்லால்
தனவானாய் மிகுகீர்த்தி தழைக்குந தானே 187

(இ.ன்) எந்தவொரு இராசியாக இருந்தாலும் அதில் பரல்குறைந்திருக்க,, அந்த இராசியில் சூரியன் நிற்க, நன்மை இருக்காது. ஐந்தாமிடத்தோன், ஆறாமிடத்தோன் குருவோடு சேர்ந்து ஆறாமிடம், எட்டாமிடம் இவற்றில் ஒன்றில் இருக்க, சாதகர்க்குத் தீர்க்காயுள். பகைவர்களை வெல்வதோடு செல்வம் மிகுந்தவனாக மிகுந்த புகழ்வாய்ந்தவனாக விளங்குவான்.

16 இல்லையென கேந்திரத்தில் ஏற வல்லாய
...... ............ ....... ...........
சட்டமிடும் பாக்யத்தில் சிறாய்ப் போகத்
தனக்குப்பகை நீசந்த மனம்சே ராமல்
இட்டமுடன ஒருவகையால் சேரும் போது
திடமுடனே இராச்சியத்தைச் செயங்கொண் டேகி

அட்டதிக்கும் புகழுவிரும் இராசன் என்றே
அம்புவியில் வளர்ந்திருப்பர் அறிந்து சொல்லே!
188

(இ.ள்) குருவின் அஷ்ட வர்க்கத்தில் எட்டு பரல்களுடன் குரு ஆட்சி, உச்சம் பெற்று இருக்க, அல்லது இலக்கினத்திற்கு கேந்திர இடங்களான இலக்கினம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் இவற்றில் ஒன்றில் இருக்க, அல்லது ஒன்பதாம் இடத்தில் இருக்க, பகை, நீசம் அஸ்தமனம் ஆகியவை இல்லாமல் இருந்தால், அந்தச் சாதகன் வெற்றிவாகை சூடி, எட்டுத்திசைகளும் புகழும் அரசனாக இவ்வுலகில் சிறப்புற்று விளங்குவான் என்பதை நீ அறிந்து சொல்வாயாக.

17 தேவகுரு ஆறுவிந்து வுடனே கேந்திர
திரிகோண மீதிருக்கச் செல்வந் தன்னைப்
பாவர்கண்ணால் பாராமல் கூடா விட்டால்
பாருலகில் ராசாவாம் பண்ணும் புண்ணியம்
யவனுடைனே ஏழுவிந்து வுடனே ஏறி
அன்டிடவே திரவியமும் அதிக புத்திரர்
ஏவமிலார் திரவியமும் இயல்பாய் உண்டாம்
எல்லோரும் போற்றிடவே இருந்து வாழ்வான்.
189

(இ.ள்) குருவின் அஷ்டவர்க்கத்தில் குரு. ஆறு பரல்களுடன் இலக்கினத்திற்கு கேந்திர (1,4,7,10) இடங்களில் இருந்தாலும், திரிகோண (1,5,9) இடங்களில் இருந்தாலும், இவனைப் பாவக் கிரகங்கள் பார்க்காமலும் இவனோடு பாவக் கிரகங்கள் கூடாமலும் இருந்தால், இவ்வுலகில் மன்னனாக விளங்குவான். மிகுந்த தான தர்மங்கள் செய்து புண்ணியத்தைத் தேடிக் கொள்வான். குரு. ஏழு பரல்களுடன் விளங்க, அதிகமான புத்திரர்கள் தோன்றுவர் ; மிகுதியான செல்வம், இயல்பாகவே வந்து சேரும், எல்லோரும் போற்றும்படியாக இவ்வுலகில் அனைத்துப் பாக்கியங்களும் பெற்று வாழ்வான்.

## சுக்கிர அஷ்டவர்க்கம்

18 ஆறுவிந்து வாகன மதிக யோகன்
அஞ்சுபரல் செயவானாம் அப்பால் சுங்கன்
தேறியெட்டு விந்துடனே ஆட்சி உச்சம்
கேந்திரதிரி கோணமெனத் திருந்தும் செய்க்கும்
ஏறும்நர வாகனங்கள் ஏழு விந்து
இயல்புடனே இருந்தவர்க்கு எப்போ துந்தான்
நூறுவய தளவுநல்ல யோக வானாம்
யோகமுடன் திரவியமும் நோக்காய் வாழ்வான்.
190

(இ-ள்) குருவின் அஷ்டவர்க்கத்தில், குரு ஆறு பரல்களுடன் இருந்தால், அதிக வாகனங்களைப் பெற்ற யோகக்காரனனாக விளங்குவான். குரு ஐந்து விந்துக்களுடன் இருந்தால், வெற்றியை உடையவனாகத் திகழ்வான். சுக்கிரன் எட்டு விந்துக்களுடன் ஆட்சி, உச்சம் பெற்று அல்லது ஜென்ம இலக்கினத்திற்குக் கேந்திர (1,4,7,10) இராசிகளில் இருந்தாலும், திரிகோண (1,5,9) இராசிகளில் இருந்தாலும் மிகுந்த செல்வாக்கு உள்ளவனாக, நரவாகனம் (பல்லக்குத் தூக்கிகள்) உடையவனாக விளங்குவான். சுக்கிரன் ஏழு பரல்களுடன் இருந்தால், நூறு வயது வரை நல்ல யோகவானாகவும், செல்வம் மிகுந்தவனாகவும் விளங்குவான்.

19 நீசமந்த மனைகளிலே சுங்கன் ஏறி
திர்ணயமாய் எட்டாறில் நின்ற போது
ராசபுத்திர யோகபலன் கண்டால் நாசர்
நல்லவிந்து குறைந்திருந்தால் இராசி தன்னில்
யோகிலத்தை யில்லையென்றை அடவாய்க் கூட்டி
அதில்சயனம் பண்ணிடவே யம்பரம் வேண்டி
வாசமோ யித்தருமை மாதே ! வேத
லிங்கமன்உரை செய்தமொழி வகுத்தோர் தாமே
191

(இ.ள்) சுக்கிரன் நீச, அஸ்தமனம் பெற்று சென்ம இலக்கனத்திற்கு ஆறாமிடம், எட்டாமிடம் ஆகிய இடங்களில் நின்றால், ராச புத்திர யோக பலன் கண்டாலும் அழிவையே அடைவர். அவ்விடங்களின் இராசிகளில் பரல்கள் குறைந்திருப்பின் சிறப்பில்லை.

## சனி அஷ்டவர்க்கம்

20 மந்தனட்ட திரிகோணப் பரல்கள் எல்லாம்
வரும்போது மறுஇராசி தன்னில் நீலன்
வந்திடவே பிறந்தபிள்ளை மிகஇ ருந்து
வாழுமே நட்டமிடு மனது நோவாம்
விந்துவொன்று ரெண்டுதிரி நாலோ டேகில்
விருப்பமுடன் கேந்திரத்தில் மேவும் நாளில்
சந்தயமில் லாட்சியுச்சம் சாரத் தாக்கு
சாதகனுக் கற்பாயுசு சாத்தி னோமே. 192

(இ.ள்) சனியின் அஷ்டவர்க்கத்தில் திரிகோண இராசிகளில் எட்டுப் பரல்கள் இருக்கும் பொழுது அந்த இராசியில் சனி கோசார ரீதியாக வரும்பொழுது, சாதகன் மிகுந்த நன்மையை அடைவான். சனி அஷ்டவர்க்கத்தில் சனி நின்ற இராசியில் 1,2,3,4 பரல்களைப் பெற்று இருந்தாலும் கேந்திர இராசிகளில் 1,2,3,4 பரல்களைப் பெற்று இருந்தாலும் ஆட்சி, உச்சம் பெற்று இருந்தாலும், சனியின் சாரத்தில் இருந்தாலும் அந்த இராசிக்குக் கோசார ரீதியாகச் சனிவரும் காலத்தில் சாதகனுக்கு அற்பாயுள்.

21 அஞ்சாறு விந்துடனே சென்ம மீதில்
அதிபலனாய் சனிவாழ வந்த சேய்க்குத்
துஞ்சாத வரைக்கலக்கம் சொன்னேன் நட்டம்
சாராமல் அஞ்சவிந்து தோன்ற வன்னோன்
மிஞ்சாத அத்தமன நீச இராகு
விளங்கிடவே நல்லோர்கள் வர்க்கம் மேவ
இங்கமைஞ் சார்வுடன்கூடி வந்த பிள்ளை
ஒருநூறு ஆகுமென வகுத்துச் சொல்லே. 193

(இ.ள்) சனியின் அஷ்ட வர்க்கத்தில், இலக்கினத்தில் ஐந்து அல்லது ஆறு விந்துக்களுடன் அதிக பலவானாக இருக்கும் பிள்ளைக்கு வாழ்நாள் வரை அதிக நஷ்டங்கள் தோன்றும். சனி, அஸ்தமன, நீச இராசிகளில் இருந்து, சுபக் கரகங்களோடு சேர்ந்திருக்க, அல்லது சுபக் கிரகங்கள் பார்க்க இருப்பின், அச்சாதகன் நூறாண்டு காலம் வாழ்வான்.

22 சத்துருவு சத்துருநீ சத்தமன ராசி
தன்னிச்சனி நாலஞ்சு பரல்கள்தன் னோடே
பெற்றலக் னத்தினிலே அடியார் மாடு
பொருந்தவுடன் வெள்ளாட்டி பிசகாதுண்டாம்
சத்தவிந்து உடன்கூடத் தனவா னாகித்
தரணிக்கும் உடையவனாய் எட்டில் சார்ந்தால்
சித்திரமாய் மந்திரதந் திரத்தால் சீவன்
செய்துலகில் பேர்பெறுவன் திட்டந் தானே.
194

(இ.ள்) சனியின் அஷ்டவர்க்கத்தில், ஏழாம் இராசியில் சனி பகை, நீச, அஸ்தமனம் பெற்று நான்கு அல்லது ஐந்து பரல்களோடு இருந்தாலும், இலக்கினத்தில் ஆறு பரல்களோடு இருந்தாலும், ஆளடிமைகள், செல்வம் முதலானவை கிட்டும். நல்ல மனதிற்கு இசைந்தவளோடு வாழ்வான். ஏழு பரல்களோடு இருக்க, செல்வம் மிகுந்தவனாக விளங்குவான். எட்டுப் பரல்களோடு இருக்க, மந்திர தந்திரங்கள் செய்து இவ்வுலகில் புகழ் பெறுவான்.

குறிப்பு : இருபத்தைந்து பாடல்கள் அடங்கிய இந்நூலின் 3 பாடல்கள் சுவடியில் இல்லை.

❖

# நூல் - 5

## சோதிட நூல் - அஷ்டவர்க்கப்படலம்[1]

தவசினையுடைய அகத்திய முனியே! அஷ்டவர்க்கம் சொல்லுதற்கு இரவி முதல் சனி வரைக்கும் ஏழும், இலக்கினம் ஆக எட்டும் அஷ்டவர்க்கம் என்பன. இவை மேடம் ஆதியாக நிறுத்துவது. அஷ்டவர்க்கம் எட்டும் மேடாதி பன்னிரண்டில் பெருக்கிக் கண்ட தொன்னூற்றாறு வீட்டிலும் நிறுத்துவது பிரத்தியாரட்டவர்க்கம் என்பது. இதன் மேல் இரவி முதல் சனி ஈறாக அவரவர்க்குக் கண்ட வயதினும் கண்டத்தில் சனி பாவர் சகிதமாகக் கோசாரத்தில் வருவது கண்டு அந்தந்த வர்க்கங்களுக்குத் தோஷம் சொல்லுவதால், இலக்கினம் முதல், பாவகம் பன்னிரண்டிற்கும் சர்வாஷ்ட வர்க்கத்தில் கண்ட பரல் கொண்டு, பாவ வர்க்கப் பலமும் சொல்லுவான்.

இலக்கினம் முதல் நாற்கோளும் பகுத்துக் காணில், இலக்கினக்கோள் பரல் ஏறில், பந்து சனத்தோடு கூடி சீவனம் பண்ணுவான் என்பன். இரண்டாம் கோளுக்குச் சேவகா விருத்தியில் சீவனம் பண்ணுவான். மூன்றாங்கோளுக்கு வெகுசன இரட்சகனாக இருப்பான் என்பன். நான்காம் கோளுக்கு வெகுசன நிர்கண்டகம் பண்ணுவதால்,

மீனம் முதல் நான்கில் பரலதிகமானால் வாலை வயதில் பாக்கியம் என்பன். கடகம் முதல் நாலில் பரல் அதிகமாயின், நடுவயதில் பாக்கியம் என்பன். விருச்சிகம் முதல் நாலில் அதிகமானால், அமர வயதில் பாக்கியம் என்பன். கேந்திரம் அதிகமானால் சதா பாக்கியவான் என்பன். பணபரமாகில் புத்திரன் பாக்கியவான் என்பன். சர்வாஷ்டக வர்க்கத்தில் கண்ட பத்தாமிடப்பரலில் பதினோராமிடம் பரலேறியும் இதற்கு பன்னிரண்டாமிடம் பரல் குறைந்தும், பன்னிரெண்டாமிடத்திற்கு இலக்கினம் பரல் ஏறி இருக்கில், அதிக வாழ்வு உடையவன் என்க.

---

1. சுவடி எண். 533 (இச்சுவடியில் குமார சுவாமியத்தின் அஷ்டவர்க்கப் படலச் செய்திகள் கூறப்பட்டுள்ளன. அப்பாடல்கள் இறுதியில் தரப்பட்டுள்ளன)

இலக்கினம் முதல் பனிரண்டாமிடம் வரைக்கும் பரல் அதிகம் தாழ்வு அறிந்து, பாவகப்பலமும் அந்தப்படி சொல்லுக. இரவி முதலான தானம் தொட்டு இலக்கினம் வரை எண்ணிக் கண்ட தொகையை ஏழில் பெருக்கி 27-இல் கழித்து அவரவர்க்கு வயதும் கண்டமும் சொல்வன்.

## திரிகோண சோதனை

1. மேடம், சிங்கம், தனுசு மூன்று இராசியிலும் விந்து சரியாக இருந்தாலும் மூன்று இராசியிலும் இருந்த விந்தையெல்லாம் எடுத்துப் போடுகிறது.

2. ஏற்றத் தாழ்த்தியாய் இருந்தால், தாழ்ந்திருந்த விந்துவுக்குச் சரிகட்டி வைத்து, மற்ற விந்தையெல்லாம் எடுத்துப் போடுகிறது.

3. இந்தப்படி சோதிக்கிற விடத்தில் ஒரு இராசி சூனியமானாலும் திரிகோணமான மூன்று இராசியிலேயும் இருந்த விந்தெல்லாம் எடுத்துப் போடுகிறது.

4. ஒரு இராசியில் ஒரு விந்திருந்தால் மற்ற இரண்டு இராசி விந்துவைத் தாழ்ந்த விந்துவுக்குச் சரிகட்டி வைக்கவும். இரண்டு இராசியிலேயும் ஒவ்வொரு விந்திருந்தால் எடுக்கத் தேவையில்லை. இதற்குச் சரியாய் மூன்று இராச விந்துவைச் சரிகட்டி வைக்கவும்.

5. மூன்று இராசியிலே ஒவ்வொரு விந்து இருந்தால் இருந்தபடியே வைக்கிறது.

சிறிது சிறிது மதக்காரர் கிரமிருந்து இராசி விந்துவை எடுக்கத் தேவையில்லை என்று சொல்லுவார்கள். நம்முடைய மதத்துக்கு எடுத்துப் போடுகிறதே சரி. இந்தப்படிக்கு ரிஷபம், கன்னி, மகரத்துக்குச் சோதிக்கிறது. மிதுனம், துலாம், கும்பத்துக்கும், கடகம், விருச்சிக மீனத்துக்கும் சோதிக்கிறது.

திரிகோண சோதனை முற்றும்.

# ஏகாதிபத்திய சோதனை

1. மேடம், விருச்சிகம் இரண்டிலேயும் வித்திருந்து கிரகமில்லாதிருந்தால், தாழ்ந்ததுக்குச் சரிகட்டி வைக்கவும்.

2. இரண்டு இராசியிலேயும் கிரகமில்லாமல் ஒரு வீட்டிலே இருந்து ஒரு வீட்டிலே வந்திராதே போனால் எடுக்கத் தேவையில்லை.

3. கிரகம் இருந்த இராசியிலே வித்து குறைந்திருந்தால், கிரகம் இல்லாத இராசியிலே வித்து அதிகமாய் இருந்தால், கிரகம் இருந்த இராசி வித்துவுக்குச் சரி பண்ணவும்.

4. கிரகம் இருந்த இராசியிலேயும் வித்துகள் சரியாய் இருந்தால், கிரகமில்லாத இராசியின் வித்துவை எடுத்துப் போடுகிறது.

5. கிரகம் இருந்த இராசியிலே வித்து அதிகமாய், கிரகம் இல்லாத இராசியிலே வித்து குறைந்திருந்தால், கிரகமில்லாத இராசியில் வித்துவை எடுத்துப் போடுகிறது.

6. இரண்டு இராசியிலேயும் கிரகம் இருந்து ஏற்றத் தாழ்த்தியாய் வித்திருந்தாலும் சரியாய் இருந்தாலும் சோதிக்கத் தேவையில்லை.

7. இரண்டு இராசியிலேயும் கிரகம் இல்லாமல் வித்துக்கள் சரியாய் இருந்தால், இரண்டு இராசிகளின் வித்துவையும் எடுத்துப் போடுகிறது.

8. இரண்டு இராசிகளிலேயும் கிரகம் இல்லாமல் இருக்கிறபோது ஒரு இராசியிலே ஒரு வித்திருந்து, ஒரு இராசியில் அதிகமாக வித்திருந்தால், ஒரு வித்துவுக்குச் சரிகட்டி வைக்கவும்.

9. இரண்டு இராசிகளிலும் கிரகங்கள் இல்லாமல் இருக்கிறபோது ஒரு விந்து கிரகத்தில் விந்திருந்து ஒரு இராசியில் விந்து இல்லாமல் போனாலும் எடுக்கத் தேவையில்லை.

10. கிரகமிருந்த இராசியிலே ஒரு விந்து ஒரு கிரமமாய் கிரகமில்லாத இராசியிலே விந்து இருந்தால், அதை எடுத்துப் போடுகிறது.

இந்தப்படிக்கு மேட விருச்சிகத்திற்கும் சரி. ரிஷப துலாத்திற்கும் சரி. மிதுனம் கன்னிக்கும் சரி தனுசு, மீனத்துக்கும் சரி. மகர கும்பத்திற்குஞ் சரி. கர்க்கடமும் சிம்மமும் சோதிக்கத் தேவையில்லை.

## இராசி குணகாரம்

அஷ்ட வர்க்கம் போட்டுத் திரிகோண சோதனை, ஏகாதிபத்தியமான பிறகு சோதனை விந்துவைக் கொண்டு இராசி குணகாரகம் பண்ணுகிற வகை.

மேஷத்தில் இருந்த விந்துவை ஏழிற் பெருக்கி,

ரிஷபத்தில் இருந்த விந்துவை பத்திற் பெருக்கி,

மிதுனத்தில் இருந்த விந்துவை எட்டில் பெருக்கி,

கர்கடகத்தில் இருந்த விந்துவை நாலில் பெருக்கி,

சிங்கத்தில் இருந்த விந்துவை பத்திற் பெருக்கி,

கன்னியில் இருந்த விந்துவை ஐந்திற் பெருக்கி,

துலாத்தில் இருந்த விந்துவை ஏழிற் பெருக்கி,

விருச்சிகத்தில் இருந்த விந்துவை எட்டில் பெருக்கி,

தனுசில் இருந்த விந்துவை ஒன்பதில் பெருக்கி,

மகரத்தில் இருந்த விந்துவை ஐந்திற் பெருக்கி,

கும்பத்தில் இருந்த விந்துவை பதினொன்றில் பெருக்கி,

மீனத்தில் இருந்த விந்துவை பன்னிரண்டில் பெருக்கியத் தொகையெல்லாம் கூட்டியத் தொகை இராசி குணகாரகமாகும்.

## கிரக குணகாரகம் பண்ணுகிற வகை

சூரியன் நிற்கிற இராசி விந்துவை ஐந்தில் பெருக்கி, வியாழம் (குரு) இருக்கிற இராசி விந்துவை பத்தில் பெருக்கி, சுக்கிரன் நிற்கிற விந்துவை ஏழிற் பெருக்கி, சனி இருக்கிற இராசி விந்துவை ஐந்தில் பெருக்கி, புதனுக்கு ஐந்தில் பெருக்கி (புதன் நிற்கின்ற இராசி விந்துவை ஐந்தில் பெருக்கி), செவ்வாய்க்கு எட்டில் பெருக்கி (செவ்வாய் நிற்கிற விந்துவை எட்டில் பெருக்கி), இப்படிப் பெருக்கின தொகையெல்லாம் கூட்டித் தொகை போடுகிறது கிரக குணகாரமாகும்.

## கிரக நிலை

அஷ்டவர்க்கம் போட்ட பிறகு திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனையான பிறகு சகோதர நிச்சயத்திற்குச் செவ்வாயையும் புத்திர நிச்சயத்திற்குச் வியாழத்தையும் களத்திர நிச்சயத்திற்கு சுக்கிரனையும் கொண்டு பலன் சொல்கிற இடத்தில், அவர்களுக்குச் சொட்சேத்திர தோசங்கள் சொல்வதில்லை. நீச இராசியானால் பாதி பலன் போம். அஸ்தமனக் கிரகமிருந்த இராசியானாலும் பாதி பலன் போம். இதுவல்லாமல் இராகு, கேது நீங்கலாக, ஏழு கிரகத்துக்கும் திசை நடக்கிற போது அவர்களுக்குக் கூடி வந்த திசை வருஷ பிரமாணத்து அஸ்தமனக் கிரகத்திற்கு பாதி வருஷம் போம். சத்துரு கேத்திரத்தில் இருந்த கிரகத்திற்கு மூன்றிலொன்று வருஷம் போம். உச்சத்தில் பத்தில் இருந்த கிரகத்திற்கு உள்ள வருஷத்துமேல் விஷேசமாய்ப் பத்து வருஷம் கூடி வரும்.

இந்தப்படி கிரகநிலையறிந்து திசைபிரித்து ஆயுசு நிச்சயம் சொல்லவும். பலாபலன் சொல்லவும்.

கிரகநிலை முற்றும்.

ஒருத்தனுடைய சாதகத்தைப் பார்த்து ஆயுள் ஆதாயமும் சகோதர நிச்சயமும் புத்திரான் நிச்சயமும் களத்திர நிச்சயமும் புத்திரான் நிச்சயமும் அவர்களுக்குக் கண்டமும் சொல்லுகிற வகை.

பன்னிரண்டு இராசியும் நிலத்திலே கீறி செனன காலத்திலே இலக்கனமுங் கிரக நிலையை, இராகு, கேது நீங்கலாக எழுதி, முந்தச் சூரியனுக்கு அஷ்ட வர்க்கம் போட்டுத் திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனையான பிறகு, சோதனையான விந்துவுடனே இராசி குணகாரம், கிரக குணகாரம் பண்ணி, இந்த இரண்டு குணகாரத் தொகையுடனே சூரியனுக்கு ஒன்பதாம் இராசியின் சோதனையாகிறதற்கு வர்க்கம் போட்ட ஆறு விந்துவுடனே பெருக்கி, இருபத்தேழிற் கழித்த ஈவை, அசுவினி முதல் இத்தனையாம் நட்சத்திரமென்று மிச்சத்தை எண்ணி, இத்தனை மாதம் என்று அறிந்து இத்தனையாம் மாதத்தில் இன்ன நட்சத்திரத்திற சனி வந்த இத்தனையாம் மாதத்திற் பிதாவுக்குக் கண்டகாலம் வரும் என்றுஞ் சொல்லுவர்.

செனன காலத்தில் சனி உச்சமாய் இருந்தாலும், சொட் சேத்திர உச்சகிரகத்தில் கூடி இருந்தாலும், இவர்களுடைய பார்வை பட்டாலும் அந்த கண்டம் தப்பிதமானது. நட்சத்திரத்துக்குத் திரிகோணமான பத்தாம் நட்சத்திரமும், பத்தொன்பதாம் நட்சத்திரத்தில் சனிவருங்காலம் கண்டம் வரும் என்று சொல்லுவது. இந்த நட்சத்திரங் கூடின இராசி என்று சொல்லவாம். இப்படிச் சொல்லுகிற விடத்தில் முன்னே இருபத்தேழில் கழித்த ஈவும் இருபத்தேழுக்கு மேற்பட்டாலதை இருபத்தேழில் கழித்த மிச்சம், நட்சத்திர மிச்சமும் பன்னிரண்டுக்கு மேற்பட்டால் அதையும் பன்னிரண்டில் கழித்த மிச்சம் தானே மாதம் இதை அறிந்து, இன்ன நட்சத்திரம் சனி வந்து இத்தனையாம் மாதத்திற் பிதாவுக்குக் கண்டகாலம் தப்பாதென்று சொல்லவும்.

இலக்கினம் தப்பினாலும் கிரகநிலை தப்பினாலும் பலன் ஒத்து வராது. வாக்கிய பஞ்சாங்கத்திலே இருக்கிற சாரமும் சித்தாந்த பஞ்சாங்கத்திலே இருக்கிற சாரமும் ஒருவழிப்பட்டிருந்தால், பலன் ஒத்து வரும். இரண்டு பஞ்சாங்கத்திலேயும் ஒருவழிப்படாமல் வெவ்வேறு சாரங்களாக இருந்தாலும் பலன் ஒத்து வராது. இதையறிந்து நிச்சயித்துக் கொள்ளவும்.

## மாதாவுக்குக் கண்டகாலம் சொல்லுகிற வகை

சந்திரனுக்கு அஷ்டவர்க்கம் போட்டுத் திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை பண்ணி விந்துவைக் கொண்டு இராசி குணகாரம், கிரக குணகாரம் பண்ணி, சந்திரனுக்கு நான்காமிடத்தில் இருந்த விந்துவுடனே பெருக்கி, இருபத்தேழிற் கழித்துச், சூரியனுக்குச் சொன்ன பிரகாரம் போல, இந்த நட்சத்திரத்திற் சனி வந்து, இத்தனையாம் மாதத்தில் மாதாவுக்குக் கண்ட காலம் என்று சொல்வது.

## இந்தப்படிக்குப் பிராதுருக்குக் கண்ட காலம் சொல்கிற வகை

செவ்வாய்க்கு வர்க்கம் போட்டுச் சூரியனுக்குச் சொன்னாற் போல செவ்வாய் இருந்த இராசிக்கு மூன்றாம் இராசியில் இருந்த விந்துவைக் கொண்டு சகோதரங்களுக்குக் கண்டகாலம் சொல்லுவது.

## விசேஷமாய் சகோதர நிச்சயம் சொல்லும்படி

செவ்வாய்க்கு வர்க்கம் போட்டுச் சோதனையான பிறகு செவ்வாய்க்கு மூன்றாம் இராசி ஆதி விந்து சூனியமானாலும், அஸ்தமன கிரகம் இருந்தாலும் அவனுக்குப் பிறகு சகோதர மில்லை. அந்த மூன்றாம் இராசியில் விந்து இருந்தும் அஸ்தமன கிரகம் இருந்தால் சகோதரம் உண்டாகி செத்துப்போம்.

கனிட்டர் எத்தனை பேர் என்றால், செவ்வாய் இருந்த இராசிக்கு இரண்டாம் இராசியில், மூன்றாம் இராசியில் இருந்த விந்துக்கள் எத்தனையோ அத்தனை கனிஷ்டர் என்பது. இரண்டாம் இராசியில் விந்து இராமல் (இல்லாமல்) போனால், மூன்றாம் இராசியில் இருக்கிற விந்துவை எண்ணி அத்தனை கனிஷ்டர் என்பது.

இரண்டாம் இராசி நீசமானால், அஸ்தமமானால் தனக்குப்பிறகு பிறந்த சகோதரம் செத்துப்போம். இதுவெல்லாம் சோதனையில் கண்ட விந்துவைக் கொண்டு பலன் சொல்லுகிறது சரியே. சோதனை ஆகாததற்கு முன்னே, ஆதிவிந்து இருந்த வீடு,

அஸ்தமன கிரகந் தள்ளிச் சகோதர நிச்சயம் பண்ணலாம் என்று சிறிது மதக்காரர்கள் சொல்லுகிறார்கள். அந்தப்படி நிச்சயம் பண்ணலாம்.

சிரேஷ்டான் பாகத்துக்குச் செவ்வாய்க்குப் பின்னாக விந்து இல்லாமல் போனாலும் விந்து இருந்து நீசம் அஸ்தமனக்கிரகம் இருந்தாலும் சிரேஷ்டர்கள் இல்லை. சிரேஷ்டர்கள் எத்தனையென்றால், செவ்வாய் இருந்த வீடு தன்னுடைய பாகம். அது நீங்கலாகப் பின்னாக இரண்டு இராசிகளில் இருந்த விந்துவை எண்ணி அஸ்தமனக் கிரகம், நீசம் தள்ளி மற்றதை இத்தனை சிரேஷ்டர் என்று சொல்லுவது.

ஆதி விந்துவைக் கொண்டும் இது பார்க்கலாம். சோதனை விந்துவைக் கொண்டும் பார்க்கலாம் என்று சொல்லுவார்கள். சிரேஷ்டர் நிச்சயம் சொல்லுகிற போது, செவ்வாய்க்குப் பின்னாக, அந்த இராச சூனியமாக இருந்து, அப்புறத்து இராசியில் விந்து இருந்தாலும் சிரேஷ்டர் இல்லை. செவ்வாய் இருந்த இராசிக்கு முன்னாக, இரண்டாம் இராசி சூனியமாக இருந்தால், தோஷம் சொல்லுவது இல்லை. மூன்றாம் இராசி விந்துவை எண்ணிக் கனிஷ்டர் சொல்லுவது.

ஆண், பெண்ணென்று கணக்கு வேண்டில், புருஷக்கிரக விந்துவும் ஸ்திரி கிரக விந்துவும் எண்ணி, ஆண் இத்தனை, பெண் இத்தனை என்று எழுதிக் கொண்டு பறகு சோதனையான பிறகு கழிபட்ட விந்துவையும் எண்ணிப்பார்த்து, இத்தனை விந்து கழிபட்டுப் போச்சுதென்று பார்த்து, இத்தனை விந்து இருக்குதென்றும், அந்த விதத்திற்கு ஆண் இத்தனை, பெண் இத்தனை என்றும் பிரித்துச் சொல்லவும்.

செவ்வாயுடைய விந்துபலன் முற்றும்.

## வித்தை

புதனுக்கு வர்க்கம் போட்டுச் சோதித்துக் குணகாரங்கள் பண்ணின தொகையுடனே, புதனுக்கு இரண்டாம் இடத்திலே இருந்த ஆதி விந்துவினுடைடனே பெருக்கி, இருபத்தேழிற் கழித்த சவு நட்சத்திரத்தில், மிச்சமான மாதத்தில், புதன் வருகிற காலம், அதிக் வித்தையும் அறிவும் வரும் என்பது. சிறிது மதக்காரர் புதனுக்கு ஐந்தாமிடத்திலிருந்த ஆதி விந்துவைக் கொண்டு வித்தியா காலம் அறிவு வருமென்று சொல்லுகிறார்கள். அந்த இரண்டு வகையும் பார்க்கலாம்.

## புத்திரர் கண்டம்

## புத்திரர்களுக்குக் கண்டகாலம் சொல்லுகிற வகை

வியாழத்திற்கு வர்க்கம் போட்டுச் சோதித்துக் குணகாரங்கள் பண்ணி, வியாழத்துக்கு ஐந்தாம் இராசியில் இருந்த விந்துவுடனே பெருக்கி, இருபத்தேழிற் கழித்த சவு நட்சத்திரத்திலும் மிச்ச மாதத்திலும் சனி வருகிற காலம் புத்திரருக்குக் கண்டகாலம் சொல்லவும்.

## விசேஷித்துப புத்திரர்கள், புத்திரிகள் நிச்சயம் சொல்லுகிற வகை

வியாழத்திற்கு வர்க்கம் போட்டு, வியாழன் இருக்கிற இராசிக்கு ஐந்தாம் இராசியிலே ஆதிவிந்து எத்தனையோ அத்தனையும் புத்திரர்கள. அதிலே சத்துரு கிரகம், நீசக் கிரகம், அஸ்தமனக் கிரகங்கள் இருந்தால், அந்த வீதம் தள்ளி மற்றதை இத்தனை புத்திரான் என்று சொல்லவும்.

## பின்னையும் ஒரு விதம்

வியாழன் எத்தனை நவாம்சை ஏறினானோ அத்தனை புத்திரான் என்றும், அதிலே நீசம், சத்துருவைத் தள்ளி மற்றதை எண்ணிச சொல்லவும். வியாழத்திற்கு ஐந்தாம் இராசிகு அதிபம் எத்தனை நவாம்சை ஏறினானோ அத்தனை புத்திரான். இதற்குச் சத்துரு, நீசம் தள்ளி நின்றதைச் சொல்லவும்.

பின்னையும் சிறிது மதக்காரர் வியாழத்திற்கு வர்க்கம் போட்டுச் சோதனையான பிறகு, வியாழன் இருந்த இராசி முதல் ஐந்து இராசயிலே எத்தனை விந்து இருந்ததோ, அத்தனை புத்திரான் என்று சொல்லுவார்கள்.

இந்த இராசியும் சோதிக்கிறபோது, இதிலே கொடூர கிரகம் இருந்த இராசி விந்துவுக்குண்டான புத்திரான் மரித்துப் போவார்கள். வியாழன் இருந்த இராசிக்கு ஐந்தாம் இராசி வியாழத்துக்கு நீசன் வீடானாலும், நீசக்கிரகம் இருந்தாலும், அஸ்தமனக்கிரகம் இருந்தாலும், ஆதி விந்து சூனியமானாலும் புத்திரான் இல்லை. அதிலே, ஆதி விந்து இருந்து சோதனையில் சூனியமானால் அற்ப புத்திரான் பிறந்து மரிக்கப் போவும்.

வியாழத்திற்கு ஐந்தாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் இவற்றில் சனியிருந்து அதிலே விந்து இல்லாமல் போனால் புத்திரான் இல்லை. வியாழத்துக்கு ஐந்தாம் இராசியில் சனிபார்வை உண்டானாலும் அற்ப புத்திரான் என்று சொல்வது. இந்தப்படிக்குப் புத்திரான் நிச்சயம் அறிந்து சொல்லவும்.

## களத்திர கண்டம்

சுக்கிரன் அஷ்டவர்க்கம் போட்டுச் சோதனையான பிறகு குணகாரம் பண்ணி சுக்கிரனுக்கு ஏழாமிடத்தில் இருந்த ஆதி விந்துவுடனே பெருக்கி, இருபத்தேழிற் கழித்து, அந்த சவு நட்சத்திரத்தில் சனி வருகிற கால மாதமும் கண்டு களத்திரத்திற்குச் கண்டம் சொல்வது.

## விசேஷமாய் களத்திர நிச்சயம் சொல்லுகிற வகை

சுக்கிரனுக்கு ஏழாமிடத்தில் இருக்கிற ஆதிவிந்து எத்தனையோ அத்தனை களத்திரம். அதிலே சுக்கிரனுக்கு நீசமானாலும் களத்திரத்தில் பாதிபோம். அதிலே ஒரு நீசக்கிரகமும் ஒரு அஸ்தமன கிரகமும் கூடியிருந்தால்

நீசத்துககுப் பாதியும், அஸ்தமனத்துககுப் பாதியும் கணக்காய் பார்த்துச் சொல்லவும். சுக்கிரனுக்கு ஏழாம் இராசியில் ஆதி வித்து இராதே (இல்லாமல்) சூனயமாய்ப் போனால், விவாக யோகம் இல்லை.

சுக்கிரனுக்கு ஏழாம் இராசிக்குப் பன்னிரண்டாம் இராசி கேந்திரகம்* இருந்தாலும் அஸ்தமன கிரகமிருந்தாலும் ஏழாமிடத்தில் வித்துக்களிலே முன்போல அஸ்தமனம் நீசம் பார்த்துப் பலன் சொல்லவும். சுக்கிரனுக்கு ஏழாம் இராசிககுப் பன்னிரண்டாம் இராசி சூன்யமானால், ஏழாம் இராசியில் இருந்த களத்தி ...... ஏழாம் இராசி சுக்கிரனுக்கு உச்சனானாலும் எத்தனை வித்திருந்ததோ அத்தனை களத்திரமே சரி. அதற்குப் பன்னிரண்டாம் வீடு சூனியமானால், வித்துப் பிரகாரம் களத்திரம் வந்து செத்துப்போம்.

சுக்கிரனுக்கு ஏழாம் இராசியிலே ஒரு வித்து இருந்து. அதற்குப் பன்னிரண்டாம் இராசியிலே கிரக சூனியமானாலும் வித்து சூனியமானாலும் ஒரு களத்திரம் தானே பாதி வயதிருந்து செத்துப்போம். சுக்கிரனுக்கு ஏழாம் இராசியில் நீசக்கிரகமும் அஸ்தமனக் கிரகமும் கூடியிருந்தால் அதிலே இருந்த வித்தெல்லாம் தள்ளிப் போடுகிறது. களத்திரமே இல்லை. வியத்திலே சூனியம் இல்லாமல் வித்து இருந்தாலும் கிரகம் இருந்தாலும் களத்திரம் உண்டாய் பிறகு பங்கமாய்ப் போம். சுக்கிரனுக்கு ஏழாம் இராசியிலே எத்தனை வித்து இருந்ததோ அத்தனைக்கு அத்தனை களத்திரம் உண்டாம்.

வியஸ்தானத்தில் சூனியம் இல்லாது இருந்தால், களத்திரம் செத்துப் போகாது. சுக்கிரனுடனே இராகு கூடியிருந்தாலும், சுக்கிரனுக்கு ஏழாமிடத்தில் சூரியனும் இராகுவும் கூடி இருந்தாலும் களத்திரம் ஆபாசம் உண்டு. ஒருவன் பெண்சாதி புருஷனுடனே கூடுகிறதுக்கு முன்னே இவன் கனவில் கூடியிருப்பள். அது கூடச் சேர்ந்து களத்திரத்துடனே சேர்த்து நிச்சயத்துச் சரியாய் களத்தர நிச்சயம் சொல்லவும்.

* இந்தச் சொல்லின் பொருள் விளங்கவில்லை.

## சனி அஷ்டவர்க்கம் - ஆயுள்
## சாதகனுக்கு ஆயுசு நிச்சயம் சொல்லும்படி

சனிக்கு வர்க்கம் போட்டுத் திரிகோணசோதனை பண்ணி, ஏகாதிபத்திய சோதனை சோதித்து இராசி குணகாரம் கிரக குணகாரம் பண்ணின தொகையைச் சனிக்கு எட்டாமிடத்தில் இருந்த ஆதி விந்துவுடனே பெருக்கி இருபத்தேழில் கழித்து நின்ற ஈவையும் மிச்சத்தையும் இத்தனையாம் நட்சத்திரம் என்று நிச்சயித்து, அதிலே சனி வருங்காலம் சாதகனுக்குக் கண்டகாலம் என்று சொல்லுவது.

இப்படிச் சொல்லுகிற இடத்திலே அஷ்டவர்க்கம் திசை பிரிந்து அந்தத் திசை எவ்வளவோ என்று பிரிக்கிற இடத்திலே அற்பாயுசிலே நிற்குதோ பூரண ஆயுசிலோ நிற்குதோ என்றும் நிச்சயம் பண்ணி, இந்த மூன்று கண்டத்திலே ஒரு கண்டம் இவனுக்கு நிரியாண காலமாகும். அப்போ இன்ன நட்சத்திரத்தில் சனி வருகிற காலம் என்று சொல்லி இருக்கிறதே அந்த நட்சத்திரத்திலே சனியும் கூடி வருகிற காலமாகுமே அப்போ நட்சத்திரத்தில் சனி வருகிற காலமென்று சொல்லியிருக்குதே அந்த நட்சத்திரத்திலே சனியும் கூடி வரும் அப்பமா............ வருகிற காலம் சாதகனுக்கு நிரியாணம் தப்பாது.

அஷ்டவர்க்கப் பிரகாரம் சப்த கிரகங்களுகரும் திசை நட்சத்திரவகை ஏழு கிரகங்களுக்கும் தனித்தனியே வர்க்கம் போடச் சோதனை பண்ணின விந்துவைக கொண்டு, இராசி குணகாரம், கிரக குணகாரம் பண்ணின தொகையை ஏழால் பெருக்கி இருபத்தேழில் கழித்து ஈவு தானே வருஷம். மிச்சம் தானே மாதமாய்க்கூடி, நீசக் கிரகத்திற்குப் பாதியும் அஸ்தமனக் கிரகத்துக்குப் பாதியும் சத்துரு சேத்திரத்துக்கு மூன்றிலொன்றும் தள்ளி, உச்சக் கிரகத்திற்கு உள்ள வருஷத்துக்கு மேலே பத்துவருடம் கூட்டுகிறது. இப்படியே ஏழு கிரகத்துக்கும் கூட்டிவந்த வருஷம் தானே ஒருவனுக்குப் பரம ஆயுசு.

இந்தப்படி கிரகங்களுக்குத் திசை நடக்கிறபோது எந்தக் கிரகமானாலும், வருஷம் அதிகமாய் வருகிறதோ அவன் திசையை வைத்து இந்தப் பிரகாரம் மிச்சம் கண்டு பிரித்துக் கொஞ்சமாய் வருகிற வருஷக்காரனை கடைசியிலே வைத்துப் பலாபலம் சொல்லுகிற விதத்திலே, எந்தக் கிரகத்திற்கு வருஷம் அதிகமாய் வருகிறதோ அவன் நல்லவன். அந்தப் பிரகாரமாய் ஏற்றம் தாழ்த்தி கண்டு, நல்லவன் பொல்லாதவன் என்று பலபாகஞ் சொல்லவும்.

## அவரவருடைய திசைக்குப் புத்தி பிரிக்கிற வகை

கிரகங்களுக்கு வர்க்கம் போடுகிறபோது, எந்த வரிசையாய் வித்து விழுந்து வருகிறதோ, அந்தந்த திசைப் பிரகாரம் புத்தி பிரித்துச் சொல்லும். கிரகங்களுக்கு திசை வருஷம் சமனாய், இரண்டொரு கிரகங்களுக்குச் சமாதான கிரக வலிமை பார்த்து, வலிமைக் காரனை முன்னே வைத்து, வலிமை இல்லாதவன் திசையைப் பிறகே வைத்துக் கொள்ளவும். அஷ்ட வர்க்கிலே தீர்க்காயுக சொல்லி இருக்கிற வசமாய் வர்க்கம் போட்டுத்திசை பிரிக்கிற இடத்திலே நூற்றுப்பத்து வருஷமும் சரியாய் வந்தால் தீர்க்காயுகவே சரி. இந்த நூற்றுப்பத்தும் மூன்றாய்ப் பிரித்து இசை நடக்கிறது அற்பாயுகலே விழுகிறதோ, மத்தியாயுகவே விழுகிறதோ தீர்க்காயுகலே விழுகிறதோ வென்று நிச்சயித்து அப்போது சனியினுடைய அஷ்ட வர்க்கத்திலே கண்ட காலம் சொல்லி இருக்கிறதோ, அதுவும் அரிட்ட காலத்திலே நிரியாண காலம் தப்பாது.

இதிலே சொல்லாததெல்லாம் சமுதாய அஷ்ட வர்க்கத்திலேயும் சருவாங்க அஷ்ட வர்க்கத்திலேயும் சொல்லி இருக்கிறது.

முற்றும்

# அட்டவர்க்கப் பலப் படலம்

1. தவமுனியே அட்டவர்க்கப் பலமதுவும் கேளாய்
   தவன்முதலக் கினம்வரைஎட் டாகஇதைத் தகர்நேர்
பவனமிரா சிப்பகுத்தால் பின்னமிப்பா வகத்தைப்
   பானுமுதல் எட்டுளதில் பகுத்திடுமப் புவனத்
திவர்களுறில் ப்ரத்தியாரம் என்பரதன் பலத்துக்
   கிதுவதிக சூட்சபலம் இவையொருசே கரமாய்
அவர்கள்வகைப் பரல்கூடி இவைசருவாட் டகப்பேர்
   ஆகுமெனக் கூறினன்சந் தாசலத்தா திபனே.

2. ஆதவனோர் சனிசறா யவரவர்கள பரலுக்
   கமைந்தவய தில்தினத்தில் அசிதனுங்கோ சரத்தால்
பாதகரோ டுடன்கூடிப் பற்றிலந்த வர்க்கம்
   பதனமென லாலாதிப் பலமுதல் சரணீ
ஒதிடிலிப் பாவகத்துக குள்ளதுமப் படியாம்
   உதயமுதல் நாள்கோளுக் கொக்கஒரு வன்கிழ்
சதல்கெடுத் இடல்மீநேர் யாவையும்மூன் றாக்கி
   இளமைமுதல் பலமுளதாம் பரலதிகத் தெனுமே

3 பரலதிகம் கேந்திரமப் பாலிரண்டுக் கவன்கேப்
   பயந்தவனப் படியாம்பத் தாதிவரை நான்கும்
வரதனில் அதிகம்விடின் மற்றெனில்வாழ் உளதா
   மனைமனைக்கெப் பரலோஅப் பரல்படிவர்த் தனையாம்
இரவிமுதல் உள்ளவர்கள் இருப்புமுதல் உதயம்
   சுறாகக கண்டதைஎ பூிற்பெருக்கி இதைநான்
குரைசெயிலத் தினம்வயதும் அவரவர்க்கு உளதாய்
   உரைப்பரிலிப் பொதுப்பலத்துக் குள்ளதுரைப் பதுவே

அட்டவர்க்கப் படலம் முற்றிற்று


---

குமாரசுவாமிய நூலில் அமைந்துள்ள இந்த மூன்று பாடல்களுக்கான உரையே அஷ்டவர்க்கப்படலச் சுவடியாக அமைந்துள்ளது. அப்பாடல்கள் சுவடியில் இல்லை. தெளிவிற்காக இங்கே தரப்பட்டுள்ளன.

# நூல் - 6

## சோதிடநூல் - அட்டவர்க்கம்[1]

செங்கதி ரம்புலி செய்புதன் சீவன் செழும்புகரோன்
பங்கர வஞ்சிகி யாம்நவக் கோள்கள் பண்புறவே
மங்கல மைந்தரும் வாழ்வுடன் சீரும் நிறைவயதும்
பொங்குநற் செல்வமும் தந்தருள் வாய்புகர் மாமுகனே 195







ஹோரிலும் நன்றாக. இதி, வாரம், யோகம், கரணம், நட்சத்திரம், பரமநாடி, பாதநாடி, பாதத்திற சென்ற நாடி, நின்ற நாடி, உதய இலக்கனம், சந்திர இலக்கனம், கிரகநிலை, கிரக பலன், கிரக சமயம், துருபதன் கெதி, கற்ப நாள், அஷ்டம ராசி, வாரபலன, மிருத்து, மாரகர், அட்ட வர்க்கம், சட்வர்க்கம், நிரியாணம், மரணக் கயிறு, சீவதிசை, பிராண திசை, மனோதிசை, மிருத்துதிசை, கால திசை, மகாதிசை, புத்தி பலன் முதலானவற்றை அறிந்து கொள்க.

குறிப்பு : ஒரு சாதகத்தின் பலன்களைக் கூறுவதற்குத் தேவையான குறிப்புகள் குறிப்படப்பட்டுள்ளன. இவற்றுள் அஷ்டவர்க்கம் குறித்து பலன் கூறும் முறை இங்கு விளக்கப்படுகிறது.

---

1. சுவடி எண். 785

| | | | |
|---|---|---|---|
| 3 | 5 | 5 | 3 |
| 4 | சூரியன் | வித்து | 1 |
| 3 | 5 | | 5 |
| 5 | 4 | 5 | 5 |

| | | | |
|---|---|---|---|
| 4 | 4 | 3 | 4 |
| 4 | சந்திரன் | வித்து | 6 |
| 4 | 6 | | 2 |
| 5 | 4 | 4 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 4 | 1 |
| 4 | செவ்வாய் | வித்து | 3 |
| 1 | 1 | | 3 |
| 4 | 3 | 5 | 6 |

| | | | |
|---|---|---|---|
| 5 | 5 | 5 | 2 |
| 5 | புதன் | வித்து | 4 |
| 4 | 5 | | 6 |
| 5 | 3 | 5 | 5 |

| | | | |
|---|---|---|---|
| 5 | 4 | 4 | 4 |
| 5 | வியாழன் | வித்து | 6 |
| 8 | 4 | | 5 |
| 4 | 4 | 4 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 5 | 4 | 4 | 5 |
| 4 | வெள்ளி | வித்து | 3 |
| 1 | 4 | | 5 |
| 5 | 4 | 5 | 7 |

| | | | |
|---|---|---|---|
| 4 | 4 | 5 | 3 |
| 2 | சனி | வித்து | 2 |
| 1 | 2 | | 1 |
| 6 | 4 | 4 | 3 |

குறிப்பு : இச்சாதகத்தில் சந்திர அஷ்ட வர்க்கத்தில் கன்னி இராசியில் 5 விந்துக்கள் வரவேண்டும் 4 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## சமுதாய விந்துகள் காணல்

| | மேஷ | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சூரியன் | 5 | 5 | 3 | 1 | 5 | 5 | 5 | 4 | 5 | 3 | 4 | 3 |
| சந்திரன் | 4 | 3 | 4 | 6 | 2 | 4 | 4 | 4 | 5 | 4 | 4 | 4 |
| செவ்வாய் | 3 | 4 | 1 | 3 | 3 | 6 | 5 | 3 | 4 | 1 | 4 | 2 |
| புதன் | 5 | 5 | 2 | 4 | 6 | 5 | 5 | 3 | 5 | 4 | 5 | 5 |
| குரு | 4 | 4 | 4 | 6 | 5 | 3 | 4 | 4 | 4 | 8 | 5 | 5 |
| சுக்கிரன் | 4 | 4 | 5 | 3 | 5 | 7 | 5 | 4 | 5 | 1 | 4 | 5 |
| சனி | 4 | 5 | 3 | 2 | 1 | 3 | 4 | 4 | 6 | 1 | 2 | 4 |
| கூடுதல் | 29 | 30 | 22 | 25 | 27 | 33 | 32 | 26 | 34 | 22 | 28 | 28 |

| | | | |
|---|---|---|---|
| 28 | 29 | 30 | 22 |
| 28 | சமுதாய விந்துகள் | | 25 |
| 22 | | | 27 |
| 34 | 26 | 32 | 33 |

குறிப்பு : இச்சாதகத்தில் சமுதாய அஷ்டவர்க்கத்தில் கன்னி இராசியில் 34 விந்துக்கள் வரவேண்டும். கவடியில் 33 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## விந்துப்பலன்

இலக்கினம் 25 விந்துக்கள் பெற்றமையால் திடசித்தக் குறைவும் நிலையின்மையும் உடையவன். இரண்டாமிடம் 27 விந்துக்கள் பெறுதலால் குடும்பசுப சமனும் வாக்கு வல்லமையுமுடையன். மூன்றாமிடம் 33 விந்துக்கள் பெறுதலால், சகோதர ஒற்றுமையும் அதிகாரத்தனமும் உடையன். நான்காமிடம் 32 விந்துக்கள் பெறுதலால், வாகன மேம்பாடும் மாதுரு பக்தியும் வேந்துச் சுபமும் உடையன். ஐந்தாமிடம் 26 விந்துக்கள் பெறுதலால், புத்திரக் குறைவுடையன் ஆறாமிடம் 34 விந்துக்கள் பெறுதலினால், சத்துரு ஜெயமும் வீரிய நடையும் உடையன். ஏழாமிடம் 22 விந்துக்கள் பெறுதலால், களத்திர சுபக்குறைவு உடையன். எட்டாமிடம் 28 விந்துக்கள் பெறுதலால், ஆயுள் சமமுடையன். ஒன்பதாமிடம் 28 விந்துக்கள பெறுதால், பிதுர்பக்தியுடையன். பத்தாமிடம் 29 விந்துக்கள் பெறுதலால், முயற்சியுடையன். பதினோராமிடம் 30 விந்துக்கள் பெறுதலால், இலாபமுடையன். (12 ஆமிடம் 22 விந்துக்கள் பெறுதலால், உண்டாகும் பலன் கூறப்படவில்லை) சுபம் விந்துக்கள் 27 துயர் விந்துக்கள 34. வரவு விந்துக்கள் 30. செலவு விந்துக்கள் 22.

ஜனன காலம் முதல் அந்திய காலம் வரைக்கும் சுபம் குறைந்து, துயர் அதிகப்பட்டு வரவுக்குத் தக்கது செலவு குறைந்து நடக்கும்.

## மாதப்பலன்

பன்னிரண்டு மாதங்களுள்ளே வைகாசி மாதம், புரட்டாசி மாதம், ஐப்பசி மாதம், மார்கழி மாதம் இம்மாதங்கள் விந்து அளவுக்கேற்ப பெறுந்தகைமையால் இம்மாதங்களிலே வீடுகட்ட பொன்பூணி விவாகம் செய்ய நன்று. சித்திரை, ஆவணி, மாசி, பங்குனி ஆகிய இம்மாதங்கள் மத்திம பலன் நடத்துமு. ஒழிந்த மாதங்கள் அதம பலன் நடத்தும்.

குறிப்பு : இச்சாதகத்தில் ஒழிந்த மாதங்கள் என்று குறிப்பிடப்படுபவை ஆனி, ஆடி, கார்த்திகை, தை ஆகிய மாதங்களாகும்.

## திக்குப்பலன்

கிழக்கு விந்துக்கள் 81. தெற்கு விந்துக்கள் 85. மேற்கு விந்துக்கள் 92. வடக்கு விந்துக்கள் 78. திக்கு நான்குகளிலும் தெற்கும் மேற்கும் விந்துக்கள் அதிகரித்தமையால் இதில் விடுகட்ட, வேளாண்மை செய்ய, முன்னின்று வழக்குரைக்க நன்று. மற்ற திக்கு மத்திமம் என்று கண்டது.

## கந்தாய பலன்

முதல் கந்தாயம் 117. இரண்டாம் கந்தாயம் 110. மூன்றாம் கந்தாயம் 109. இதிலுள்ள பரமாயுவை மூன்று கூறாகக் கண்டு, முதற்கூறும் நடுக்கூறும் உத்தம பலன் நடத்தும். கடைக்கூறு சமபலன் என்று கண்டது.



# செய்யுள் முதற்குறிப்புபகராதி

## (எண் : செய்யுளெண்)


| | |
|---|---|
| அஞ்சாறு விந்துடனே | 193 |
| அஞ்சுமுதல் விந்துடனே | 65 |
| அஞ்சுவிந்து அதிலிருக்க | 177 |
| அட்டகவர்க் காயுள் | 107 |
| அட்டமந்தொட் டுதுய | 93 |
| அடார்சிலை ஒன்பான் | 18 |
| அஷ்ட வர்க்கம் | 1 |
| அரியகற் கடகம் | 17 |
| அறிந்துபார் கேதுவையும் | 151 |
| அறிந்துபார் சுக்கிரர்க்கு | 138 |
| அறிந்துபார் புதனாதி | 126 |
| அறிந்துபார் இராகுதனை | 140 |
| அறிவித்தான் சனியதனை | 149 |
| அறைதரு கோள்கள் | 25 |
| ஆடரி தனுசு | 13 |
| ஆதித்தன் திரிகோண | 181 |
| ஆதித்தன் மேட | 102 |
| ஆமிரவி தனக்குத்தான் | 6 |
| ஆய்ந்திடும் இராசிக்கோள் | 10 |
| ஆறுக் குடையோன் | 100 |
| ஆறுவிந்து வாகன | 190 |
| ஆனகுரு நீலத்தில் | 78 |
| இசையவே லகினத்தில் | 132 |
| இலக்கினமே சூரியனு | 64 |
| இலக்கரவி சுத்தபின் | 31 |
| இலகுபுதன் பெலத்திருக்கில் | 44 |
| இயல்சர்வாஷ் டகவர்க்கம் | 97 |

இரவிகுசன் சனியிவர் 3
இரவிசுத்த பிண்டத்தை 30
இவ்வண்ணம் அட்டமத்தில் 67
இன்னங்கேள் புதன்தனையும் 156
இனிய செவ்வாய் நின்ற 38
ஈறிலா ஏழு 27
ஈனவிந்து இராசியிலே 81
உச்சாட்சி தன்னில் 183
உயர்சிலை உதயம் 106
உரைக்குமே பத்தி 104
உரைத்த சோத் தியத்தி 66
உரைத்திட் டேன் சனி மனையில் 129
உரைத்திடும் ஐந்தா 87
உற்றசெவ்வாய் எட்டு 73
ஊனுதயம் மூன் சனியில் 96
எடுத்தநா லுக்கிறைவன் 98
எண்ணவே செவ்வாயை 145
எண்ணுவாய் வியாழன் 127
எதிர்மூன்று பன்னொன்றில் 79
எந்த இரா சியில் பரங்கள் 187
என்ற உதயம் 101
என்றுமா லவர்க்கிரண்டில் 43
என்றவ முறை பொற் 20
என்றுமக் கூறு 11
ஏகமுன்ன சனிக்கு 122
எட்டுவிந்து குருவாட்சி 188
ஏதில்வீ டிரண்டும் 15
ஏழுவிந்தி னுடன்பொன்னோன் 77
ஒட்டிய வைந்தாறு 89
ஒருதிரி கோணம் 14

| | |
|---|---|
| ஒளிருமதி அட்டக | 36 |
| ஒன்றுவிட்டு நாலிலிலே | 125 |
| ஒன்றெட்டுக் குடையவர்கள் | 82 |
| ஓங்குசெவ்வாய் முப்பத்து | 103 |
| கடைசூரி யர்க்கே | 4 |
| கண்டுபார் சந்திரர்க்கு | 144 |
| கதிரவன் சுத்த | 32 |
| கரியவனட் டகவர்க்க | 88 |
| கரியினட் டவர்க்க | 60 |
| கருமத்தா னத்தில் | 29 |
| காணுவாய் சனிக்கு | 118 |
| காரியின் அட்டவர்க்க | 59 |
| குருதனது இவ்வோரை | 186 |
| குருவெட்டு வித்துடனே | 76 |
| குலவுகோன் இருந்த | 16 |
| குறியான கேதுவையும் | 141 |
| கூட்டுப்புத்தி குசனுக்கொள் | 115 |
| கூட்டுவீர் சந்திரனித் | 111 |
| கூர்ந்துபார் சனிதனையும் | 139 |
| கூறக்கேள் கேதுவையும் | 161 |
| கூறிய இராசி | 21 |
| கேளப்பா சந்திரனை | 124 |
| கேளுமே வியாழனுக்கு | 147 |
| கொண்டதோர் தொகைகள் | 28 |
| சக்கரமும் இலக்கினமும் | 173 |
| சங்கையாய் இலக்கினத்தில் | 162 |
| சத்தவிந்து தனத்தில்வர | 178 |
| சத்துருவு சந்துருதி | 194 |
| சந்திரனட் டகவர்க்க | 34 |
| சல்லியனட் டகவர்க்க | 55 |

| | |
|---|---|
| சனியுடைய அட்டவர்க்க | 58 |
| சாத்தியே இராகுவையும் | 160 |
| சாத்தினோம் வியாழனுக்கு | 137 |
| சாதகன் தன் பரமாயுள் | 92 |
| சாற்றும்சர் வாட்டக | 94 |
| சிறுள உச்ச | 24 |
| சுக்கிரனட் டகவர்க்க | 54 |
| சுக்கிரனும் பாதியாம் | 128 |
| சுங்கனட் டகவர்க்க | 57 |
| சூரியன்தன் அட்டவர்க்க | 109 |
| சூரியனட் டகவர்க்க | 33 |
| செங்கதி ரம்லி | 195 |
| செப்பவே இலக்கினத்தை | 142 |
| செப்பவே கேதுவையும் | 171 |
| செப்பவே சுங்கனையும் | 168 |
| செருக்கந்தான் அட்டவர்க்க | 123 |
| சேர்ந்தகங்க ளிப்பிறைக்கு | 119 |
| சேரடா எட்டொன்பது | 116 |
| சொல்லக்கேள் சூரியனில் | 110 |
| சொல்லவே கேதுவை | 131 |
| சொல்லிய செவ்வாய் | 39 |
| சொல்லுதயம் தனிலிரண்டு | 71 |
| சோதிய சேடபிரன் | 182 |
| தயவுந்தான் சந்திரனை | 134 |
| தரமேவு புதனுடைய | 153 |
| தனுஅட்ட வர்க்கமதில் | 185 |
| தாலிக இராசி | 12 |
| தானுமே செவ்வாயை | 165 |
| தானேகேள் செவ்வாயை | 156 |
| திரிகோண கேந்திரத்தில் | 72 |

| | |
|---|---|
| திருந்திய பார்மேல் | 108 |
| துங்கமூர்த்தி யன்படத்தில் | 52 |
| துணங்கிய இராசி | 19 |
| துய்யசெவ்வாய் தன்னுடைய | 40 |
| துய்யமதி உதயநிற்கில் | 69 |
| தேவகுரு ஆறுவிந்து | 189 |
| தேறவே வியாழனையும் | 187 |
| நாடியே செவ்வாய்க்கு | 135 |
| நாலான இராகுவையும் | 170 |
| நிலவினுட சுத்தபின்ட | 35 |
| நிறுத்திப்பார் இலக்கனத்தில் | 152 |
| நிறையுமொன்று மூன்றிரண்டு | 86 |
| நீசமத்த மணங்களிலே | 191 |
| நீலனட் டகவர்க்கம் | 63 |
| பகரன்னை தந்தை | 26 |
| பஞ்சவிந்து ஆட்சிதனில் | 179 |
| பத்தியுள்ள சபையில் | 121 |
| பதிவான குருவினில்சேய் | 117 |
| பதிவான சந்திரனில | 112 |
| பதிவான சனிக்கொன்று | 114 |
| பண்டிதனட் டகவர்க்க | 46 |
| பரிவான வெள்ளிதனில் | 120 |
| பாகவனட் டகவர்க்க | 48 |
| பாடியே சனியதனை | 159 |
| பாரப்பா இராகுவையும் | 150 |
| பாரப்பா சந்திரனை | 164 |
| பாரப்பா சுக்கிரர்க்கு | 148 |
| பிரகாரனட் டகவர்க்க | 56 |
| புதனட்டக வர்க்கம் | 41 |
| புந்தியின்அட் டகவர்க்க | 45 |

புந்தியெட்டு விந்துடனே 75

புனிதமாம் வியாழன்மனை 157

புனிதமாய செவ்வாயின் 143

பூட்டுவாய் வியாழனுட 163

பேசுமொரு விந்துடனே 70

பொன்னவனட் டகவர்க்க 51

பொன்னவனுக் கைந்திடத்தில் 83

போடவே இராகுதனை 130

போடவே கங்களையும் 158

போடவே புதனுக்கு 136

மந்தன் அட்டக 61

மந்தன்றிரி கோணப் 192

மந்தனுக்கு நாற்பதிலே 174

மந்திரிஅட் டகவர்க்க 49, 80

மன்னுமுத லாயபல 62

மாதம்போய்க் குறுகி 22

மாலுக்கி ரண்டித்தே 42

மிக்கசன்ம லக்கினத்தில் 68

மிருசர்வாஷ் டகவர்க்கம் 91

மூடவன்பாக் கியத்திலிரு 99

மூன்றுரெண்டு ஒன்றிருந்தால் 175

மேடலக் கினமாய் 74

மேவியே புதன்மனையை 166

மேன்குருஅட் டகவர்க்க 50

ராமப்பா சந்திரனார் 133

வக்கிரனட் டகவர்க்கம் 37

வகுத்திடும் கோள்கள் 2

வஞ்சமிலாச் சனிநின்ற 95

வணக்கமாய் புதன்தனக்கு 146

வந்திடு மேட 105

| | |
|---|---|
| வர்க்கமுறும் சூரியர்க்கு | 5 |
| வரைவாக வேளன்னி | 47 |
| வரைவிக்கு கன்னாநீர் | 9 |
| வாகான செவ்வாயில் | 113 |
| வாயேது சந்திரர்க்கு | 154 |
| வாழமின்னே சூரியனு | 8 |
| விந்துரெண்டு தனத்தில் | 176 |
| வித்தே ரென் டைநதேழோன் | 84 |
| விளங்கவே சனிவீடு | 169 |
| விரும்புமொன்று நாலெட்டில் | 90 |
| விசிய வருடம் | 23 |
| வெய்யவர்க்கும் பாரிநீ | 7 |
| வெள்ளியெட்டு விந்துடனே | 85 |
| வேதியனட் டகவர்க்கம் | 53 |
| வைத்திடவே லக்கினத்தில் | 172 |
| ............... நாலுவிந்து | 180 |

# துணை நூல் பட்டியல்

1. அஷ்டக வர்கு, தி.சுப்பிரமணிய சாஸ்திரி (பதிப்.) சாஸ்திர சஞ்சீவினி பிரஸ், சென்னை, 1920.

2. குமாரசுவாமியம், கா.சத்தியபாமா (பதிப்.), தஞ்சை சரசுவதிமகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர், 2007.

3. சாதகாலங்காரம், முருகைய சோதிடர் (உரை.), பார்த்தசாரதி நாயுடு சன்ஸ், சென்னை, 1964.

4. சுந்தரானந்தர் சோதிட காவியம், எஸ்.பி.இராமச்சந்திரன் லோட்டஸ் பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை, மறுபதிப்பு, ஜுன் 1996.


5. சோதிடக் கிரக சிந்தாமணி, மார்க்கலிங்க சோதிடர் (பதிப்.), ஸன் ஆப் இந்தியா பிரஸ், சென்னை, 1925.

6. ஜாதக அஷ்டக வர்க்கமும் அதன் பலாபலன்கள் நிர்ணயமும், C.G. ராஜன், கிரி டிரேடிங் ஏஜென்ஸி, முதல் பதிப்பு, சென்னை, 1983.

7. ஜாதகம் பார்ப்பது எப்படி? தமிழ்வாணன், மணிமேகலை பிரசுரம், சென்னை, திருத்திய புதிய பதிப்பு, 1986

8. பூர்வ பாராசர்யம், எஸ்.சுவாமிநாத சாஸ்திரி (பதிப்.) தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர். ஐந்தாம் பதிப்பு, மே 2005.

9. வராகர் ஓரா சாஸ்திரம், அடிகளாசிரியர் (பதிப்.), தஞ்சை சரசுவதிமகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர், ஐந்தாம் பதிப்பு, ஜுலை 2006.


தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரஸ்வதி மகால் நூலகம்
சரஸ்வதி மகால் நூலக அச்சகம்